
மறவாதே
இன்பத் கனவே..!
-மித்ரா

மறவாதே இன்பக்கனவே! –மித்ரா

அத்தியாயம் 01

வெள்ளிக்கம்பிகளை போலே விண்துளிகள் மின்னலொளியில் மிதந்து புவியில் கொட்டிக்கொண்டிருந்த நள்ளிரவு வேலை. மும்பை மாநகரின் போக்குவரத்து நெரிசல்கள் சற்றே குறைந்திருந்தது. தலை முடிகளைக் கோதியவாறே பாதி நனைந்த ஈர உடையோடு தன் பிளாட்டிற்குள் நுழைந்தான் உதயன்.

குளித்து உடை மாற்றி கட்டிலில் கவிழ்ந்தவன் கைப்பேசியைக் கையில் எடுத்தான். காலையில் நண்பன் கதிர் அனுப்பியிருந்த புகைப்படங்களைப் பார்க்கத் தொடங்கினான். பளிச்சென்று புன்னகை முகத்தோடு நெற்றி நிறைய பெரியவர்கள் ஆசிர்வதித்துப் பூசிய விபூதியோடு கதிர் நின்றிருந்தான். அருகே மஞ்சள் பட்டில் தலைநிறைய மல்லிகையோடு முகமலர நின்றிருந்தாள் எழிலரசி.

“நிச்சியத்துக்கு வராம ஏமாத்திட்ட கல்யாணத்துக்கு வரல அப்பறம் கல்யாணமே நடக்காது பார்த்துகோ உதய்” காலையில் கதிர் மிரட்டியது நினைவில் வரச் சிரித்துக் கொண்டான்.

இவனுக்குனே பிறந்து வளர்ந்த அக்கா மகள் எழிலரசி இருக்காள். நமக்கும் தான் இருக்குதே அக்கா மகள்ன்னு இப்போ தான் நாலாவது படிக்குது அவ எப்போ வளர்ந்து நான் எப்போ கல்யாணம் பண்ண? ஆண்டவா! அத்தை, மாமா மகளுகளை பார்த்தாலும் ஒவ்வொரு தரம் ஊருக்குப் போகும் போதும் ஆளுக்கொரு பங்காளியை கட்டிக்கிட்டு நமக்கே அண்ணியாகிடுறாளுக. ஆஃபீஸ்ல அந்த மாடல் அதீதியை கரெட் பண்ணலாம்னு பார்த்தா அவள் அந்த பெங்காலி பையனோட போயிட்டா!

வீட்டுல யாரு நம்மளை பத்தி நினைக்கப் போறா? பெரியம்மா நினைச்சாலும் சிவாவுக்கு பிறகுன்னு தான்

சொல்லுவாங்க. இரண்டுமாசம் முன்ன பிறந்து தொலைச்சிட்டான் அந்த பாவி. யம்மா நீ இருந்திருந்தா எனக்கு இரண்டு கல்யாணம் கூட பண்ணிப் பார்த்து சந்தோஷப்பட்டுருந்திருப்பே ஆனாலும் ரொம்ப லேட்டானாலும் போன வருஷமே போய் சேர்ந்தாருல டாடி அவராவது எனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைச்சிட்டு போயிருக்கலாமே! இந்த வீட்டுல எனக்குத் துணையா ஒரு பேய் கூட கிடையாது தெரியுமா?

மனதோடு புலம்பியவாறே படுத்துக்கிடந்தவன் அடுத்ததாக ஊர் திருவிழாவின் போது எடுத்த வீடியோவை பார்க்கத் தொடங்கினான். அத்தனை கூட்டத்துக்குள் எழிலரசியைக் காதலோடு பார்க்கும் கதிரின் பார்வை, தள்ளி முந்திக்கொண்டு நண்பர்களோடு வடம் பிடித்துத் தேர் இழுத்தது, விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றது என அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த கண்கள் தானாகக் களைப்பில் மூடியது.

பல வருடங்களாகப் பழகிவிட்ட தனிமை, என்றுமே வெறுக்காத தனிமை, கட்டுப்பாடுகள் இல்லாது இனிமை தரும் தனிமை. இன்றேனோ வெறுமை! மனம் ஏதோவொரு உறவைத் தேடியது. தன் வாழ்வின் அர்த்தமாய், வாழ்வதற்கான பிடிமானமாய் வேண்டியது ஒரு உறவை! பிரியும் உயிரைப் பற்றும் கயிறாய் உயிராய் ஒரு உறவு!

ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்திருந்தவளை ஏதோவொரு விசை உலுக்கி எழும்பியது. உடலே கயிறு கொண்டு கட்டி இறுக்குவது போன்றே இறுகி அழுத்தியது. முகமெல்லாம் வியர்த்து முத்து துளிகளாகக் கழுத்தில் இறங்கி மார்பு வரை நனைந்திருக்க, மாயக்கட்டிற்குள் இருந்து விடுபடுவது போல் பதறி எழுந்தாள் எழிலரசி.

இன்னும் பொழுது புலரவில்லை, அதிகாலைக்கும் சற்று முந்திய நேரம் விழித்து விட்டவளுக்கு அதற்கு மேல் படுக்க மனம் வராது போக, எழுந்து சமையல்கட்டுக்குள் சென்று வேலைகளைப் பார்க்கத்தொடங்கினாள் எழில்.

கதிரவனின் இளம் வெப்ப கதிர்கள் முகத்தில் வீச, கூசிய கண்களைத் தேய்த்துக் கொண்டு திரும்பிப்படுத்தான் கதிர்வேல். “கதிர் மாமா எழுந்திருங்க காபி கொண்டு வந்திருக்கேன்” எனக் கேட்ட அக்கா மகளின் குரலில் மட்டும் எழுந்து விட்டான்.

குளித்து முடித்து புதுப்பூவாய், பனிமறையாத வெண்பூவாய் எழிலின் முகம் காணத் தித்தித்தது. “அங்க வைச்சிரு எழில்” என்று தன்னறைக்குள் சென்று முகம் கழுவி வந்தவன் கையில் காபியை எடுத்துக் கொள்ள இன்னும் அங்கே நின்றிருந்தாள் எழிலரசி.

இன்றைக்கான வேலைகளை மனதில் திட்டமிட்டுக்கொண்டே, அவள் தன்னிடம் பேசத்தான் நிற்கிறாள் என அறிந்து, “என்ன எழில்?” என்றான்.

“நீங்க வருகிற எலெக்ஷன்ல பெரியவரை எதிர்த்து நிற்க வேண்டாம் மாமா” எனத் தயங்கிச் சொல்ல, நானே நேற்று தானே முடிவு செய்தேன் யாரிடமும் பகிரவில்லை இவள் எவ்வாறு அறிந்தாள் என்ற அதிர்ச்சியோடு பார்த்தான்.

“அப்படி யார் சொன்னா? சரி நீ எதுக்கு வேண்டாம்னு சொல்லுற?”

“நீங்க எலெக்ஷன்ல நின்னா அப்பா, அம்மாவுக்கும் பிடிக்காது, ஊருக்கு வழக்கம் போல நல்லது செய்யுங்க அதுக்குன்னு எலெக்ஷனெல்லாம் வேண்டாம் மாமா”

“நீயா உன் வயசுக்கு மீறி யோசிச்சிகிட்டு இருக்காதா போ” என அதட்டலிட, கலங்கிய விழிகளோடு சென்றுவிட்டாள் எழிலரசி.

அவள் செல்ல, நண்பன் உதயனை எழுப்ப எண்ணி கைபேசியில் அழைத்தான். எப்போதும் போலே பத்துமுறைக்கும் மேல அழைக்க, அதன் பின்னே கண்விழிக்காது உறக்கம் களைந்து அட்டென் செய்தான் உதய். ஊரில் நடக்கும் சிறுசிறு செய்திகளும் கதிர் மூலமே அறிந்துக்கொள்வான் உதய். அதன் பின் இருவரும் அவர்களின் அன்றாட பணிகளைக் கவனிக்க, கதிரின் இந்த நட்பொன்றே

உரிமையான உறவேதும் இல்லாத போதும் உதயனை இயக்கச் செய்தது.

காலை உணவிற்குப் பின் நிலத்திற்கு உரம் வாங்கிவரவென கதிர் டவுனுக்கு கிளம்ப, “எய்யா கதிரு, இந்த பிரதம மந்திரி ஏதோ விவசாயிகளுக்கு ஆறாயிரம் ரூபாய் இனாமா தாராராமே ஊரே பரபரப்பா திரியுது. எனக்குத் தான் நடக்க காலு வரலை. கொஞ்சம் அந்த பாரத்தை வாங்கி நிரப்பிக் கொடு ராசா” எனக் கேட்டார் எதிர்வீட்டுக் கிழவி.

“சரி பாட்டி, நீ ஆதார் காட்ர்டு, பாஸ் புக் எல்லாம் ஜெராக்ஸ் எடுத்து வை, நான் வந்து எழுதிட்டு போய், வி.ஏ.வோட்ட கொடுத்துடுறேன்” என அவன் பேசிக்கொண்டிருக்கும் போதே அவன் பைக்கின் பின்புறம் அமர்ந்தார் கோவிந்தசாமி.

“போற வழியில என் மெக்கானிக் செட்ல இறக்கிவிட்டு கதிரு”

“ம்ம், சாப்பிட்டியா மாமா? காலையில எங்காக்கா ஆடுன ஆட்டத்தைப் பார்த்தா உனக்குச் சோறு விழுந்திருக்காதே”

“இன்னைக்கு சரியான சாமியாட்டம் டோய்! அவ என்னைக்கு எனக்கு சோறு போட்டிருக்கா? அதுக்கு தான் என் தங்க மகள் எழிலரசி இருக்காளே”

“நீயும் அந்த கருமம் குடியை விட்டுத் தொலைக்கலாமே?” எனும் போதே ஊரின் முக்கியஸ்தர் ஒருவரின் வீட்டின் முன் வண்டியை நிறுத்தியிருந்தான் கதிர்.

எதிரே வந்த ஒருவர், “கதிரு டவுனுக்கு போறையா?” என்க, “ஆமா சித்தப்பா, என்ன வேணும்?” என்றான்.

“பாப்பா ஏதோ நோட்ஸ் கேட்டுச்சு பன்னெண்டு படிக்கிறால்ல, பார்த்து வாங்கிட்டு வந்துடேன்”

“சரி சித்தப்பா” என்க, அவர் விலகியதும் திரும்பிப் பார்த்தான், கோவிந்தசாமி வண்டியிலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கியிருந்தார்.

“மாமா, என்ன வண்டியைவிட்டு இறங்கி நடக்க ஆரம்பிச்சிட்ட?” எனக் கத்த, “டேய் இப்போ எதுக்குடா பெரியமீசை வீட்டுல நிக்குற? நான் பண்ணது என்ன கொலைகுத்தமா பஞ்சாயத்தைக் கூட்ட ரெடியாகிட்ட நீ? இந்த விஷியத்துல மட்டும் உங்கக்கால மாதிரியே இருக்கியேடா?”

“சும்மா புலம்பாத மாமா, புதுரோடு கேட்டு கலெக்டர்ட மனு கொடுக்கப் போறேன். அதுக்கு பெருசுக்கிட்ட கையெழுத்து வாங்க வந்தேன்”

“நீயும் திருந்த மாட்டா, நானும் திருந்த மாட்டேன். அந்த பெரியமீசை சும்மாவே கேள்வி கேட்கும், என்னால இங்க நிக்க முடியாதுலே. நான் நடந்தே போய்கிறேன்” என்றவர் நடக்கத் தொடங்கினார்.

மும்பையில் ஒருவாரம் பலமான மழை, நான்கு நாட்கள் போக்குவரத்துகள் எல்லாம் முற்றிலும் முடங்கியது. இதற்கிடையில் ஆட் சூட்டிங்கிற்காக தங்கள் குழுவோடு ஆக்ரா சென்றிருந்த உதயன் நினைத்ததை விட இருநாட்கள் தாமதமாகிய போதும் வேலையைச் சிறப்பாக முடித்த பின்னே மும்பை வந்தான். வந்ததும் அலுவகலத்தில் வேலைகள் அழுத்த அந்த வார இறுதியிலே சற்று மூச்சுவிட்டான்.

வெளியில் எங்கும் செல்லத் தோன்றாது வீட்டில் இருக்கும் உணவுகளைக் கொறித்துவிட்டு முகநூலில் பார்வையைப் பதித்தவாறு நேரம் தள்ளிக்கொண்டிருந்தவன் தங்கள் வட்டார செய்திகளைப் பார்க்கையில் கண்ணில் பட்டது கதிரின் விபத்து குறித்த தகவலும் கண்ணீர் அஞ்சலி போஸ்டும். அதிர்ச்சியல்ல பேரதிர்ச்சி! இது எவ்வாறு சாத்தியம்? என மூளை கேள்வி எழுப்ப மனம் இல்லை இது உண்மையில்லை என்று புலம்பியது. கண்கள் கண்டது உண்மை தான் என உதயனின் உள்ளம் ஏற்க மறுக்க உறைந்த சிலையாக அமர்ந்திருந்தான். கதிரின் புன்னகை முகம் கண்முன் வர கை, கால்கள் செயலிழந்தது போன்றும், இதயத்தில் கூர் கருங்கல் கொண்டு அறைந்தது போன்றும் வலித்தது.

முதலில் கதிரின் எண்ணிற்குத் தான் அழைத்தான் அவன் அட்டன் செய்துவிட வேண்டும், அவன் குரல் கேட்டுவிட வேண்டும் என்ற வேண்டுதலோடு உள்ளம் படபடக்க காத்துக்கிடந்தான். பலமுறை அழைத்தும் தோல்வியடைந்தவன் தன் பெரியப்பாவின் மகனான ராஜகணபதிக்கு அழைத்து தகவல் கேட்டான். கதிரின் இறப்புச் செய்தி உண்மை தான் என உறுதியாக, நொடி கூட தாமதிக்காது ஊருக்குக் கிளம்பிவிட்டான்.

மும்பையிலிருந்து மதுரைக்கு ஒரு விமான பயணம், அங்கிருந்து உதயனின் சொந்த ஊரான பொன்வயலுக்கு அரசு பேருந்தில் பயணமெனக் காலையில் ஊருக்குள் வந்திறங்கியிருந்தான். பயண ஏற்பாடுகள் எதுவும் செய்யாது கையிலும் பெரிதாக எதுவும் எடுத்துவராது கிட்டத்தட்டப் படபடப்போடு ஓடி வந்திருந்தான். பார்த்தது கேட்டது அனைத்தும் பொய்யாக இருக்க வேண்டும் தன் கதிரை ஒருமுறை பார்த்திட வேண்டுமென்ற ஏக்கம் அவனை அவ்வாறு இழுத்து வந்திருந்தது.

அமைதியான கிராமத்தின் வீதிகள் வெறிச்சோடியிருக்க அவன் கால்கள் நேராகச் சென்றது கதிரின் வீட்டிற்குத் தான். வாசலில் போடப்பட்டிருந்த பந்தலும், வாசல் திண்ணைகளில் ஆண்களும் உள்ளே பெண்களின் ஒப்பாரிக் குரலும் அவனை நடுநடுங்கச் செய்தது. உள்ளே செல்ல, நடு ஹாலில் மலர் மாலையிட்டு கண்ணாடி சட்டகத்திற்குள் அடைக்கப்பட்ட கதிரின் புன்னகை முகமான புகைப்படம் மட்டுமே காட்சியானது. முதல்முறையாக ரோஜாவின் வாசத்தோடு கலந்த ஊதுபத்தியின் வாசம் உதயனுக்கு குமட்டிக்கொண்டு வந்தது.

பெண்கள் சூழ நடுவில் அமர்ந்திருந்த குணசுந்தரி நெஞ்சிலும் தலையிலும் அடித்துக்கொண்டு தம்பியை எண்ணி அழுது கரைந்துக் கொண்டிருந்தார். ஏழாம் நாளே காரியம் முடிந்திருக்க, கோவிந்தசாமி உறவுகளோடு அஸ்தி கரைக்க ராமேஸ்வரம் சென்றிருந்தார்.

கருக்கற்பாறை போலே உதயன் உறைந்து நின்ற போதும் பாறையுள் கசியும் ஈரம் போலே அவன் கண்களில் கண்ணீர் கசிந்துகொண்டிருந்தது. “ஏனடா என்னைத் தனியாகத் தவிக்கவிட்டுச் சென்றாய்? இதென்ன முதல் முறையாக என்னிடம் சொல்லாமல் செல்லும் பழக்கம்? உன்னைப் போன்ற நல்லோனுக்கா இந்த பூமியில் வாழ அந்த கடவுள் ஆயுள் தரவில்லை? நீயின்றி எனக்கு இனி சொந்தமேது? நீயின்றி என் வாழ்வின் அர்த்தமேது?” எனக் கேள்விகளை அடுக்கி மனதோடு கேட்டவாறு கதிரின் புகைப்படத்தில் அவன் பார்வை நேராக நிலைத்திருந்தது. சில நிமிடங்கள் கடந்த பின்னே அவனிடத்தில் சிறு அசைவு இமைதட்டி கண் சிமிட்டிய நொடியில் புகைப்பட கண்ணாடியில் சிறிதே பிரதிபலித்துக் கொண்டிருந்த எழிலரசியின் முகபிம்பம் கண்டான்.

மெல்லத் திரும்பி எதிரே அமர்ந்திருந்த எழிலைக் கண்டான். தூணில் சாய்ந்து அமர்ந்திருந்த அவளும் எதிரேயிருக்கும் கதிர் புகைப்படத்தை வெறித்தவாறு பொலிவிழந்து மங்கிய சித்திரம் போலே சிதைந்துக் கிடந்தாள். கலைந்த தலையும் அழுது, அழுது முகமும் கன்னமும் வீங்கிச்சிவந்திருக்க, கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. கை உயர்த்தி துடைக்கக் கூட தோன்றாது அமர்ந்த நிலையிலே இருந்தாள். பூவும், பொட்டும், மஞ்சளுமென எத்தனை எழிலோடுப் பார்த்த முகம் இன்று அனைத்தும் மழையில் கலைந்த வர்ணக்கோலமாய் கரைந்திருந்தது. அவளை அவ்வாறு காண நொடி கூட இயலவில்லை உதயனால்.

ஓரலையில் உதிர்ந்த மணல்கோட்டை போல், மலரும் முன் கருகிய மொட்டை போல் வாசமிழந்தது இவள் வாழ்வு தானே! கதிரின் இழப்பை தாங்கும் சக்தி தான் இவளுக்கு உண்டோ? என்ன இன்பத்தைப் பெற்றுவிட்டாள்? என்ன வாழ்வு வாழ்ந்து விட்டாள்? வாழ்வைத் தொடங்கும் முன்னே இவள் வாழ்விழந்த அவலம் ஏன்?! அழகோவியம் ஒன்றைத் தீட்டி விட்டு அதன் மேல் வண்ணம் தெளிக்க மறுப்பதேன் இறைவா? விம்மிய உள்ளம் முழுவதும் பொங்கிய பரிதாபத்தோடு எழிலரசியைப் பார்த்தான் உதயன்.

இருவருக்கும் இன்னுயிராய் இருந்த கதிர் இன்பக்கனவாய் மறைந்திருந்தான்!

அத்தியாயம் 02

எங்கும் பசுமை தழைத்து, இன்றும் சிட்டுக்குருவிகளின் ரிங்காரம் கொஞ்சும் பொன்வயல் கிராமத்தில் இயற்கையின் சத்தங்கள் தவிர, இரைச்சல் என்பதேயில்லை. இயற்கையை அழிக்காது காலத்தின் தேவையாய் சில அத்தியாவசிய வசதிகளை மட்டும் செய்து கொண்டனர் குடிமக்கள். அவ்வூரின் பாதிக்கும் மேலான நிலங்களையும், பண்ணை தொழிலையும், ஊர் நிர்வாக அதிகாரத்தையும் கொண்டவர் ரெங்கநாதன்.

வாழ்வே வெறுமையாகிய உணர்வில் பட்டாலை ஊஞ்சலில் படுத்தவாறு உத்திரத்தை வெறித்துக்கொண்டிருந்தான் உதயன். இன்னும் கதிரின் நினைவுகளே அவன் நெஞ்சில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தது. கையில் உணவு தட்டோடு அவன் அருகே வந்தார் பரமேஸ்வரி.

“உதய், பெரியம்மா உனக்கு பிடிச்ச ஐயிரமீன் குழப்பு வச்சி கொண்டு வந்திருக்கேன். சூடா இரண்டு வாய் சாப்பிடு கண்ணு” என்றார் கொஞ்சலாக. எழுந்து அமர்ந்தவன் சோர்ந்த குரலில், “எனக்கு வேண்டாம் பெரியம்மா” என மறுத்தான்.

“நேத்து இராத்திரி வீட்டுக்கு வந்ததுல இருந்து ஒரு வாய் கூட சாப்பிடலை, உடம்பு என்னத்துக்காகுறது? உங்கம்மா இருந்திருந்தா இப்படி விடுவாளா?” என்ற அதட்டலோடு அவன் அருகே அமர்ந்தவர் சாதத்தை பிசைந்து உருண்டை உருட்டிக்கொண்டு ஊட்ட வர, கையில் வாங்கிக்கொண்டான்.

“உங்கப்பா இறந்த போது கூட உன்னை இப்படி பார்க்கலை கண்ணு, அந்த புள்ளைய கடவுள் கூப்பிட்டுகிட்டான் அது விதி, இதுல நாம செய்றதுக்கு என்ன இருக்கு? கலங்கக்கூடாது கண்ணு” என ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார்.

அதேநேரம் முழுக்கைச் சட்டையை மடித்துவிட்டவாறு தனது அறையிலிருந்து வெளியே வந்த சிவச்சந்திரன் இருவரையும் பார்த்தான். அவர்கள் அருகே வந்தவன் தூணில் சாய்ந்தவாறு, “என்னமா விருந்து நடக்குது போல, அட மீன் குழம்பா அதான் வாசனை இழுத்துட்டு வந்திருச்சு. சரி வா, வந்து எனக்கு சோத்தப்போடு” என்றான்.

“ராக்காயிக்கிட்ட சொல்லு போடுவா” என்றவர் உதயனுக்கு உருண்டை பிடித்துக்கொடுப்பதிலே கவனமாக இருந்தார்.

“பாருடா, பெத்தபிள்ளைய விட வந்த விருந்தாளி தான் உனக்கு உசத்தியா போயிட்டானோ?” என்றவன் முறைப்புடன் உதயை பார்த்தான். பரமேஸ்வரிக்கு சினம் வர, “யாராலே விருந்தாளின்னு சொல்லுற? முட்டாப்பைய மவனே இப்படி தரக்கெட்டத்தனமா பேசாதடா” என்றார் அதட்டலாக.

“ஏன் இப்போ நான் என்ன தப்பா சொல்லிட்டேன்னு இப்படி பொங்குற? என்னைவிட உனக்கு அவன் மேல தான் பாசம் பொங்குது?” என்றான் கடுகடுப்புடன்.

“இங்க பாரு, ஒரு கண்ணுல வெண்ணையும் மறு கண்ணுல சுண்ணாம்பு வைக்கிற ஆளில்லை நான். எனக்கும் சரி, இந்த வீட்டுலையும் சரி நீ எப்படியோ அதே மாதிரி தான் அவனும் புரிஞ்சதா? காரணமில்லாம கத்தாத, உங்க அப்பா காதுக்கு கேட்டுட போகுது” என கட்டுப்புடன் உரைத்தார்.

அதற்கும் உதயை முறைத்தவன், “அது எப்படி நானும் அவனும் சமமாக முடியும்? எங்கையோ போய் வேலை பார்த்துக் கைநீட்டி சம்பளம் வாங்குறான் அவன், அதை இத்தனை வருஷத்துல ஒருநாளும் இந்த வீட்டுக்குக் கொடுத்ததில்லை, நினைச்ச நேரம் விருந்தாளியா வாறான், போறான். நான் இந்த வீட்டுக்காக வயலையும், தோப்புலையும் மாடா உழைக்கிறேன். ஆனால் என் உழைப்புல பரம்பரை சொத்துன்னு அவனுக்கும் பங்கு இதென்ன நியாயம்? அவன் நிலத்தையும் சேர்த்து நான் பார்க்கணுமாம், ஆனால் நானும் அவனும் சமமாம். இதென்ன

கணக்குன்னு எனக்குப் புரியலை, கொஞ்சம் தெளிவா தான் சொல்லேம்மா" என உதயைப் பார்த்தவாறு குத்தலாகக் கேட்டான்.

உதயன் வேகமாக எழுத்து சென்றுவிட, பரமேஸ்வரி பேசயியலாது வாயடைத்த நிலையில் மகனை முறைத்தார். உதயன் எழுந்து செல்வதைப் பார்த்து நிம்மதியாய் சிரித்துக்கொண்டான் சிவச்சந்திரன். இதுவே வேறு நாளாக இருந்திருந்தால் உதயன் இத்தனை அமைதியாய் செல்பவனில்லை!

வீட்டிற்குள் இருக்கப் பிடிக்காமல் ஊருக்குள் சென்றான் உதயன். ஊரின் மையத்தில் அரசமரம், அதற்கு அருகில் இருக்கும் சிறு டீக்கடையில் சென்று அமர்ந்தான். "டேய் மாப்பிள்ளை, வாடா" என்றவாறு கையில் டீக்கப்போடு வந்தான் உரிமையாளன் அழகன். ஏழாம்வகுப்பு வரை ஒன்றாகப் படித்தவன் தான் படிப்பில் ஈடுபாடில்லாமல் போக, தந்தையோடு சொந்த வயலில் இறங்கினான். பின் சற்றே வளர்ந்ததும் டீக்கடையொன்றை சொந்த முயற்சியில் ஆரம்பித்தவன் மெல்ல அதை உணவகமாக மாற்றிக்கொண்டான்.

"வேண்டாம் அழகா" என மறுக்க, "அட குடிடா, காசெல்லாம் கேட்க மாட்டேன் நீயா உன் எ.டி.எம் கார்ட் கொடுத்துட்டு போவியாம் என்ன?" என்றான்.

அதில் சிரித்துக்கொண்ட, உதய் அவன் முதுகில் அடிக்க சற்றே தடுமாறியவாறு, "பார்த்துடா சூடானடீ மூச்சில கொட்டிடப்போறேன். அப்பறம் ஊருல ஒருபையன் உன் வெத்துபோன மூஞ்சிக்கு பொண்ணு தர மாட்டான்" என்றவாறு அவன் கைகளில் கப்பைத் திணித்தான்.

வாங்கிக்கொண்டு உறுஞ்சியவாறு, "வீட்டுல மருமகமக்கா, தங்கச்சியெல்லாம் நல்லாயிருக்குறாங்களா?" என்றான்.

"அதுகளுக்கு என்ன ஒன்னொன்னும் குட்டிப்பிசாசாட்டம் என் தலையில ஏறியாடுதுக. அது

மட்டுமா நல்லா ஏத்திவிடுறதுக்குனே திண்ணையைக் காத்துக்கிட்டு கிடக்கா எங்க ஆத்தா”

“ஏன்டா பிள்ளைகளையும் அத்தையும் இப்படி சொல்லுற?”

“அதெல்லாம் குடும்பஸ்தன் கஷ்டம், நீ அனுபவிக்கும் போது உனக்கும் புரியும் மாப்பிள்ளை. போன வராம் தையக்காரி வண்டியில போகும் போது இராத்திரிக்குப் புரட்டா பார்சல் கேட்டா, நானும் வீட்டுக்குப் போகும் போது கொண்டு போனேன், எங்க தெரு முக்குலையே எதுக்கால வந்தவ வாங்கிட்டு போயிட்டா. உனக்கு தான் தெரியுமே எங்காத்தாளுக்கு சாந்திரமானா சரியா கண்ணு தெரியாதுன்னு, திண்ணையிலே உக்காத்திருந்தவ அதை பார்த்துட்டு ரத்தனத்துக்கிட்ட உன் புருஷன் தையக்காரி கையப்பிடிச்சு கொஞ்சிக்கிட்டு இருக்கான்னு பத்தவச்சிட்டா. அவ்வளவு தான்டா எம்பொண்டாட்டி பத்திரகாளி அவதாரமெடுத்து அடிபின்னி எடுத்துட்டா”

கண்களில் நீர் கட்டும் அளவிற்குச் சிரித்த உதயன், “அப்பறம் என்னசச்சு?” என்க, “அப்பறம் எம்பொண்டாட்டி அடிக்கிறதைப் பார்த்து விளையாட்டுன்னு நினைச்சு எம்புள்ளைகளும் தலைமுடியப் பிடிச்சிழுக்க, முதுகுல ஏறி குதிக்கன்னு உடம்பா புண்ணாக்கிட்டு தான் விட்டதுக” என்றான் பெருமூச்சுடன்.

சிரித்தவாறே குடித்து முடித்த உதயன் டம்ளரை அழகனிடம் கொடுத்தான். சுற்றிலும் வேடிக்கை பார்த்தவன் சாலைக்கு மறுபுறமிருக்கும் கடையை பார்த்தாவாறு, “ஏன்டா கோவிந்தமாமா இன்னுமா மெக்கானிக்செட்ட திறக்கலை?” எனக் கேட்டான்.

“ஆமா மாப்பிள்ளை. கதிரு போனதுல இருந்து அவன் குடும்பமே மொத்தமா நொடிச்சு போச்சு, காரியம் முடிச்சு ரெண்டுநாளாச்சு இன்னும் அவங்க வீட்டுப்பக்கம் நடமாட்டமே இல்லைன்னு கடைக்கு வாரவுங்க சொல்லிக்கிடுறாங்க” என்றான் வருத்தம் நிறைந்த குரலில்.

“சரிடா நான் அப்படியே அவன் வீட்டுப் பக்கம் போயிட்டு சுந்தரியக்காவ பார்த்துட்டு வரேன்” என உதயன் கிளம்ப, “கொஞ்சம் நில்லுடா மாப்பிள்ளை” என்றவன், “மாஸ்டர் மூணு பார்சல் சாப்பாடு கட்டு” எனக் குரல் கொடுத்தவாறு கடைக்குள் சென்றான்.

பார்சலோடு திரும்பி வந்தவன் உதயிடம் கொடுக்க, அதற்கான பணத்தை நீட்டினான். வாங்க மறுத்த அழகன், “ஏன் மாப்பிள்ளை ரிசர்வ் பேங்கையே உன் பாக்கெட்குள்ள வைச்சிருக்கியா என்ன? இங்க பாரு கதிரு உன்னை மாதிரியே எனக்கும் நண்பன் தான்டா. உன்விட எனக்குத் தான் அதிக உரிமை இருக்கு, நீ பாட்டுக்கு மும்பை பக்கம் சப்பாத்தி சுட போயிட்ட, ஆனால் அவன் கடைசி வரைக்கும் என் கூடவே இந்த ஊருலையே இருந்தவன் பார்த்துக்கோ” என மூச்சு வாங்கப் பேசி முடிப்பதற்குள் உதயன் சென்றிருந்தான்.

கதிர்வேல் எட்டாம் வயதில் பெற்றவர்களை இழந்துவிட, பக்கத்து ஊரில் மணமுடித்துச் சென்றிருந்த குணசுந்தரி கணவர் கோவிந்தசாமியோடு தம்பியை வளர்க்கவென தன் பிறந்தகத்தில் தங்கிவிட்டார். சுந்தரிக்கு சிறுவயதிலே திருமணம் முடித்திருந்தனர் பெற்றவர்கள். எழிலரசி ஆறுமாத கைக்குழந்தையாக இருக்க, பெற்றவர்களை இழந்து சிறுவனாக இருக்கும் கதிர் அக்காவின் நிழலில் வளரத்தொடங்கினான். மனைவிக்காக அங்கு வந்த கோவிந்தசாமி அவ்வூரிலே மெக்கானிக்செட் ஒன்றை ஆரம்பித்து தொழில் தொடங்கினார்.

அன்னையின் அரவணைப்பை குணசுந்தரியும், தந்தையின் கடமையை கோவிந்தசாமியும் தந்து கதிரை மூத்தபிள்ளை போலே வளர்த்தனர். ஒரு வீடும் சிறிது நிலம் மட்டுமே கதிருக்கான உடைமையாகப் பெற்றவர்கள் விட்டுச்சென்றிருக்க, நிலத்தைக் குத்தகைக்கு விட்டு கதிரின் கல்விச்செலவை கவனித்துக்கொண்டனர். படித்து முடித்தவன் வெளியில் வேலைக்குச் செல்வான் என எதிர்பார்த்திருக்க, அவனோ தன் நிலத்தை கைப்பற்றிக்கொண்டு விவசாயத்தில் இறங்கினான்.

அப்போதும் அவன் ஆசைக்குத் தடை சொல்லாது அவ்வப்போது அவர்களும் கதிருக்கு உதவியாய் நிலத்தில் உழைத்தனர். ஊருக்குள் யார் உதவி எனக் கேட்டாலும் மறுக்காமல் செய்பவன், அந்த அன்பே அவர்கள் வீட்டுப்பிள்ளை போலே அவனைரையும் நினைக்க வைத்தது. கேட்போருக்கு உதவி என்று மட்டுமில்லாது ஊர் பொதுநலனிலும் அக்கறை கொண்டு செயல்படுபவன். கதிருக்குச் சிறுவயதிலிருந்தே அக்கா மகள் எழிலரசி மீது அதிக பிரியம். விளையாடும் வயதில் தோழனாய், கல்வி பயிலும் வயதில் வழிகாட்டியாய், பருவ வயத்தில் நேசமோடும் அவளையே சுற்றி வந்தவன், இன்றும் அவள் சுவாசிக்கும் காற்றாகி அவளைச் சுற்றியே சுழன்று கொண்டிருக்கிறான்.

சுந்தரியின் வீட்டிற்கு வந்த உதய், திண்ணையில் படுத்திருந்த கோவிந்தசாமியை எழுப்பினான். “கோவிந்தமாமா சுந்தரியக்கா எங்கே?” என்றான்.

“மேல கதிரு ரூம்ல தான் அழுதுகிட்டு கிடப்பா” என வெறுமையான குரலில் கூற, “இந்தா மாமா அக்காவுக்கு கொடுத்துட்டு நீயும் சாப்பிடு” என உணவு பார்சலை நீட்ட, அவர் மறுத்தார்.

“குடும்பத்தலைவன் நீயே இப்படி கிடந்தா பொம்பளைங்க இன்னும் தான் துவண்டு போவாங்க, அக்கா பட்டினி கிடந்தா கதிரு தாங்குவானா? இப்படி பட்டினிபோடுறீரே எங்கக்காள?”

“நல்ல நாள்லையே அவ எனக்குச் சாப்பாடு போட மாட்டா? இதுல நான் அவளைப் பட்டினி போடுறேனாம் கேட்க வந்துட்டான் கேள்வி! அதுக தான்டா ஆளுக்கொரு மூலையில் உக்காத்துக்கிட்டு, சமைக்காம விசும்பிக்கிட்டே கிடக்குதுங்க” எனப் புலம்பினார்.

“நீ சாப்படலன்னு இப்போ யாரு அழுதா? இந்தா அக்காவைச் சாப்பிட வைச்சிட்டு செட்டுக்கு வா, என் பைக்குக்கு ஏதோ பிரச்சனை போல, ரொம்ப நாளா குப்பை மாதிரி போட்டு வைச்சிட்டாங்க வந்து என்னனு பாரு வா” என அழைத்தான்.

“நாளைக்குப் பார்க்கலாம்” என அவர் எழ, “எழிலு எங்க? அவளுக்கும் தான் சாப்பாடு இருக்கு” என்றான்.

“உள்ள தான் உக்காத்திருப்பா பாரு” என்றவர், திண்ணையின் அருகே இருக்கும் மாடிப்படிகளின் வழி மேல கதிரின் அறைக்குள் சென்றார். சில வருடங்களுக்கு முன்பே மாடியில் ஒற்றையறை கட்டி கதிர் அதில் தங்கிக்கொண்டான். மாடிக்குச் செல்லும் வழி வீட்டின் வெளியே தான் இருந்தது. முன்புறம் முள்வேலிகளலால் வேயப்பட்ட தட்டியில் பூங்கொடிகள் படர்ந்திருக்க, பின்புறம் கிணற்றடியும் குளியலறையும் தனித்திருந்தது. அருகே, முருங்கை, வாழை, மருதாணி, கீரை வகைகளும் இருக்கும். அனைத்தையும் வைத்து பராமரித்து வந்தது கதிர் தான்.

தரையில் அமர்ந்தவாறு கட்டிலில் தலை சாய்த்து விசும்பிக்கொண்டிருந்த குணசுந்தரியை சமாதானம் செய்து உண்ண வைத்தார் கோவிந்தசாமி. பின் தானுமொரு உணவு பார்சலைப் பிரிக்க, திடீரென அந்த வீதிக்கே கேட்கும் வண்ணம் எழிலின் அலறல் குரலும், உதயனின் குரலும் கேட்க, இருவரும் புரியாமல் எழுந்து ஓடி வந்தனர். குணசுந்தரியும் கோவிந்தசாமியும் உள்ளே செல்ல எழில் நிலை கண்டு அதிர்ந்தனர்.

## அத்தியாயம் 03

“வெளியே போ, என் கண்ணு முன்னாடி நிக்காதே. என் வீட்டுக்குள்ள நீ வரவே கூடாது வெளியே போ” எனக் கத்தியவாறு உதயனின் நெஞ்சில் கை வைத்து வெளியே தள்ளிக்கொண்டிருந்தாள் எழிலரசி.

அவளின் தளிர்கரம் தள்ளி அவன் தேக்குமர தேகம் அசைவதா? சிறிதும் அசையாது நிலையாக நின்றவன், “எழில் நான் எதுவும் பண்ணலையே ஏன் தேவையில்லாம என் மேல கோபப்படுற? முதல்ல சட்டைய விடும்மா” என்றவாறு அவள் கைகளிலிருந்து விடுபட முயன்று கொண்டிருந்தான் உதயன்.

அதற்குள் வீட்டிற்குள் வந்த இருவரும் இவர்களின் நிலை கண்டு அதிர, சுந்தரி ஓடி வந்து மகளைப் பிடித்து தன்னோடு இழுத்துக்கொண்டார். இருந்தும்

எழிலின் ஆக்ரோஷத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அன்னையின் பிடிக்குள்ளும் துள்ளியவள், “செய்யக் கூடாத பாவமெல்லாம் செஞ்சிட்டு இப்போ புண்ணியம் தேடி வந்திருக்கியா? உன் கையால நாங்க வாங்கி சாப்பிடுகிறதுக்குச் செத்தே போயிடலாம். என் வீட்டுல இருந்து போன்னு சொன்னேன்ல இன்னும் ஏன் முன்னாடி நிக்கிற? உன்னை....” எனக் கத்திக்கொண்டிருந்தவள், மேசையில் கதிரின் புகைப்படத்திற்கு முன் எரிந்து கொண்டிருந்த காமாட்சி விளக்கை தூக்கி உதயனின் மேலே எறிந்தாள்.

யாரும் தடுப்பதற்குள் நொடிப்பொழுதில் நிகழ்ந்து விட, கணமான கை விளக்கு அவன் நெஞ்சில் மோதி கீழே விழுந்தது. “உதய்..!” எனப் பதறியவாறு கோவிந்தசாமி ஓடி வந்து அவனைப் பார்க்க, “காயமேதும் இல்ல மாமா” என்றவாறு மார்புப்பகுதியை நீவிக்கொண்டான். அதற்குள் மகளின் இச்செயலில் கோபம் கொண்ட சுந்தரி, அவளை சமாளிக்க முடியாமல் கண்டிக்க நினைத்து, “பைத்தியமாடி நீ?” என்றவாறு அறைந்தார்.

ஆனால் அதற்கும் சிறிது கூட அசராதவள், “ஆமா நான் பைத்தியம் தான், கொலைகாரி ஆகுறதுக்குள்ள அவரை போகச் சொல்லு..இல்லை..” என்றவள் அடிப்பதற்கு எதையோ தேடி அருகிலிருந்த தாம்பூலத்தட்டை எடுத்தாள். அதற்குள் கோவிந்தசாமி உதயனை வெளியில் அழைத்து வந்து விட, சுந்தரி மீண்டும் மகளைக் கண்டித்தார்.

அனைவருக்குமே எழிலரசியின் நிலை காணக் கவலையாக இருந்தது. அமைதியே குணமாக கொண்டவள், வீட்டாள்களிடம் மட்டும் கலகலப்பாகப் பேசிச்சிரிப்பவளிடம் இப்படியொரு குணம் இருக்குமென நினைக்கவேயில்லை. உதயன் திண்ணையில் அமர, அவன் எதிரே நின்றுக்கொண்டிருந்த கோவிந்தசாமி, “மன்னிச்சுக்கோப்பா, என்னைக்கும் அவ இப்படியெல்லாம் நடந்துக்கிட்டதில்லை. இன்னைக்கு

என்னன்னு தெரியலை இப்படி கத்துறா?” என வேண்டினார்.

“எனக்குத் தெரியாதா மாமா! அவ ஏதோ கதிரு போன துக்கத்தை மனசுலையே வச்சுகிட்டு இப்படி இருக்கா? எனக்கு ஒன்னுமில்லை போய் அவளை பாரு இல்லை அக்கா அடிச்சே உன் தங்க மகளை தகரமாக்கிடுவா. போ மாமா” என அனுப்பி வைத்தான்.

ஆனால் மனதிற்குள் ஒரு கேள்வி இருந்தது, கதிரின் இழப்பு அவளுக்குத் தாங்க முடியாத வேதனை தான் எனினும் அனைவரிடமும் அமைதியாகப் பேசுபவள் தன்னிடம் மட்டும் கோபம் கொள்வதேன்? தன் மீது தவறேதும் இல்லையே? ஏதோ தவறான புரிதல் கொண்டு கோபத்தை வளர்த்துள்ளாள் எனப் புரிந்து கொண்டு எழுந்தான்.

நீண்டு வளர்ந்த வானுயர்ந்த தென்னை மரங்கள் ஏக்கர் கணக்கில் விரிந்திருக்கும் தோப்பில் வேலையாட்கள் தேங்காய் உரித்துக்கொண்டிருந்தார். அவர்களுக்குச் சற்று தொலைவில் கயிற்றுக்கட்டிலில் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டுக் குப்புறப்படுத்து உறங்கிக்கொண்டிருந்தான் சிவச்சந்திரன். அரை உறக்க நிலையில் அவன் அலைபேசி இருமுறை அழைக்கத் திரும்பிப் படுத்தவன் எடுத்துப்பார்த்தான்.

தன் அண்ணன் ராஜகணபதியிடமிருந்து அழைப்பு வந்திருக்க, அட்டன் செய்து, “டேய் ராசா, உனக்குத் தான் தம்பி இந்த நேரம் தென்னந்தோப்புல நித்திரையில இருப்பான்னு தெரியுமில்லை அப்பறம் எதுக்கு கூவிக்கிட்டு இருக்க? ஏதா இருந்தாலும் ஒருமணிநேரம் கழிச்சு கால் பண்ணு” என்றவன் கட் செய்து விட்டு அருகில் இருக்கும் துண்டை எடுத்து முகத்தில் போட்டுக்கொண்டு மீண்டும் உறங்க ஆரம்பித்தான்.

மீண்டும் அலைபேசி விடாது அழைக்க, எரிச்சலுடன் முழு தூக்கத்தையும் துடைத்து விட்டு எழுத்து அட்டன் செய்தான். பேசியவாறே கிணற்றடி தொட்டியில் முகத்தை கழுவிக் கொண்டிருக்க, “அடேய் எருமைமாடே! நான் எவ்வளவு முக்கியமான விஷயம்

கேட்க, போன் பண்ணுறேன், நீ பகல் தூக்கத்துல இருக்கையா?” என்றான் ராஜா.

துண்டால் முகத்தைத் துடைத்தவாறே, “என்னத்த முக்கியமான விஷயம் கேட்கப் போற? அண்ணிக்கு முடியலை அம்மாவை மீன் குழம்பு வைச்சிக் கொடுத்து விடச் சொல்லுன்னு தானே?” என்றான்.

“டேய் வந்தேன்னு வை, உன் உடம்புல ஒரு எலும்பும் தேறாது பார்த்துக்கோ” என மிரட்ட, “டேய் பால் டப்பா வாடா? யாருக்கிட்ட, ஒத்தைக்கு ஒத்த வாடா பார்த்திடலாம், உங்கப்பனுக்கு மூத்தபிள்ளை இல்லாம பண்ணிடுவேன்” என்றவாறு மீசை முறுக்கினான் சிவச்சந்திரன்.

“அடேய் நாம இப்படி அடிச்சிக்கிட்டு இருந்தா ஊடபுகுந்து உதய் எல்லா சொத்தையும் சுருட்டிட்டு போகப்போறான்டா. ச்சே, கேட்க வந்ததையே மறந்துட்டேன். உதய் ஊருக்கு போயிட்டானா?” என்றான்.

“இல்லை வேளாவேளைக்கு அம்மா ருசிருசியா அவனுக்கு ஆக்கிப்போட்டு கொஞ்சிக்கிட்டு இருந்தா எப்படிக் கிளம்புவான்? நம்ம அம்மாவுக்கு அவன்னா மரிக்கொழுந்து நான்னா வேப்பங்கொழுந்து!” என்றான்.

“உனக்கு இப்படி புலம்புறதத் தவிர வேற என்ன தெரியும்? சரி அவன் வந்து எத்தனை நாளாச்சுடா?”

“ஒரு வாரமாகுது”

“எப்போ ஊருக்கு வந்தாலும் மூணுநாள் இல்லை நான்கு நாள்ல கிளம்பிடுறவன் இன்னும் இங்கையே இருக்கானே சரியில்லடா, அப்பறம் அவன் போற வரைக்கும் வீட்டுக்கணக்கு வழக்கு எதுவும் அவன் காதுக்கு போகாம பார்த்துக்கோ, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவனை ஊருக்குக் கிளப்பி விடு”

“டேய் முட்டாப்பயலே அவன் என்ன ஸ்கூல் போற சின்னப்புள்ளையா? யூனிஃபார்ம் போட்டு, ஷூ

போட்டு வேன்ல பிடிச்சு தள்ளி விட?”

“பெரிய சண்டியராட்டம் வாய் மட்டும் பேசுற? இந்த சின்ன வேலைய கூட உன்னால செய்ய முடியாத?”

“கத்தாதடா, நேத்தே அறையிற மாதிரி நாலு கேள்வி நல்லா கேட்டான். எப்படியும் நாளைக்கெல்லாம் கிளம்பிடுவான் மானஸ்தன். சரி அண்ணியும் பாப்பாவும் எப்படியிருக்காங்க?”

“ம்ம், நல்லாயிருக்காங்க. ஸ்கூல் அட்மிஷன் நடக்குது வேலை கிடக்கு அப்பறம் பேசுறேன்” என ராஜகணபதி கட் பண்ண, ‘எதுக்கு திரும்பவும் குறைக்கவா வேண்டாம்டா சாமி’ என மனதில் நினைத்தான் சிவச்சந்திரன்.

இரவுவேளை கூடத்து சோஃபாவில் கையில் டிவி ரிமோட்டுடன் படுத்திருந்த சிவாவின் பார்வை டிவியில் பதியாது அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்த உதயனின் மேலே இருந்தது. ‘பரபரப்பா சுத்திக்கிட்டு இருக்கிறதைப் பார்த்தா மும்பைக்கு கிளம்புறான் போல’ என நினைத்துக் குதூகலித்துக் கொண்டிருந்தான் சிவா.

உதய்யும் அலைப்பேசியில் ஏதோ ட்ரவல்ஸில் பேசிக்கொண்டிருக்க, வழக்கத்திற்கு மாறாக அன்னையும் சமையலறையில் பரபரப்பாய் இருக்க, உதயன் கிளம்புகிறான் என முடிவு செய்து விட்டான் சிவா. அவன் அருகே வந்த பரமேஸ்வரி, “டேய் எழுந்து சாப்பிட வா?” என அழைத்தார்.

“நான் சாப்பிடுறது இருக்கட்டும் முதல கிளம்புற உன் வளர்ப்புப்பிள்ளைக்கு சோத்தைப் போட்டு அனுப்பிவை, காத்து வரட்டும்” என்றான் சட்டை காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு.

“அவன் எப்போட கிளம்புறேன்னு சொன்னான்? நீயா உளறாத!”

“இன்னும் எதுக்கு இந்த முக்காடு, அதான் எனக்குத் தெரியாமா ஏதோ டப்பா டப்பாவா கட்டிவைக்கிறயே,

நீ மறச்சி வைச்சாப்புல எங்களால மோந்து பார்த்துக் கண்டுபிடிக்க முடியாதாக்கும்?”

“டேய் அதெல்லாம் அபிராமிக்கு கட்டி வைச்சதுடா, உதய் தான் நாளைக்கு அக்காவைப் போய் பார்த்துட்டு வரேன்னு சொன்னான், அதான் மிளகாப்பொடி, அரிசி வடகம், நெய் முறுக்கு கட்டி வைச்சேன்” என்றதும் அதிர்ந்த சிவாவின் முகம் ஏமாற்றத்தில் சுருங்கியது.

“ஹலோ மிஸ்டர்.சுஜத் உங்க டீமோட நாளைக்கு ஜெய்ப்பூர் கிளம்புங்க, நான் ட்ரவல்ஸ் எல்லாம் அரேன்ஜ் பண்ணிட்டேன்” என கைப்பேசியில் பேசியபடி அவர்கள் அருகே வந்தான் உதயன். சிவாவோ எரிச்சலோடு மூடிய உதட்டிற்குள் பற்களைக் கடித்தான்.

“பெரியம்மா சாப்பிடலாமா?” என உதய் கேட்க, “நீ வா கண்ணு” என்றவர் சிவாவைக் கண்டுகொள்ளாது அழைத்துச் சென்றார்.

“என்ன பெரியம்மா, ஹால்ல மாட்டியிருக்கிற பல்பு புதுசு போல, நல்ல பிரகாஷமா..எரியுது” என கேலியுரைக்க, அர்த்தம் புரிந்த பரமேஸ்வரி சிரித்துக்கொண்டார்.

மறுநாள் காலை பரமேஸ்வரி கட்டிக்கொடுத்த சரக்குகளோடு அக்கா அபிராமியை பார்க்கக் கிளம்பினான் உதயன். சிவாவோ ஏக கடுப்பில் முறைத்துக்கொண்டே வெளியில் சென்றுவிட்டான். அன்றும் ராஜகணபதி அழைத்து இன்னும் உதயனை ஊருக்குக் கிளப்பி விட இயலவில்லையா என சிவாவைத் திட்ட, மேலும் உதயனின் மீதான கோபம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அபிராமியின் வீட்டிற்குள் செல்ல, வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி உதயனைக் கண்டதும், ஓடி வர, தூக்கிச்சுற்றியவாறு உள்ளே சென்றான். “மாமா, எங்கே சாக்லேட்?” என்றவள் அவன் சட்டைப்பைக்குள் ஆராய, “இரு குட்டிம்மா..” என்றவாறு கால்சட்டை பாக்கட்டிலிருந்து சாக்லேட் பாரை

எடுத்துக்கொடுக்க உடனே பிரித்து உண்ண ஆரம்பித்துவிட்டாள் ப்ரதிக்ஷா.

புன்னகை முகமாக எதிரே அபிராமி, தம்பியை வரவேற்று நலம் விசாரித்தாள். “மாமா எங்கக்கா காணும்?” என்க, “மில்லுக்கு போயிருக்காரு, மதிய சாப்பாட்டுக்கு வந்திடுவாருடா” என்றவள் சமையல் வேளையைக் கவனிக்கத் தொடங்கினாள். சமையலறை வாசலில் ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்தவன் ப்ரதிக்ஷாவுடன் விளையாடிவாறு அபிராமியிடம் பேசிக்கொண்டிருந்தான்.

கதிருக்குப் பின் உதய் மனம் விட்டுப் பேசுவது அபிராமியிடம் மட்டுமே! முதலில் அவள் நலம் குடும்ப விஷயங்கள், சிவாவிற்குப் பார்த்துக் கொண்டிருக்கும் மணப்பெண் பட்டியல் என அனைத்தையும் இருவரும் பேசி முடிக்க, உதயன் கதிரின் இழப்பை வேதனையோடு உரைத்தான். அபிராமி ஆறுதல் சொல்ல, ப்ரதிக்ஷா, “அழாத மாமா” என்றவாறு கண்ணீரே வராத கண்களைத் துடைத்துவிட்டாள்.

அபிராமியின் சமையல் வேலைகள் முடிய, கணவர் செல்வராஜுக்கு உணவு நேரம் அழைத்தாள். அவரும் வர உணவு நேரம், மாமனுடன் பேசியவாறு உண்டுவிட்டு மாலை நேரம் உதய் வீடு திரும்பினான்.

காலைவேளை எப்போதும் போலே அழகனின் கடையில் டீக்குடித்துக்கொண்டிருந்த உதயனின் கண்கள் எதிர்புறமிருக்கும் மெக்கானிக்செட்டை பார்த்தது. இன்றும் திறக்கப்படாமல் இருக்க, வீட்டிற்குச் சென்றவன் தனது பைக்கை எடுத்துத் தள்ளிக்கொண்டே கோவிந்தசாமியின் வீடு நோக்கிச் சென்றான். கோவிந்தசாமியைப் பார்க்கவென வந்து விட்டவனுக்கு வீட்டை நெருங்கும் போதே, எழிலரசியின் நினைவு வந்தது.

அன்று எவ்வாறு எல்லாம் கத்தினாள், மீண்டும் அவள் முன் செல்ல வேண்டுமா! தன்னை கண்டால் மேலும் கோபம் கொள்வாள் என நினைத்தவன், வீட்டிற்கு சற்று முன்பே நின்று விட்டான். தெருவில் செல்லும் சிறுவன்

ஒருவனைப் பிடித்து, “டேய் சுந்தரியக்கா வீட்டுக்குள்ள இருக்காளான்னு பார்த்துட்டு வாடா?” என்றான்.

“ஐய்யோ, நான் ஸ்கூல் போகணும் டைம்மாச்சு. விடுண்ணே” என்றவன் ஓடப்பார்க்க, “டேய் டேய், நான் வேணா உனக்கு சாக்லேட் வாங்கித்தரேன்டா” என உதய் டீல் பேசினான்.

“சாக்லேட் எல்லாம் வேண்டாம், அழகமாமா கடையில சாயந்தரத்துக்கு ஒரு சிக்கன் பிரியாணி சொல்லிடுண்ணே” என்ற சிறுவன் கையை கட்டிக் கொண்டு நிற்க, சரியென்றான் உதயன். வீட்டிற்குள் செல்லாது வீட்டு வாசலை நோக்கி ஒரு கல்லை எறிந்துவிட்டு, வீட்டை ஒருமுறை சுற்றி வந்தவன், “அத்தை இல்லை, ஆனால் எழிலக்கா இருக்கா. சாம்பார் தாளிக்கிற வாசம் வருது” என தன் கண்டுபிடிப்பின் முடிவை உரைத்துவிட்டு ஓடிவிட்டான்.

என்ன செய்வது என சுற்றும் முற்றும் பார்த்தவன் கையிலிருந்த ஹெல்மெட்டை மாட்டிக்கொண்டு வண்டியைத் தள்ளியவாறு உள்ளே சென்றான். அந்த சத்தத்தில் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த எழில் முகம் மறைத்துக்கொண்டு ஹெல்மட்டோடு நிற்பவனைப் பார்த்து, “யார் நீங்க என்ன வேணும்?” என்றாள்.

“நாங்க அசலூரு வண்டி ரிப்பேர், மெக்கானிக்செட்டுக்கு போனா பூட்டி இருந்தது. அங்கபக்கத்துல விசாரிச்சா இந்த வீட்டை காட்டுனாங்க. கோவிந்தமாமாவை பார்க்கணும்” என்றான்.

மண்டமேல இருக்குற கொண்டைய மறந்துட்டானே! என்பது போல் ஹெல்மட் போட்டும் கோவிந்தமாமா என்றதில் அவனைக் கண்டுகொண்டாள் எழிலரசி. படிகளில் நின்றுக்கொண்டிருந்தவள் இடுப்பில் கைவைத்து முறைத்தவாறே, “நினைச்ச நேரத்துல புதுகாரே வாங்குற இந்த பெரிய வீட்டுக்காரங்கள் எல்லாம் எங்க வீடு தேடி வர வேண்டாம்! இனியாவது எங்களைக் கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்க” என்றாள்.

அதில் உதயனுக்கு கோபம் வர, ஹெல்மெட்டை கழட்டியவாறு, “இந்தா கொஞ்சம் நிறுத்து இப்போ நான் என்ன தப்பு பண்ணிட்டேன்னு இப்படி கத்துறதும், ஜாடையில பேசுறதுமா இருக்க என்ன விஷயம்? ஏன் இதுக்கு முன்னாடி நான் கோவிந்தமாமாவை தேடி வந்ததில்லையா? இல்லை சுந்தரியக்கா கையாளத் தான் சாப்பிட்டதில்லையா? ஒருவேளை கதிர் இறந்த அன்னைக்கு வரலைன்னு கோபமா? எனக்கு அப்போ விஷயமே தெரியாது, தெரிஞ்சதும் உடனே வந்துட்டேனாக்கும்?” படபடவென கோபத்தில் கொட்டினான் உதயன்.

“ஏன் வந்தீங்க? அது தான் வேண்டாம்கேன். உங்க கொலைகாரக் குடும்பத்தோட காத்துக் கூட எங்க வீட்டுப்பக்கம் வரவேண்டாம். போதும் நாங்க ரொம்ப நொந்துட்டோம், எங்களை விட்டுடுங்க” என்றவளின் கண்கள் கலங்க, மெல்ல மெல்ல மீண்டும் கோபம் ஏறிக்கொண்டிருந்தது. அவள் கோபம் தன்மீது மட்டுமல்ல தன் வீட்டார்கள் மீதும் தான் என உதயனுக்குப் புரிந்தது.

“அப்படியென்ன நாங்க செஞ்சிட்டோம்? சொத்துப்பிரச்சனையும் ரெம்ப நாளா இருக்குறது தானே? அதுமட்டுமில்லாம அதுக்கும் எனக்கும் சம்மந்தமே இல்லையே? எழில் நீ எதையோ மனசுல வைச்சிக்கிட்டு பேசுற என்னனு சொல்லு” என்றான்.

“என் மனசு முழுக்க ஆத்திரம் தான் இருக்கு கதிர் மாமாவை கொன்னவுங்களை எல்லாம் தண்டிக்கணும், சும்மா விடக்கூடாது, கதிர் மாமா நினைச்சதெல்லாம் இந்த ஊருக்கு செய்யணும். அவ்வளவு வெறி இருக்கு என் மனசுல, ஆனால் என்னால எதுவும் செய்யமுடியலை. உங்க குடும்பத்தை நினைச்சாலே தாங்க முடியலை, என்னை கொலைகாரியா மாத்துறதுக்குனே என் முன்னாடி வாறீங்களா?” என்றவள் கோபமிகுதியில் தன்னிலை மறந்து கத்திக் கொண்டிருந்தாள்.

அதே நேரம் கண்களும் அடிப்பதற்கான பொருள் தேடி அங்குமிங்கும் சுழன்றது. ஆனால் உதய் இது எதையும்

கவனிக்கவில்லை, அவனுக்கு அவள் சொல்லும் உண்மைகளை உள்வாங்கிக் கொள்ளவே சில நிமிடங்கள் தேவையாக இருந்தது. அவனுக்கு மட்டும் சுற்றும் பூமி நின்றதை போன்று பேரதிர்ச்சியாக இருந்தது. உதய் மட்டுமல்ல ஊராரும், கதிர் விபத்தில் இறந்ததாகத் தான் எண்ணினர். அவன் கேஸும் அவ்வாறு தான் முடிக்கப்பட்டிருந்தது.

குளித்து முடித்து இடையில் கட்டிய ஈரத்துண்டோடு கோவிந்தசாமி மகளின் குரல் கேட்டு, விரைந்து வந்தார். கோபத்தோடு நொடியில் நிற்காமல் அவள் வீட்டிற்குள் விறுவிறுவென சென்றுவிட, அவளைக் கடந்து வாசலிற்கு வந்தவர் உதயன் நிற்பதைப் பார்த்தார்.

”மாப்பிள்ளை நீ அழக கடையில உக்காரு இதோ இரண்டு நிமிசத்துல சட்டையப் போட்டு வந்திடுறேன்” என்றவர் மீண்டும் வீட்டிற்குள் சென்றார். மனதிற்குள்ளே, ‘ஐய்யோ என் தங்கமகளுக்கு என்னச்சுன்னே தெரியலையே! சீக்கிரம் சுந்தரிக்கிட்ட சொல்லி மாடசாமி கோவில் பூசாரிட்ட கூட்டிப் போய் விபூதி போடச் சொல்லணும்’ என புலம்பினார்.

அங்கிருந்து கிளம்பிய உதயனுக்கு எழிலின் கோபமே நினைவில் வந்தது. ஏதோ சொல்லமுடியாத உன்மைய மனதில் வைத்துக்கொண்டே எழில் அதைக் கோபமாகக் காட்டுகிறாள் என உணர்ந்திருந்தான். தான் இல்லாத போது என்ன நடந்ததோ! அதுவும் தன் குடும்பத்தைக் குறிப்பிட்டு அவள் சொல்லும் பழிச்சொல் அவனுள் சினமென்னும் தீயை மூட்டியது. கதிரின் இழப்பை விபத்தென்று நினைத்தே இழப்பின் வேதனையை தாங்கிக்கொண்டு அவனில்லாது வெறுமையானா தன் வாழ்நாட்களை கடந்துச் செல்ல முயன்று கொண்டிருந்தான். அது கொலை என்றறிந்த பின் உள்ளத்தில் பற்றிய தீ அனல் காடாய் எரிய அடக்க முடியாத சினத்தோடு தன் வீடு நோக்கிச் சென்றான்.

## அத்தியாயம் 04

கோபமுடன் வீட்டிற்குள் வந்த உதயன் விறுவிறுவென தன் அறைக்குள் சென்று உடைகளை மட்டும் ஒரு

பைக்குள் திணித்துக்கொண்டு கிளம்பினான். பக்கத்து அறையிலிருந்து பணத்தை எண்ணியவாறு வந்தார் அவனின் பெரியப்பா ரெங்கநாதன்.

பையுடன் வந்த உதயனைக் கவனித்தவர், “கைச்செலவுக்கு இதை வைச்சுக்கோடா” என கொடுக்க, கண்டுகொள்ளாமல் தவிர்த்துச் சென்றான். “என்ன உதய் சொல்லாம கொல்லாம கிளம்பிட்ட? சரி வந்து சாப்பிட்டு கிளம்புடா” என பரமேஸ்வரி அழைக்க, “இத்தனை நாளும் இந்த வீட்டு உப்பைத் தான் சாப்பிட்டுருக்கேன்னு நினைக்கும் போது அசிங்கமா இருக்கு பெரியம்மா” என்றவன் நிற்காது கிளம்பிவிட்டான்.

வாசலில் வண்டியைத் துடைத்துக்கொண்டிருந்த சிவச்சந்திரன் அதைக் கண்டு மனதிற்குள் ‘அப்பாடா ஒருவழியா கிளம்பிட்டான்’ என நினைத்தான். அவன் அருகே வந்த உதயன், “ரொம்ப சந்தோஷப்பட்டுக்காத நான் வீட்டை விட்டுத்தான் போறேன், ஊரைவிட்டு இல்லை” என்க, சிவாவின் முகம் பெரும் ஏமாற்றத்தைக்காட்டியது.

“ஏன்? இங்கிருந்து படம் ஓட்டப்போறீயா?” என நக்கல் சிரிப்புடன் கேட்க “இல்லை நீ தானே சொன்ன, நான் இந்த வீட்டுக்கு உழைக்க மாட்டிக்கேன்னு, உனக்கு இனி சிரமம் வேண்டாப்பா இங்கிருந்து நானே என் சொத்து பத்தை கவனிச்சிக்கிறேன்” என்ற உதயன் வெளியேறினான். அன்று தான் குத்திக்காட்டிய வார்த்தைகளால் இன்று தன்னையே குத்துவான் என எதிர்பாராது சிவா அதிர்ந்த முகத்துடன் நின்றான். இந்த விஷயம் ராஜாவுக்கு தெரிஞ்சது அதற்கும் என்னைத் தானே வாட்டியெட்டுப்பான் என்றும் மனதில் புலம்பினான்.

”உதய் நில்லு, எதுக்கு வீட்டைவிட்டு வெளிய போற? மும்பைக்குப் போகாம இங்கிருந்து என்ன செய்யப் போற?” பரமேஸ்வரி வாசலில் நின்றவாறு கேட்க, “என்ன தான் கதிருக்கும் உங்களுக்கும் தகராறு இருந்ததாலும் நீங்க இவ்வளவு கீழ இறங்கிப்போவீங்கன்னு நினைக்கலை, கதிரு என்

உயிர் நண்பன், அவனை எதிரியா நினைக்கிறவுங்க இனி என்னையும் அப்படியே நினைச்சிக்கோங்க” என்றவன் நிற்காது விறுவிறுவென சென்று விட்டான்.

அவன் வந்து  சென்ற வேகமும், அவன் பேச்சிலிருந்த கோபமும்  இறுதியில் கதிரை இழுத்ததும் ஏதோ விபரீதம் வரவிருப்பதை உறுதிப்படுத்தத் தவறு செய்த ரெங்கநாதன் முகம் பயத்தில் வெளிறியது. வாசலில் நின்றிருந்த பரமேஸ்வரி புரியாது குழம்பி, “என்னங்க இவன் திடீர்னு என்னென்னவோ சொல்லிட்டு கோபமா போறான், எனக்கு ஒன்னும் புரியலையே! நீங்களும் அவனை தடுக்காமா விட்டுட்டு வேடிக்கை பார்க்கிறீங்க? பிள்ளை எங்க போவான், என்ன செய்யான்?” என்றார் வேதனையுடன்.

சிவச்சந்திரனுமே உதயனின் வார்த்தையில் அரண்டு போய் வெளிறிய முகத்துடன் நிற்க, “டேய் நீ ஏதாவது சொல்லிட்டீயாடா?” அதான் கோபிச்சிக்கிட்டு போறானா?” என பரமேஸ்வரி கேட்க, “ஆமா அவன் பச்சபுள்ளை பாரு, நான் பூச்சாண்டியிருக்குன்னு பயமுறுத்தித் துரத்த? அட ஏம்மா நீ வேற, வயிறு காஞ்சா தன்னால இராத்திரி சாப்பாட்டுக்கு வீடு வந்து சேர்ந்திடுவான்” எனப் பைக்கை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.

ஆனால் உள்ளுக்குள் பயத்தில் உறைந்திருந்தான். உதயன் ஊரில் தங்கினால் எல்லா வழிகளும் தனக்குத் தான் ஆபத்து, அது மட்டுமின்றி தன் தவறுகள் வெளிப்பட்டு விடுமென்ற பயமும் தனக்கான மரியாதைகள் குறைய வாய்ப்புள்ளதாகவும் நினைத்தான். ராஜாவிடம் சொல்லச் சிறிது பயமிருக்க, அவனைத் தவிர உதயனை ஊரைவிட்டு அனுப்ப வேறு வழியுமில்லாது அவனை தேடிச் சென்றான்.

உதயனின் தந்தை கிருஷ்ணமூர்த்தியும் ரெங்கநாதனும் உடன் பிறந்தவர்கள், திருமணத்திற்கு பின்னும் ஒரே குடும்பமாகத் தான் இருந்தனர். ரெங்கநாதன் பரமேஸ்வரி தம்பதிகளுக்கு ராஜகணபதி, அபிராமியும்  வளர்ந்த குழந்தைகளாக இருக்க இறுதியாகப் பிறந்தான் சிவச்சந்திரன். அவன்

பிறந்த சில மாதங்களிலே உதயன் பிறக்க, பிறந்ததும் அன்னையை இழந்தான். கூட்டுக்குடும்பம் ஆகையால் அனைவரும் கவனித்துக்கொள்ள, கிருஷ்ணமூர்த்தி வேறு திருமணமும் பற்றி யோசிக்கவில்லை. ஒற்றை வயதான சிவாவிற்கு தன் அன்னை தன்னை தவிர்த்து உதயனைக் கவனிப்பது கொஞ்சுவது சிறிதும் பிடிக்காது, அதனாலே அனைத்திலும் அவனுடம் பொறாமைக்கொண்டு போட்டியிடுவான்.

வளர்ந்தவன் ஆனா ராஜா இதில் எதையும் கண்டு கொள்வதில்லை, உதய்யாக வந்து உதவி, ஆலோசனை கேட்டால் மட்டுமே செய்வான். அன்னை இல்லாதவன் என அபிராமிக்கு மட்டும் உதயனின் மீது தனிப்பாசம், ஆரம்பக்கல்வி அவள் தான் கற்றுத்தந்தாள், உதயனின் வாழ்வில் வலியென்றால் ஆறுதலான வார்த்தைகளை அவளிடம் தான் தேடி வருவான். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தோள் தட்டிக்கொடுத்து ஊக்கமளித்து எதையும் எதிர்கொள்ளும் தைரியமுடன் உதயனை வளர்த்துவிட்டு தன் கடமையை முடித்தார் கிருஷ்ணமூர்த்தி.

உலகமறியாத சிறுவயதில் ஆரம்பப்பள்ளிப்படிப்பில் உருவாகியது கதிருடனான நட்பு. அவனுக்கும் பெற்றவர்கள் இல்லை என அறிய மேலும் அவனோடு நெருங்கிக்கொண்டான் உதயன். ஒத்த எண்ணங்களும் பண்புகளும் வெவ்வேறு குணமும் கொண்டவர்கள் பின்னாட்களில் வளர வளர அவர்கள் நட்பின் பிணைப்பு அதிகரித்தது.

மாலை நான்கு மணியளவில் மதுரையில் அண்ணன் ராஜகணபதி நடத்தும் மெட்ரிக்குலேஷன் பள்ளிக்குள் நுழைத்தான் சிவச்சந்திரன். அலுவலக நேரம் முடித்துவிட்டதால் குழந்தைகளும் ஆசிரியைகளும் சென்றிருக்க, நேராக ராஜாவின் அறைக்குள் நுழைய, “வாடா சிவா, என்ன விஷயம்?” என அழைத்தான்.

தனக்குத் தேவை இருந்தால் தவிர, சிவா தேடி வர மாட்டான் என அறிந்திருந்தவன், “உதய் ஊருக்கு போயிட்டானா?” என்றான்.

“இல்லை அது பத்தி தான் பேச வந்தேன்” என்க, “சரி வா, நேரமாச்சு வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்” என்றவன் நிதானமுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். சிவாவிடம் காணப்படும் ஒரு பதட்டநிலையை அறிந்தேயிருந்தான். வீட்டிற்குச் செல்ல, “வாங்கத் தம்பி, ஊருல எல்லாரும் சௌக்கியமா?” என அண்ணி பவித்ரா வரவேற்றாள்.

“நல்லாயிருக்கீங்களா அண்ணி? செக்கப் எல்லாம் போனீங்களா?” என அவனும் நலம் விசாரித்துவிட்டு, சோஃபாவில் அமர்ந்து விளையாடிக்கொண்டிருக்கும் அண்ணன் மகள் க்ருஷ்மிதாவிடம் சென்று அமர்ந்தான். ராஜகணபதி அறைக்குள் செல்ல, மைத்துனருக்குக் காஃபியைக் கொடுத்துவிட்டு கணவனை கவனித்தாள். பவித்ரா கருத்தரித்து தற்போது ஆறு மாதங்கள் கடந்திருந்தது. சிவா குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருக்க, உடை மாற்றிவிட்டு எதிரே வந்தமர்ந்தான் ராஜா.

“உதய் வீட்டை விட்டு போயிட்டான், ஆனால் ஊரை விட்டுப் போக மாட்டானாம்” எனச் சிவா சொல்ல, “வீட்டை விட்டு எதுக்குப் போனான்? ஊருல இருந்து என்ன மாடு மேய்க்கப் போறானா? ஆமா அவன் எதுக்கு முதல்ல இங்க வந்தான்?” என்றான் ராஜா.

“அவன் ப்ரண்ட் கதிரு, இறந்த விசேஷத்துக்கு வந்திருப்பான் போல, நாங்க யாருமே சொல்லல்ல எந்த முட்டாப்பயன் சொன்னானோ தெரிஞ்சதும் வந்துட்டான். வந்தவனுக்கு இப்போ என்னாச்சோ? எவன் என்ன சொன்னான்னு தெரியலை? கதிருக்காக அப்பாவை எதிர்த்து பேசிட்டு வீட்டை விட்டுப் போயிட்டான்” என்றான்.

தம்பியின் முன் நான் தான் அந்த முட்டாள் என ஒப்புக்கொள்ள மனமின்றி, “அதுக்கு வந்தவனாடா இன்னும் போகலை? நம்ம குடும்பத்துக்கும் கதிருக்கும் சொத்து பிரச்சனை இருக்கு அவன் கூட பழக்கம் வேண்டாம்னு சொல்லியும் கேட்காம சுத்திக்கிட்டு இருந்தான். இப்போ அவனுக்காக நம்மளையே எதிர்கிறானா?” என ராஜா கோபமுடன் கேட்டான்.

“அதை வைச்சுக்கிட்டு தான் அப்பா மேலையே சந்தேகப்படுறான் போல இருக்கு, அவன் ஊருக்குள்ள இருக்குறது எனக்கு பயமா இருக்கு, ஏதாவது செஞ்சு அவனை முதல்ல ஊரை விட்டு அனுப்பி விடு அதைச் சொல்ல தான் வந்தேன்”

“அவன் பிடிவாதக்காரனாச்சே! சொன்னா கேட்கவா போறான்? உண்மையச் சொல்லு அந்த கதிர் பயல அப்பா எதுவும் செஞ்சிட்டாரராடா?” எனக் கேட்க, “டேய் என்னடா நீ லூசு மாதிரி பேசுற? அப்பாவ போய் இப்படி சொல்லுற? அப்படியே இருந்தாலும் நம்ம வக்கீல் அங்கிள் இல்ல, அரசியல் பலமும், ஆள் பலமுமில்ல அவன் ஒருத்தன் என்ன செஞ்சிட முடியும்?” என்ற சிவாவின் குரலில் கோபத்தைத் தாண்டி சிறு தடுமாற்றமும் பதட்டமும் இருந்தது.

அப்பறம் எதுக்குடா பயந்து போய் இங்க வந்திருக்க என மனதில் நினைத்த ராஜா, “என்னவோ போ, என் என்ஜினியரிங் காலேஜ்க்கு அப்ரூவல் கிடைச்சுடும் சோ உதய் சொத்து பத்துன்னு உரிமை கொண்டாடிட்டு உள்ள வரக்கூடாது. பண்ணை, தோப்பு, வயலு, மில்லுன்னு எதுலையும் அவனை நுழைய விடக்கூடாது. பார்த்துக்கோ எனக்கு அது தான் முக்கியம்” என்றான்.

சிவா திடுக்கிட்டான், நீ தொழிலைக் கவனிப்பதில்லை என உதயனைக் குறைகூற அதையே திருப்பி, இனி இங்கிருந்து கவனித்துக்கொள்வதாக உதயன் சொன்னதை ராஜாவிடம் சொல்லத் தைரியமில்லாது வாயடைத்து அமைதியாக இருந்தான். பவித்ரா வந்து இருவரையும் இரவு உணவிற்கு அழைத்தாள். உண்டு முடித்த சிவச்சந்திரன் விடை பெறும் முன், “என்னால எவ்வளவு நாளைக்கு அவனை நிறுத்தி வைக்க முடியுமோ தெரியாது? நீ சீக்கிரம் அவனை எப்படியாவது ஊரைவிட்டு அனுப்பப்பாரு” என மீண்டும் வேண்டிவிட்டுக் கிளம்பினான்.

சிந்தனையோடு அமர்ந்திருந்தான் ராஜகணபதி. உதயன் ஒத்துவந்தால் ஊரை விட்டு அனுப்பவது இல்லை உலகத்தைவிட்டே அனுப்பிவிடுவது என முடிவு செய்தான். அது தான் ராஜகணபதி! சொத்து என வரும்

போது தந்தையும் தம்பியுமே அவனுக்கு இரண்டாம் பட்சம், அதில் உதயன் எங்கே முக்கியமாவது?

“மாஸ்டரு மிச்சமிருக்குற, சாப்பாட்டையெல்லாம் அந்த தூக்குவாளில போட்டு எடுத்துட்டுப் போ, ஏலே கரிச்சட்டி இந்தப் பாத்திரத்தை சீக்கிரம் கழுவி கவுத்திட்டு வெட்டிக்கதை பேசாமா கதவை மூட்டிட்டு உள்ள படு” என அழகன் தன் வேலையாட்கள் இருவரிடமும் உரைத்துவிட்டு வீட்டிற்குக் கிளப்பினான்.

அதே நேரம் கோவிந்தசாமியும் தனது மெக்கானிக்செட்டை மூடிவிட்டுக் கிளம்ப, “என்ன அண்ணே அதிசயமா இருக்கு நேரா வீட்டுக்குக் கிளம்பிட்டீரு போல” என்றான் அழகன். போதையில் இல்லாது தெளிவாக அவர் வீடு சொல்லும் நாட்களே அரிது.

“ஆமா டோய், நீ உதயன பார்த்த? காலையில என் வீட்டுல வண்டிய விட்டுட்டுப் போனவன் இன்னும் எடுக்க வரலைடா” என்று கேட்க, “இல்லையே சித்தப்பு” என்றான்.

இருவரும் பேசியவாறே நடந்து வந்து கொண்டிருக்க, “அழகா அது உதயன் தானே?” என அரசமரத்தடி திண்டைக் குறிப்பிட்டுக் கேட்டார். பேருந்து நிலையம் எனத் தனியாக எதுவும் கிடையாது. அந்த அரசமரத்தைச் சுற்றி வந்து தான் அரசு பேருந்துகள் பயணிகளுக்காக நிற்கும். திரும்பி பார்த்த அழகன் அந்த இருளிலும் அது உதயன் தான் என அறிந்துகொண்டு அருகே சென்றான்.

“டேய் என்னடா பெட்டிப்படுக்கையோட பேய் வாக்கிங் போற டைம்ல இப்படி உக்காத்திருக்க? கடைசி பஸ்க்கு ஊருக்குக் கிளம்பி வண்டியை விட்டுட்டையா?” என்று கேட்டான்.

“நான் வேணா வண்டியை எடுத்துட்டு வரட்டுமாலே, டவுன் வரைக்கும் கொண்டு வந்து விடுறேன்” என்றார் கோவிந்தசாமி.

“இல்லை மாமா நான் ஊருக்கெல்லாம் போகலை, வீட்டைவிட்டு வந்துட்டேன்” என்றான் கலங்கிய குரலில்.

ஏனெனில் அந்த மரத்தடியில் அவன் வந்தமர்ந்து கிடத்தட்ட மூன்று மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது. அதிகம் ஊரில் இல்லாததாதல் நிறையப் பேருக்கு அவன் முகம் தெரிவதில்லை, அவன் தந்தையின் பெயர் சொன்னால் தான் தெரியும். வருவோரும் போவோரும் அவன் என்னவோ பேருந்திற்குக் காத்திருப்பதாக நினைத்து கண்டுகொள்ளவில்லை. அவனோ எங்குச் செல்வதென்று தெரியாது அமர்ந்திருந்தான். கடைசி பேருந்தும் சற்று முன் தான் சென்றிருந்தது. சொத்து பத்துக்களும் பை நிறைய பணமும் இருந்து என்ன பயன்? தனக்கென யாருமில்லையே என்று நினைத்தான். கதிர் போன்று தானும் ஊரோடு இருந்து உறவுகளை பற்றிக்கொள்ளாது விட்டுவிட்டது தவறு என உணர்ந்திருந்தான்.

“இப்போதைக்கு எனக்கு தங்குறதுக்கு ஊருக்குள்ள ஒரு வீடு வாடைக்கு வேணும் கிடைக்குமா மாமா?” என்றான்.

“கிறுக்குக்கின்டு பிடிச்சுப்போச்சா அழகா இவனுக்கு? அரண்மனை மாதிரி இருக்குற அவனுக்கு உரிமையான வீட்டை விட்டு வாடகை வீடு கேட்கிறான்?” எனக் கோவிந்தசாமி அதிசயிக்க, “சரிடா காலையில ஊருக்குள்ள விசாரிச்சுப்போம், இப்போ நீ வீட்டுக்குக் கிளம்பு” என்றான் அழகன்.

“அதெல்லாம் முடியாது நான் வேணா கரிச்சட்டி கூட கடையில போய் படுத்துக்கிறேன்” என்றான் சிறிதும் யோசிக்காமல்.

எத்தனை செல்வச்செழிப்பில் வளர்ந்தவன் சிறிய கடையில் பாத்திரங்களும், அரிசி மூட்டையும், அழுகிய காய்கறிகளும் கொசுக்கடியும் உள்ள இடத்தில் படுத்துக்கொள்கிறேன் என்கிறானே! என வியந்து பார்த்தவர்கள் அப்படி என்ன அவனுக்குக் கஷ்டம் என்றும் யோசித்தனர்.

”அதெல்லாம் ஒன்னும் வேண்டாம் என் வீட்டுக்கு வா, கதிரு ரூம்ல படுத்துக்கோ” என கோவிந்தசாமி அழைக்க, “எதுக்குமாமா ஒரே நாளுல என் ஜோலிய

முடிக்கப் பார்க்கீரு? நான் வந்தா எழிலுக்குப் பிடிக்காது கோபப்படும்” என மறுத்தான்.

“அன்னைக்கு ஏதோ கதிரு நினைப்புல துக்கத்துல, அப்படி செஞ்சிட்டா, அதெல்லாம் மனசுல வைச்சிக்காத, எழுந்து வா மாப்பிள்ளை. நான் பார்த்துக்கிறேன்” என மீண்டும் கோவிந்தசாமி அழைக்க, “அட போ மாப்பிள்ளை, இன்னும் இங்க கொஞ்ச நேரம் உக்காத்துக்கிட்டு இருந்த கன்னிப்பயைன்னு ஜோடியில்லாத மோகினிப்போய் டூயிட் ஆட தூக்கிட்டு போயிடப்போகுதுலே” என்றான் அழகனும்.

உதயன் ஏதும் சொல்லாது அவ்வாறே அமர்ந்திருக்க, அவன் உடைமைகளை கோவிந்தசாமி எடுத்துக்கொள்ள, உதயனை எழுப்பி தள்ளிவாறு அழகனும் நடக்கத் தொடங்கினான். அவர்கள் தெரு முக்கு வரை வந்த அழகன் விடைபெற்றுக்கொண்டு எதிரே செல்லும் வீதி வழி தன் வீடு நோக்கிச் சென்றான்.

“ஆமாடா என்ன பிரச்சனைனு வீட்டை விட்டு வந்துட்ட? ஊருக்குப் போலையா, வேலையை விட்டுட்டையா என்ன?” என கோவிந்தசாமி கேட்டவாறு இருவரும் வீட்டு வாசலுக்கு வந்திருந்தனர்.

ஒரு வாரமாகச் சரிவர எழில் சாப்பிடாமலிருக்க, திண்ணையில் அமர்ந்திருந்த குணசுந்தரி மகளுக்கு ஊட்டிவிட்டுக்கொண்டிருந்தார். கணவரோடு வரும் உதயனை பார்த்தவர் வரவேற்க, “அம்மாடி என் தங்கம், ஒரு தட்டுல சாப்பாடு போட்டு எடுத்துட்டு வா போம்மா” என்றார்  கோவிந்தசாமி.

குணசுந்தரியிடம் உதயன் கதிர் அறையில் தங்க இருப்பதை உரைக்க, அது எழிலரசியின் காதுகளிலும் விழுந்தது. செங்கனலாய் எரிந்தவள் ஒரு முறைப்புடன் தன் கோபத்தைக் காட்டுவதற்காக வாசலிலிருந்த செம்புத்தண்ணீரை எத்திவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

“அடியே கோட்டிக்காரி யாராவது நிறை செம்புத்தண்ணீய எத்துவாங்களா? உனக்கென்ன எகத்தாளமா?” என்று சுந்தரி கத்தத் தொடங்கினார். அது தான் குணசுந்தரி பாசம் காட்டும் அளவிற்கு கண்டிப்பும் இருக்கும்.

சுந்தரி எவ்வளவு சொல்லியும் கேளாமல் இரவு உணவை மறுத்துவிட்டு மாடியேறியவன் கதிரின் அறைக்குச் சென்றான். எத்தனயோ முறை கதிர் அறைக்கு வந்தவன் தான் ஆனால் இன்றேனோ புதுமையாக வெறுமையாகத் தெரிந்தது. அறையைச் சுற்றிப்பார்த்தான் புத்தக அலமாரிகள் எங்கும் உலக பெருந்தலைவர்கள், போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாறு, கம்யூனிஷம், சோசியலிஷம் கொள்ளை கோட்பாடுகளை விளக்கும் புத்தங்கள், தமிழர் வரலாறு என நிறைந்திருந்தது.

ஒருபுறம் சுவரில் சிவப்பு நிற சில்க்ஸ் சட்டை, வெள்ளை வெட்டி, கண்களில் கறுப்புக் கண்ணாடியுடன் தோள் மீது கை போட்டவாறு உதயனும், கதிரும் நின்றிருக்கும் புகைப்படம் மாட்டப்பட்டிருந்தது. கடந்த வருட ஊர் திருவிழாவில் எடுத்தது. பார்த்ததுமே கண்கள் மின்ன, குறுநகையும் கொண்டான் உதயன்.

படுக்கை விரிப்புகளை எடுத்து வந்து அறைக்கு வெளியே மொட்டைமாடியின் தளத்தில் விரித்தவன், நிலவற்ற இரவு வானை வெறித்தவாறு படுத்துக்கிடந்தான். எழிலரசி தன்னை வீட்டிற்குள் அனுமதிக்க மாட்டாள், குறைந்தபட்சம் அன்றுபோல் இன்றும் கத்தி கலாட்டா செய்வாள் என்றே எதிர்பார்த்து வந்தான். கோபம் இருப்பினும் அமைதியோடு சென்று விட்டது உதயனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அதை நினைத்தவாறே கண்ணயர்ந்தான்.

ஆழ்ந்த ஊறக்கத்தில் இருந்தவனின் முகத்தில் இளம் வெப்பக்கதிர்கள் படருவது போல் இருக்க, இனிய காலை காபியின் நறுமணம் நாசியில் நுழைந்து மூளையைத் தட்டியெழுப்பச் செய்தது. இருந்தும்

கண்விழிக்காமல் இருந்தவனின் காதுகளில், “எழுந்திரிங்க, காஃபி கொண்டு வந்திருக்கேன், உங்களைத் தான் எழுந்திரிங்க” என்ற மதுர குரலும் கேட்டது. அவன் ஊடலில் அத்தனை செல்களையும் விழிக்கச்செய்தது.

அதற்கு மேலும் உறக்கத்தின் பிடியில் இருப்பானா என்ன? எழுந்து அமர, எதிரே கையில் காஃபியுடன் எழிலரசி நின்றிருந்தாள். அவள் நின்றது எட்டு அதிசயங்களையும் மிஞ்சும் அதிசயமாக இருந்தது உதய்க்கு. “காஃபி எடுத்துக்கோங்க” என்றவள் குனிந்து அவன் படுக்கையின் அருகே வைத்துவிட்டு படியிறங்கினாள்.

உதயனுக்கு தான் காண்பது அனைத்தும் இன்பக்கனவோ?! தான் இன்னும் உறக்கத்திலிருந்து எழவில்லையோ என்ற சந்தேகமே வந்தது. ஆனால் கையிலிருந்த காபியும் டம்ளரின் வழி கைகளுக்குப் பரவிய வெம்மையும் உண்மை என்றது!

## அத்தியாயம் 05

காலை எட்டுமணி வேலைக்கு, கல்லூரிக்குச் செல்லும் பெண்கள் எல்லாம் பேருந்திற்காக அரசமரத்தடியில் காத்திருக்க, ஆண்கள் சிலர் அழகனின் கடையில் டீ குடித்துக்கொண்டு காத்திருந்தார். காலை ஒன்பது மணி வரையேனும் வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். சமையலறைக்குள் மாஸ்டர் உசிலமணி சமையல் வேலையில் இருக்க, உதவியாளன் கரிச்சட்டி என்னும் கருப்பன் உண்பவர்களுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தான்.

அழகன் டீ போட்டுக்கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு பார்சல் கட்டிக் கொடுத்துக்கொண்டும் பரபரப்பாக இருக்க, உதயன் கல்லாவின் அருகே ஒரு இருக்கையில் அமர்ந்து வெகு நிதானமாகச் செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்தான்.

சிறிதே நேரத்தில் பரபரப்பெல்லாம் அடங்கி முடிய, உணவுண்ண அமர்ந்த அழகன் உதயனை

அழைத்தான். அதே நேரம் கடைக்குள் வந்த கோவிந்தசாமியும், “என்ன உதய்? சாப்பிடாம கிளம்பி காலையிலே இங்க வந்து உக்கார்த்திருக்க?” என்றார்.

“வீடு பார்க்கணும்னு சொன்னேன்ல முதல்ல அதைப் பார்க்கலாம் வாங்க” என்க, திரும்பவும் முதல்ல இருந்தா என கோவிந்தசாமியும் அழகனும், பெருமூச்சு விட்டுக்கொண்டனர்.

“அதான் சுந்தரியே சரின்னு சொல்லிட்டாலே, கதிர் ரூம்லையே தங்கிக்கோடா” என கோவிந்தசாமி உரைக்க, “தங்குறதுல பிரச்சனையில்லை ஆனால் எனக்கு வாடகை வீடு தான் வேணும்” என்றான் மீண்டும் பிடிவாதமாக.

கோவிந்தசாமி அழகனைப் பார்க்க, “கதிரு வீடே உன் வீடு அளவுக்கு வசதி கிடையாது, இந்த இலட்சத்துல ஊருக்குள்ள இவருக்கு வீடு வேணுமாம். அதுமட்டுமில்லாம ஊருக்குள்ள பெரும்பாதி வீடு உங்க பெரியப்பா தான் வளச்சிபோட்டு வைச்சிருக்காரு இதுல எங்க போய் உனக்கு வீடு தேட?” என அழகன் குறைபட, “வசதியெல்லாம் தேவையில்லை ஊருக்குள்ள தங்குறதுக்கு இடமிருந்தா போதும் எனக்கு வாடகை வீடு தான் வேணும்” என்றான்.

“இப்போ என்ன உனக்கு வாடகை கொடுக்கணும் அவ்வளவு தானே, கதிர் ரூம்லையே தங்கிக்கோ மாசமாசம் வாடகைய சுந்தரி மதினி கையில கொடுத்துடு” என அழகன் பிரச்னையை தீர்க்க கோவிந்தசாமியும் சரியென்று விட்டு, தனது மெக்கானிக்செட்டை நோக்கிச் சென்றார்.

“டேய் இன்னுமென்னடா எழுந்து சாப்பிட வாடா மாப்பிள்ளை” என்ற அழைக்க, “இல்லை எனக்கு சமைக்கத் தெரியாது. அதனால இனி ஹோட்டல் சாப்பாடு தான்..” என இழுத்தான்.

“என்ன இதுக்கும் காசு வாங்கிக்கணும், அவ்வளவு தானே. நீ எவ்வளவு அள்ளிக்கொடுத்தாலும் வாங்கிக்கிறேன் மகாராசா, நான் ஒன்னும்

தருமத்துக்கு ஹோட்டல் நடத்தலை போதுமா வா" என மீண்டும் அழைத்தான் அழகன்.

"அழகண்ணா நீங்கச் சரியா புரிஞ்சிக்கிடலை அண்ணன் பெரிய பெரிய ஹோட்டல்ல தான் சாப்பிடுவாராம், இந்த இத்துப்போன நாலு மண்சுவருரோட ஒத்த ஓலைக்குடிசை கடையில எல்லாம் சாப்பிட மாட்டாராம்" என்றான் கரிச்சட்டி.

"இது அவன் சொல்லுற மாதிரி தெரியலையே, இது ஏதோ பக்கத்து இலைக்கு பாயாசம் கேட்குற மாதிரியில இருக்கு" என அழகன் முறைக்க, உண்மையை கண்டுகொண்டதால் வாயை மூடியவாறு கரிச்சட்டி வாடிக்கையாளரைக் கவனிக்க முன்னே சென்றுவிட்டான்.

சமையலறையிலிருந்து கையில் சாம்பார் வாளியுடன் கணத்த உடம்பைத் தூக்கிக்கொண்டு அசைந்து அசைந்து வந்த உசிலமணி, "அட சும்மா சாப்பிடுங்க அண்ணே, உங்களுக்காக ஸ்பெஷலா தண்ணீர் கலக்காத சாம்பார், ஊசாத உளுந்தவடை, டால்டா இல்லாத பொங்கல் என் கையால வைக்கிறேன்" என அழைத்தார்.

வந்த கஸ்டமரின் காதுகளில் அது விழ அவர்கள் எதுவும் வாங்காது சென்றுவிட, இப்படி தன் தொழில் ரகசியத்தை வெளி படுத்திவிட்டானே எனத் தலையில் துண்டை போட்டு கன்னத்தில் கைவைத்து தரையில் அமர்ந்தான் அழகன். உதய் அவன் நிலையைப் பார்த்து லேசாக சிரித்துக்கொண்டிருந்தான்.

"என்ன ஓனர் நீங்க, இப்படி நடுக்கடையில உக்காந்துக்கிட்டு தலையில துண்டைப்போட்டா கடைக்காகுமா?" என்றவாறு துண்டை எடுத்துவிட வந்தான் உசிலமணி. அவன் அசைந்து வரும் அழகில் நிறைந்திருந்த சாம்பார் வாளி ததும்ப அழகனின் தலையில் கொட்டியது.

"அடேய் மணி.." என அழகன் கண்களை கசகிக்கொண்டு கத்த, "நான் தான் சொன்னேனே ஓனர் இப்படி உக்காந்தா கடைக்கு ஆகாதுன்னு இப்ப

பாருங்க சாம்பார் வேஸ்டாப்போச்சு” என சாம்பாருக்கு பரிதாப்பட, உதயனுக்குச் சிரிப்பு வெடித்தது.

“டிபன் எடுத்து வைக்கட்டுமா அழகண்ணனே?” என்றவாறு உள்ளே வந்த கரிச்சட்டியும் அழகனைக்கண்டு சிரிக்க, அழகனோ சொட்டிய சாம்பாரை நாக்கால் உறிஞ்சிக்கொண்டு “டிபன் எல்லாம் முடிச்சிடுச்சு, போங்கடா போய் மதிய சாப்பாட்டை ரெடி பண்ணுங்க” என கத்த, இருவரும் சமையலறைக்குள் சென்றுவிட்டனர்.

தன்னை நோக்கி வரும் அழகனைச் சிரிப்புடனே தனது அலைப்பேசியில் படம் பிடிக்க, “அடேய், அடேய் இந்த கோலத்துல ஏன்டா போட்டோ எடுக்க?” எனத் தவித்தான். அதில் மேலும் சிரித்துக் கொண்ட உதய், “அழகா நீ இப்போ தான்டா பேரழகனா இருக்க, இதை உன் பிள்ளைகளுக்கு காட்டணும்ல அதுக்கு தான்” என்றான் சிரிப்புடன்.

“வெந்த புண்ணுல ஏன்டா விளக்கெண்ணெய்ய ஊத்துற?” எனக் குறைபட, “ஓஹோ அப்போ விளக்கெண்ணெய் ஊத்தணுமா?” என்றான் உதயன் புரியாது போலே.

அதை அறைகுறையாகக் காதில் கேட்டுக்கொண்டு “அண்ணே விளக்கெண்ணெய் இந்தாங்க” எனக் கிண்ணத்தை நீட்டினான் உசிலமணி.

“ஹையோ இதுகளை வேலைக்கு வைச்சு சொந்த செலவுல நானே எனக்கு சூனியம் வைச்சுக்கிட்டேனே” எனப் புலம்பி மீண்டும் சாம்பார் தலையில் கை வைத்துக்கொண்டான் அழகன். உதயனுக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை.

கோவிந்தசாமி சரிசெய்து வைத்திருந்த தனது பைக்கை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தான் உதயன். திண்ணையில் அமர்ந்து பக்கத்துவீட்டு பையனுக்கு பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தாள் எழிலரசி. ஏதோ சொல்லிக்கொடுத்தவாறு சிறுவனின் தலையில் அவள்

குட்ட, தலையை தேய்த்துக்கொண்டவன், “கதிர் அண்ணனா இப்படியெல்லாம் குட்டாது தெரியுமா, எவ்வளவு தெளிவாச் சொல்லித்தரும்” என அவளை குறை கூறினான்.

கதிரின் நினைவில் சட்டென எழிலில் மலர்ந்த முகம் நொடியில் வாடியது. இரு கண்ணிலும் விழவா என கேட்டவாறு நீர்த்துளிகள் கோர்த்துக்கொண்டு நின்றது. பைக்கை நிறுத்தும் போதே அதை கேட்டுவிட்ட உதயன், சிறுவனை விரட்டிவிட்டு எதிர் திண்ணையில் அமர்ந்தான்.

எழில் அமர்ந்திருந்த நிலையும் கலங்கிய விழிகளும் அவள் மீது பரிதாப ஊற்றை ஊற்றெடுக்கச் செய்தது உதயனின் நெஞ்சில். “என்ன எழில் நடந்து முடிஞ்சதையே எத்தனை நாளைக்கு நினைச்சிகிட்டு இருப்ப? அதெல்லாத்தையும் மறக்கப்பாரு, முதல்ல கண்ணத்தொட, காரணமில்லாம கண்ணை கசிக்கிட்டு..” என்றான். அவன் நாக்கில் சனி சம்மணமிட்டு அமர்ந்திருப்பதை உணராது வார்த்தையை விட, மறுநொடி உணர்த்தினாள் எழில்.

“மறக்கணுமா? எதை மறக்கச் சொல்லுறீங்க? உங்க குடும்பம் செஞ்ச துரோகத்தையா? இல்லை வாழ வேண்டிய மாமா என்னை விட்டுப் போனதையா? என் உசுரு இருக்குற வரைக்கும் எதையுமே மறக்க மாட்டேன், கதிர் மாமா எப்பவும் என் நெஞ்சிலையும் நினைப்புலையும் இருப்பாங்க. இப்படி குடும்பத்தை விட்டு வந்து நல்லவன் வேஷம் போட்டாலும் நம்பமாட்டேன், என்ன இருந்தாலும் அந்த குடும்பத்து இரத்தம் தானே நீங்க?” என பொரிந்தாள்.

ஹையோ இவ தெளிவா பேசுறாளா இல்லை எனக்குத் தான் தெளிவா கேட்கத் தெரியலையா! என நினைத்து நொந்துகொண்டான் உதய். “எழில் இப்படி அர்த்தமில்லாம கோபப்பட்டு கத்துனா எப்படி? பெரியப்பாவை குறை சொன்னா சரி, இப்படி என் மொத்த குடும்பத்தையும் குத்தம் சொன்னா என்ன அர்த்தம்? பெரியப்பாவுக்கும் கதிருக்கும் தான் நிலபிரச்சனையே தவிர, நாங்க எதுவும் செய்யலையே.

முதல்ல எதை வைச்சு இப்படி எங்களை குறை சொல்லுற?" என வெகு அமைதியாக கேட்டு, போட்டு வாங்க முயன்றான்.

"என் வீட்டுல இருந்துக்கிட்டு என்னையே கேள்வி கேட்கிறீங்களா? கதிர் மாமா ப்ரண்டுக்கிறதெல்லாம் வேஷம், என்ன இருந்தாலும் நீங்க உங்க பெரியப்பா மாதிரி தான்" என மேலும் சினந்தாள்.

வேண்டுமென்றே பதிலை தவிர்க்கிறாளோ என சந்தேகம் கொண்டான், இன்னும் அவள் கையில் எதுவும் சிக்கவில்லை என்ற சந்தோஷத்துடன் பொறுமையை இழுத்துப்பிடித்துக்கொண்டு, "அதான் அந்த வீட்டை விட்டே வந்துட்டேன்ல இன்னும் என்ன சந்தேகம் கொஞ்சமாவது என்னை நம்பேன் எழில், எங்க நட்பை பத்தி உனக்குத் தெரியாததா! உண்மைய சொல்லு நான் இல்லாத போது என்ன நடந்தது? பெரியப்பா எதுவும் பிரச்சனை செஞ்சாரா?" என்றான் இறங்கிய குரலில்.

"வீட்டை விட்டு வந்துட்டா உங்க உறவு இல்லைன்னு ஆகிடுமா? உங்க குடும்பம் தான் கதிர் மாமாவை கொன்னது, உங்களால என்ன செஞ்சிட முடியும் அவங்களை? அதை விட கதிர் மாமா ஆசையவாவது உங்களால நிறை வேற்ற முடியுமா?" என ரௌத்ரம் கொண்டவள் தன்னிலை அற்ற நிலையில் கத்திக்கொண்டிருந்தாள். அந்த குரல் வீதியில் செல்பவர்களை கூட வீட்டிற்குள் அழைத்துவிடும்.

"ஏன்டி என்னத்துக்கு இப்போ எட்டுபட்டியையும் கூட்டுறாப்புல கத்திக்கிட்டு கிடக்க? நானும் எவ்வளவு நேரமா கூப்பிட்டுக்கிட்டு இருக்கேன், நீ என்னவோ வீதியில போறவ கிட்ட வம்பு வளர்த்துக்கிட்டு இருக்கியா?" என்றவாறு குணசுந்தரி பின்கட்டிலிருந்து நேராக வந்தார்.

புகை கக்கும் தொடர்வண்டி போன்று மூச்சு விட்டுக்கொண்டு நிற்கும் மகளையும் எதிரே நிற்கும் உதயனையும் பார்த்தவர், "திரும்பவும் ஏதாவது காரணமில்லாம அவங்கிட்ட கத்துனையா?" என்றார் கொதிப்புடன்.

”ஐய்யோ அதெல்லாம் இல்லைக்கா, நான் தான் என்ன படிச்சிருக்க? அடுத்து எதுவும் படிக்கப் போறீயான்னு விசாரிச்சிக்கிட்டு இருந்தேன்” என உதயன் வேகவேகமாக பதிலளித்தான். எங்கே எழிலின் மேல் கை வைத்துவிடுவாரோ என்ற பயத்தில் தனிச்சையாக வந்திருந்தது பதில். இவரிடம் காப்பாற்றும் படி கேட்டேனா! என நினைத்து முறைத்தவாறு எழில் வீட்டிக்குள் சென்றாள்.

“கதிரு இருந்திருந்தா அடுத்த மாசம் கல்யாணப்பொண்ணா நிற்க வேண்டியவ, இப்போ திண்ணைக்கு தூணாக் கிடக்கா” என்றவரின் கண்கள் கலங்கிவிட, “ஐயோ அக்கா, என்ன படிச்சிருக்கான்னு தானே கேட்டேன், இப்படி நீ அழுதாப்புல கதிரு திரும்பி வந்திடுவானா?” என்றான் உதயன்.

“டிகிரி முடிச்சிருக்கா, ஆமா காலையிலே நீ எங்க போன? சாப்பிட்டியா?” என்றார். “ம்ம், அதெல்லாம் அழகன் கடையில நேரத்துக்கு சாப்பிட்டாச்சு. நீ எங்க கிளம்பிட்ட?” என்றான் கையில் பையுடன் நிற்பத்தை கண்டுகொண்டு.

“எங்க வயலுக்கு தான், பத்து நாளா அந்த பக்கமே போகலை. கடலைச்செடி காஞ்சி போயிருக்கும்” என்றவர் நடக்க ஆரம்பிக்க, “நில்லுக்கா நானும் அந்த வழியா தான் டவுனுக்குப் போறேன். இறக்கி விட்டுறேன் வா” என அழைத்துச் சென்றான்.

“மாமாவைவும் செட்டை மூடிட்டு, நிலத்தை பார்த்துக்கச் சொல்ல வேண்டியதானே?” என்க, “இல்லைடா கதிரு இருந்த வரைக்கும் நல்லா பார்த்துக்கிட்டான், இந்த மனுஷனுக்கு அம்புட்டு திறமையில்லை. இந்தமுறை வெள்ளாமை எடுக்கவும் யாருக்காவது ஒத்திக்கு விட்டுட வேண்டியது தான் ஒத்த மனுஷி என்னால என்ன செய்ய முடியும்” என்றார் கவலையுடன்.

ரெங்கநாதன் வயலுக்கு அருகிலே கதிரின் வயல். சாலையிலே சுந்தரியை இறக்கிவிட்டவன் மீண்டும் கிளம்ப, யாரோ அவனை அழைப்பது போல் இருந்தது. தங்கள் வயலில் கிணற்று மேட்டில் பெரியப்பா

ரெங்கநாதன் அமர்ந்திருக்க அருகே, மூத்தவன் ராஜகணபதி நிற்பதைக் கண்டான். அழைத்தது அவன் தான் என அறிந்தவன் வண்டியை நிறுத்திவிட்டு அவர்கள் அருகே சென்றான்.

”என்ன ராஜாண்ணா என்ன விஷயம்?” என்றவாறு நடந்து வர, “இன்னுமா உனக்கு லீவ் முடியலை, ஊருக்குள்ளேயே சுத்திக்கிட்டு இருக்க?” என்றான் ராஜா.

“அது நான் வேலைய ரிசைன் பண்ணிட்டேன், இனி இங்க தான் இருக்கப்போறேன்” என்றான் அழுத்தமாக.

“லூசாடா நீ, அந்த பீல்ட்ல உனக்கு எவ்வளவு திறமை இருக்கு, உனக்கு இருக்குற எக்ஸ்பீரியன்ஸ் அண்ட் டேலண்ட்க்கு நீயே தனியா ஸ்டார்ட் ஆப் ஆரம்பிக்கலாம், இண்டர்நேஷனல் லெவல்க்கு உன் பிஸ்னஸ்ஸ எடுத்துட்டுப் போகலாம், அதை விட்டுட்டு இந்த ஊருக்குள்ள இருந்து என்ன களை பிடுங்கப் போறீயா?” என்றான் கோபமாக.

“இந்த ஊருக்குள்ள இருந்தா களை தான் பிடுங்க முடியும்னா நான் அதையே செய்யிறேன் ராஜாண்ணா, என் அப்பா கூட எங்கிட்ட இவ்வளவு கேள்வி கேட்டதில்லை பாருங்க. நீங்க கேட்டதுல எம்மேல எவ்வளவு கருஷனையா இருக்கீங்கன்னு தெரியுது ரொம்ப சந்தோஷம்” என்றான் நக்கலுடன்.

வார்த்தையில் குத்துக்கிறான் என ராஜாவுக்குப் புரிந்தது, “சரிடா வீட்டை விட்டு எதுக்குப் போன? அது மட்டுமில்லாம கதிர் வீட்டுல தங்கிக்கிட்டு அவங்களுக்குச் சேவகம் செஞ்சிக்கிட்டு இருக்கியே இதெல்லாம் உனக்கே சரியாப்படுதா?” என்றான் மனத்தாங்கலுடன்.

“தப்பு தான் அண்ணா, நீங்க செஞ்ச பாவத்துக்கு நான் புண்ணியம் தேட நினைக்குறது தப்பு தான்” என்றவன் ரெங்கநாதனை ஒரு பார்வை பார்த்தவாறு திரும்பினான்.

“உதய் இங்க வா ஒரு நிமிஷம்” என்ற ரெங்கநாதன் அவரே எழுந்து அவன் அருகில் வந்தார். உதயன்

விரைப்புடனே நிற்க, “ஆமா இப்போ தான் கதிர் இல்லையே, இப்பவாது அந்த நிலத்தை தாராங்களான்னு கேட்டுச் சொல்லு” என வெகு அமைதியாகக் கேட்டார். இவரெல்லாம் இறுதி வரை திருந்த மாட்டார் என்றெண்ணத்தில் அற்பமாய் பார்த்தவன் திரும்பி நடக்கத் தொடங்கினான். ராஜாவின் பார்வை அவனைத் தொடர்ந்தது.

கிராமத்திலிருந்து படித்து வேலைக்கு அல்லது தொழிலுக்கு வெளியில் சென்று விடும் பிள்ளைகளில் சிலர் தனது பெற்றோர்களையும் உடன் அழைத்துச் சென்று விடுவது உண்டு. அவ்வாறு ஊரை விட்டுச்செல்பவர்களிடம் தன்மையாய் பேசி அவர்கள் வீடு, நிலம் போன்ற சொத்துக்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வார் ரெங்கநாதன். அதுமட்டுமின்றி இரண்டு மூன்று தலைமுறைகளாக வெளியூரில் தங்கி விட்டவரின் சொத்துகளையும் தேடிச்சென்று குறைந்த விலைக்கு வாங்கி வந்துவிடுவர்.

கோவில் இடம், குளக்கரையோரம், பொது மண்டபம் போன்ற பொதுச்சொத்துகளுக்கு அருகே தங்கள் நிலம் இருக்க, அதைச் சற்றே விரிவுபடுத்தி பொதுச் சொத்துக்களை ஆக்கிரமித்தும் வைத்துள்ளனர். அதலாலே ஊரில் பெரும் பகுதிக்கும் மேலான இடம் இவர்கள் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டது. ஆரம்பத்தில் உதயனின் தந்தை கிருஷ்ணமூர்த்தியும் இவ்வாறு வாங்கியது உண்டு. உதயனுக்கு இதில் உடன்பாடே கிடையாது. உதயன் உயர்கல்வி தொடங்கியதிலிருந்தே பெரும்பாலும் ஊரில் இருப்பதில்லை மற்றும் குடும்பத்தொழில்களில் தலையிடுவதுமில்லை, ஆகையால் இப்பிரச்சனையும் கண்டுகொண்டதில்லை.

இவர்கள் தென்னந்தோப்பிற்கு அருகே சாலையோரம் நான்கு ஏக்கர் மட்டுமே கதிரின் நிலம். அந்த நான்கு ஏக்கரைச் சுற்றிலும் தெற்கே ஆற்றங்கரை வரை ரெங்கநாதன் குடும்பத்துக்கு சொந்தமானது. அத்தனை இருந்தும் மண்ணாசை அவரை விடவில்லை. ஆறேழு வருடத்திற்கு முன் கதிரிடம் அவன் நிலத்தை

விலைக்குக் கேட்டனர். கதிர் அப்போது தான் படித்து முடித்து கையில் வேலையோடு இருந்தான். ஆகையால் குணசுந்தரி கூட நிலத்தை விற்கச் சம்மதிக்க, கதிர் மறுத்துவிட்டான். தன் பெற்றோர்கள் தனக்காக விட்டுச் சென்றது அந்த நிலம் மட்டுமே அது மட்டுமின்றி தானே இனி விவசாயம் தான் பார்க்கப் போவதாக உறுதியாக கூறினான்.

ஆனால் ரெங்கநாதனுக்கோ அந்நிலத்தின் மீதும் தீராத ஆசை என்றேனும் அடைந்தே தீரும் வெறி. மீண்டும் அதிக விலைக்குக் கேட்டுப்பார்த்தும் கதிர் மறுக்க, சிறு பையன் தானே என எண்ணி சற்று மிரட்டிப்பார்த்தார். ஆனால் அதற்குச் சிறிதும் அசராத கதிர் அவர் மேல் கொலை மிரட்டல் எனக் காவல்நிலையத்தில் வழக்குப்பதிவு செய்தான். அதில் கோபம் கொண்ட ரெங்கநாதனின் இரண்டு பிள்ளைகளும் மீண்டும் கதிரை மிரட்டி அவன் பணியாது போக, கை, கால்கள் முறியும் அளவிற்கு ஆட்களை வைத்து அடித்தும் விட்டனர். இதில் ஆரம்பித்தது இரண்டு குடும்பத்திற்குமான பிரச்சனை. வழக்கு, விசாரணை எனச் சென்று வந்ததில் ஊருக்குள், உறவுகளுக்கு மத்தியில் பெரும் கௌரவக் குறைச்சலாக எண்ணினார் ரெங்கநாதன். அடிபட்ட பாம்பாய் அவன் மீது படையெடுக்கவும் காத்துக் கிடந்தார்.

ஊர் திருவிழாவின் போது ஊருக்கு வந்த உதயன், விஷயமறிந்து தன் வீட்டார்களுடன் சண்டையிட, அவர்களோ கதிருடனான நட்பை முறித்துக்கொள்ளும் படி உரைத்தனர். ஆனால் உதயன் சிறிதும் கேட்கவில்லை. கிருஷ்ணமூர்த்தி தான் உதயனை சமாதானம் செய்தார், ஆரம்பத்திலிருந்து இன்று வரையிலும் கதிருடனான உதயனின் நட்பை அவன் வீட்டில் சிறிதும் விரும்பியதில்லை இருந்தும் இறுதி வரை விரிசல் இல்லாது காப்பாற்றிக் கொண்டான் உதயன்.

## அத்தியாயம் 06

குணசுந்தரியை வயலில் விட்டுவிட்டு டவுனுக்குச் சென்ற உதயன் தனக்குத் தேவையான சில

அத்தியாவசிய பொருட்களை வாங்கிக்கொண்டு மாலை ஊர் திரும்பினான். வழக்கம்போலே அழகனின் கடையில் சிறிது நேரம் கழிய, பின் வீடு வந்தான். எழில் அந்த நேரம் தான் வாசல் பெருக்கி நீர் தெளித்துக் கொண்டிருந்தாள்.

பைக்கை நிறுத்த, அந்தச் சத்தத்தில் திரும்பிப் பார்த்தாள். காலையில் பேசும் போது கையில் எதுவும் கிடைக்காததால் சும்மா விட்டு விட்டாள் இப்போதோ கையில துடைப்பத்துடன் இருக்கவே எதற்கு வம்பு என்ற முடிவோடு அமைதியாக மாடிப்படிகளில் ஏறினான் உதயன். அவன் சென்ற சில நொடிகளில் பின்னே சென்ற எழில் அவன் அறை வாசலில் சென்று நின்றாள். உடை மாற்றவெனச் சட்டையை கழற்றிக்கொண்டிருந்தவன் வாசலில் நிழலாடுவதைக் கண்டு வெளியே வந்தான்.

மொத்த கூந்தலையும் தூக்கிக் கொண்டையிட்டு, தாவணி முந்தானையை இடுப்பில் சொருகியபடி கையில் துடைப்பத்துடன் நின்றவளைக் கண்டவன், “என்ன எழில்?” என்றான். “வீடு கிளீன் பண்ணணும், கொஞ்சம் வெளியே வாங்க” என்றாள் வெகு அமைதியாக. திரும்பி உள்ளே பார்க்க அறை மொத்தமும் குப்பையாகக் கிடந்தது. ‘அதிகம் வீட்டில் இருக்கிறதே இல்லை அப்படியிருந்தும் ஒரே வாரத்தில் இவ்வளவு குப்பையாக்கிட்டையேடா குப்புசாமி மவனே’ எனத் தன்னையே திட்டிக்கொண்டான்.

“எங்கிட்ட கொடு நானே கிளீன் பண்ணிக்கிறேன்” எனத் துடைப்பத்தை வாங்க கை நீட்ட, துடைப்பத்தை இறுக்கிப்பிடித்தவள் அவனைத் துவைத்து விடுவது போல் உக்கிரமாய் பார்த்தாள். ‘யாத்தா என்னா லுக்!’ என நினைத்தவன் மௌனமுடன் அவளைத் தாண்டி வெளியில் வந்தான். உள்ளே சென்ற எழில் அவன் அறை முழுவதும் ஒதுங்குப்படுத்திச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

நீலம் வெளுத்துச் செம்மை பூசும் மேற்கு வானை வெறித்தவாறு மாடிச் சுவரில் அமர, எழில் பற்றிய சிந்தையே வந்தது. பார்க்கும் போதெல்லாம்

பார்வையால் அடிப்பவள் பேசினால் அனலாய் எரிக்கிறாள். அவள் வீட்டில் தான் இருப்பதைத் தடுக்கவில்லை ஆனால் தன் வீட்டைப் பற்றிப் பேசினால் தான் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குச் சினம் கொள்கிறாள். மற்ற நேரங்களிலும் சாதாரணமாக இருப்பதில்லை. அதிகம் பேசுவது கிடையாது, வீட்டை விட்டு எங்கும் செல்வதில்லை, வீட்டு வேலைகளை மௌனமுடன் செய்பவள், முடித்து விட்டால் பின்கட்டுத் திண்ணையில் வெறித்த பார்வையுடன் அமர்ந்து கொள்கிறாள். சில நேரங்களில் மௌனமாய் அழுவதும் உண்டு.

கோவிந்தமாமா உரைத்தது போன்று கதிரின் இழப்பு தான் அவளை இத்தனை பாடாய் படுத்துகிறதா? அந்த அளவிற்குக் கதிரின் மீது நேசமா? இருக்கும், கதிரும் தான் எழிலை எவ்வளவு ஆழமாய் நேசித்தான், நான் அறிந்தது தானே! அதனால் தான் இவ்வாறு தன்னை மறந்த நிலையில் கோபம் கொள்கிறாளோ? ஆனால் இதிலிருந்து அவளை எவ்வாறு மீட்பது? எனச் சிந்தனையிலிருந்து வெளி வந்தவன் சுற்றுப்புறத்தைப் பார்த்தான் முற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது.

“எவ்வளவு நேரமா சுத்தம் செய்கிறாள்?” என முணுமுணுத்தவாறு அறைக்குள் செல்ல, அறை சுத்தமாக இருந்தது ஆனால் அவள் இல்லை. ‘அப்படியா நான் தவ நிலையில உக்கார்த்துட்டேன், எப்போ போனா? சொல்லாமப் போய்ட்டா? அடேய் அவ சொல்லிவிட்டுப் போனா தான் அதிசயம்’ என்றது மனசாட்சி. வாங்கி வந்திருந்த எண்ணை, சோப்பு அனைத்தையும் அட்டையைப் பிரித்து மேசையில் அடுக்க, அங்கிருந்த காகிதங்கள் அவன் கவனத்தை ஈர்த்தது. எடுத்துப்பார்க்க நிரப்பப்படாத விண்ணப்பம் ஒன்றும், கதிரின் அடையாள அட்டைகள் நகலும் இருந்தது. அதை எடுத்து ட்ராவில் பத்திரப்படுத்திவிட்டு நிமிர அடியில் மேலும் சில காகிதங்கள் இருக்க, அதை எடுத்துப்பார்த்தான்.

வாட்டச்சியாளர்க்கு ஒரு புகார் மனுவும், உடன் அவன் ஊரின் வரைபடமும் இருந்தது. அந்த வரைபடத்தில் குளக்கரை, கோவில் மண்டபம், பள்ளிக்கூடத்தின்

விளையாட்டு மைதானம் போன்ற இடங்களின் அருகே சிவப்பு மையால் குறிக்கப்பட்டிருந்தது. புகார் மனுவில் தன் ஊரில் பலகாலமாகப் பொது நிலங்களைச் சிலர் ஆக்கிரமித்து வைத்துள்ளதாகவும், அவற்றை முறையாக அளந்து ஆக்கிரமிப்புகளை நீக்கி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் படியும், மேலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும் எழுதியிருந்தது. புகார் மனு, ஊர் வரைபடம், அவ்விடங்களுக்கான பட்டா மற்றும் ஆக்கிரமிப்புச் செய்துள்ள புகைப்படங்கள் என அத்தனை தவல்களும் அத்தோடு இணைக்கப்பட்டிருந்தது.

அனைத்தும் படித்துப்பார்த்த உதயனுக்கு நன்றாகப் புரிந்தது அனைத்தும் கதிர் திரட்டிய தகவல்கள் தான் என்று. அது மட்டுமின்றி இதில் ரெங்கநாதன் பெயர் குறிப்பிடப்படவில்லை எனினும் பெரும்பாலான ஆக்கிரமிப்புகள் அவரால் தான் நடந்துள்ளது. தெரிந்த விஷயம் தான் எனினும் தகவலாகப் பார்க்கும் போது உதயனுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது, பிரமித்துப் போய் அமர்ந்திருந்தான்.

‘இத்தனை நாள் இங்க தான் இருந்தேன், இது என் கண்ல படலையே?’ எனப் புலம்பியவாறு அவற்றையும் கவனமுடன் எடுத்து வைக்க, கீழிருந்து சுந்தரி அழைக்கும் குரல் கேட்டது. “என்னக்கா?” என்றவாறு படிகளில் இறங்கி வர, “இதோ பெரிய மனுஷி மாமனைப் பார்க்க வந்திருக்கா” என குணசுந்தரி எதிரே இருந்த சிறுமியைக் காட்டினாள்.

“அட களவானி..” எனச் சிரித்த முகமோடு அருகே வந்தவன் அவள் ரெட்டைச் ஜடையைப் பிடித்து ஆட்டினான். தலையிலிருந்து அவன் கைகளைத் தட்டி விட்டவள், “என் பெயரு கலைவாணி மாமா, இவ்வளவு வளர்ந்திருக்க இங்கிலீஷ் எல்லாம் பேசுற என் பெயரைச் சொல்லத்தெரியலை போ” என்றாள் முகத்தைத் திருப்பிக்கொண்டு.

“அது சரிடி கழுதை, எதுக்கு இந்த நேரம் தனியா வந்திருக்க?” என்க, “அப்பா உங்கிட்ட இந்தப் பார்சலை கொடுத்துட்டு வரச்சொல்லுச்சு” என உணவு பார்சலை

நீட்டினாள். உதயன் உணவுண்ண வரவில்லையே என அழகன் தான் மகளிடம் கொடுத்துவிட்டிருந்தான்.

வாங்கிக்கொண்டவன் மீண்டும் அவள் ஜடையைப் பிடித்து இழுக்க, அவன் கைகளைத் தட்டிவிட்டவள் திண்ணையில் அமர்ந்திருந்த எழிலரசியை நோக்கி ஓடிவிட்டாள். பார்சலோடு உதயன் எதிர்புற திண்ணையில் அமர, “ஏன்டா பொங்குற சோத்துல ஒருபிடி அரிசிக் கூட போட மாட்டேனாக்கும், இப்படிக் கடையிலே வாங்கிச் சாப்பிடுற?” என்றார் வாசலில் அமர்ந்திருந்த சுந்தரி.

“இது அதுக்கில்லம்மா, நம்ம வீட்டு உப்பை சாப்பிட்டுட்டா அப்புறம் நமக்கு வஞ்சகம் செய்ய முடியாது பாரு, அதுக்கு தான்” என எழில் சட்டென வார்த்தையை விட்டாள். உதயனின் முகம் நொடியில் நெருப்பிலிட்ட மலராய் வாடியது. இன்னுமா அவளுக்கு என் மீது நம்பிக்கை வரவில்லை ஆற்றாமையில் வெம்பினான்.

“என்னடி இது? கிறுக்கச்சியாட்டம் பேசுற வேப்பிலை அடிச்சுமா உனக்குத் தெளியலை?” என அதட்டலோடு சுந்தரி எழ, அதற்குள் கலைவாணியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் ஓடிவிட்டாள் எழில்.

“ஐயோ அக்கா விடுக்கா, சின்னப்புள்ளை தெரியாம பேசுறா?” என உதய் தடுக்க, “இருந்தாலும் அவளுக்குக் கொழுப்பு கூடிப்போச்சுடா, ஒத்தப்பிள்ளைன்னு செல்லமா வளர்த்தது தான் தப்பு, இப்போ பாரு வாய் கூடிப்போச்சு” எனப் புலம்பினார்.

“செல்லமா..? யாரு நீயா? அவளை அடிச்சே வாரத்துக்கு ஒரு பிரம்பை ஒடைக்கலையாக்கும்? யாருக்கிட்ட கதை விடுற?” எனச் சிரிப்புடன் கேட்டான்.

“அவ கிடக்கா நீ சாப்பிடுடா” என்றவர் தண்ணீர் செம்பை அவன் அருகில் வைத்து விட்டு பார்சலை பிரிக்க, “நீங்க எல்லாம் சாப்பிடிங்களா?” எனக் கேட்டவாறு உண்ணத் தொடங்கினான்.

“அக்கா எழிலை மேல படிக்க வைக்கலாம்லா? இல்லை கம்ப்யூட்டர் கோர்ஸ் ஏதாவது கொஞ்ச நாளைக்குப்

படிக்கச் சொல்லாமே, எத்தனை நாளுக்கு தான் அவளும் வீட்டுக்குள்ளயே கிடக்குறது” என உண்டவாறே கேட்க, சற்று யோசித்த சுந்தரி, “சரிடா அந்தாளுட்ட சொல்லுறேன்” என்றார். உள்ளே கலைவாணியுடன் சிரித்து விளையாடும் எழிலின் குரல் கேட்க, உண்டு முடித்தவன் எழுத்து மாடியறைக்குச் சென்றான்.

மறுநாள் முதல் வேலையாக டவுனுக்குச் சென்று கதிர் எழுதி வைத்திருந்த புகாரை தனக்கொரு நகல் எடுத்துக்கொண்டு வாட்டச்சியாளரிடம் கொடுத்து விட்டு வந்தான். அழகனின் கடையில் அமர்ந்திருந்த உதயன் மதிய உணவு உண்டு கொண்டிருந்தான். “ஏன்டா காலையில சாப்பிட வரலையே எங்க போன?” என்ற அழகன் விசாரித்துக்கொண்டிருக்க, கரிச்சட்டி உணவு பரிமாறிக் கொண்டிருந்தான்.

“டவுனுக்குப் போயிருந்தேன் அழகா அங்கியே சாப்டாச்சு, மணி கொஞ்சம் ரசம் கொண்டுவாடா” என்றவன் ரசித்து உண்டு கொண்டிருந்தான். “அதை எதுக்கு அவங்கிட்ட கேட்கிற? சூடான ரசத்தை என் தலையில கொட்டவா? மோர் எல்லாம் வாங்கிச் சாப்பிட மாட்டியா?” எனப் புலம்பிய அழகன் முன் ஏற்பாடாக எழுந்து உதயனுக்கு எதிரே நின்றுகொண்டான்.

எதிர்பார்த்தது போலவே அசைத்து அசைத்து ரசத்தைக் கொட்டியவாறே வந்த உசிலமணி உதயனின் இலையிலும் சிறிது கொட்டிவிட்டு, “சீக்கிரம் கல்யாணம் பண்ணிகோங்க அண்ணே, அண்ணி கையால விதவிதமா ருசியா சாப்பிடலாம்” என்றான். கரிச்சட்டியோ “உங்களுக்கு என்னண்ணே புதுமாப்பிள்ளை மாதிரி தோரணையா தான் இருக்கீங்க, உங்க வயசுக்காரன் எல்லாம் கிழடு கட்டையாகிட்டானுங்க” என்க, “மப்புக்கூடி போச்சுடா உனக்கு” என்று அழகன் வீசிய அன்னக்கரண்டி அவன் மேல வந்து விழுந்தது.

“அதுகிடக்கட்டும் உனக்குச் சம்மதமா சொல்லு, என் கொளுத்தியாவை கேட்டு என் மாமனார்கிட்ட

பேசுறேன்” என அழகன் கேட்க, “பொண்ணு எப்படிலே?” என்றான் உதயன்.

உதயனின் ஆர்வம் உணர்ந்து அவனைச் சம்மதிக்க வைக்க நினைத்து “சும்மா சொல்லக்கூடாதுல எம்பொண்டாடியை விடக் கலரு, மாம்பழமாட்டம் இருப்பா, அழகுனா அழகு பேரழகு. நடந்து வந்தா முத்துரதம், சிரிச்சா சீனிக்கிழங்கு, பேசுனா தேனுமீட்டாய்டா” என்றான்.

கைகழுவி வந்த உதயன் கைகளைத் துடைத்தவாறு, “சரியா கேட்டுச்சா ரத்தினம் இல்லை திரும்பச் சொல்லச் சொல்லவா?” என்றான் எதிரே இருந்த அழகனின் பின் பார்த்தபடி. உயர் அழுத்த மின்சாரம் பாய்த்தது போன்று அதிர்ந்த அழகன் திரும்ப, இடுப்பில் கைவைத்து முறைத்தவாறே அவன் மனைவி நின்றிருந்தாள்.

‘அடேய் சகுனி, உனக்கு நல்லது செய்ய நினைச்சதுக்கு என் உசுர அடமானம் வைச்சுட்டையேடா’ என மனதில் திட்டிய அழகன், “வாடி, என்ன பிள்ளைய ஸ்கூல்ல இருந்து கூட்டிட்டுப் போக வந்தியா?” என்றவாறு அவள் அருகே சென்றான்.

“ஏயா, அவ உனக்கு மாம்பழம், பேரழகியாக்கும்..? இதுக்குத் தான் எங்கப்பா வீட்டுக்கு போகணும்னு சொல்லும் போதெல்லாம் கூட்டிட்டுப் போய் விடுறதும் கூட்டிட்டு வாரதுமா இருந்தியா? உன்னை..” என்றவள் டேபுளிலிருந்த அன்னக்கரண்டியையும் கொத்துக்கரண்டியையும் எடுத்து மெத்தினாள். கரண்டியை டேபுளில் வைத்துவிட்டு மணியும், கரிச்சட்டியும் அடுப்பறைக்குள் ஓடி விட, உதயன் எப்போதும் போலே கலைவாணியின் ஜடையைப் பிடித்திழுத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

ஒடித்த கரண்டியை வீசியவள், “வீட்டுக்கு வாயா மிச்சத்தைப் பேசிக்கிடுறேன்” என்றவாறு மகளை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டாள். தன்னை நோக்கி வரும் அழகனை தனது கைப்பேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டான் உதயன். “அடேய் நீ

ஏன்டா எப்பப்பாரு போட்டோ எடுத்துக்கிட்டு இருக்க?” என்றான் அழகன் கடுகடுப்புடன்.

“வரலாற்றுல முக்கியமான நிகழ்வுகள், வீரதீரச் செயல்கள் எல்லாம் பதிவு செய்யணும்டா, அது சரி முகத்துல என்ன கோடு?” என உதயன் சிறு சிரிப்புடன் வினவ, “இது கோடா? கொத்துக்கரண்டியை வைச்சு கொத்திட்டுப் போய்ட்டாலே” என்க, கரிச்சட்டியும் மணியும் சிரித்த முகமாக உள்ளிருந்து வந்தனர். “செய்யுறதையும் செஞ்சிட்டு ஸீனுக்குச் சம்மந்தமில்லாத கேரக்டர் மாதிரி வாரானுங்க பாரு இரண்டு பேரும்” எனக் குறைப்பட்டான் அழகன்.

“அடேய் அறிவுக்கொழுந்தே உன் கொழுந்தியா எனக்குத் தங்கச்சி முறையில வரும்” என உதயன் அவன் தோள்மீது கைப்போட்டு அருகே அமர்ந்த, அவன் முதுகில் மொத்திய அழகன், “இதை முதல்லையே சொல்லுறதுக்கு என்னவாம்? இதுல பொண்ணு எப்படின்னு கேள்வி வேற” எனக் குமுறினான். “விடு விடு, போய் ஒரு டீயை போடு” என உதயன் அனுப்ப, ‘அட ஆண்டவா அப்போ என் வாயால தான் வம்பை வாங்கிக்கிட்டேனா?’ என நொந்தவாறு சென்றான் அழகன்.

இடையில் இரண்டு நாள் ஊரில் நல்ல மழை கொட்டித்தீர்த்தது. வேலையில்லாது உதயன் அழகனின் டீக்கடையிலும், கோவிந்தசாமியின் மெக்கானிக்செட்டிலும் நேரம் கடத்திக்கொண்டிருந்தான். கொடுத்த புகாருக்கு இது வரை எந்த நடவடிக்கையும் இல்லை, அடுத்து என்ன செய்வது என்ற யோசனையும் உள்ளே சுழன்றது. இத்தனை வருடச் சம்பாத்தியம் ஊர் சுற்றியது போகக் கையில் பெரும் தொகையாக இருந்த போதும் இங்கு என்ன தொழில் செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான். ராஜா சொல்லியது போலே விவசாயத்தைத் தவிர இங்கு எந்த வேலையும் இல்லை போலே என யோசனையோடு வந்தவன் அழகனின் கடையில் அமர்ந்தான்.

மிதமான வெயில் அந்தக் குளிருக்கு இதமாய் பரவிக்கொண்டிருந்த நண்பகல் வேளை ஊருக்குள் வந்து அரசமரத்தை சுத்தி விட்டுத் திரும்பியது அரசு பேருந்து. அதிலிருந்து இறங்கிய எழிலரசி மழைநீரும், சேரும் கலந்து தேங்கிக்கிடக்கும் சாலையில் கவனமுடன் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து நடந்து அழகனின் கடையைக் கடந்தவாறு வீடு நோக்கிச் சென்றாள்.

முதலில் சுந்தரி அவளைக் கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கும் படிச் சொல்ல மறுத்தவள், பின் கோவிந்தசாமி உதயன் இன்ஸ்டூட்டில் விசாரித்துவிட்டதாகவும், நல்ல இடம் ஆறுமாத படிப்பு அவளுக்கு உதவியாக இருக்கும் என்றும் எடுத்துக்கூறச் சரியென்று ஏற்றுக்கொண்டாள். காலை ஒன்பது மணி பேருந்துக்குச் செல்பவள், நண்பகல் ஒருமணி பேருந்திற்குத் திரும்பி விடுவாள்.

அதுவரை தன் முகத்தில் படர்ந்திருந்த உஷ்ணத்துக்குப் பதில் நிழல் படர, “என்ன அழகா ஒரு பஜ்ஜிக்குள்ள ஒரு லிட்டர் எண்ணெய்யை ஒளிச்சி வைச்சிருப்ப போல இருக்கு?” என்ற குரலும் கேட்க, பார்வையைத் திருப்பினான் உதயன். கையில் ஒரு வெள்ளைத்தாளில் பஜ்ஜியை வைத்து பிழிந்தவாறு நின்றிருந்தான் சிவச்சந்திரன்.

ஏதோ பிரச்சினைக்குத் தான் நிற்கிறான் என உதயனின் உள்ளம் சொல்ல, அதே நேரம், “அதுவா மாப்பிள்ளை அறிவில்லாதவங்க எண்ணெய் சாப்பிட்டா இருக்குற கொஞ்ச நஞ்ச அறிவாவது வேலை செய்யுமாம் அதான்” என்றான் அழகன்.

அவன் பதிலில் கரிச்சட்டியும் உதயனும் பட்டெனச் சிரித்துவிட, “என்னடா கேலியா?” எனச் சிவா சூடாகக் கேட்டான். “இல்லை மாப்பிள்ளை உண்மை தான் நியூஸ் பேப்பர்ல தான் படிச்சேன், என்ன கரிச்சட்டி அப்படி தானே இருந்தது?” என்க, அவனும் “ஆமாம் ஆமாம்” என பாடினான்.

கோபமுடன் பேப்பரைக் கசக்கிய சிவா அழகனின் மீது எரிய அது அவன் மேல் பட்டு உதயனின் காலில் வந்து

விழுந்தது. அதையும் உதய் கண்டுகொள்ளாமல் இருக்க, அவன் முன் கையிலிருந்த மொத்தப் பேப்பரையும் வீசினான் சிவா. உதயனின் கண்கள் அவற்றை உற்றுப்பார்க்க, “என்ன உதய் இது? அப்பாக்கு எதிரா கம்பிளைன்ட் கொடுத்திருக்க?” என சிவா சினத்துடன் கேட்டான்.

வெகு நிதானமுடன், “இல்லையே ஊருக்குள்ள இருக்குற ஆக்கிரமிப்புகளை அகற்றத் தானே கொடுத்தேன்” என்றான் உதயன்.

“எங்க அப்பாவுக்கு எதிரா கம்பிளைன்ட் கொடுக்குற தைரியம் எங்கிருந்தது வந்ததுடா உனக்கு?” என்ற சிவா கோபமிகுதியில் அவன் சட்டையும் பிடித்திருந்தான்.

“நீயும் நானும் ஒரே இரத்தம், உனக்கு இருக்குற கோபம் கொஞ்சம் கூடவா எனக்கு இல்லமா போயிடும்?” என்ற உதயன் அசராது நிற்க, அழகனும் அங்கிருந்த பிறரும் உடனே வந்து விலக்கினர். “அடேய் அப்பாவுக்கு இருக்குற அரசியல் பலம் உனக்குத் தெரியும் தானே? இந்த ஊர் தலைவரு, நீ யார்க்கிட்ட போய்க் கம்பிளைன்ட் கொடுத்தாலும் அவரைத் தாண்டி ஒன்னும் நடக்காது இங்க. சொத்து, பத்து சொந்தபந்தம்னு எதுவுமில்லாத உன்னால எங்கப்பாவை எதிர்த்திட முடியுமா? எதிர்க்கணும்னு நினைச்சே இது மாதிரி குப்பையா தான் போவ உதய்” என ஆத்திரத்துடனும் ஆணவத்துடனும் கத்தியவன் சட்டையை உதறி விட்டு விறுவிறுவெனச் சென்று விட்டான்.

அனைவரும் செல்ல, உதயனின் அருகே வந்தமர்ந்த அழகன், “அடேய் எங்கூடத் தானே இருந்த இந்த வேலை எப்போடா பார்த்த?” எனப் புலம்பினான். “நீ எதுக்குத் துள்ளுற?” என்றான் உதயன்.

“மாப்பிள்ளை எங்கடையில முன்னாடி கொட்டகை நடைப்பாதைய தானடா வளச்சிப் போட்டுருக்கேன்” என்றவன் தலையில் துண்டைப்போட, அதை எடுத்துவிட்டவன், “அதான் கொடுத்த கம்பிளைன்ட் குப்பையா வந்துடுச்சே?” என்றான் சலிப்புடன்.

“அப்பாடா சந்தோசம்!” என அழகன் மூச்சுவிட, “ரொம்பச் சந்தோஷப்பட்டுக்காத மச்சான், எப்படினாலும் ஆக்கிரமிப்பு எல்லாத்தையும் மீட்டுடுவேன் இல்லை மீட்க வைப்பேன்” என்றான் உதயன் உறுதியுடன்.

“என்னவோ போ, கதிரும் கடைசிக் கொஞ்ச நாளா இப்படித் தான் புலம்பிக்கிட்டு இருந்துட்டுப் போய்ச் சேர்ந்துட்டான், அடுத்து நீ ஆரம்பிக்கிறீயா?” எனச் சலித்துக்கொண்ட அழகன் எழுந்து சென்றான். அழகனின் வார்த்தையில் உதயனின் நினைவில் ஏதோ தோன்ற, விரைந்து எழுந்தவன் வண்டியை உதைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

குணசுந்தரி வயலில் இருக்க, கோவிந்தசாமி செட்டில் இருக்க, அந்த நேரம் எழில் மட்டுமே வீட்டில் தனியா இருந்தாள். பைக்கை நிறுத்தியவன் விறுவிறுவெனப் படிகளில் தாவியேறி தன் அறைக்கதவைத் திறந்தான். திறந்தவனுக்குத் திகைப்பு முகமெல்லாம் வியர்த்துக்கொட்ட, புறங்கையால் துடைத்தவாறு எழில் நின்றிருந்தாள். சட்டெனக் கதவு திறக்க, அவளும் திகைப்பில் நின்ற உதயனை திகைப்போடு பார்த்தாள்.

அத்தியாயம் 07

விறுவிறுவென உள்ளே வந்த உதயன், “எழில் நீ என்ன செய்ற இங்க?” என்ற கேள்வியுடன் அவளை உற்றுப்பார்த்தான். சூரியனின் உஷ்ணத்திற்கு இணையான பார்வையாய் இருக்க, எதிர்கொண்டு பார்க்க முடியாமல் முகத்தைத் திருப்பினாள் எழில்.

“அ..அது..கிளீன் பண்ண வந்தேன்” என்றவளின் வார்த்தை வழக்கத்திற்கு மாறாய் தடுமாற, முத்து முத்தாய் முகத்தில் வியர்த்திருந்த வியர்வை கழுத்தில் இறங்கிக்கொண்டிருந்தது.

அவன் பார்வை அவள் இரு கைகளையும் தழுவி மீண்டது. அப்போதே தன் இரு கைகளிலும் துடைப்பம் இல்லாதது நினைவில் வர, ‘பொய் சொன்னாலும் பொருந்தும் படிச் சொல்ல வேண்டுமடி’ என மனதில் குட்டினாள்.

உடனே சமாளிக்கும் சாக்கில் “இல்லை, அன்னைக்குக் கிளீன் பண்ணும் போது என் கொலுசு ஒன்னு காணாமப் போச்சு, அதான் அது இங்க கிடக்காணு தேடி வந்தேன்” என்றாள் மென்குரலில்.

அப்போதும் தடுமாற்றம் மாறவில்லை, எதிரே நின்றிருந்தவனோ விசாரிக்கும் தோரணையில் கைகளைக் கட்டிக்கொண்டு, “இதை நான் நம்பணுமா..?” என நகைப்புடன் கேட்டான். ஏனெனில் சற்று முன் தான் அவள் இரு கால்களிலும் கொலுசிசைக்க நடந்து செல்வதைக் கண்டான்.

என்ன பதிலளிப்பது எனத் தெரியாது கைகளைப் பிசைந்துகொண்டு நிற்க, “அது சரி, அப்படியே கொலுசைத் தேடி வந்தாலும் நான் இல்லாத நேரம் எதுக்கு உள்ள வந்த? உண்மைய சொல்லு என்னத்த எடுக்க வந்த எழில்?” என்றான் சற்றே அதட்டலில்.

பயத்திலாவது உண்மையை உளறுவாளா என்ற எதிர்பார்ப்பு! ஆனால் அவன் மனமோ, ‘என்ன தைரியம்டா மவனே உனக்கு? அவகிட்ட இம்புட்டு வாங்கியும் திருந்துறீயா? அவள் பத்திரகாளியானா நீ பாதாளம் போக வேண்டியது தான்’ என்றது.

அவன் எண்ணத்திற்கு எதிர்மாறாய் முகம் சிவந்தவள், “கொலுசு இங்க இல்லைனா வீட்டுக்குள்ள தான் இருக்கும், இப்போ எதுக்கு என்னை இத்தனை கேள்வி கேட்குறீங்க? புதையலும் பொக்கிஷமுமா வைச்சிருக்கீங்க? பொதி மூட்டை மாதிரி அழுக்குத்துணி தான் ஒரு பை நிறையா இருக்கு, இதுலிருந்து நான் என்னத்தைத் திருட? கதிர் மாமா இருந்தவரைக்கும் நான் நினைச்ச நேரத்துக்கு வந்து போவேன் தெரியுமா? என் வீட்டில இருந்துக்கிட்டு நீங்க எப்படி என்னையே வரக் கூடாதுன்னு சொல்லலாம்? எனக் கோபமுடன் எண்ணெய்யில் இட்ட கடுகாய் பொரிந்தாள்.

ஆனால் அதிலும் சில நொடி தடுமாறுவதையும் வழக்கத்திருக்கு மாறாக வியர்த்து வழிய நிற்பதையும் உதயன் கண்டுகொண்டான். எழில் கோபம்

கொள்கிறாள் எனில் எதையோ மறைக்கிறாள் என்பது உதயின் அனுபவப் பாடம்.

“நான் இப்போ உன்னை வரக்கூடாதுன்னு சொல்லலையே? எதுக்கு வந்திருக்கன்னு தானே கேட்டேன்?” என நிதானமுடன் தன் கேள்வியை விளக்கினான்.

அதற்கும் என்ன சொல்வது என ஒரு நொடி தடுமாறி யோசிக்க அவள் பார்வை எதிரே சுவரிலிருந்த கதிரின் புகைப்படத்தில் விழுந்தது. அருகே சென்று எக்கி கழற்றி கைகளில் எடுத்துக்கொண்டவள், “கதிர் மாமா போட்டோவை எடுக்கத் தான் வந்தேன்” என முகத்தைச் சிலுப்பிக்கொண்டு வாசல் நோக்கிச் சென்றாள்.

அவளை விட வேகமாக அவள் முன் சென்று உதயன் கை நீட்ட, சட்டென அவன் கைகளில் மோதிவிடாது பின் விலகி நின்றவள் அவனைப் பார்க்க, “போறவா எதுக்கு என்னையும் இழுத்துட்டுப் போற?” என்றான். இடையில் கை நீட்டியது அவன் தானே என்ற எண்ணத்தில் முறைப்புடன் பார்த்தாள்.

எதுவும் பேசாது அவள் கைகளிலிருந்த புகைப்படத்தைப் பறித்தவன் மேசையில் அதை வைத்துவிட்டு அங்கிருந்த கதிரின் மற்றொரு சிறிய புகைப்படத்தை எடுத்துக் கொடுத்தான். மாறாத முறைப்புடன் பிடுங்கிக் கொண்டவள் முகத்தைச் சிலுப்பிக் கொண்டு நிற்காமல் சென்றுவிட்டாள். குறிப்பிட வேண்டியது அவள் முதல் எடுத்த புகைப்படத்தில் கதிரோடு உதயனும் இருந்தான் என்பது.

தொலையாத கொலுசைத் தேடி வந்தவள் வேண்டாத புகைப்படத்தை எடுத்துச் செல்லும் மர்மம் புரியாது நீண்ட மூச்சோடு கட்டிலில் சென்று அமர்ந்தான் உதய். அப்போதே தான் பரபரப்புடன் வந்ததன் காரணம் நினைவில் வர எழுந்தான்.

அன்று மேசையின் ட்ராவில் வைத்த விண்ணப்பத்தையும் கதிரின் சான்றிதழ் நகல்களையும் எடுத்துப்பார்த்தான்.

அவ்விண்ணப்பமானது வருகிற ஊராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு.

ஆம் சிவா கூற்றில் இருக்கும் ஒரு தவறு அவன் தந்தை முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் தற்போதைய வேட்பாளர். ஆக அவரை எதிர்த்து நிற்க நினைத்துள்ளான் கதிர் என்பதைப் புரிந்து கொண்ட உதயன் அதிர்ந்து அமர்ந்தான்.

ரெங்கநாதன் சொத்துபத்துக்களை விடப் பெரும் கௌரவமாக நினைப்பது ஊர்த் தலைவர் என்னும் பதவியைத் தான்! இது வரையிலும் யாரும் அவரை எதிர்த்துப் போட்டியிட்டதில்லை, ஏதோ கடமைக்கு என ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் இடையில் நடக்கும் தேர்தலில் ஒற்றையாளாய் போட்டியின்றி நின்று வென்றவர்.

அத்தனை உயரம் வளர்ந்திருக்கிறார் என்றால் அதில் உதயனின் தந்தை கிருஷ்ணமூர்த்தியின் உழைப்பும் மறுக்க முடியாத அளவிற்கு உள்ளது. அப்படி இருந்தும் கூடத் தம்பியை தனக்குக் கீழே வைத்துக்கொண்டிருந்தவர் தனக்குச் சிறிதும் சமமில்லாத தனி ஒருவனான கதிர் எதிர்க்க நினைத்தால் எளிதாக விடுவாரா? தனது பெரியப்பாவைப் பற்றி நன்கு அறிந்தவனுக்குத் தற்போது உண்மை புரியப் பூமி மட்டுமல்லாது அண்டமே சுற்றுவது போன்றிருந்தது.

“வீட்டை விட்டு வந்துட்டா உங்க உறவு இல்லைன்னு ஆகிடுமா? உங்க குடும்பம் தான் கதிர் மாமாவை கொன்னது, உங்களால என்ன செஞ்சிட முடியும் அவங்களை? அதை விடக் கதிர் மாமா ஆசையவாவது உங்களால நிறைவேற்ற முடியுமா?” என அன்று எழில் கோபத்தில் உரைத்தது உதயனின் நினைவில் வந்தது அது மட்டுமின்றிச் சற்று முன் பேசிய சிவாவின் ஆணவமான பேச்சுக்களும் நினைவில் வர நரம்புகள் முறுக்கிக்கொண்டு சினம் பொங்கியது.

‘என் கதிரை என்னடா செய்தீர்கள்? எளியவன் என எளிதில் தள்ளிவிட்டீர்களா? ஆனால் நான் உங்களில் இருந்து வந்தவன் தானே என்னை என்ன

செய்துவிடுவீர்கள்? நானும் மோதிப் பார்க்கிறேன்!' என உறுதிக்கொண்டான் உதயன். உயிர் தவிரப் பெரும் உறவு, உடைமை எதுவுமில்லை, உயிர் தவச் சிறிது கதிரின் மீது கொண்ட நட்பே பெரிது உதயனுக்கு.

கதிரை சாதாரணத் தூசி போன்று கணக்கிட்டவர்கள் அவன் பின் இருக்கும் பிரபஞ்ச பெரும் சக்தியான உதயனைக் கணக்கிடத்தவறியது பெரும் தவறு!

மாலை நேரம் வயல் வரப்புகளில் சிறிது தூரம் நடந்துவிட்டு, கிணற்றில் குளிக்கச்சென்றான் உதயன். அவர்கள் வயல் தான், வேலையாட்கள் அப்போது தான் வேலை முடித்துக் கிளம்பும் நேரம், அவர்கள் வீட்டுக் கணக்காளர் வேலுமாணிக்கம் அவர்களுக்கான சம்பளத்தைச் சரிபார்த்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

உதயனைக் கண்டவர், “வாங்கத் தம்பி” என வரவேற்க, “என்ன மாமா சம்பளம் கொடுக்குறீங்களா?” எனக் கேட்டவாறு அருகே சென்றான். விவசாயக் கூலிகளாக அவர்கள் நிலத்தில் வேலை செய்பவர்களுக்கு வாரமொரு முறை சம்பளமிடுவார்கள் என உதயன் அறிவான்.

அதற்குள் வேலுமாணிக்கத்திடம் வேலையாள் ஒருவர், “ஐயா இந்த வாரம் மச்சினன் வீட்டுல விசேஷம் இருக்கு அந்த இரண்டு நாள் சம்பளத்தையும் பிடிக்காம கொடுத்தா நல்லாயிருக்கும்” எனக் கேட்டுக்கொண்டிருந்தார்.

“அதெல்லாம் முடியாதுப்பா, இன்னும் நாலு நாள் வேலையிருக்கே, முடிச்சிட்டு மொத்தமா ஆறுநாள் சம்பளத்தையும் வாங்கிக்கோ” என்றார் கராராக. அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த உதயன், “வேலுமாமா, அவர் உழைச்ச காசை தானே கேட்கிறாரு, ஆறுநாள் சம்பளத்தையும் கொடுக்காம எதுக்கு இரண்டுநாள் சம்பளத்தைப் பிடிக்கிறீங்க?” எனப் புரியாது கேட்டான்.

“பெரியைய்யா அப்படித் தான் தம்பி கொடுக்கச் சொல்லியிருக்காங்க” என்க, “அதான் எதுக்கு?” என

விளக்கம் கேட்டான் உதயன்.

“அதுவா இது நடவு நடக்குற நேரம், ஆளுங்க பத்து, இருபது கூடக் கொடுக்காங்கன்னு வெளிய வேலைக்குப் போயிடக் கூடாதுன்னு தான்” என்றார்.

“இதென்ன அநியாயம், அன்னனைக்கு உழைச்சு சாப்பிடுறவங்க சம்பளத்தை இப்படிப் பிடிச்சிக்கிட்டு கொடுத்தா எப்படி? அவங்க திடீர் தேவைக்கு வெளிய தானே வட்டிக்கு வாங்குவாங்க, அப்புறம் சம்பளம் வந்ததும் வட்டி கட்டுறதுக்கே சரியா போய்டும். அவரும் ஏதோ தேவைக்குன்னு தானே கேட்கிறாரு, நம்ம கிட்ட கையிருப்பு இருக்குற போது எதுக்கு மறுக்குறீங்க. எல்லாருக்கும் ஆறுநாள் சம்பளத்தையும் கொடுங்க வேலு மாமா” என்றான் அதிகாரமாக.

“வேண்டாம் தம்பி ஐயாவுக்குத் தெரிஞ்சா என்னைத் தான் திட்டுவாங்க..அது மட்டுமில்லாம..” என அவர் எதையோ சொல்லத் தயங்க, “என்னனு சொல்லுங்க வேலுமாமா” என்றான்.

“தொழில்ல, கணக்கு வழக்குல உங்க சொல் எதுவும் கேட்க வேண்டாம்னும், உங்களுக்கு எதுவும் தேவை இருந்தாலும் நேரடியா ஐயா கிட்டையே கேட்டுகவும் சொல்லிருங்காங்க தம்பி” என்றார்.

தனக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களைத் தழுவியே நான் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறார்கள் எனப் புரிந்தது. “யாரு அப்படிச் சொன்னா? பெரியப்பாவா?” என நிதானமாகக் கேட்டான்.

“இல்லைங்க தம்பி, பெரியைய்யா சொன்னதா ராஜா தம்பி தான் சொல்லிட்டுப் போறாருப்பா” என்றார்.

அதற்கு மேல் எதுவும் கேட்காது குளிக்க வந்தவன் அருகே இருக்கும் சுந்தரியின் வயல் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

உதயன் தோப்பில் ஒரு இளநீர் கேட்டால் கூடத் தங்களைக் கேட்காமல் கொடுக்கக் கூடாது, அவனை உள்ளே விட வேண்டாம் என்றும் குறிப்பாக அவனை

மாந்தோப்பின் திசையில கூடச் செல்ல விடக்கூடாது என்றும் ராஜா சொல்லிச் சென்றதை நினைத்தார்.

அவர் மனதிற்குள்ளும் ஆதங்கம் தான் இருந்தது, உதயனின் தந்தை இருந்திருந்தால் இவ்வாறு சொல்லியிருப்பார்களா? பெற்றவர்கள் இல்லாத ஒற்றைப் பிள்ளையை ஒதுக்குகிறார்கள் என நன்றாகத் தெரிந்தது.

முன்னோர்கள் சம்பாதித்து வைத்ததை அண்ணனும் தம்பியுமாக இருவரும் தான் பெருக்கினர். அதிலும் ரெங்கநாதன் கூட அரசியல், குடும்பத்தை மட்டுமே கவனிக்க, பெரும்பாலும் தொழிலைக் கவனித்துச் செல்வத்தைப் பெருக்கியது கிருஷ்ணமூர்த்தி தான்.

ஆனால் தற்போது கிருஷ்ணமூர்த்தி இல்லாத நிலையில் ரெங்கநாதனுக்கு இணையாக மொத்த சொத்தில் பாதி உதயன் ஒருவனுக்கே! ரெங்கநாதனின் பங்குகளிலிருந்து அவர் மூன்று பிள்ளைகளுக்கும் பிரித்தால் தனக்கென வருவது இருபத்தி ஐந்து சதவீகிதத்திற்கும் குறைவான பங்குகளே என ராஜா முதலிலே கணக்கிட்டான்.

ரெங்கநாதனின் குணத்தில் சிறிதும் மாறாதவன் மூத்த மகன் ராஜகணபதி. உதயன் இதில் பெரிதாக ஈடுபாடு காட்டாமல் இருக்க, குடும்பத்தின் மொத்த தொழிலையும் கைக்குள் வைத்துக்கொண்டான் ராஜகணபதி. அத்தனை ஆசைகளும் விவேகமும் கொண்டவன். ஆனால் தற்போது உதயன் ஊரிலே தங்கி விட, அவனுக்கு உரிமையான பங்குகளைக் கொடுப்பதில் ராஜாவுக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை, மொத்தமாக உதயனைத் தவிர்க்கவே எண்ணினான்.

குளித்து முடித்து ஈரத்தலையோடு வீட்டிற்குச் சென்ற நேரம் வாசலில் நான்கு ஐந்து பேர் பெண்களும் ஆண்களும் கூட்டமாக இருந்தனர். குணசுந்தரியும் பேசிக்கொண்டிருக்க, உள்ளே வந்த உதயனை கண்டவர் அவனிடம் ஒரு அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு அழைத்து விட்டுச் சென்றனர். அதே ஊரார்கள்

என்பதாலும் அவன் தந்தைக்கு நன்கு தெரிந்தவர்கள் என்பதாலும் அழைப்பு விடுத்துச் சென்றனர்.

தன்னறை நோக்கிச் சென்றவன், பத்திரிக்கையைப் பிரித்து மணமக்கள் பெயர்களைப் பார்த்தான். ‘அட நம்ம வினோத் பயலுக்கா கல்யாணம்! இவனெல்லாம் என்னோட ஜூனியர், இரண்டு வயசு சின்னப்பையன்’ என நினைத்தவாறு அறைக்குள் சென்று உடை மாற்றிவிட்டுப் படுத்தான். ஒரு ஓரம் கிடந்த அழுக்குத்துணிகளைப் பார்த்தவன் சில மணிநேரத்திற்கு முன் எழில் சொல்லிச் சென்றதை நினைத்தவாறு விழி மூடினான்.

அன்று வெள்ளிக்கிழமை, காலை ஒன்பது மணி பேருந்திற்குக் கம்ப்யூட்டர் கிளாஸ் போக வேண்டும். காலை எட்டு முப்பதுக்கு வாசல் படிகளில் நின்றவாறு ஈரக் குழலை உலர்த்திக் கொண்டிருந்தாள் எழிலரசி. “அம்மா அந்தப் புதுபட்டுப் புடவையோட ப்ளவுஸ் தைக்க மறக்காம தேவி அக்காகிட்ட கொடுத்திடும்மா, துளசி கல்யாணத்துக்கு அதைத் தான் கட்டணும்” என வீட்டிற்குள் இருக்கும் சுந்தரியிடம் உரைத்தாள்.

”ஏன்டி இங்க என்ன நான் சும்மா உக்காத்திருக்கேனா? எனக்கு வேற வேலையே இல்லைபாரு. வீட்டு வேலைக்குத் தான் ஆகுறதில்லை இதுல இவளுக்கு வேலை செய்ய ஒரு ஆள் வேணுமாம். நான் தைக்கக் கொடுத்துட்டு வரவும் கை நீளமா இருக்கு, கழுத்து இறக்கமா இருக்கு, இடுப்பு லூசா இருக்குன்னு மட்டும் சொல்லு எலும்பை எண்ணிப்புடுறேன்” எனக் கத்தினார் குணசுந்தரி.

‘சுந்தரி சூடா இருக்குறது தெரியாமா வார்த்தையை விட்டுட்டையே எழிலு’ எனத் தன்னுள் புலம்பிக்கொண்டவள், “சரி ரைட்டு விடும்மா நானே கொடுத்துக்கிடுறேன்” என்று சமாதானம் பேசினாள்.

அதே நேரம் படிகளில் சத்தம் கேட்கத் திரும்பியவள் இறங்கி வரும் உதயனின் தோற்றம் கண்டு வாய் பிளந்தாள். பளீர் வெள்ளை கதர் வேட்டி, சட்டையில் நிமிர்ந்த நடையில் மிடுக்காக வந்தான்.

‘இவருக்குக் கதிர் மாமா தானே வேட்டி கட்டிவிடும், இவருக்குத் தான் வேட்டி கட்டத் தெரியாதுல பின்ன எப்படி..?’ என ஐயமுற அவனைப் பார்த்தவள் பழைய நினைவில் பட்டெனச் சிரித்தும் விட்டாள்.

பெரும் பாடுபட்டு பல மணி நேர போராட்டத்தில் கட்டிக்கொண்டு வந்தவன் எழிலரசி சிரிக்கவும் அர்த்தம் புரியாது, ‘ஐயோ திரும்பவும் அவுந்திடுச்சா? என் மானம் போச்சே’ எனப் புலம்பியவாறு இடுப்பைச் சுற்றி கைகளால் தடவி பார்த்துக்கொள்ள இறுக்கமாகத் தான் இருந்தது. அவன் செயலில் எழில் மேலும் சிரித்தாள். பல மாதங்களுக்குப் பின் அதுவும் கதிரின் இழப்பிற்குப் பிறகு இன்று தான் எழில் சிரிக்கப் பார்த்தான் அதில் மனம் நிறைய, மகிழ்வுடன் கிளம்பினான்.

அவனுடன் பயின்ற வெளியூரில் வேலை செய்யும் நண்பன் ஒருவனை வரும் படி அழைத்துவிட்டு ஊரில் பெரியவர்களில் ஒருவரான பெரியமீசை முருகையாவின் வீட்டிற்குச் சென்று பேசி சரி கட்டி அவரை அழைத்துக்கொண்டு பதிவாளர் அலுவலகம் சென்றான்.

ரெங்கநாதனுக்கு எதிராக ஊராட்சி தேர்தலில் போட்டியிடப் போவதாக உரைக்க அதிர்ந்த பெரியவர் முதலில் வேண்டாம் என்று தான் மறுத்தார். ஆனால் உதயன் பிடிவாதமாக நின்று இதுவே எங்க அப்பா கேட்டுருந்தா மறுப்பீங்களா என்றெல்லாம் கேட்டு அரை மனதாகச் சம்மதிக்க வைத்துக் கிளப்பி உடன் அழைத்து வந்திருந்தான்.

நண்பன் அவனுக்கு முன்னே வந்து காத்திருக்க, இருவரின் சாட்சியோடும் உதவியோடும் ரெங்கநாதனுக்கு எதிராகச் சுயட்சை வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்தான். துணையாய் இருந்து வழிகாட்டும் படி தந்தையும், கதிரையும் வேண்டிக்கொண்டான்.

ஆனால் முருகையாவிற்கு இவ்விஷயம் ஊருக்குள் தெரியும் போதும் அதுவும் ரெங்கநாதனுக்குத் தெரியும் போது என்ன நிகழுமோ என்ற பயம் பற்றியது.

# அத்தியாயம் 08

மதிய உணவு நேரம் அழகனின் கடையில் வந்தமர்ந்தான் உதயன். கரிச்சட்டி பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருக்க, அழகனும் கடையை மூடுவதற்கு அனைத்தையும் ஒதுக்கி வைத்துக்கொண்டிருந்தான்.

உதயனின் தோற்றத்தைப் பார்த்தவன், “என்னடா புதுசா வேட்டி கட்டிக்கிட்டு புது மாப்பிள்ளை தோரணையில வந்திருக்க?” எனக் கேட்டு விட்டு சுற்றும் முற்றும் பார்த்த அழகன் மீண்டும், “எப்படி அரசங்குளத்துல என் சித்தி மகள் இருக்கு பொண்ணு கேட்டுப் போவோமா?” என்றான்.

“அட நம்ம கூடப் படிச்ச புள்ளை ரேவதி அந்த ஊரு தானேடா, சரி தான்..அப்போ ரத்தினத்தையும் கூட்டிட்டு போவோம் எப்படிடா?” என்றான் உதயன். “அட பாவிப்பயலே, வேண்டாம்டா அழகன் பாவம் பொல்லாதது” என்றான்.

“யாருக்கு எனக்கா? சரி சரி, நான் என்ன ஆடுமாடா? இலை தலையத் திங்க? எவ்வளவு நேரம் தான் நான் இலைய வெறிக்கிறது? சீக்கிரம் சாப்பாடப் போடுடா” என்க, அழகன் வந்து உணவை எடுத்து வைத்தான்.

“ஏன்டா தினமும் இந்த உப்பில்லாத சாம்பாரு தானா? பிரியாணி எல்லாம் கண்ணுலையே காட்ட மாட்டியாடா?” என்க, “ஆமா நான் உன் பொண்டாட்டி பாரு விதவிதமா சமைச்சிப் போட?” என்றான் அழகன்.

உதயன் சிரித்துவிட, கடுப்பான அழகன், “பேசாம சாப்பிடுறீயா என்ன வேணும்? கல்யாணம் பண்ணிக்கோன்னா காது கொடுத்தும் கேட்க மாட்டிக்க, இல்லை வரும் போதாவது நல்லா சப்பாத்தி தட்டுற பொண்ணைத் தள்ளிக்கிட்டு வந்திருக்கணும் அதுவுமில்லை” என்றான்.

மாறாத சிரிப்புடன் உதயன், “அதான் நீ இருக்கீயே மச்சான் அப்பறம் என்ன?” என்க, மேலும் கடுப்பான அழகன், “ஊருல எல்லாத்துக்கும் உசுரக் கொடுக்குற ப்ரண்டா இருந்தா எனக்கு மட்டும் உசுர எடுக்குற

ப்ரண்டா இருக்கானே!” எனப் புலம்பலுடன் அருகில் அமர்ந்தான்.

“உசுரெல்லாம் இல்லை மச்சான், உன் கடைய மட்டும் தான் எடுக்கப்போறேன்” என உதயன் உரைக்க, “அடேய் என்னடா சொல்லுற? உனக்கு இன்னும் இந்தக் கிறுக்கு தெளியலையா?” என்றான் அழகன்.

“இல்லை இப்போ தான்டா தெளிவா இருக்கேன், எலெக்ஷன்ல நிக்கிறேன், ஜெயிக்கிறேன், உன் கடைய எடுக்குறேன்” என உதயன் அசராமல் உரைக்க, அதிர்ந்த அழகன் தலையில் துண்டைப் போட்டவாறே, “அட படுப்பாவி, இப்படி உண்ட கடைக்கே துரோகம் செய்றீயேடா, உனக்கே இது நியாமாப்படுதா?” எனப் புலம்பினான்.

“என்ன செய்ய ஊருக்கு நல்லது செய்யணுமே, அப்பறம் உண்ட பாவம் கொன்றால் தீரும்” என்க, கையில் எண்ணெய்யுடன் வெளியே வந்த உசிலமணி, “அட அண்ணே பழமொழிய தப்பா சொல்லுறீங்க கொன்றால் பாவம் உண்டால் தீரும்” என்றான்.

“இது புதுமொழி மணி அதுவும் அழகனுக்காகவே எழுதுனது, எப்படி இருக்கு மச்சான்?” என அழகனின் புறம் திரும்பினான். “ஹே, ஊசிப்போன சாம்பார் மாதிரி இருக்கு” என்றதும் அனைவரும் சிரித்து விட்டனர்.

மேலும் கடுப்பான அழகன், “நல்லா வருது என் வாய்ல! எதுவும் முதல்லையே சொல்லுறதில்லை, எல்லாத்தையும் செஞ்சி முடிச்சிட்டு வந்து தான் சொல்லுறதா? எவ்வளவு பெரிய விஷயத்தைச் செஞ்சிட்டு இப்படி எதுவுமே தெரியாத குழந்தை மாதிரி உக்காந்திருக்கியேடா எப்படி? இது மட்டும் உன் பெரியப்பாவுக்குத் தெரிஞ்சா என்னாகும்? அந்த அரைவேக்காடு சிவாவுக்குத் தெரிஞ்சாவே போதும் வரிஞ்சி கட்டிக்கிட்டு வந்திடுமேடா? முழுப் பூசணிக்காயை மறைக்கத் தான் முடியுமா? இல்லை இது தான் மறைக்கிற விஷயமா? ஏன்டா ஏன்? ஐயோ இப்பவே என் வயித்துல நெருப்பு எரியுற மாதிரி இருக்கே” எனப் பயத்தில் புலம்ப, “அடுப்புப் பக்கத்துல

உக்காந்தா அப்படித்தான் இருக்கும் அழகா?” என்றான் உதயன்.

“எனக்கு இருக்குற பயத்துல அடுப்புக்குள்ளையே போய் உட்கார்ந்திடுவேன் அப்படி இருக்கேன்” என்க, “ஆல்ரெடி கருகின கரிக்கட்டை மாதிரி தான் இருக்கு” என்ற உசிலமணி உள்ளே சென்றுவிட்டான்.

அத்திசையில் முறைத்து விட்டு திரும்பிய அழகன், “ஆமா, உன் முஞ்சியை இந்த ஊருல பாதிப்பேருக்குத் தெரியாது. அப்பறம் நீ எதை நம்பி இறங்குற? யாரை நம்பி தேர்தல்ல நிற்கிற?” என்றான் உதயனிடம் திரும்பி.

“அதான் நீ இருக்கீயே மச்சான், இது போதுமே வேறென்ன வேண்டும்?” என்க, “க்கூம் ஊசிப்போன உசிலமணி வடையைத் தவிரப் பைசா தேறாது!” எனக் கழுவிய பாத்திரத்தோடு உள்ளே வந்தான் கரிச்சட்டி.

“அடேய் உன்னை..இருடா வரேன்” என எழுந்த அழகன் ஒரு அடி எடுத்து வைக்க, சற்று முன் எண்ணெய் பாத்திரத்தோடு வந்து சென்ற மணி சிந்திய எண்ணைய்யில் கால் வைத்திருந்தான்.

வழுக்கிக் கொண்டு சென்று டேபுளில் தட்டி கீழே விழ, டேபுளில் கழுவி கவுதியிருந்த பாத்திரங்கள் அனைத்தும் அவன் தலையில் விழுந்தது. அவ்வளவு தான் கரிச்சட்டி ஓட்டமெடுத்து ஓடி விட, சிரிப்புடனே வந்து அழகனைத் தூக்கி விட்ட உதய், “தலையில என்ன தக்காளிச் சட்டினியா மச்சான்?” என்றான் கேலியுடன்.

“இந்த இரண்டு ஏழரையும் கூடவே வைச்சிருந்தா எல்லாச் சட்டினியும் என் தலையில தன்னால ஊற்றெடுக்கும்டா” என்றான் கடுப்புடன். “ஓஹோ அப்போ உன் தலை தான் அட்சயப்பாத்திரம்? இப்படித் தான் நீ ஊருக்காரங்களை ஏமாத்திக் கடைய நடத்துற?” என மேலும் கேலி செய்தான் உதய்.

“சரி எதுக்கு இப்பவே கடைய மூடுற?” என்க, “எங்க பக்கத்து வீடு மாரி மகன் வினோத்துக்கு  நாளைக்குக் கல்யாணம், நைட்டுப் பரிசம் போடுறாங்க. நீயும் சாயங்காலம் வந்திடு மாப்பிள்ளை. இப்படி நல்லது

பொல்லதுல கலந்துக்கிட்டா தான் ஊரோட இருக்க முடியும்” என அழகன் உரைக்க, தலையாட்டி விட்டுச் சென்றான் உதயன்.

பொதுவாக ஊரில் யார் வீட்டில் விசேஷம் என்றாலும் குடும்பத்தோடு அனைவரும் கலந்து கொள்வதும், உடன் இருந்து ஆளுக்கொரு வேலை செய்து உதவுவதும் உண்டு. சுந்தரியும் குடும்பத்துடன் சென்றிருந்தார். அதுமட்டுமின்றி மணப்பெண்ணான துளசி எழிலரசியின் கல்லூரித் தோழி ஆகையால் அவளும் சென்றிருந்தாள். உதயனும் கிளம்பி அழகனின் வீடு நோக்கிச் சென்றான்.

அழகனின் பக்கத்து வீடான வினோத் வீட்டின் முன் பந்தலிட்டு சீரியல் விளக்குகளால் அலங்கரித்திருக்க அந்த தெருவே வண்ணமயமாக மின்னியது. ஊரார் அனைவரும் அங்கு தான் கூடியிருந்தனர். இரவு வினோத் வீட்டில் நிச்சியதார்த்தமும், காலை முருகர் கோவிலில் திருமணமும், வீட்டில் விருந்தும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அழகன் வீட்டிற்குச் சென்றவன் வாசல் திண்ணையில் அமர்ந்தவாறு, “என்ன அத்தே நல்லாயிருக்கியா?” என அவன் அன்னை சோலையம்மாளிடம் நலம் விசாரித்தான். அதே நேரம் வீட்டிற்குள் இருந்து பாத்திரங்கள் விழுந்து உடைவது போன்ற சத்தங்கள் வந்து  கொண்டிருந்தது.

”இந்தா சொன்னா கேளுடி, மேல கை வைக்கிற வேலையெல்லாம் வேண்டாம், குண்டுமணி அளவு மோதிரம் அதுக்காகப் புருஷன் உசுரோட விளையாடதாடி” என அழகன் கத்திக்கொண்டிருக்க, “அடேய் அது என்ன செத்தவனோட செல்லாக்காசுன்னு நினைச்சியா? ஒரு பவுன் தங்க மோதிரம்டா, அடியேய் ரத்தினம் உண்மைய சொல்லுற வரைக்கும் அந்தப்பயல விடாத” எனத் திண்ணையிலிருந்து குரல் கொடுத்தார் சோலையம்மாள்.

அதேநேரம் உள்ளிருந்து ஓடி வந்த அழகனின் மகளை, “களவானி நில்லு” என நிறுத்தினான். “ஐயோ எத்தனை தடவை தான் நான் சொல்லுறது என் பெயரு

கலைவாணி மாமா” என நெற்றில் தட்டிக் கொண்டு ரகமாய் அவள் உரைக்கச் சிரித்தான் உதயன்.

“அடியே குள்ள வாத்து நீ உங்க அம்மாவுக்குத் தெரியாம ஹார்லிக்ஸ் டாப்பாவை களவானுவ தானே களவானி” என்க, “உஷ், இந்த ரகசியம் நமக்குள்ளயே இருக்கட்டும் மாமா. அம்மாகிட்ட சொல்லிடாதே?” என ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்துக் கட்டளையிட்டாள்.

“அப்போ உள்ள போய் மாமா வந்திருக்கின்னு உங்க அப்பனை கூட்டிட்டு வா” என்றான் சிரிப்புடன். மறுப்பாய் தலையசைத்தவள், “அப்பாவும் அம்மாவும் விளையாண்டுக்கிட்டு இருக்காங்க இப்போ உள்ள போனா அம்மா அடிக்கும்” என்றவள் எழில் நடந்து செல்வதைப் பார்த்துவிட்டு அவளை நோக்கி ஓடிவிட்டாள்.

சிறிது நேரத்தில் வெளிவந்த அழகன், உதயனை அழைத்துக் கொண்டு வினோத் வீடு நோக்கிச் சென்றான். “என்னடா மச்சான் என்னாச்சு?” என உதய் கேட்க, “அதை ஏன்டா கேட்குற, நகைபெட்டிய திறந்திருக்கா போல, அதுல இத்துணுண்டு மோதிரத்தைக் காணுமாம் மாப்பிள்ளை. அதுக்குப் போய் பூரிக்கட்டையைத் தூக்கிட்டா, இதுல எங்க ஆத்தா இருக்கே வாயை வைச்சுக்கிட்டு சும்மா கிடக்குதா? அந்தச் சிவப்புகல்லு மோதிரமாடி! அதைத் தையக்காரி கையில பார்த்த மாதிரி இருக்குன்னு பாயிண்டு பாய்ண்டா எடுத்துக்கொடுக்காடா. முதல் விஷயம் அதுக்கு சரியா கண்ணு தெரியாது, இரண்டாவது ஊரு உலகத்துல அதே மாதிரி மோதிரத்தை வேற எவனும் வைச்சிருக்க மாட்டானா என்ன?” எனப் புலம்ப உதய் சிரிப்புடனே வந்தான்.

“ஊருக்குள்ள நல்லா பாருடா மாப்பிள்ளை, மாமியாரும் மருமகளும் எப்படியிருக்காங்க ஆனால் என் வீட்டுலையும் இருக்காங்களே ஒத்துமைனா ஒத்துமை அப்படியொரு ஒத்துமை, என்னவோ பசை போட்டு ஒட்ட வைச்சாப்பல தான்! இதுங்க இரண்டும் ஒன்னு

சேர்ந்துச்சி என் டவுசர் கிழிஞ்சிச்சி” என மேலும் புலம்பிக்கொண்டே வந்தான்.

இருவரும் வினோத் வீட்டு வாசலில் நிற்க, “மாமா..” என அழைத்தவாறு ஓடி வந்து உதயனின் கால்களைக் கட்டிக்கொண்டாள் ப்ரதிக்ஷா. “ஹேய் குட்டிம்மா! நீ எங்க இங்க?” எனக் கேட்டவாறு கைகளில் தூக்கிக்கொண்டான் உதய்.

அதே நேரம் அங்கு நின்ற வேன்னிலிருந்து இறங்கி வந்துக்கொண்டிருந்தாள் அபிராமி. “வாக்கா, நீ என்ன இங்க?” என அழைக்க, “பொண்ணு எங்க ஊருடா, மாமாவுக்குத் தூரத்துச் சொந்தம் தான்” என்றாள் அபிராமி. அழகன் சென்றுவிட, இருவரும் நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர்.

“அது சரி நீ எதுக்கு வீட்டை விட்டு வந்த? வந்தது மட்டுமில்லாம எதுக்கு அந்த சுந்தரி வீட்டுல தங்கியிருக்க? என்னவோ சரியில்லை, எனக்கென்னவோ இது சரியாப்படலை” என்றாள் உரிமையுடன் அதட்டலாக. ஊரில் பெரும்பாலானோர் உதய் வீட்டை விட்டு வந்து எழிலின் வீட்டில் தங்கியிருப்பது குறித்து காரணமறியாது பலவிதமான கேள்விகளும் வதந்திகளும் பரப்பிக்கொண்டு தான் இருந்தனர்.

“அது எனக்கும் சிவாவுக்கு ஒத்து வரலை அதான் வேற ஒண்ணுமில்லை. கொஞ்சநாள் என் மனசு போல விடுங்கக்கா” என்றான் மென்குரலில்.

“என்னவோ போ, அந்தக் கதிரு இறந்தது விதி அதுக்கு நாம என்ன செய்ய முடியும்? அவனுக்காகக் கவலைப்பட்டா சரி அதுக்குன்னு அந்த எழிலரசி மேல பரிதாபப்படுறதோ, அவன் வீட்டுல கிடந்து சேவகம் செய்றதோ எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலைடா. நீ எப்படி வளர்ந்தவன், இப்படிக் கிடக்கணும்னு உனக்கென்ன தலையெழுத்தா? இங்க பாரு, உன் இஷ்டத்துக்கு இருக்க விடுறோங்கிறதுக்காக உன்னைத் தனியா விட்டுட்டோம்னு நினைச்சிக்காத சரியா?” என்றாள் அதட்டலாக.

அதற்கும் சரியென்று தலையாட்டியவன் நிமிர்ந்துப் பார்க்க அதிர்ந்தான். அபிராமிக்குப் பின் கையில் தாம்புலத்தட்டுடன் எழில் நின்றிருந்தாள். அபிராமியின் குற்றச்சாட்டுகளைக் கேட்டிருப்பாளோ என ஐயமுற அவளை நோக்க, அவளும் எரிமலராய் எரித்து விடுவது போலே முறைத்துக் கொண்டிருந்தாள்.

”அக்கா இது..இவ தான் எழிலரசி” என அவள் பின்னே கைக்காட்ட திரும்பிய அபிராமி ஒரு பார்வை பார்த்து விட்டு, “ஏன்டா இவளை நான் பார்த்தே இல்லையாக்கும், பிறந்ததுல இருந்து நாங்க இந்த ஊரு தானே!” என அலட்சியமாய் உரைக்க, அசடு வழியச் சிரித்தான் உதய்.

அதில் சட்டென வாடிய மலரானது அவள் முகம், இம்முறை அவள் உணர்வுகளைச் சரிவரப் படித்தான் உதய்.

எழில் மௌனமுடன் அவர்களை கடந்து செல்ல எத்தனிக்க, “மாமா கல்கண்டு” என்றவாறு அவன் தோள்களில் இருந்து இறங்க முயன்றாள் ப்ரதிக்ஷா.

இறக்கிவிட்டவன், “போ, போய் அத்தை கிட்ட வாங்கிக்கோ” என்க, சட்டென ஒரே நேரம் அபிராமியும் எழிலும் அவனை முறைத்தனர்.

அதன் அர்த்தம் புரிந்தவன் “அது..அத்தை தானே முறை வரும் அதான்..” என்றான். ஏனோ அவன் வார்த்தைகள் தந்தியடித்தது. ஒருகைக் கற்கண்டை அள்ளி சிறுமியின் கையில் கொடுத்துவிட்டு நிற்காமல் சென்று விட்டாள் எழில். அபிராமியும் குழந்தையுடன் உள்ளே சென்றாள்.

‘ஐயோ சும்மாவே கொலைவெறியில முறைப்பா, இதுல இந்த அக்கா வேற எவ்வளவு கொளுத்திப் போட முடியுமோ அவ்வளவு கொளுத்திப் போட்டுட்டு போயிட்டாளே!’ என மனதில் புலம்பினான். ஆனால் எழில் முகம் வாடிச் சென்றதை உதயனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளிடம் ஒரு வார்த்தையாவது மன்னிப்பு வேண்டி விட எண்ணினாள்.

உதயன் நின்றபடியே இருக்க அருகே இருந்த பெரியவர், உள்ளிருந்து இரண்டு நாற்காலியை எடுத்து வந்து போடுமாறு உரைத்தார். அதைச் செய்தவன் மீண்டும் உள்ளே செல்ல அவனைக் கண்டுகொண்ட வினோத் அன்புடன் வரவேற்றான்.

வீடு முழுவதும் ஆட்கள் இருக்க, அவ்வப்போது எழிலை பார்த்துக்கொண்டு அவளிடம் மன்னிப்பு கேட்பதற்கான தருணத்தையும் எதிர்பார்த்திருந்தான் உதயன். இதில் அவளிடம் பேசிவிட வேண்டுமென்று, வேலை செய்வது போலே அவள் பின்னே செல்ல, அவனை தவிர்க்க நினைத்து மணமகள் துளசியின் அருகே சென்று நின்று கொண்டாள் எழில். ஆரம்பத்திலிருந்து குட்டிப்போட்ட பூனையாகச் சுற்றிவரும் உதயனின் செயலை அபிராமி மட்டுமில்லாது வேறு சிலரும் கவனமுடன் கவனித்தனர்.

பெரியோர்கள் சபையில் அமர நிச்சியதார்த்தம் ஆரம்பமானது. ஊரார், உறவுகள் முன் இருவரின் பெற்றோர்களும் தட்டுத்தாம்பூலம் மாற்றிக்கொண்டார். மணமக்களுக்கு தாய்மாமன் மாலையிட பின் பெரியோர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிக்கொண்டனர். மணமகள் துளசியின் அருகே அவளுக்கு உதவியாக நின்றிருந்தாள் எழில்.

உதயனோ சற்று தள்ளி பந்தல்காலில் சாய்ந்துக்கொண்டு வேடிக்கைப் பார்க்க, அருகே அமர்ந்திருக்கும் சில பெண்களையும் எழிலின் அழகு ஈர்த்தது. கதிரை இழந்த எழிலின் நிலை குறித்து அவர்களுள் பரிதாபமாக பேசிக்கொண்டிக்க அது உதயனின் காதுகளில் விழுந்தது. தன் வீட்டார் செய்த பாவத்தாலே எழிலரசிக்கு இந்நிலையோ என ஆயிரமாவது முறையாகப் பரிதாபம் போங்க அவளைப் பார்த்தான்.

“டேய் மாப்பிள்ளை இன்னும் என்னடா இங்க நின்னுக்கிட்டு இருக்க? அங்க இரண்டாவது பந்தி முடியப்போகுது” என அருகே வந்தான் அழகன்.

“பொறுடா என்ன அவசரம் மெல்ல சாப்பிடலாம்?” என்க, “மிச்சமீதி இருந்தா தானாடா சாப்பிடுவ? மணியும், கரிச்சட்டியும் உக்காந்துட்டாங்கடா. அடேய் பந்திக்கு முந்தணும் படைக்குப் பிந்தணும்” என்றான் அழகன்.

உதயன் முறைக்க, “இந்தச் சுதந்திர நாட்டுல நம்மளை ஒரு தத்துவம் சொல்ல விட மாட்டிக்காங்கப்பா” என முணுமுணுத்தவாறு நகர்ந்து விட்டான் அழகன்.

அபிராமியின் அருகே சென்ற உதயன், “அக்கா சாப்பிடலயா? ஆமா மாமா ஏன் வரலை?” என்றான். “இப்போ தான் சாப்பிட்டோம், மாமா காலையில கல்யாணத்துக்கு வந்திடுவாங்க உதய்” என்றாள்.

“சரி நான் வேணா வீட்டுல வந்து விடவா?” என்க, “வேண்டாம்டா நீ போய்ச் சாப்பிடு, நான் சிவாவை வரச் சொல்லிருக்கேன்” என்றாள் அபிராமி.

பந்தி நடைபெறும் இடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தவனின் கண்கள் சில நிமிடங்களாகக் காணாத எழிலைத் தேடியது. அவள் எங்கும் இல்லாது போக உணவுண்டு முடித்து வீட்டிற்குக் கிளம்பினான்.

சற்று முன் கலைவாணி காஃபி கேட்கவே ஆற்றிக்கொடுத்துக் கொண்டிருந்தாள் எழில். என்ன தான் ஆற்றிக் கொடுத்த போதும் பேப்பர் கப்பில் கொடுக்கவே அதன் இளஞ்சூடும் தாங்காது கலைவாணி கப்பை விட்டு விட, அது எழிலின் பட்டுப்புடவையில் கொட்டியது. அதைக் கண்டுவிட்ட சுந்தரி பழக்கம் போலே மகளை அர்ச்சித்துவிட்டு புடவையை மாற்றுமாறு வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

ஊர் மக்கள் முழுவதும் விசேஷ வீட்டிலிருக்க, அந்த இருள் நேரத்தில் நிசப்தமான கிராமத்தின் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தது. தெருவிளக்குகள் உயிரிழந்து பல மாதங்கள் ஆன போதும் சரி செய்யப்படாமல் இருக்க, நிலவின் மின்மினி ஒளியில் வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தாள் எழில்.

இரு வீட்டிற்கு இடையிலான சந்தில் ஒரு ஆள் மட்டுமே செல்லும் படியான மிகவும் குறுகலான பாதையில்

திரும்பினாள் எழில். திடீரென அவள் முகத்தில் மஞ்சள் ஒளி வீச பைக்கின் ஹாரன் ஒலிக்கேட்டது. அதிர்ந்தவள் ஒருபுற சுவரில் சாய்ந்தவாறு நிமிர, எதிரே பைக்கில் அமர்ந்திருந்தான் சிவச்சந்திரன்.

சுவரை உரசியவாறு கடக்க முயல, தன்னருகே வந்தவளுக்குக் குறுக்காகக் கை நீட்டினான் சிவா. அவன் கைகள் சுவரில் உன்றியவாறு பாதையை மறித்திருக்க அதைத் தாண்டி எழிலரசியால் செல்ல இயலாது. படபடக்கும் இதயத்தோடு நின்றிருந்த எழிலுக்கு சற்றுத் தொலைவில் தன் பின் யாரோ வருவது போன்ற சத்தம் கேட்க, அவளுக்குச் சிறிது தைரியம் வந்தது.

அத்தியாயம் 09

குங்கும நிறத்தில் பட்டுடுத்தி, பொன் ஆபரணங்கள் மின்ன, தலை நிறைய மல்லிகை சூடி நிலவொளில் பௌர்ணமி நிலவாய் நிறைந்த அழகோடு ஜொலித்தாள் எழில். பிரபஞ்ச அழகு தன் கை தீண்டும் நெருக்கத்தில் நிற்கவே திண்டாடிப்போனது என்னவோ சிவா தான்.

“எப்படி இருக்க எழிலரசி?” எனக் கேட்டவன் பதிலும் அவனாகவே, “நல்லா தான் இருக்க, அதுவும் இந்தப் புடவையும் பூவும் மனசப்பறிக்குது, என்னைக் கொல்லாம கொல்லுது உன் அழகு” என்றான்.

“இப்படியே பேசிக்கிட்டு இருந்த உன்னைக் கொல்லத் தான் போறேன்” என அனலாய் எரிப்பது போல் பார்த்தாள் எழில்.

“இப்போ நான் என்ன கேட்டுட்டேன்னு உனக்கு இவ்வளவு கோபம், என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு தானே கேட்கிறேன்” என்றான்.

“ச்சே, உனக்குக் கொஞ்சம் கூட ரோஷமேயில்லையா? எத்தனை தடவை சொல்லுறது எனக்குக் கதிர் மாமா கூட நிச்சயமாகிடுச்சின்னு. முதல்ல வழிய விடு” எனச் சினந்தாள்.

“அதான் போய்ச் சேர்ந்துட்டானே அந்தப் புண்ணியவான் இன்னும் என்ன எழில்?” என்றவன் சற்றே தன் முகத்தை அவளை நோக்கி நகர்த்தி, “இங்க பாரு, வேற ஒருத்தனும் என்னைத் தவிர உன்னைக் கட்டிக்க முடியாது. மீறி வந்தானாக்கும் அவனுக்கும் கடைசியில கதிரோட நிலைமை தான்” என்றான் இடிபோன்ற குரலில்.

கதிரை குறிப்பிடவும் உடலெல்லாம் பற்றி எரிவது போல் சினம் பற்றிக்கொண்டு வந்தது எழிலுக்கு, அத்தனை நேரம் தன் ஒருகையால் மறுகையை அழுத்திக்கொண்டிருக்க அவள் கோபத்தில் கண்ணாடி வளையல்கள் நொறுங்கியது.

அதில் ஒரு கண்ணாடித் துண்டை வலது கையில் பிடித்தவள் நொடி நேரத்தில் தன் முன் நீட்டியிருக்கும் சிவாவின் கைகளில் மாறிமாறி கீறிவிட்டாள். இருளில் அவன் கருமை நிற கையில் நரம்புகள் செல்லும் வழித்தடம் கூடத் தெரியவில்லை.

அதே நேரம் யாரோ அந்தத் திருப்பத்தை நோக்கி வருவது போன்று காலடி சத்தம் கேட்க, சிவாவின் கைக்காயத்திலிருந்து இரத்தம் கசியத் தொடங்க, வலி தாங்கயியலாது கையைச் சட்டென மீட்டுக்கொண்டான். கையில் இருந்த கண்ணாடித் துண்டை உதறியவள் முறைப்புடனே நடந்து சென்றாள்.

என்றேனும் ஒருநாள் என் கையில் மாட்டுவாய் எழில் அன்று உனக்கு இதை விடப் பலமடங்கு வலியை பரிசளிப்பேன் என மனதில் உறுதிக் கொண்டவன் பைக்கை ஸ்டார்ட் செய்ய எதிரே உதயன் வந்தான். உதயனை கண்டு அதிர்ந்தவன், தன் பின் திரும்பிப் பார்க்க எழில் இல்லை அந்தப் பாதையைக் கடந்திருந்தாள். நிம்மதி பெருமூச்சு விட்டுக்கொண்டவன் எதுவுமே அறியாதது போன்றே உதயனை கடந்து சென்று விட்டான்.

‘வழிய போனாவே வம்பு இழுக்கிறவன் இன்னைக்குச் சும்மா போறான்! அக்காவை கூப்பிட போறானா இருக்கும்’ என நினைத்தாவாறு நடந்தவன் அதன்

பாதையின் முடிவில் வலதுபுறம் ஒரு திருப்பத்தில் திரும்ப அதிர்ந்தான். அந்த இருளில் ஏதோ மனித உருவம் சுவரில் சாய்ந்திருப்பது போன்று நிழல் சிற்பமாய் தெரிந்தது. திரும்பியதும் திடீரென இதை எதிர்பாராதவன் அதிர்ந்து ஒரு நொடி பின் நகர்ந்திருந்தான்.

சற்று அருகே சென்று பார்க்க, சுவரில் சாய்ந்து நின்றிருந்தது எழில் தான் எனக் கண்டுகொண்டான். அவள் முகம் முழுவதும் வலியின் சாயல் நிறைந்திருக்க கண்கள் இரண்டும் சிவந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. பற்களை அழுத்தி கடித்துக்கொண்டிருந்தாள். ஏன் இவ்வாறு இருட்டில் நிற்கிறாள்? பாம்பு எதுவும் கடித்துவிட்டதோ என ஒருநொடி பயந்தே விட்டான் உதயன்.

”எழில் என்னம்மா ஆச்சு?” எனப் பதறியவன் அருகே செல்ல, “ஒன்னுமில்லை” என்றவளின் குரலில் வலி மிகுந்தே இருந்தது. சற்றே குனிந்துப் பார்க்க இடது கையை வலது கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தாள். கைகளில் இருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

தன் கைக்குட்டையை எடுத்து உதறியவாறு அவளிடம் நீட்டவன் “ஐயோ! எவ்வளவு இரத்தம், கையில எப்படி அடிபட்டுச்சு? முதல்ல இதைக் கட்டு” என்றான்.

தன் கைப்பேசியை ஒளிர விட்டவன் மறுகையால் அவள் கைகளைப் பற்ற முயல, கைகளை மீட்டுக்கொண்டவள், “வேண்டாம், நீங்க எங்களுக்கு எந்தச் சேவகமும் செய்ய வேண்டாம், உங்க அக்கா பார்வையில நாங்க கெட்டவுங்களாகவும் வேண்டாம்” என வலியிலும் கோபம் காட்டினாள்.

மறந்திருந்த கதிரின் நியாபகத்தைச் சிவா எழுப்பிச் சென்று விட ஒருபுறம் அவனை நினைத்து கலங்கினாள். மற்றொருபுறம் சிவாவின் மீது கோபம். அபிராமி உரைத்த குற்றச்சாட்டில் கோபம், மேலும் உடல் வலி தரும் எரிச்சல் என அந்தக் கடினமான நொடிகளை கையாளத் தெரியாது வெடிக்கத் தயாரான அணுஉலை போன்று

கொதித்துக்கொண்டிருந்தாள் எழிலரசி. அவளின் கோபம் பொங்கி எழும் ஒவ்வொரு முறையும் தணிக்கும் குளிர்நீராய் வருவது உதயன் தான்.

ஒவ்வொரு முறையும் அவள் கோபத்தைக் கொசுக்கடி போல் தாங்கிக்கொள்வனுக்கு இம்முறை கோபமே வந்துவிட்டது. இந்நிலையிலும் எதற்கு இந்தப் பிடிவாதம்! என நினைத்தவன் “எந்த நேரத்துல வீம்பு பிடிக்கிறதுங்கிற அறிவே இல்லையாடி உனக்கு” என்றான்.

அவனை விட பலமடங்கு சினத்திலிருந்த எழில், “அப்படி என்ன செஞ்சிட்டீங்க நீங்க எங்களுக்கு? யாருமே இல்லாம அர்த்தராத்திரியில போக்கிடம் இல்லாம மரத்தடியில கிடந்த உங்களைப் பாவம் பார்த்து எங்க வீட்டுக்கு கூட்டிட்டு வந்தார் எங்க அப்பா. அவர் செஞ்சது தப்பு தான், மன்னிசிடுங்க. போதும் வழியை விடுங்க” எனக் கத்தியவளின் குரல் மிகவும் வலுவிழந்து இருந்தது.

“அக்காவுக்கு எதுவும் தெரியாதுல, அதனால தான் அப்படிப் பேசிடுச்சு மனசுல வச்சிக்காத மன்னிச்சிக்கோ எழில்” என அவன் உரைக்கும் போதே, அவள் கண்கள் மெல்லச் சொருகி இமை மூடியது.

அதுவரையிலும் சாப்பிடாமல் இவ்வளவு நேரமும் வேலை செய்து விட்டு இருவரிடமும் கத்திய களைப்பு, உடலில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் இரத்தம், அது அறிந்தும் இவ்வளவு நேரம் பார்க்காமல் இருந்தவள் அவன் கைப்பேசி ஒளியில் பார்த்துவிட மறுநொடி மயங்கிவிட்டாள். பொதுவாகவே இரத்தத்தைப் பார்த்தாலே மயங்குபவள் அதிலும் அவள் இரத்தத்தைக் கண்டால் நிலையாக நிற்பாளா?

அவள் மயங்கிச் சரிவாள் என்பதைச் சற்றும் எதிர்பாராத உதய் அவள் கீழே விழுகையில் அனிச்சையாக ஒரு கையால் தாங்கினான். மயங்கிச் சரியும் அளவிற்கு அவ்வளவு பலகீனமாய் இருக்கிறாள் எனில் கைகளைத் தவிர உடலில் வேறேதும் காயம் உள்ளாதா? இந்தக் காயம் எவ்வாறு வந்தது? எனச்

சிந்தித்தபடி காயத்திலிருந்து இரத்தம் வெளியேறாதவாறு கட்டுக்கட்டினான்.

“எழில் எழுந்திரு, எழில் கேட்குதா?” எனக் கத்திப் பார்த்தும், மேலும் கன்னங்களில் தட்டிப் பார்த்தும் அவளிடம் அசைவுகள் இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தான் யாரும் இருப்பது போல் தெரியவில்லை, இருந்தாலும் அந்த இருளில் காண முடியாது.

ஒரு நிமிடம் என்ன செய்வது என யோசித்தான். கண் பார்வையில் தெரியும் தொலைவில், வலது பக்கம் சில அடிகள் வைத்தால் ஒரு மேட்டில் இருக்கிறது அவள் வீடு, யாரையும் அழைத்து வரலாம் எனில் மயங்கியவளை இப்படியே விட்டுச் செல்லவும் இயலாது.

இது என்னடா ரோதனை! அடிபட்டுள்ளது என அறிந்த போதும் விரைவில் வீடு நோக்கிச் செல்லாமல் சுவரில் சாய்ந்து நின்றுக்கொண்டு தன்னிடம் சண்டையிட்டு மயங்கிச் சரிந்துவிட்டாளே இந்த முட்டாள் பெண்! என எரிச்சல் கொண்டான்.

மீண்டும் எழுப்பிப் பார்த்தான் ஆனால் அவன் முயற்சிக்கு பலனே இல்லை. தனது கைப்பேசியில் இருந்து கோவிந்தசாமிக்கு அழைத்தான் ஆனால் அழைப்புகள் ஏற்கப்படவில்லை. மீண்டும் முயற்சித்துப் பார்த்தவன் பின் அழகனுக்கு அழைத்துச் சுந்தரியை விரைவாக வீட்டிற்கு வரச் சொன்னான். விசேஷவீட்டில் இசைத்துக் கொண்டிருந்த பாடல் ஓசையில் அவன் உரைத்தது எத்தனை சதவீகிதம் அழகனின் காதுகளுக்குள் சென்று சேர்ந்ததோ!

மண்டியிட்டு ஒருகையால் தாங்கிக் கொண்டிருந்தவன் மறுகையையும் கொடுத்து மொத்தமாக எழிலை கைகளில் தூக்கிக்கொண்டான். வீடு நோக்கி வந்தவன் திண்ணையில் சுவரோரம் கிடத்திவிட்டு முற்றத்துச் சிமின்ட் தொட்டியில் இருந்து சிறிது தண்ணீர் எடுத்து வரச் சென்றான். அருகே வாளியில் தண்ணீர் இருக்கவே அதில் சிறிது மோர்ந்து வந்து அவள் முகத்தில் தெளித்தான். சற்றே அவளிடம் அசைவு

தெரியவே மீண்டும் வேகமுடன் தண்ணீரைத் தெளித்தான்.

‘ஐயோ இப்போ கண்ணை முழிச்சா இவ்வளவு தூரம் தூக்கிட்டு வந்ததுக்கு ஒரு சாமியாட்டம் ஆடுவாளே! என்னத்தைச் சொல்லி சமாளிக்க?’ அவன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, “எழிலு, அம்மாடி என் கண்ணு..என்னடியாச்சு?” எனக் கத்தியவாறு சுந்தரி உள்ளே வர, பின்னே கோவிந்தசாமியும் வந்தார்.

உதய் நிம்மதி பெருமூச்சு விட்டுக்கொள்ள, அன்னை அலறல் குரல் கேட்டு மேலும் அசைவோடு எழ முயன்றாள். ஓடி வந்து அவள் அருகே திண்ணையில் அமர்ந்த சுந்தரி உதயனின் கையில் இருந்த செம்பைப் பிடிக்கி மேலும் அவள் முத்தில் தண்ணீரைத் தெளிக்க மொத்தமாகக் கண்விழித்தாள் எழில்.

எழுந்தவள் சுவரில் சாய்ந்து அமர, அவளுக்குச் சுந்தரி தண்ணீரை புகட்டிவிட எத்தனிக்க, “அம்மா போம்மா அங்கிட்டு, அறிவு தான் இல்லைனா கண்ணுமா இல்லாம போச்சு உனக்கு? காலையில வாசத் தெளிக்கக் கரைச்சு வைச்சிருந்த சாணித் தண்ணீர்ம்மா இது” எனக் கத்தலோடு ஒரு கையால் தட்டிவிட்டாள்.

‘ஆத்தி இது வேறையா?’ எனக் கேட்ட உதயன் அதிர்ந்தான். ‘நான் தான் மோந்துட்டு வந்தேன் தெரியாதுல்ல, என்னை எத்தனை பாடு படுத்தினால் அனுபவிக்கட்டும்’ என்றது அவளால் நொந்த அவன் மனது.

“யோவ் அந்த வாசல் லைட்ட போடுமையா?” எனக் கோவிந்தசாமியை கத்திய சுந்தரி மகளிடம் திரும்பி புடவை முந்தானையால் அவள் முகத்தைத் துடைத்துவிட்டார்.

கையில் இருக்கும் கட்டைப் பார்த்தவாறு, “என்னடியாச்சு, நீ மயங்கி விழுந்துட்டேன்னு உதய் போன் பண்ணதா அழகன் சொன்னான்” எனப் பதைபதைப்போடு கேட்டார்.

“எல்லாம் உன்னையைச் சொல்லுனுமடி என் தங்கத்தைத் தனியா அனுப்பிட்டு இப்ப வந்து பெருசா கேள்வி கேட்குற?” வாய்ப்பு கிடைத்ததென கோவிந்தசாமி மனைவி இடித்துரைக்க, சுந்தரி பார்த்த ஒரு பார்வையில் அடங்கி விட்டார்.

“சொல்லுறேன் அடிக்காதம்மா, வாசல்கிட்ட வரும் போது பூனை குறுக்கால வந்துச்சா இருட்டுல பயந்து ஓடுனேன சேலை தடிக்கி குப்புற விழுந்துட்டேன். விழுந்த வேகத்துல கை துணி துவைக்கிற கல்லுல அடிச்சு ஒரு டசன் கண்ணாடி வளையலும் நொறுங்கி கீறி விட்டுடுச்சு. திண்ணைக்கிட்ட வரும் போது தான் பார்த்தேன் கையெல்லாம் இரத்தம் அப்படியே மயங்கி விழுந்துட்டேம்மா” என ரகமாய் இழுத்து சிறுபிள்ளைக்குச் சொல்லுவது போலே ஒரு கதையைச் சொல்லி முடித்தவள் உதயனை ஒரு பார்வை பார்த்தாள்.

‘மவனே ஏதாவது உளறுன செத்த’ என மிரட்டிய பார்வையில் வார்த்தை வரவில்லை உதய்க்கு. வெகு சகஜமாய் உண்மை போலே நொடி நேரத்தில் பொய்யுரைப்பதை கண்டு அதிர்ந்த உதயன் தாங்காது நெஞ்சில் கை வைத்து விட்டான்.

அவனிடம் கேட்டிருந்தால் தான் தூக்கி வந்தது முதல் அத்தனை உண்மையும் சொல்லியிருப்பான். அவள் பொய்யுரைப்பதன் காரணம் தெரியாது குழம்பினான்.

பின் மெல்ல தெளிந்தவன், “கோவிந்தமாமா நீ வேணா என் பைக்கை எடுத்துட்டு ஹாஸ்பிட்டல் கூட்டிட்டு போயிட்டுவா” என்றான்.

“ஏன்டா கண்ணாடி வளையல் கீறினதுக்கு எல்லாமா ஹாஸ்பிட்டல் போவாங்க?” எனச் சுந்தரி கேட்க, “அது இரத்தம் வந்திருக்கே அக்கா, காயம் ஆழமா இருக்கலாமில்லை” என்றான் அக்கறையாக.

“அதெல்லாம் இல்லைம்மா லேசான காயம் தான்” என எழில் மறுக்க, “ஆமா இப்ப மட்டும் வாய் பேசு, ஏழுகழுத வயசாகுது இன்னும் பூனைக்கும், இரத்தத்துக்கும் பயந்து மயங்கிக்கிட்டு கிடக்க?” என

வசை பாடிய சுந்தரி, காயத்துக்கு மருந்திட மகளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

தன்னறைக்கு வந்தவன் உடைமாற்றிவிட்டு மொட்டை மாடித் தரையில் பௌர்ணமி வானை வெறித்தவாறு படுத்தான். ‘ஏன் பொய் சொன்னா? ஒருவேளை என்னை யாரும் தப்பா நினைச்சிடக் கூடாதுன்னு பொய் சொன்னாளோ? கண்டிப்பா அப்படி இருக்காது நம்ம மேல ஏற்கனவே காண்டுல இருக்கிறவா நம்மளை காப்பாத்தப் போறாளாக்கும். அவளுக்கு எதுவும் கேட்ட பெயர் வந்திடக்கூடாது, இல்லை சொன்னா சுந்தரி அக்கா அடிக்கும்கிற பயத்துல மறைச்சிட்டா போல.

இருந்தாலும் இவ்வளவு சர்வசாதரணமா நம்புகிற மாதிரி கதை கட்டுகிறாள்! அது மட்டுமா அக்கா ஏதோ என் மேல உள்ள பாசத்துல என்னைத் திட்டுது இவளுக்கு என்னவாம் அதுலையும் ஒரு வார்த்தைய கேட்டுகிட்டு அதற்கும் இவ்வளவு சண்டை பிடிக்கிறாளே! சரி தான் சுந்தரி அக்கா மகள் தான அப்படித் தான் இருப்பாள். டேய் கதிர் நல்லவேளை நீ தப்பிச்சிட்ட இருந்தாலும் இவளை கல்யாணம் பண்ணிக்கப்போற இளிச்சவாயனை நினைச்சா பாவமா தான் இருக்கு’ என முகமறியாத ஒருவனை நினைத்துப் பரிதாபம் கொண்டான்.

அதிகாலையிலே திருமணம் இருக்க, விரைவில் எழுந்து விட்டான் உதயன். ஒளிபரவாத சற்றே இருள் நிறைந்த அதிகாலை நேரம் தேகம் வருடும் மிதமான குளிர் காற்றிற்கு  நடுங்கினான் உதயன். படிகளில் இறங்கி பக்கவாட்டு பாதையின் வழி பின்கட்டு கிணற்றடிக்கு வந்தான்.

‘கண்டிப்பா குளிக்கணுமா? கோவில்ல கல்யாணத்தை வச்சிருக்கானே, கல்யாணத்துக்குப் போகணுமே, குளிக்காம கோவிலுக்குப் போகவும் முடியாது’ என மனதில் புலம்பியவாறு கிணற்றில் நீர் இறைத்து வாளியில் ஊற்றி வைத்தான்.

அதே நேரம் அவனுக்குப் பின்புறம் வடக்கு மூலையில் இருக்கும் பாத்ரூம்பிலிருந்து குளித்து முடித்துத்

தலையில் கட்டிய துண்டுடன் வெளியே வந்தாள் எழிலரசி. புடவையைச் சற்றே உயர்த்தி பிடித்தவாறு ஈரத்தரையில் கவனமுடன் நடந்து வந்ததால் அவள் கொலுசொலிக் கேட்கவில்லை.

வாளியில் இருக்கும் குளிர்ந்த நீரை ஒற்றை விரல் கொண்டு தொட்டுப்பார்த்துக் கொண்டவன், “ஐயோ இவ்வளவு குளிருதே இதுல குளிச்சா நான் கருவாடா விரச்சிட மாட்டேனா! நானெல்லாம் ராத்திரி முழிச்சு பகல்ல தூங்கிற ஆளுடா அழகா, இந்த நடுச்சாமம் நாலுமணி எல்லாம் எனக்கு தூங்க போற நேரம். என்னை போய் ஊரோட இருக்கணும், ஊறுகாய் போடணும்ன்னு கல்யாணம் வீட்டுக்கு வரச்சொல்லிட்டையே அழகா” என வாய்விட்டு புலம்பியவன், இன்னும் விடியாத வானத்தை நோக்கியவாறு, “டியர் சூரிய பகவான் நீங்க எப்போ வருவேள்? கொஞ்சம் சீக்கிரம் துயிலெழுந்து வந்து இந்தத் தண்ணீரை சூடாக்குறேளா?” என ஆதவனை அழைக்க, அனைத்தையும் கேட்டவாறு சிரிப்புடனே உள்ளே சென்றாள் எழில்.

அப்போதே அவளை கண்டவன், ‘ஐயோ இவ்வளவு நேரம் இவ என் பின்னாடியா இருந்தா இதைக் கவனிக்காம விட்டுட்டுனே போச்சு என் மானம் போச்சு! வேட்டி கட்டிக்கிட்டு வந்த அன்னைக்கும் இப்படித் தான் சிரிச்சா! இவ எப்போ சாத்விகமா இருக்கா, எப்போ சந்திரமுகியா இருக்கானே கண்டிபிடிக்க முடியலையே’ மனதில் நினைத்தவாறு மீண்டும் தண்ணீரை தொட்டுப்பார்த்துக் கொண்டே இருந்தான்.

கையில் வாளியுடன் வீட்டிற்குள்ளிருந்து வந்த எழில் அவன் அருகே வாளியை ‘நங்’ என ஓசை எழ வைத்தாள். நிரப்பி இருந்த வாளியிலிருந்து தளும்பி சிறிது நீர் உதனின் காலில் சிதற, அதன் சூட்டில் வெந்நீர் கொண்டு வந்துள்ளாள் என உணர்ந்தான்.

அழகாய் முத்துப்பற்கள் முப்பத்திரெண்டையும் காட்டிச் சிரிர்த்தவாறு, “தேங்க்ஸ் எழில்” என்றான்.

அவளோ தூசி தட்டுவது போல் தன் உள்ளகைகள் இரண்டையும் தட்டிக்கொண்டு, “யார் யாருக்குச் சேவகம் செய்றாங்க?” என நக்கலாகக் கேட்டாள்.

‘ஐயோ அக்கா கொளுத்திப் போட்ட வெடி இன்னும் எத்தனை நாளைக்கு வெடிக்குமோ!’ என நொந்து கொண்டவன் பரிதாபமுடன், ‘என்னை விட்டுவிடேன்’ என்பது போல் பார்த்தான். அதன் அர்த்தம் உணர்ந்தாளோ என்னவோ உதட்டை சுளித்தவாறு திரும்பிச் சென்றுவிட்டாள்.

சமீபகாலமாக அனலின் அச்சாய் மட்டுமே எழிலைப் பார்த்திருந்த உதயனுக்கு இந்தச் சிறுசெயலில் பழைய எழில் மீண்டுவிட்டாள் போன்றிருந்தது. இருந்தாலும் குங்குமமும் சிறு பொட்டும் இல்லாத வெளிர் பிறை நெற்றி கதிரின் இழப்பையும் எழிலின் நிலையம் நொடியில் நியாபகப்படுத்தத் தவரவில்லை. அபிராமி சாடிய போதும் உதயனின் நெஞ்சில் எழிலின் மீதான பரிதாப ஊற்று இப்போதும் ஊறி வந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சிவச்சந்திரனின் கைப்பேசி அழைக்க, அரை உறக்க நிலையில் அட்டன் செய்தான். ராஜாவிடம் இருந்து அதிகாலையிலே அழைப்பு வந்திருக்க, “ஏன்டா ராசா, உன் வீட்டுல சேவல் கூவலையா என்ன? எப்பப்பாரு என் தூக்கத்தைக் கெடுக்கிறதே உனக்கு வேலையா போச்சு” எனப் புலம்பினான்.

“டேய் தாடிமாடு சொல்லுறத நல்லா கேளுடா, உதய் காலையில எங்க இருப்பான்?” என்க, “இன்னைக்கு வினோத் பயலுக்கு கல்யாணம் கோவில் தான் இருப்பான். அக்கா கூட வந்திருக்கா” என்றான்.

“சரி, நம்ம வீட்டுல யார் கல்யாணத்துக்குப் போறா?” என்க, “அம்மா நேத்தே மீனாச்சிபுரத்துல ஒரு விசேஷம்னு போச்சு, அப்பா தான் அக்கா கூடப் போவாரா இருக்கும்” என்றான்.

“ரொம்ப நல்லதா போச்சு, நீயும் அவங்களோட கிளம்பி போ, நான் வக்கீல் அங்கிளை கூட்டிட்டு வரேன். நான்

வர வரைக்கும் உதய் கிளம்பிடாம பார்த்துக்கோ அது போதும்” என்றான்.

“ஏன்டா என்ன செய்யப்போற?” எனப் பதறி எழுந்து கேட்க, “கேள்வி கேட்காம சொல்லுறதை செய்டா நான் வந்து சொல்லுறேன்” என்ற ராஜா அழைப்பை கட் செய்துவிட்டான்.

‘என்னவோ பண்ணுங்க எனக்கென்ன? எப்படியும் எழில் வருவா அது போதும் எனக்கு’ என நினைத்து குஷியோடு குளியலறை நோக்கிச் சென்றான் சிவச்சந்திரன்.

அத்தியாயம் 10

கதிரவன் மெல்ல துயிலெழும் காலை நேரம். கந்த சஷ்டி கவசப் பாடல் இசைக்க, சாம்பிராணி புகை வாசம் காற்றோடு கலந்து கோவில் முழுவதும் நிறைந்திருந்து. ஊருக்கு மையத்தில் இருக்கும் சற்றே பழமையான கோவில் முருகர் கோவில். முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டதால் காலங்கள் தாண்டியும் கம்பீரமாய் இருந்தது. கோவிலின் முன்னே மரத்தால் செய்த பெரிய தேரும், பின்னே வற்றாத தெப்பமும் உண்டு. கோவில் மண்டபத்தில் கல்யாணமேடை அமைத்து அலங்கரித்திருந்தனர்.

ஒளிவீசும் பொன்னும், பளபளக்கும் பட்டும் அணிந்து ஊர் மக்களும் உறவுகளும் வரத் தொடங்கினர். சரசரக்கும் பட்டுப்பாவாடையும் கொலுசொலியும் இசைக்கச் சிறுமிகளும், சிறுவர்களும் ஓடி, ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தனர். சிலர் தாம்பூலத்தில் இருக்கும் கற்கண்டு, சாக்லேட், வாழைப்பழங்கள், ரோஜாப்பூக்களைத் தூக்கிக்கொண்டு ஓடினர்.

காலை ஆறுமணி வேலையாட்கள் பால் கறந்து வந்து, சமையல் வேலை மற்றும் வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருக்க, எழிலரசியைப் பார்க்கும் ஆர்வம் தானோ என்னவோ முதல் ஆளாகத் தயாராகி வரவேற்பறையில் காத்திருந்தான் சிவச்சந்திரன்.

அங்கு ஓடி விளையாண்டு கொண்டிருந்த அக்கா மகள் ப்ரதிக்ஷாவை தூக்கிச் சுற்றியவன், “அம்முக்குட்டி எங்க

எங்கக்கா? இன்னுமா ரெடியாகலை?” எனக் கேட்டான். இல்லை என்பது போல் தலையாட்டிய சிறுமி அவன் மீசையைப் பிடித்திழுத்தாள்.

வலியில் முகம் சுருக்கியவன், “எதுக்குடி மீசை பிடிச்சிழுக்குற?” என்றான் அதட்டலாக. “அதுவா மாமா, நான் போன தடவை ஊருல இருந்து வந்திருந்த போது இவ்வளவு தான் இருந்து, இப்போ இவ்வளவு பெருசா இருக்கே அதான் வடிவேலு மாதிரி டம்மி மீசையானு செக் பண்ணேன்” என்றாள் கைகளால் அளந்தவாறு.

அவள் கைகளைத் தட்டிவிட்டு, தடவிக் கொண்டவன், ‘நங்’ என அவள் தலையில் குட்டினான். அந்தச் சிறு வலியையும் தாங்க முடியாமல் பெரும் குரலில் கத்தி வீட்டிலிருக்கும் அனைவரையும் ஒன்று கூட்டினாள் ப்ரதிக்ஷா.

“என்னடா பண்ண என் பேத்தியை?” என்றவாறு ரெங்கநாதன் அறையிலிருந்து வர, “ஆரம்பிச்சிடீங்களா உங்க சண்டையை?” என்றவாறு அபிராமி சமையலறையிலிருந்து வந்தாள். ரெங்கநாதன் பேத்தியை வாங்கிக்கொள்ள, சிவாவிடம் காஃபியை நீட்டினாள் அபிராமி.

“அதெல்லாம் வேண்டாம், கிளம்பிடீங்கல வாங்க கல்யாணத்துக்குப் போலாம்” எனச் சிவா அழைக்க, “இன்னும் மூணு நாலு மணி நேரமாகும் அது வரைக்கும் சாப்பிடாம இருக்கப் போறீயா? இந்தா இதை முதல்ல குடி” என்ற அதட்டலுடன் கொடுத்தவள் தந்தைக்கு எடுத்து வர சமையறைக்குள் சென்றாள்.

ராஜா வரும் செய்தியை தந்தையிடம் தெரிவிக்க, “ஐய்யா மாமா வராங்க, க்ருஷ்மியும் வருவாள்ல தாத்தா. ஐய்..ஜாலி..ஜாலி” எனக் குதூகலித்தாள் சிறுமி. பகையோ பங்கிடும் எண்ணமோ சிறிதுமின்றிப் பாசம் மட்டுமே நிறைந்திருந்தது அந்த மழலைகளிடம். சிவா, உதய், ராஜாவும் சிறுவயதில் இதே போன்று இருந்தவர்கள் தான்!

முக்கிய அழைப்பு ஒன்றைப் பேசிவிட்டு வருவதாக உரைத்த ரெங்கநாதன் பிள்ளைகள், பேத்தியை மட்டும்

முன்னே அனுப்பி வைத்தார்.

இவர்கள் வரும் முன்னே அபிராமியின் கணவர் செல்வராஜ் வந்துவிட, வாசலிலே வரவேற்று நலம் விசாரித்துப் பேசிக் கொண்டிருந்தான் உதய். அப்போதே இவர்களும் காரில் இருந்து இறங்க, தந்தையைக் கண்ட குஷியில் குழந்தை முன்னே செல்ல, அபிராமியும் பின்னே சென்றுவிட்டாள்.

சிவா மட்டுமே தனியாக நின்று கொண்டிருந்தான். அபிராமிக்கு திருமணம் முடித்து இத்தனை வருடங்களான போதும் செல்வராஜோடு உதய் அளவிற்குச் சகஜமாகச் சிவா பேசியதில்லை ஆனால் மரியாதை கொண்டுள்ளான். ஆகையாலே அக்காளின் கணவரின் முன் உதயனிடம் வம்பு வேண்டாமென்று நினைத்தவன் கோவிலின் பின்புறம் குளக்கரையோரம் சென்று அமர்ந்தான்.

அங்கு ஏற்கனவே சில இளைஞர்கள் கோவில் படிகளில் அமர்ந்து க்ரூப்பாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டும் தங்களுக்குள் கேலி செய்து சிரித்துக்கொண்டும் இருந்தனர். சற்றே உற்றுப்பார்த்தான் தங்கள் ஊரார் போன்று தெரியவில்லை. பெண் வீட்டினாராக இருக்கும். அதில் ஒருவனின் முகம் எங்கோ பார்த்து போன்று இருக்க யோசித்தவாறு அமர்ந்திருந்தான் சிவா.

அதே நேரம் குளக்கரையோரம் புதிதாக ஒருவன் வந்து, “டேய் மச்சான் வாங்கடா பொண்ணழைச்சிட்டு வாராங்க வெடி போடலாம்” என அழைத்தான்.

அந்தக் கூட்டத்தில் ஒருவன் மற்றொருவனிடம், “டேய் அருண், உன் ஆளு எழிலும் வாராலே” என்றான். அந்தக் குரல் சிவாவின் காதுகளில் விழ, அவன் யாரென்ற நினைவு வந்தது. எழுந்தவன் சட்டென அவர்களின் வழியை மறித்து நின்றான்.

சிவாவை அருகே பார்த்த பின்னே அருணுக்கு அடையாளம் தெரிந்தது. ஏற்கனவே அடி வாங்கியவன் ஆகையால் அவனைக் கண்டதும் உடல் முழுவதும்

வெடவெடக்க பயத்தில் முகம் வெளிறிப்போய் பார்த்தான் அருண்.

“ஏய் நீ அருண் தானே? நீ என்னடா செய்யிற எங்க ஊருல?” என்றான் மிரட்டலாக.

“அது..து..துளசி எனக்கு ஒன்னுவிட்ட சித்திப்பொண்ணு அதான் கல்யாணத்துக்கு வந்தேன்” என்றவனுக்கு தொண்டை தாண்டி வார்த்தைகள் வராது பயத்தில் வாய் குளறியது.

“நீ இன்னும் அதே நினைப்போடு தான் எழில் பின்னாடி சுத்திக்கிட்டு இருக்கியா?” எனச் சூடாகக் கேட்டவன் கோபமுடன் அவன் சட்டையைப் பற்றியிருந்தான்.

அருணோ உயிர் பயத்தில் மறுப்பாகத் தலையசைக்க அருகில் இருந்தவன், “நீங்க எதுக்கு இதெல்லாம் கேட்கிறீங்க? நீங்க என்ன அந்தப் பொண்ணுக்கு சொந்தமா?” எனக் குரல் உயரக் கேட்டான்.

ஒற்றைப் புருவம் தூக்கி ஓரப் பார்வையில் அவனை முறைத்தவன், கோபமுடன் அவனுக்கும் சேர்த்து அருணின் கன்னத்தில் மாறிமாறி அறைந்தான். ஒவ்வொரு அடியும் இடி போன்றே தாக்க, கன்னங்கள் வீங்கி, உதடு கீறி இரத்தம் வழிய நின்றான் அருண். சிவாவின் தேகப் பலத்தின் முன் சிறுவனான அருணால் எதுவும் செய்துவிட முடியாது.

“உசுரு பயமிருந்தா ஒரு நிமிஷம் கூட இங்க இருக்கக்கூடாது பின் வாசல் வழியா ஓடிடுலே, அப்பறம் எழில் பெயர் கூட இப்போ உன் நினைப்புல இருக்காதுன்னு நினைக்கிறேன்” என மிரட்டலாகக் கேட்க, அதற்கும் தலையாட்டியவன் சிவா விட்ட நொடி ஓடிவிட்டான். அவன் நண்பர்கள் கூட்டமும் ஒருபாதி முன் வாசல் நோக்கியும் மறுபாதி பின் வாசல் நோக்கியும் ஓடினர்.

வேட்டியை இறக்கி விட்டவன் கைகளை உதறியவாறு கோவில் வாசலுக்கு வர, எழிலுடன் சிரித்துப் பேசியவாறு உதயனும் உள்ளே செல்வதைப் பார்த்தான். பார்த்த சிவாவிற்கு இடது நெஞ்சின் ஓரம் சட்டை கிழிய இதயமே வெடித்துப் புகை வந்தது.

‘இப்போ தான் ஒருத்தனை வெளுத்துட்டு வந்தேன் அடுத்து இவனா? முருகா’ எனக் கோவில் கோபுரத்தை பார்த்து வேண்டுதல் வைத்துவிட்டு உள்ளே சென்றான்.

சிவா பக்கவாட்டில் நின்று பார்த்ததால் எழிலுக்கும் உதயனுக்கும் இடையில் இருக்கும் சிறுமி கலைவாணியைக் கண்டிருக்க வாய்ப்பில்லை. உதயன் பேசிச் சிரித்ததும் கலைவாணியிடம் தான்.

மாப்பிள்ளை அழைப்பு, மணப்பெண் அழைப்பு முடிந்து இருவரும் மேடையில் அமர்ந்திருக்க ஐயர் சம்பிரதாயச் சடங்குகளைச் செய்து கொண்டிருந்தார். அப்போதே ரெங்கநாதன் வந்து சேர்ந்தார்.

சர்வ அலங்காரத்தில் ஜரிகைப் பட்டில் அழகின் உச்சமாய் மின்னும் நட்சத்திரமாய் ஜொலித்துக் கொண்டிருந்தாள் எழிலரசி. அந்த அழகில் ஈர்க்கப்பட்ட சிவாவின் விழிகள் மீளவே இல்லை. யார் குறித்தும் கவலையின்றி அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

திருமணம் இனிதே நிறைவடைய மணமக்கள் முருகனை வணங்கிக் கொண்டிருந்தனர். பின் மாப்பிள்ளை வீட்டிற்கு வீதி வழியாக அழைத்துச் செல்லப்படுவர், அங்கு தான் விருந்தும். உதயனை எங்கும் செல்ல விடாது பார்த்துக்கொள்ளும் படி ராஜா கூறியது சிறிதும் சிவாவின் நினைவில் இல்லை, அவன் வேலையிலே அவன் கண்ணாக இருக்க, ரெங்கநாதன் தான் ராஜாவை எதிர்பார்த்திருந்தார்.

ஊர் மக்கள் சிலர் மணமக்களோடு கிளம்ப, அதில் பெரியவர்கள் சிலரை மட்டும் இருக்கும் படி நிறுத்தி வைத்தார் ரெங்கநாதன். அழகனோடு உதயன் கிளம்ப இருந்த நேரம் சரியாக வழக்கறிஞருடன் வந்து சேர்ந்தான் ராஜா.

உதயனை நிறுத்தியவன் மீண்டும் உள்ளே அழைத்து வந்தான். அழகனுக்கும் பெரியமீசைக்கும் பஞ்சாயாத்து கூட இருப்பத்தின் காரணம் தெரியும் ஆகையால் பயம் பிடித்து ஆட்டியது. அனைவரும் என்னவோ ஏதோ என்ற படபடப்பில் கூட்டமாக

கூடினர். பஞ்சாயத்து பேசும் ஊர் பெரியவர்கள் பெரியமீசை மற்றும் சிலரின் முன் உதயனை நிறுத்தினான் ராஜா.

“இந்த ஊர்காரங்க எல்லாருக்கும் எங்க குடும்பத்தைப் பற்றி நல்லாவே தெரியும். எங்க சித்தி இறக்கவும் இவனைத் தூக்கி வளர்த்தது எங்க அம்மா தான். சொந்தபிள்ளைக்களை விட அதிகப் பாசம் காட்டி வளர்த்தாங்க. இவனுக்குக் காலேஜ் பீஸ் கட்டுனது, அவன் சாப்பிடுற சாப்பாடு நல்லாயிருக்கான்னு கூடப் பார்த்து பார்த்து செஞ்சது எங்க அப்பா. எங்களுக்கு என்ன வாங்கினாலும் அதே மாதிரி அவனுக்கும் வாங்கித்தருவாரு அந்த அளவுக்கு வித்தியாசம் காட்டாம வளர்த்திருக்காங்க.

ஆனால் இவன் அந்த நன்றியெல்லாம் கொஞ்சம் கூட இல்லாம எங்கப்பாவை எதிர்த்து நிற்கிறான். கேட்ககூடாதவங்க பேச்சைக் கேட்டு தன்னிச்சையா முடிவுகள் எடுக்கிறான், இது நியாயமான்னு சபையில இருக்குற பெரியவங்க தான் கேட்கணும்” என ராஜா குற்றம் வாசிக்க, அனைவரும் புரியாது தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டனர்.

உதயனோ அமைதியாகச் சபையில் நிற்க, “ராஜா தம்பி, அப்படி என்ன செஞ்சிட்டாருன்னு கொஞ்சம் தெளிவா தான் சொல்லுறது அப்போ தானே மேல பேச முடியும்” என்றார் பெரியவர் ஒருவர்.

“உங்க எல்லாருக்கும் ரொம்ப நல்லா தெரியும், இன்னைக்கு வரைக்கும் எங்க அப்பா இந்த ஊருக்காக என்னவெல்லாம் செஞ்சிருக்காருன்னு. பதவியில இருந்ததால மட்டும் அதைச் செய்யல, ஊருக்குள்ள புதுசா ஒரு பள்ளிக்கூடம் கட்டும்போது கூடத் தயங்காம ஊருக்காக எங்க நிலத்தைக் கொடுத்தவர். போன வருஷம் கூட ஆத்துல இருந்து குடிதண்ணீர் பைப்லைன் போடும் போது எங்க நிலத்து வழியா போகட்டும் போட்டுக்கோங்கன்னு கொடுத்தவர்.

எந்த நலத்திட்டமா இருந்தாலும் அரசாங்கத்தைக் கூட எதிர்பார்க்காம சொந்த செலவுல ஊருக்காகச் செய்கிறவர், யாரால இல்லைன்னு மறுக்க முடியும்

சொல்லுங்க. பல வருஷங்களா இங்க தேர்தல்ன்னு ஒன்னு நடந்தாலும் எங்க அப்பா தான் ஊர்த்தலைவரு, யாரும் எதிர்த்ததில்லை, ஆனால் இவனை வளர்த்ததுக்கு நல்ல கைமாறு செஞ்சிட்டான். எங்கப்பாவை எதிர்த்து வேட்புமனு கொடுத்திருக்கான், இது சரியா?” எனக் கோபமுடன் உதயனை விரல் நீட்டி குற்றம் சாட்டினான் ராஜகணபதி.

ஊருக்குள் நலத்திட்டங்கள் செய்தாலும் அதில் தனக்கான இலாபத்தைப் பார்த்துக்கொண்டே செய்வார் ரெங்கநாதன். அதையே ராஜா தங்களுக்குத் சாதகமாகிக்கொண்டு பேசினான்.

கேட்டுக் கொண்டிருந்த வழக்கறிஞர், நான் கூட நீதிமன்றத்துல இப்படிப் பேசுனதில்லையடா என வியந்துப் பார்க்க, ஊர் மக்கள் அனைவரும் பெரும் அதிர்வில் இருந்தனர். உதயன் இவ்வாறு அவன் வீட்டார்களை எதிர்த்து நிற்பான் என்பதெல்லாம் யாரும் எதிர்பார்க்காத ஒன்று! ரெங்கநாதன் வெகுசாதரணமாக அமைதியுடன் நிற்க, சிவாவிற்குச் சினம் பொங்கியது. அபிராமியும் வாய்யடைத்து போய் நின்றாள்.

“ஏன் அங்கிள், ஒரு சாதாரண ஊராட்சி தேர்தல் அதுல நான் என் பெரியப்பாவுக்கு எதிரா நிற்க கூடாதுன்னு சட்டத்துல எழுதியிருக்கா என்ன?” என வழக்கறிஞரைப் பார்த்து நிதானமுடன் அமைதியாகக் கேட்டான் உதய்.

அவரோ மறுப்பாகத் தலையசைக்க, ரெங்கநாதன் உதயனிடம் திரும்பி, “வளர்த்த கிடா மார்புல முட்டுனாப்புல நெஞ்செல்லாம் வலிக்குதுடா. ஏன் உதய், இது தான் உன் ஆசைன்னு என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிருக்கலாமே? நீ சுயட்சையா நிற்க தேவையில்லை, எங்க கட்சியில பேசி உனக்காகச் சீட் வாங்கி உன்னை ஜெயிக்கவும் வச்சிருப்பேனேடா. இப்பவும் ஒன்னுமில்லை நானே வாபஸ் வாங்கிக்கிடுறேன், உன்னை உயர வைச்சு அழகு பார்க்குறதுல தான் என் சந்தோஷம்டா” என்ற ரெங்கநாதன் கண்கலங்கி நெஞ்சில் கை வைத்தார்.

சட்டென அபிராமி தந்தையைத் தாங்கிப்பிடித்து அருகே அமர வைக்க, அவள் மகள் அழத் தொடங்கிவிட்டாள். செல்வராஜ் மகளைத் தூக்கிக்கொண்டு சற்று தள்ளிச்சென்றார். எழிலும் அவள் பெற்றோர்களுடன் உதயனுக்குப் பக்கவாட்டில் நின்றிருந்தாள். பார்த்திருந்த அத்தனை பேரும் நெகிழ்ந்தனர், சிலர் உதயனின் முடிவு தவறு என்றும் நினைத்திருந்தனர். உதயனும் ஒரு நொடி தன் பெரியப்பாவின் கண்ணில் கண்ணீரைக் கண்டு நெஞ்சுருகிப் போனான்.

தந்தையின் கலக்கம் காண கொதிக்கும் எரிமலையின் மீது பெட்ரோல் ஊற்றியது போன்று அடக்க முடியாத சினம் சிவாவிற்குள் எழுந்தது. உதயன் நெகிழ்ந்து நின்ற நொடியில் எதிரே நின்ற சிவா சட்டென அவன் மேல் சபையோர் பார்க்க கை நீட்டினான். உதயனின் சட்டையைக் கழுத்தோடு சேர்த்து பிடித்தவன் அவன் முகத்தில் மாறி மாறிக் குத்தினான். உதயன் தடுக்க முயன்றானே தவிர எதிர்க்க முயலவில்லை.

அதற்குள் அருகில் இருந்தவர்கள் அழகன், ராஜா மற்றும் பெரியவர்கள் சிலர் சேர்ந்து சிவாவையும் உதயனையும் பிடித்து இழுத்தனர். ராஜா தன்னோடு அணைத்தவாறு சிவாவை பிடித்து இழுக்க, அவன் கைகளுக்குள்ளும் துள்ளிக்கொண்டிருந்தான் சிவா.

“விடுண்ணே, இன்னைக்கு நானா அவனான்னு பார்க்கணும். என்ன தைரியம் அவனுக்கு நம்ம அப்பாவை எதிர்ந்து நிற்க? கொஞ்சமாவது நன்றியுணர்வு இருக்காடா உதய்? நாயை விடக் கேவலாமா போயிட்ட நீ?” எனத் துள்ளலோடு கத்திக் கொண்டிருந்தான். மேலும் சிலர் சேர்ந்து மொத்தமாகச் சிவாவை கூட்டத்தை விட்டுத் தள்ளிக்கொண்டு வெளியே சென்றனர்.

கன்றிச் சிவந்த கன்னமும், உதட்டோரம் சில இரத்தத்துளிகளோடும் நிமிர்ந்த உதயனை பக்கவாட்டில் நின்று பார்த்துக் கொண்டிருந்த எழில் கலங்கினாள். அண்ணனும் தம்பியும் அடித்துக் கொள்கிறார்கள் என அவள் எதிர்பார்த்தது தான்,

அவள் மகிழ்ந்திருக்க வேண்டிய  நிமிடங்கள் ஆனால் என்னவோ உதயனின் மீது அனுதாபம் தான் பெருகியது. மனம் ஒருநிலையில் நில்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. மெல்ல கண்கள் சொருகுவது போல் இருக்க, சுந்தரியின் தோள்களைப் பற்றுதலாய் பிடித்துக்கொண்டு பார்வையைத் திருப்பினாள்.

சிவா உரைத்த கீழான வார்த்தையில் உதய் மணமொடிந்து நிற்க, “இது உங்க குடும்ப விஷயம், இதுல நாங்க சொல்லுறதுக்கு எதுவுமில்லை. ஒரு குடும்பத்துக்குள்ள இருந்துக்கிட்டு இப்படி எதிர் எதிரா இருந்தா எப்படிப்பா? ஒரு ஆள் விட்டுக்கொடுத்துப் போனா தான் உங்க உறவு ஒடையாம இருக்கும்” என்றார் பெரியவர் ஒருவர். அதில் உதயனை விட்டுக்கொடுக்கும் படியான மறைமுகச் செய்தி தான் இருந்தது.

அனைவரும் உதயனின் பதிலை எதிர்பார்த்திருக்க, எழியின் இதயம் மேலும் எதிர்பார்போடு படபடத்தது. உதய் ஒன்றும் பேசவில்லை பிடிவாதமாக கைக்கட்டிக்கொண்டு நின்ற நிலையிலே தலையை மட்டும் மறுப்பாய் அசைத்தான்.

நிதானமாக இருக்கும் ராஜாவிற்கே கோபம் வர, “யார் சாம்பாத்தியத்தை யார் வீணடிக்க? நீ தேர்தல்ல நின்னு ஊதாறித்தனமா செலவு செய்ய தான் இத்தனை வருஷம் படாதபாடுப்பட்டு நாங்க சம்பாதித்து வைச்சிருக்கோமா? ஒரு நாளும் நீ இங்க உழைச்சதில்லை எங்க கஷ்டம் உனக்கு எங்க தெரியப் போது? இப்போ நீ மட்டும் தேர்தல்ல நின்ன மொத்த சொத்துல இருந்தும் உனக்கொரு துரும்பு கூடக் கிடைக்காதுலே” என்றான்.

இம்முறை என்ன சொல்வானோ என எழில் மேலும் எதிர்பார்போடு இமைக்க மறந்து பார்க்க, உதயன் சிறிதும் அசைந்து கொடுக்காது, “எனக்கு எதுவும் வேண்டாம்” என்றான்.

“அடேய் நீ என்ன கிறுக்கனாலே, உன் பங்குல பாதியாவது கேளு” அழகன் காதுக்குள் முணுமுணுக்க,

உதயன் மௌனமாக நின்றான்.

“கடைசியா கேட்கிறேன் உதய் நல்லா யோசிச்சி சொல்லு, அப்பாவை எதிர்க்க வேண்டாம்டா” என ராஜா கேட்க, வழக்கறிஞர் பக்கம் திரும்பிய உதய், “அங்கிள் நான் எதுல சைன் பண்ணணும்?” என்றான். ஏனெனில் ராஜா வழக்கறிஞரோடு வருகையிலே அவன் எதிர்பார்ப்பை புரிந்துக்கொண்டான் உதயன்.

எழிலுக்குக் கர்வம் சூடிக்கொண்டது போன்றிருந்தது அந்த நொடி. பார்த்திருந்த சிலர் உதயனை ஏமாளியாய் நினைக்க, சிலர் அனுதாபம் கொண்டனர். அவர்கள் குடும்ப விவகாரம் என்கையில் எதுவும் செய்ய இயலாது அழகன் முதல் அனைவரும் அமைதி காத்தனர்.

வழக்கறிஞரின் அருகே சென்றவன் அவர் நீட்டிய பத்திரங்களில் கையெழுத்திட எத்தனிக்க, “மாப்பிள்ளை கொஞ்சம் பொறு” என உள்ளே வந்தார் செல்வராஜ். அவருக்கும் ராஜாவின் தந்திரங்கள் புரிந்திருந்தது.

“என்னங்க மச்சான் இது? அவன் அப்பாவோட உழைப்புக்கு அவன் பங்கை கொடுக்கணுமே?” என ராஜாவை பார்த்துச் செல்வராஜ் கேட்க, “இது எங்க குடும்ப விவகாரம் இதுல நீங்க நாட்டமை பண்ணத் தேவையில்லை” எனப் பட்டென்று வார்த்தையை விட்டுவிட்டான் ராஜா. தான் நினைத்தது நிறைவேறும் வேளையில் செல்வராஜ் குறுக்காக வர எரிச்சல் கொண்டான் ராஜா.

அவர் அபிராமியை பார்க்க, அவள் ராஜாவை பார்த்து, “அண்ணா..!” எனக் கண்டிப்புடன் அழைக்க, அதற்குள் “அபி நீயும் மாப்பிள்ளையும் கொஞ்சம் அமைதியா இருங்க” என்றார் ரெங்கநாதன்.

பேசவேண்டாம் என்ற பின் மாப்பிள்ளை என்ற உறவு ஏன்? சபையில் அத்தனை பேர் முன்னிலையில் ராஜா வெளிபடையாகச் சொல்லியதை விட மாமானார் சொல்லியதே பெரும் மரியாதைக் குறைவாகத் தோன்றியது செல்வராஜ்க்கு. அவமானம் கண்ட பின்

தன்மானம் சீண்ட நொடியும் தாமதிக்காது சினத்துடன் அபிராமியும் குழந்தையும் அழைத்துக்கொண்டு சென்றார்.

உதயனை ஒதுக்குவதில் கோபமாக இருந்த அபிராமி தன்னவனைத் தள்ளி நிற்கச் சொன்னதும் மேலும் கோபம் கொண்டு விலகிச் சென்று விட்டாள்.

அபிராமி கோபமாகச் சென்றது உதயனுக்கு மேலும் கசப்பைத் தர, அமைதியாகக் கையெழுத்திட்டவன் கோவிலை விட்டு வெளியேறினான். மறையும் அவன் பாதச்சுவட்டை எழிலரசியின் பார்வை தொடர்ந்தது.

அத்தியாயம் 11

கதிரின் இழப்பில் இருந்து அத்தனையும் ஒருமுறை நினைத்துப் பார்த்தான். பெற்றவர்கள் இல்லை, உயிர் நண்பன் இல்லை, நேற்றுவரை இருந்த உடைமைகள் இல்லை, உரிமையான உறவுகள் இல்லை அப்படியிருந்தும் அவன் கலங்கவில்லை. ஆனால் ஒரு விரக்தி, தனிமை நெஞ்சை அழுத்தியது. தனக்கான தனித்துவமான அன்பிற்கான ஏக்கம் இன்றும் பரவியிருந்தது.

அவன் சொத்துக்களை வேண்டாம் என்றதிற்கு காரணம் ராஜாவிற்கு அதன் மீதிருக்கும் ஆசைகளை அறிந்திருந்ததால். சொத்துக்கள் என்பது பொருள்செல்வம் மட்டுமல்ல, அவன் உரிமைகள். பரம்பரை சொத்துக்கள் என்பது அந்த பரம்பரையில் வந்தவன், அந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற அடையாளத்தைத் தருவது. தந்தைக்கு பின் தான் என்ற அடையாளம் தற்போது இல்லாமல் போனது. தெரிந்தே இழந்திருந்தான் இல்லையில்லை விட்டுக்கொடுத்திருந்தான்.

கதிரின் ஆசைகளை நிறைவேற்ற முடியுமா என்று எழில் கேட்ட வார்த்தைகளை செய்து முடிக்கச் சொல்லி பெயரறியாத விசை உந்த, தேர்தலில் அவன் பெரியப்பாவை எதிர்ந்து நின்றான். எதிர்த்து நின்றானே தவிர அவர்களை எதிரியாக நினைக்கவில்லை.

சிறுவயதிலிருந்து அவர்களோடு பெரிதாக ஒட்டுதல் இல்லை தான், ஆனால் இன்று மொத்த குடும்பமும் அவனை எதிரியாகப் பார்ப்பதை ஏற்க முடியவில்லை. சொத்துக்களை விட்டுக்கொடுத்தால் ராஜாவேணும் விலகிச் செல்வான் என எதிர்பார்த்தான்.

ராஜா சொத்துக்களில் அவனை எதிரியாக நினைக்க, ரெங்கநாதன் அரசியலில் அவனை எதிராக நினைக்க, சிவா காதலில் அவனை எதிரியாக நினைத்தான். ஆக மொத்த குடும்பத்திற்கும் அவனை எதிரியாக்கி வைத்து விதி வேடிக்கைப் பார்க்கத் தொடங்கியது.

நடுக்கூடத்தில் முந்தியை விரித்து நெஞ்சில் அடித்து அழுது கொண்டிருந்தார் பரமேஸ்வரி. அபிராமி தன் வீட்டிற்குச் சென்றதும் முதல் வேலையாக அன்னைக்கு அழைத்து ஆதங்கத்துடன் நடந்த அனைத்தையும் உரைத்து, இனி அவளுக்கும் அவர்களுக்கும் எந்த உறவுமில்லை என்று வைத்துவிட்டாள்.

தொலைக்காட்சியை பார்த்தவாறு சோஃபாவில் அமர்ந்திருந்தான் சிவச்சந்திரன். உதயனுக்கான அன்னையின் அழுகுரல் எரிச்சலை அதிகரிக்க மேலும் தொலைக்காட்சியின் சத்தத்தை அதிகரித்தான். ‘அடேய் ராஜா செய்யுறதையும் செஞ்சிட்டு வீட்டுக்கு வந்தா அம்மாகிட்ட வாங்கிக்கட்ட வேண்டியிருக்கும்னு வீட்டுக்கு வராமையே தப்பிச்சிட்டையேடா’ என நினைத்தான்.

பரமேஸ்வரியின் புலம்பல் மேலும் அதிகரிக்க, தொலைக்காட்சியை அணைத்து விட்டு அவர் அருகில் வந்து தரையில் அமர்ந்தான் சிவா.

“எம்மோவ் உசுரோட இருக்குற உம்புள்ளைக்கு ஒப்பாரி வைச்சு ஏன் இப்படி உடம்பை கெடுத்துக்கிடுற?” என்றான்.

அவன் புறம் சீற்றமாக திரும்பியவர் “பேசாதலே நீ, பேசின பல்லைத் தட்டிப்புடுவேன்” என்றார் மிரட்டலாக.

வந்த சிரிப்பை இதழுக்குள் சிறைப்படுத்திக்கொண்டு, “அங்கையும் நான் எதுவும் பேசலையேம்மா.

கொத்தமல்லிக்கட்டை தூக்கி எறியிற மாதிரி கொத்தா தூக்கி ஏறிச்சிட்டானுங்க. அங்க பேசினதெல்லாம் ராஜாவும் அப்பாவும் தான்” என்றான். அப்போதும் பரமேஸ்வரியின் புலம்பல் நின்றபாடில்லை.

“சரி விஷேசத்துக்கு போனியே, மீனாச்சிபுரத்துல எத்தனை பொண்ணுங்க இருக்குன்னு விசாரிச்சிருப்பியே? எனக்கு பொண்ணு எதுவும் பார்த்தியா?” என்றான்.

முறைப்போடு அவன் புறம் திரும்பியவர் முந்தானையில் மூக்கை கசக்கியவாறு, “நீ செஞ்சிட்டு வந்திருக்கிற வேலைக்கு உனக்கு கல்யாணம் ஒன்னு தான் கேடு, கல்யாணம்னு வாயத்திறந்த உரிச்சி உத்தரத்துல தொங்கவிட்டுவேன் பார்த்துக்கோ” என்றார் பட்டாசாக படபடத்து.

அதே நேரம் உள்ளே வந்த ரெங்கநாதன், “ஈஸ்வரி என்ன சத்தம்? தெருமுக்கு வரைக்கும் கேட்குது?” என்றார் அதட்டலாக.

‘அப்பாடா அப்பா வந்து காப்பாத்திட்டார்’ என சிவா மனதில் நினைத்துக்கொண்டு பெருமூச்சோடு விலகிச்சென்றான்.

பெற்றோர்கள் இல்லாத உதயனுக்கு அந்த இடத்தில் தாம் நின்று நல்லது செய்ய வேண்டும் அதை விடுத்து அவனுக்கு உரிமையான சொத்தையும் பறித்துவிட்டு, தங்கள் மாப்பிள்ளையையும் சபையில் குறைவாக பேசி விட்டீர்களே என கணவரோடு வாதடி சண்டையிட்டார் பரமேஸ்வரி.

“நம்ம மாப்பிள்ளை தான் ஆனால் நமக்கு சாதகமா பேசலையே அவரு, நாங்க எல்லாம் காரணமா தான் செஞ்சிருக்கோம், சும்மா புலம்பிக்கிட்டு கிடக்காம போய் சாப்பாட்டை எடுத்து வை போ” என ரெங்கநாதன் அதட்டினார்.

அதற்கெல்லாம் அசராத பரமேஸ்வரி, “ராக்காயி வேலைக்கு வரலை, நானும் இப்போ தான் ஊருல இருந்து வந்திருக்கேன், இன்னைக்கு ஒரு நாள் இராத்திற்கு பட்னியா கிடங்க, அப்போ தான் பசின்னா

என்னன்னு புரியும்” என்றவர் முந்திச் சேலையை உதறி இடுப்பில் சொருகிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார்.

அழகனின் கடையும் இன்று விடுமுறையே என்ற எண்ணத்தில் தந்தையும் மகனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பரிதாபமாக நின்றனர்.

என்ன தான் உருண்டு உருண்டு படுத்த போதும் எழிலிக்கு உறக்கம் என்பதே வரவில்லை. கதிரோடு காதல் இல்லாவிடினும் அவன் மீது அளவு கடந்த பாசமுண்டு. சிறுவயதில் இருந்த அதிகப் பொறுப்போடு தனக்கு வேண்டியதை எல்லாம் செய்த கதிருக்கு எழில் செல்லப்பிள்ளை!

அன்னையிடம் கூட எதுவும் எதிர்பார்க்க மாட்டாள் அனைத்தும் கதிர் தான். அதே போல் கதிரை யாராவது ஒரு வார்த்தை குறைவாக சொன்னால் அத்தனை எளிதாக விட்டுவிட மாட்டாள். அன்னையாக இருந்தாலும் சண்டைக்கு தயாராக நிற்பாள்.

ஆனால் இன்று உதயன் காயத்தோடு நின்ற தோற்றம் ஒருவாறு நெஞ்சை பிசைந்தது. இவ்வாறு அனைத்தையும் இழந்து நிற்பான் என அவள் எதிர்பார்க்கவேயில்லை. நினைக்க, நினைக்க குற்றவுணர்வு அதிகமாகி நெஞ்சே கனப்பது போன்றிருந்தது. வேதனையோடு இருப்பானே? உண்டிருக்க மாட்டான், உறங்கியிருக்க மாட்டான் சென்று பார்ப்போமா? என நினைத்தவள் மணியை பார்த்தால் இரவு பதினொன்று.

இருளில் இந்த நேரம் செல்வதும் சரியன்று ஆனால் கதவை மூடும் வரையும் உதயன் வீட்டிற்கு வரவில்லையே என தவிப்பாகவும் உணர்ந்தாள்.

எழிலரசி கல்லூரியில் சேர்ந்திருந்த முதல் வருடம், ஊர்த் திருவிழாவிற்கு உதயன் வந்திருந்த நேரம்.

“டேய் கதிரு, இடுப்புல கை வைக்காதே கூச்சமா இருக்குடா” உதயனின் குரலும், “டிஸ்கோ டான்சர்னு நினைப்பாடா உனக்கு? வேட்டியை கட்டுற வரைக்கும் கொஞ்ச நேரம் ஆடாம நில்லேன்” என பதில் குரலாய் கதிரின் குரலும் கேட்டது.

கதிரை அழைக்க வந்த எழில் இருவரின் குரல் கேட்டு வாசலிலே நின்றுவிட்டாள். "கதிர் மாமா.." எனக் கத்தி அழைக்க, "என்ன எழில்?" எனக் கேட்டவாறு கதிரும் அவன் பின்னே உதயனும் வெளியே வந்தனர்.

"பச்சகலர் கண்ணாடி வளையல் வேணும் மாமா" எனக் கதிரிடம் கேட்டாள்.

நேரம் கெட்ட நேரத்துலையா வருவாள் என்ற எரிச்சலில் உதயனின் வாய் சும்மா இருக்காமல் "அப்படியே திருவிழா கடையில ஒருஜோடி பச்ச ரிப்பனும் வாங்கிக்கொடுடா அருக்காணி கொண்டையிலே சுத்திக்கிடட்டும்" என்றான். சிறுவயதிலிருந்தே எழிலுக்கு நீளாமான கருங்கூந்தல்.

அவன் பக்கம் முறைப்பாய் திரும்பியவள் அவனை கீழிருந்து மேல் வரை ஒருமுறை பார்க்க, 'விட்டா வேட்டியை உருவி விட்டுட்டுவா போலிருக்கே' என நினைத்தவன் கதிரின் பின் மறைந்தான்.

"அதை அவருக்கே வாங்கிக்கொடுங்க மாமா, வேட்டி அவுறாம இருக்க இடுப்புல சுத்திக்க உதவும்" என எழிலும் பட்டென்று பதில் கொடுத்துவிட, கதிர் சிரித்தான்.

கதிரின் முதுகில் உதயன் அடிக்க, "உனக்கு இது தேவையா உதய்?" என்றவன் எழிலிடம் திரும்பி, "நீ கோவிலுக்கு போ நான் வருகிறேன்" என்றான். அவளோ மறுப்பாய் தலையசைத்துவிட்டு கதிரின் கைகளைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

திருவிழா கடைகளில் சிறுபிள்ளை போன்று பொம்மை, பலூன், பஞ்சுமிட்டாய் என வேண்டியதையெல்லாம் கதிரிடம் பட்டியல் போட்டு வாங்கிவிட்டு அன்னையிடம் சொல்லிவிட வேண்டாமென்று வேண்டுதலையும் வைத்தாள். மஞ்சள் முகத்தில் சதைப்பற்றோடு பூசினார் போன்ற இரண்டு கன்னங்களும், சிவந்த இதழும், பட்டுத்தாவணியும் அவளை பருவ பெண்ணாகக் காட்டிய போதும் செயல்கள் என்னவோ சிறுமி போன்றிருந்தது.

கோவிலுக்குள் கூட செல்ல விடாது கதிரை கடைகடையா எழில் இழுத்துச் செல்ல வேறுவழியின்றி அவர்கள் பின்னே வந்துக்கொண்டிருந்தான் உதயன். ‘நான் என் ப்ரண்ட்டோட இருக்குறதே இந்த இரண்டுநாள் தான் அதையும் விடுறாளா பாதகி’ என உச்ச எரிச்சலில் இருந்தான்.

திடீரென நின்றவள் கூட்டத்தில் தூரத்தில் ஒருவனை கைகாட்டி, “மாமா, அவன் தான் அருண். நான் சொல்லுவேன்ல காலேஜ்ல என் பின்னாடியே வருவான், காலேஜ் பஸ்ல, சுவர்ல எல்லாம் என் பெயரும் அவன் பெயரும் கிறுக்கிவைச்சிருக்கான்னு அவன் தான் அது, வந்து என்னனு கேளுங்க மாமா” என்றாள்.

“எழில் காலேஜ் லைப்ல இதெல்லாம் சகஜம்தான் நான் புரியிற மாதிரி சொல்லிக்கிடுறேன், நீ போம்மா” என்க, உதட்டை சுளித்துவிட்டுச் சென்றாள்.

“எலிக்குட்டி மாதிரி இருந்துக்கிட்டு பெரிய அழகின்னு தான் நினைப்பு உன் அக்கா மகளுக்கு” என்ற உதயனின் வார்த்தைகள் அவள் காதுகளில் நன்றாக விழுந்தது.

மறுநாள் கல்லூரிக்குச் செல்ல முகம் வீங்கி கையில் கட்டுகளுடன் வந்த அருண் டி.சி வாங்கிவிட்டு வேறு கல்லூரிக்குச் சென்றுவிட்டான். அவன் நண்பன் எழிலிடன் உங்கள் ஊர் பெரியவர் மகனை வைத்து மிரட்டுகிறாயா? அவன் அடித்ததால் தான் அருணுக்கு காயம், போலீஸ் கேஸ் கொடுப்போம் என அவன் பங்கிற்கு எழிலை மிரட்டி விட்டுச் சென்றான்.

ஊர் பெரியவர் மகன் என்றதும் உதயன் மட்டுமே நினைவில் வர, உதயன் தான் தனக்காக அருணை அடித்ததாக இன்றுவரை நினைத்துக் கொண்டிருந்தவள் அதே நினைவுடன் விழிமூடினாள்.

சூரியன் உச்சியில் நிலைத்து நிற்க, உஷ்ணக்காற்று முகத்தில் வீச, அனல் நீராய் மிதக்கும் தார் சாலையில் சற்றே நிழல் கொண்ட பேருந்து நிறுத்தத்தில் தங்கள் ஊர் பேருந்தை எதிர்நோக்கி இருந்தாள் எழிலரசி.

அவள் முன் சர்ரென பைக்கில் வந்து நின்றான் சிவச்சந்திரன். பைக்கில் அமர்ந்தவாறே, “என்ன எழிலு ஊருக்கா? எங்ககூட வாயேன்” என்றான். வரமாட்டாள் என தெரிந்தே அழைத்தான்.

அவளை தவிர அங்கு யாருமில்லாமல் இருக்க, இறங்கி அவள் அருகே வந்தவன், “ஊருக்கு தானே கூப்பிடுறேன், என்னவோ சினிமாவுக்கு கூப்பிட்ட மாதிரி முகத்தைத் திருப்பிக்கிற” என்றான்.

வேகு நிதானமாக “நான் கதிர் மாமாவை தவிர வேற யார் கூடவும் பைக்கில போறதில்லை” என தவிர்த்தவளின் கண்கள் அங்குமிக்கும் சுழன்றது. அவளுக்கா பொய்யுரைக்க வராது!

அவள் தன்னை தவிர்கிறாள் என அறிந்ததும் சினம் எழ, “கதிரு, கதிரு, கதிரு..இன்னும் செத்துப்போனவன் பெயரையே எத்தனை நாளைக்கு சொல்லிக்கிட்டு இருக்கப்போற? என்னை கட்டிக்கோடி பெயருக்கு ஏத்த மாதிரி உன்னை அரசியா வாழ வைக்கிறேன்” என்றான்.

அவன் சொல்லிய விதம் அருவருப்பைத் தர அற்பமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அருகே வரும் ஆட்டோவை நோக்கி கை நீட்டினாள்.

“எத்தனை வருஷமாடி உன் பின்னாடி சுத்த? எழில் கொஞ்சம் நில்லு” என்றவன் எட்டி அவள் கைகளை பிடிக்க முயல, கொதிக்கும் எரிமலையானவள் தன் காலடியில் இருக்கும் செங்கலை அவனை நோக்கி எத்திவிட்டு ஆட்டோவில் ஏறிச் சென்றுவிட்டாள். பலமாக காலில் மோதிவிட, உதறிக்கொண்டு வெயிலில் நின்றான்.

ஒரே ஊரில் இருந்தும் சிறுவயதில் பெரிதாக எழிலை கவனித்ததில்லை. கதிருடனான பிரச்சனையின் போது தான் கவனித்தான் சிவா. இளம்பெண்ணாய் இருந்த எழிலின் எழில்மிகுந்த அழகு சிவாவை பெரிதும் கவர்ந்தது. ஒவ்வொரு முறை எழிலை பார்க்கும் போதெல்லாம் அவளின் அழகை தனக்கே உரிமையாக்கிக் கொள்ளும் ஆசை

துளிர்விட்டுக்கொண்டே இருந்தது. எழிலிடம் தோன்றியதை போன்ற ஈர்ப்பு வேறு பெண்களிடம் துளியும் தோன்றவில்லை.

எழில் வளர, வளர அவள் அழகு சிவாவின் மனதில் இருந்த ஆசையை பெருந்தீயாய் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. அந்தத் தீ தன் ஆசைக்கு தடையாக யாராகயிருந்தாலும் எரித்துவிட தயாராக இருந்தது. அவள் குடும்பம், கதிர், ஏன் அவன் குடும்பமாக இருந்தாலும் சரி.

அப்படி தான் மூன்று வருடங்களுக்கு முன் திருவிழாவில் கதிரிடம் எழில் அருணை கைக்காட்டியதை கண்டுகொண்டான். அருணிடம் சென்ற கதிர் எழிலின் மாமா என்றும் தானே எழிலை திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் அவளை இனி தொந்தரவு செய்ய வேண்டாமென்றும் கூறிவிட்டு விலகிச் சென்று விட்டான்.

ஆனால் சிவா விடுவதாய் இல்லை, அன்றிரவு கலைநிகழ்ச்சி பார்க்க வந்திருந்த அருணை சத்தமில்லாது ஆள்கள் வைத்து தூக்கிச் சென்றான். மாந்தோப்பில் வைத்து தங்கள் ஊர் பெண்ணிடம் வம்பு செய்வாயா என்று தன் வெறி தீர அடித்துத் துவைத்து விட்டு, எழில் இருக்கும் கல்லூரியில் இனி படிக்கக்கூடாது என்ற எச்சரிக்கையுடனே அவனை உயிரோடு விட்டான். சிவாவின் பெயர் அறியாத அருணின் நண்பன் எழிலிடம் அவர்கள் ஊர் பெரியவர் மகன் என்றே சொல்லியிருந்தான்.

குடும்ப பிரச்சனைகளை கருத்தில் கொள்ளாது எழிலின் மீது தீராத ஆசையை வளர்த்துக்கொண்ட சிவா, அந்த காரணத்தினாலே அன்னையும், அக்காவும் தன் திருமணத்திற்காக பார்க்கும் பெண்கள் அனைத்தையும் ஏதாவது காரணம் சொல்லி தவிர்த்துக் கொண்டிருந்தான்.

மாலை நேரம் வழக்கம் போல அழகனின் டீக்கடையில் மரப்பெஞ்சில் படுத்துக்கிடந்தான் உதயன்.

“என்ன ஓனர் அண்ணா நாளைக்கு லீவு தானே? எல்லாரும் ஜாலியா சினிமாவுக்கு போயிட்டு வருவோமா?” என பாத்திரங்களை கழுவியவாறு அழகனிடம் கேட்டான் கரிச்சட்டி.

“நாளைக்கு என்னலே லீவு?” என அழகன் கேட்க, “விஷயமே தெரியாதுங்களா அழகண்ணா. நாளைக்கு பெரியவர் மாடசாமி கோவில்ல கிடா விருந்து போடுறாரு, தேர்தல் பிரச்சாரத்தை ஸ்டார்ட் பண்ணிட்டாரு போல. அப்பறம் நாளைக்கு ஊருக்குள்ள எவன் இந்த ஊசிப்போன சாம்பார் சோத்தை திங்க வருவான்? நானே கறிசோறு திங்க தான் போறேன்” என்றான் சிறு சிரிப்புடன்.

“நீ மட்டும் போயிட்டு வா, உனக்கு சோத்துல எலி மருந்தை வைக்கிறேன்” என முறைப்போடு மிரட்டிவிட்டு உதயனின் அருகே வந்ததான்.

உதயன் எழுந்து அமர, “என்னடா நீ என்ன பில்கேட்ஸ் பேரனாடா எதுவும் வேண்டாம்னு சொல்லுறதுக்கு?” என்றான் அழகன்.

“விடு அழகா, சொத்து தானே சம்பாதிச்சிக்கலாம் உடம்புல தெம்பிருக்கு” என்றவனின் குரலில் விரக்தி நிறைந்திருந்தது.

“தேர்தல் செலவுக்கு?” எனக் கேட்ட அழகனை மௌனமாய் நோக்கினான் உதயன். அதே நேரம் பைக் நிற்கும் சத்தம் கேட்டு அழகன் திரும்ப உதயனும் எட்டிப் பார்த்தான்.

தன் புதுமனைவி துளசியுடன் பைக்கில் அமர்ந்திருந்த வினோத், “உதய் அண்ணா, இப்போ தான் காளியம்மன் கோவில்ல இருந்து வாரோம். அங்க உங்க பெரியம்மாவும் சுந்தரியக்காவும் சண்டை கட்டிக்கிட்டு இருக்காங்க சீக்கிரம் போங்க” என்றான்.

பதறி எழுந்த உதய் எதிரே இருந்த அழகனை அவசரத்தில் தள்ளிவிட்டு தன் பைக்கை எடுத்துக்கொண்டு விரைந்தான்.

“போச்சி போ, இரண்டும் சரியான சண்டக்கோழிகளே! யாரு யாரை பிச்சி எறியப் போறாங்களோ? இரத்தக்காயம் இல்லாம இருந்தா சரி தான்” என்ற புலம்பலோடு எழுந்து அமர்ந்த அழகன் தலையில் கை வைக்க இரத்தம்.

சிறு கல் நெற்றில் கீறியிருந்தது, “இவனை மாப்பிள்ளையா பெத்ததுக்கு இன்னும் என்னத்தை எல்லாம் அனுபவிக்கப் போறேனோ!” எனப் புலம்ப, சிரிப்போடு கரிச்சட்டி அவனை கடந்து சென்றான்.

அத்தியாயம் 12

கிராமத்தின் தெற்கு எல்லையில் இருக்கும் காவல் தெய்வம் காளியம்மனின் சிறு கோவில். அன்று செவ்வாய்க்கிழமை ஆகையால் மாலைநேரம் பரமேஸ்வரி கோவிலுக்கு வந்திருந்தார். அதே நேரம் குணசுந்தரியும் கோவிலிருந்து வெளியே வர, இருவரும் நேருக்கு நேராக கோவில் மரத்தடியில் சந்தித்துக் கொண்டனர்.

ஏற்கனவே கணவனுடன் சட்டையிட்டு ஆற்றாமையில் இருந்த பரமேஸ்வரி சுந்தரியை கண்டதும் வேகமா அருகே வந்தார். கதிர் இல்லாத பட்சத்தில் பரமேஸ்வரியை பொறுத்தவரை அத்தனை பிரச்சனைக்கும் ஆரம்பப்புள்ளி சுந்தரி தான்.

“ஏன்டி நீயெல்லாம் நல்லாயிருப்பியா? ஒரு குடும்பத்தை கெடுக்கணும்னே கங்கணம் கட்டிக்கிட்டு சுத்துறையா? இதுக்கு தான் அந்த ஆத்தா உன் தம்பியை அல்பாயுசுல பறிச்சிக்கிட்டா?” என சீற்றமாக ஆரம்பித்தவர் முடிப்பதற்குள், “இந்தா நிறுத்து, தேவையில்லாம எங்கிட்ட வம்பு வைச்சிக்கிட்ட உன் மரியாதை கெட்டுப்போயிடும் பார்த்துக்கோ” என்றார் சுந்தரி.

“யாரு வம்பு பண்ணுறா? உன் குடும்பத்துக்கும் என் குடும்பத்துக்கும் ஆகாது தானே? அப்படியிருந்தும் எம்பிள்ளைய உன் வீட்டுல தங்க வைச்சி, அவன் மனசை கலச்சி, எங்களுக்கு எதிரா தூண்டிவிடுறீயா?

உன் எண்ணமெல்லாம் பலிக்காதுடி” என விரல் நீட்டி எச்சரித்தார்.

அதற்குள் வேடிக்கை பார்க்கவென சுற்றிலும் சிலர் கூடி விட, அழகனின் கடையிலிருந்து கிளம்பிய உதயன் வேகவேகமாக கோவிலுக்குள் வந்தான்.

“ஆகா! பலிசொல்ல வந்துட்டா பரமேஸ்வரி, பெத்தவுங்க இல்லாத பிள்ளையோட சொத்துபத்தையும் புடுங்கிக்கிட்டு வீட்டைவிட்டு தொரத்திவிட்ட நீயெல்லாம், பாவம் பார்த்து வீடு கொடுத்த என்னை குறை சொல்ல தகுதியே இல்லை. செய்யுறதையும் செஞ்சிட்டு இப்போ ஊருக்கு முன்னாடி நல்லவா வேஷம் வேறயா? க்கும்” என முகத்தை நொடிந்தார் சுந்தரி.

“ஐயோ போதும் நிறுத்துங்களேன் இரண்டுபேரும், சுந்தரியக்கா நானா தான் வீட்டை விட்டு வந்தேன்” என உதயன் உரைத்ததை இருவரும் கண்டுகொள்வதாய் இல்லை.

“ஏன், நீ என்ன வீட்டையே எழுதியா கொடுத்துட்டியா? மாசமான வாடகை வாங்குற தானே, ஒன்னுமறியாத எம்பிள்ளைய ஏமாத்தி ஒன்னுக்கு இரண்டா கூட்டி தானே வாங்குற?” என பரமேஸ்வரி எகிற, “ஐயோ பெரியம்மா அப்படியெல்லாம் இல்லை, சரியா தான் வாடகை கொடுக்குறேன்” என உதய் இடையில் வந்தான்.

“நீ சும்மாயிரு கண்ணு” என உதய்யை பரமேஸ்வரி அதட்ட, “நீ பெத்த பிள்ளையாக்கும்? பிள்ளை மாதிரி நடத்தியிருந்தா அவன் ஏன் உங்களை விட்டு வந்து உங்களுக்கு எதிராவே தேர்தல்ல நிற்கப் போறான்? உங்களுக்குள்ள என்ன பிரச்சனையோ?” என்றார் சுந்தரி.

உதயனால் இருவரையும் கட்டுப்படுத்த இயலாது தலையில் கை வைத்தபடி பரிதாபமாகப் பார்த்தான்.

“எங்களுக்கு எதிரா தேர்தல்ல நிற்க சொல்லி தூண்டி விட்டதே நீ தானடி. அது மட்டுமா ஒத்தப்பிள்ளை, பெத்தவங்க இல்லாதவன், வசதியானவன்னு

வளச்சிடலாம்னு எதிர்பார்த்தியா? உன் தம்பி இல்லைன்னு உன் பொண்ணை வைச்சு உதயனை உறவாக்கிக்க நினைக்கிறியா? ஊருக்குள்ள சொல்லிக்கிட்டாங்க, அதுக்கு தான் சொத்தெல்லாம் நாங்க பாதுகாத்து வைச்சிருக்கோம் இனி உன் எண்ணம் நிறைவேறாதுடி” என பரமேஸ்வரி உரைக்க, “பெரியம்மா போதும் நிறுத்துங்க” என உதயன் பெரும் குரலில் கத்தினான்.

கேட்டுக்கொண்டிருந்த சுந்தரி அதிர்ந்து கலங்கினார். தங்கள் புறம் தவறே இல்லை எனும் போது நியமான கோபம் எழ, “என் பொண்ணு கறந்தப் பால விட சுத்தம்னு எனக்குத் தெரியும், தரக்கெட்டத் தனமா பேசுற உங்கிட்டையும் இறங்கி வந்து பேசுனேன் பாரு என்னை அடிச்சிக்கணும்” என்ற சுந்தரி அற்பமான பார்வையோடு திரும்பி நடக்கத் தொடங்கினர்.

“என்ன பெரியம்மா இதெல்லாம்? கோவில்ல வைச்சி இப்படி சண்டை கட்டுறது உங்களுக்கு அழகா?” எனக் கேட்டான் உதய். அவரே அவனை வீட்டிற்கு அழைத்தார். அவர் அன்பில் நெகிழ்ந்தவன் அவர் மனம் நோகாதவாறு மறுத்தான்.

வளர்த்தவர் ஆகையால் உதயனின் பிடிவாதம் நன்கு அறிந்தவர். பிடிவாதம் என்பதை விட, எடுத்த முடிவில் நிலையாக நின்று, நினைத்த செயலை முடிப்பவன் என்பது தான் சரி.

காலை உணவு நேரம் அழகனின் கடை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் உதயன். காலை நேரமே வீதிகள் அனைத்தும் வெறிச்சோடியிருக்க, அழகனின் கடையிலும் அவனையும் மணியையும் தவிர யாருமில்லை. சைக்கிளில் வந்த கரிச்சட்டி சைக்கிளை நிறுத்திவிட்டு, ஆடியவாறே உள்ளே வந்தான்.

வந்தவன் அழகனின் முகத்திற்கு முன் கைகளை நீட்டி, “அண்ணே ஏதாவது வித்தியாசம் தெரியுதா?” என்றான்.

கணக்கு எழுதிக்கொண்டிருந்த அழகன், “இல்லையே, என்னடா?” என்றான்.

“நல்லா பாருங்கண்ணே..” என மூக்கில் இடிப்பதை போன்றே நீட்ட, முறைப்போடு நிமிர்ந்தான் அழகன்.

“இதுல இருந்து இப்போ நீ சொல்லவாரது என்ன..?” எனக் கேட்டுக்கொண்டே தன் முன்னிருந்த அவன் கைகளை முறிக்கினான்.

“ஐயோ விடுங்கண்ணே, நான் விருந்துக்குப் போகவேயில்லை. இல்லைண்ணே இல்லை, அதாவது நம்ம சாம்பாரை விட ருசியாவா அவனுங்க மட்டன் சால்னா வைச்சிடுவாங்ன்னு பார்க்கப் போனேன்” எனக் கதறினார்.

“தின்னுட்டு வந்தது மட்டுமில்லாம எனக்கே வாசம் காட்டுறையா? மணி அந்த கரண்டியை அடுப்புல வையிடா” என்றான்.

“அழகண்ணே விடுண்ணே, விடுண்ணே. அவனுங்க கிடாக்கறியே போடலை நாய்க்கறியை போட்டு ஊர ஏமாத்துறாங்க, நான் கண்டுபிடிச்சிட்டேன் நம்ம சாம்பாரு தான் ருஷி அண்ணே” எனக் கதற, கைகளை தளர்த்தியவன் அவன் முதுகில் சுளீரென அறையொன்றை வைத்தான்.

“போடா போய், வேலையைப் பாரு” என உதயன் காப்பாற்ற, “ஆளே இல்லாத கடையில யாருக்கு டீயாத்த?” என்ற கரிச்சட்டி, அழகன் எழுந்து வருவதைக் கண்டு உள்ளே ஓடிவிட்டான்.

“சாப்பிட வாடா மாப்பிள்ளை?” என்ற அழகன் உதயனை அழைத்தவாறு அருகே வர, வாசலில் சிவச்சந்திரன் பைக்கில் வந்து நின்றான்.

“என்ன மச்சான், ஊரே நம்ம விருந்துல தான் இருக்கு. நீ மட்டும் இங்க இருக்க? ஒருவேளை சாப்பாட்டுக்கும் வழியில்லாம இருக்கிறவனுங்க எல்லாத்தையும் கூட்டிக்கிட்டு நீயும் வந்திடு” என்றான். உதயனை தான் சாடுகிறான் என அனைவருக்கும் புரிந்தது.

அழகனுக்கே கோபம் வந்தது, அருகில் கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீரில் ஒரு செம்பை எடுத்து சிவாவின் முகத்தில் ஊற்றிவிடலாமா என அவன்

நினைத்துக் கொண்டிருக்க, அதற்குள் சிவா சென்றிருந்தான்.

“போடா போ, முள்ளப்பன்றி மூக்கா. ஜெஸ்ட்ல தப்பிச்சிடான்” என்ற அழகனின் உதயனின் பக்கம் திரும்பி, “நீ சாப்பிட வாடா மாப்பிள்ளை” என அழைக்க அமைதியாக எழுந்து சென்றான்.

“ஆளு யாரும் வராததால இன்னைக்கு தோசை மட்டும் தான் கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிக்கோ” என்ற அழகன் பரிமாற அமைதியாக உண்டான் உதயன்.

கிரமங்களில் தெருவிற்கு தெரு ரெஸ்ட்டாரன்ட் இருப்பதில்லை, ஊரிலே ஒன்று அல்லது இரண்டு சிறிய உணவகம் தான். அதிலும் அவர்கள் வைக்கும் பதார்த்தங்கள் மட்டுமே, தான் வேண்டியதை ஆடர் கொடுத்து காத்திருந்து உண்ணும் முறையெல்லாம் இல்லை. பணமிருந்தும் சமையல் தெரியாததால் உணவுக்கு சற்று திண்டாட்டம் தான். உதயனை திருமணம் செய்து கொள்ளச் சொல்லி அழகன் உரைப்பதற்கு முதல் காரணமும் உணவு தான்.

சிவச்சந்திரனின் தோப்பிற்கு சற்று தொலைவில் அவர்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மாடசாமி கோவில் ஒன்று உள்ளது. ஆண்டுதோறும் கிடாவெட்டி ஊர் மக்களுக்கு அன்னதானம் வழங்குவது அவர்கள் குடும்பத்தில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ளது.

அதுவும் தேர்தல் நேரமென்றால் கோவிலில் ஊருக்கு ஒருநாள் விருந்தும், தோப்பில் சுத்தமான கள்ளும் என கட்சிவேட்டிகளுக்கு பத்துநாள் கொண்டாட்டமாக இருக்கும். ஐந்து வருடத்திற்கு முன் கடந்தமுறை ரெங்கநாதன் தேர்தலில் நின்ற போது உதயனுமே பந்தி பரிமாறிக் கொண்டிருந்தவன் தான்.

இதுவரை போட்டியாளர்கள் யாருமில்லாததால் ஒரு விருந்திற்கே ஒட்டுமொத்த வோட்டும் விழுந்தது. இம்முறை உதயனை போட்டியாக நினைத்தனர். ரெங்கநாதனால் உதயனை சாதாரணமா எண்ணிவிட முடியவில்லை.

விருந்தும் கொண்டாட்டங்களும் ஒருபுறமிருக்க, பண்ணைவீட்டிற்கு ராஜா மொத்த வாக்களர் பட்டியலையும் கொண்டு வர, சிவா அவர்களுக்கான பரிசுப்பொருளாக வெள்ளிக்குடங்களை கொண்டு வந்து இறங்கினான். நம்பிக்கையான பெரிய தலைகள் சிலர், ரெங்கநாதன் கொடுத்தனுப்பிய இரண்டாயிரம் ரூபாய் கட்டுகளை பிரித்துக் கொண்டிருந்தனர்.

வழக்கத்திற்கு மாறாக இம்முறை ரெங்கநாதன் அதிகமாக செலவு செய்து கொண்டிருக்க, ராஜா ஒருபுறம் கணக்கிட்டுக்கொள்ளவும் தவறவில்லை. இன்னும் பத்தே நாளில் தேர்தல் இருக்க முழுமூச்சாக தயாராகிக் கொண்டிருந்தனர்.

உதயன் உண்டு முடிக்கவும் அவனுக்கு எதிரே அழகன், மணி, கரிச்சட்டி மூன்றுபேரும் வந்தமர்ந்தனர்.

“டேய் மாப்பிள்ளை நாமளும் பிரச்சாரத்தை ஆரம்பிக்கணும்” என அழகன் ஆரம்பிக்க, “ஆமாண்ணே..” என்ற கரிச்சட்டி அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பற்றி விவரித்தான்.

அதுவரை அமைதியாக இருந்த உதயன் அவர்கள் அலப்பறையை பார்த்து லேசாக சிரிக்க, “மாப்பிள்ளை, கையில எவ்வளவு வைச்சிருக்க?” என்றான் அழகன். “எதுக்குடா..?” என்க, “அடேய் அவங்க வெள்ளிக்குடம் கொடுக்கும்போது விளக்கெண்ணைய் கிண்ணமாவது நாம கொடுக்க வேண்டாமா?” என்றான் அழகன்.

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்” என மறுக்க, “எதுக்குடா? ஜெயிக்கிற எண்ணமில்லையா?” என்றான்.

“பணம், பொருள் கொடுக்குறதெல்லாம் தப்பு, இதுவே கதிரா இருந்தா இப்படி செய்வானா?” என உதயன் கேட்க, நொந்துபோய் தன் நெற்றியில் அடித்துக்கொண்டான் அழகன்.

“இவனை வைச்சி எப்படிடா தேரிழுக்க? அடேய் கதிர இந்த ஊருல எல்லாருக்கும் நல்லாவே தெரியும், எல்லாருக்கும் நல்லது செஞ்சிருக்கான் ஆனால் உன் மூச்சியை எங்க நாலுபேரை தவிர யாருக்கும் தெரியாதுடா. இவன் வேலைக்கு ஆக மாட்டான், நீங்க

ஏதாவது ஐடியா இருந்தா சொல்லுங்கடா" என்றான். உதயனை ஓரளவிற்கு ஊர் மக்களுக்குத் தெரியும்.

"அண்ணே எங்கிட்ட ஒரு ஐடியா இருக்கு" என கரிச்சட்டி உற்சாகமாக, "என்னுன்னு சொல்லு" என்றான் அழகன்.

"உதயன் அண்ணாவை ஊருக்குள்ள எல்லாருக்கும் தெரிய வைக்கணும் அவ்வளவு தானே? நாளைக்கே நம்ம கடையில அண்ணன் தலைமையிலே, இலவசமா பரோட்டா, இட்லி திங்கிற போட்டி நடத்தலாம். எல்லா பயலுகளும் கண்டிப்பா கலந்துக்க வருவாங்க அப்போ நாம வோட்டுக் கேட்கலாம்" என்றான் உற்சாகமாக.

பதிலுக்கு உசிலமணியும் "அப்போ நான் இப்போவே போய் ஆறுகிலோ கடலைப்பருப்பு, ஏழுகிலோ உளுந்து ஊறவைக்கிறேன்" என்றான்.

"அடேய் வீணாப் போனவங்களா, அவனை அடையாளப் படுத்துறேன்னு என் அட்ரெசஸ்ஸை குளோஸ் பண்ணப் பார்க்குறீங்களாடா" என அழகன் கத்தியவாறே எழுவதற்குள் பெஞ்சில் மறுபுறம் அமர்ந்திருந்த இருவரும் எழுந்து ஓடிவிட்டனர்.

சமதளமற்ற தளத்தில் இருந்த மரப்பலகை உசிலமணியும் கரிச்சட்டியும் திடீரென எழுந்ததில் எடை சமம் தவற, அழகன் நொடிப்பொழுதில் கீழே கவிழ்ந்தான். நொந்து போய் எழுந்து அமர்ந்த அழகன் தலையில் துண்டைப்போட உதயன் பார்த்து பார்த்து சிரித்தான்.

மறுநாள் காலை பேருந்து வர தாமதமாகிக் கொண்டிருங்க வேலைக்குச் செல்லும் பயணிகள் அனைவரும் கூட்டமாக நின்று வெட்டிக்கதை பேசிக்கொண்டிருந்தனர். கையில் டீ கிளாஸுடன் அழகனின் கடையில் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்த உதயனுக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது.

எழுந்து அவர்கள் அருகில் சென்றவன் முதியவர்கள் சிலரிடம் பேச்சுக்கொடுத்தான். தந்தையையும் கதிரையும் வைத்து தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவன் இந்த இடத்தில் ஒரு பேருந்து நிலையம் இருந்திருந்தால் முதியவர்கள், பயணிகள் அமர்வதற்கு

எவ்வளவு வசதியாக இருக்கும் என பேச்சை ஆரம்பித்தான்.

ஊருக்குள் இருக்கும் பிரச்சனைகளை குறிப்பிட்டு அதை சரி செய்வதற்கான அவர்கள் கருத்தை கூறும்படியும் கேட்டு அவர்களையும் பேச வைத்தான்.

அவன் மட்டுமே பேசிக்கொண்டிருந்தால் கேட்பவர்கள் சலிப்புத் தட்டி விலகி ஓடிவிட மாட்டார்கள்! ஆகையால் தான் அவர்கள் கருத்தை கேட்டான். கடையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அழகனுக்கு கையசைத்து சைகை காட்டினான்.

தன் கருத்தையும் ஒருவன் வந்து கேட்கிறான் என்ற ஆர்வத்தோடு அருகருகே வெட்டிக்கதை பேசிக்கொண்டிருந்த சிறு கூட்டமும் உதயனை நோக்கி திரும்பியது. ஒரு டீக்கேனோடு வந்த அழகனும் கரிச்சட்டியும் அனைவரும் டீயும் வடையும் உதயனின் பெயர் சொல்லி இலவசமாகக் கொடுத்தனர். ஓசி டீயோடும் வடையோடும் அரசியல் பேசுவதென்றால் யாருக்கு தான் இனிக்காது!

அந்த கூச்சல் கூட்டத்திற்கு மத்தியில் சில நிமிடங்களிலே உதயனும் அவன் பேச்சால் அனைவரையும் கவர்த்திருந்தான். பின் பேருந்து வர அனைவரும் சென்றுவிட்டனர்.

அடுத்ததாக ஒன்பது மணி பேருந்திற்கு கல்லூரி செல்லும் இளசுகள் ஒரு கூட்டமாக நிற்க, அவர்களோடு பேச ஆரம்பித்தான். பெண்பிள்ளைகளும் ஒரு ஓரம் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க அதில் எழிலும் இருந்தாள்.

இலவச இணைய வசதியுடன் ஒரு பயிற்சி மையம் ஊருக்குள் இருந்தால் அரசு வேலைக்காக பரிட்சை எழுதும் பிள்ளைகள், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கும் என அவர்கள் கருத்தை கேட்டவாறு பேச்சை ஆரம்பித்தான். உயர்கல்வி உதவித்தொகை, வேலைவாய்ப்பு, பெறியியல் துறை, விளையாட்டுத் துறை பற்றி உதயன் அறிந்ததை

உரைக்க முந்தைய கூட்டதை விட இம்முறை ஆர்வமாக அவனிடம் பேசினர்.

ஊர் திருவிழாவில் விளையாட்டுப் போட்டிகளில் எப்போதும் உதயன் தான் முதலில் நிற்பான் ஆகையால் இவர்கள் அனைவருக்கும் உதயன் பிரபலமானவன். அவரவர்கள் அவனிடம் சந்தேகங்களையும், ஆலோசனைகளையும் போட்டிபோட்டுக் கொண்டு உற்சாகமாகக் கேட்டனர். மச்சான், அண்ணே, உதயண்ணே, மாமா என பல குரல்கள் பேரொளியாய் உதயனை சூழ்ந்தது.

பேருந்து வந்து அனைவரும் சென்ற பின்னே அவ்விடம் நிசப்தமானது. எழிலும் அவனை ஒரு பார்வை பார்த்தாவாறே செல்ல, “என்ன லுக் இது?” என புரியாது நின்ற உதயனின் முதுகில் தட்டியவாறு அருகே வந்தான் அழகன்.

”கரிச்சட்டி, ஸ்டாங்கா மாப்பிள்ளைக்கு ஒரு டீ போடு போ, ஒரு மணி நேரமா மூச்சுவிடாம பேசியிருக்கான்” என்று விரட்டிய அழகன் உதயனின் பக்கம் திரும்பினான்.

“எப்படி மாப்பிள்ளை இப்படியெல்லாம்? நீ பிரச்சனைய பேசுனது உனக்கு பேசுன பிரச்சாரம் தான்னு தெரியாத மாதிரியே செஞ்சிட்டியேடா!” என்ற அழகன் உற்சாகம் பொங்க உதயனை அணைத்துக் கொண்டான்.

உதயன் சிரிப்புடன் விலக்கிவிட, “வெள்ளை வேட்டி, சட்டை மட்டும் போடு அரசியல்வாதிக்கான அத்தனை அம்சமும் உனக்கு வந்திடும்” என்றான்.

அதே நேரம் நான்கு பெண்கள் வந்தனர். பேருந்து சென்ற பின் சாப்பாட்டு பையுடன் வருபவர்களின் அருகே சென்ற உதயன், “என்னக்கா கொஞ்சம் விரசா வரக்கூடாது இப்போ தானே பஸ் போச்சி” என்றான்.

“எங்க தம்பி? இன்னைக்கு பார்த்து தெருக்குழாய்யில குடி தண்ணீர் வந்திடுச்சி, தண்ணீர் எடுத்து பிள்ளைகளுக்கு சாப்பாடு கட்டி பள்ளிக்கூடத்துக்கு அனுப்புறதுக்குள்ள பஸ் போகிடுச்சி” என்றனர் அனைவருமாக.

“இதுக்கு தான் தண்ணீர் வண்டியில கொண்டு வந்து வரிசையா ஒவ்வொரு வீட்டுக்கா ஊத்தணும், இல்லை வீட்டுவீட்டு குழாய் போட்டு விட்டுடணும். இப்படி இருந்தா உங்களுக்கு வசதியா இருக்குமில்லையா அக்கா?” என பேச்சை ஆரம்பிக்க, அழகன் சிரிப்போடு தன் கடையை நோக்கிச் சென்றான்.

அடுத்து வந்த நாட்களில் காலை நேரம் இப்படியே கழிந்தது உதயனுக்கு. அன்று எழிலரசி தாமதமாக வந்து பேருந்தை விட்டுவிட, தந்தையின் கடைக்குச் சென்றாள். கோவிந்தசாமியை அழைக்க, அவரோ வேலையிருப்பதாக மறுத்து உதயனோடு பைக்கில் சொல்லுமாறு உரைத்தார்.

அவள் மறுக்க, பக்கத்து ஊர் நிறுத்தத்தில் பேருந்து நிற்கும் அதற்குள் சென்று பிடித்து விடலாம் அது வரையாவது அவனுடன் செல்லுமாறு உரைக்க வேறு வழியன்றி அவன் பைக்கில் ஏறினாள்.

ஏற்கனவே ஊருக்குள் உதயனின் பரப்புரைகள் கேள்வியுற்று கோபத்தில் இருந்த சிவா, எழில் உதயனோடு பைக்கில் எதிரே வருவதைப் பார்க்க கொதிக்கும் எரிமலையானான். அன்று தான் அழைத்ததற்கு வரமாட்டேன் என மறுத்தவள், கதிரை தவிர வேற யாருடனும் பைக்கில் செல்லமாட்டேன் என்றவள் இன்று உதயனுடன் செல்லவதை சிவாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவ்வளவு நெருக்கமாகி விட்டானா உதயன்? என நினைத்தவனின் மொத்த சினமும் தற்போது எழிலின் மீது திரும்ப எளிதாக விட்டுவிட மாட்டான் சிவச்சந்திரன்.

## அத்தியாயம் 13

முதலில் பிரச்சனைகளை குறித்து மட்டுமே பேசிய உதயன் மெல்ல அதற்கான தீர்வுகள் குறித்தும் பேசத் தொடங்கினான். தான் அறியாதவற்றை தேடி அறிந்துகொண்டு பேசினான். நடைமுறை சாத்தியங்களிலிருந்து செயல்முறை விளக்கம் வரை ஒவ்வொரு நலத்திட்டங்களையும் அதன்

பயன்களையும் விவரித்தான், பிறர் கருத்துக்களையும் கேட்டான். உதயனின் பேச்சுக்கு ஒரு கூட்டமென்றால், அழகன் தரும் காபிக்கும், வடைக்கும் ஒரு கூட்டம் கூடியது.

பயணிகள் மட்டுமல்லாது திண்ணைகளில் கிடக்கும் கிழவன், கிழவிகளும் அந்த அரசமரத்தடி திண்டில் வந்து அமரத் தொடங்கினர். தற்போது அனைவருக்கும் நன்கு அறிந்த முகமானான் உதயன். ஆரம்பத்தில் கல்லூரிப் பையன்கள் மட்டுமே அவனை நெருங்கி பேச, வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த பெண்களும் அவர்கள் யோசனைகள் குறித்துப் பேசத் தொடங்கினர். மாலை நேரங்கில் புழுதி களத்தில் இறங்கி சிறுவர்களோடு சிறுவனாக கபடியும் கிரிக்கெட்டும் விளையாடினான். அவ்வூரின் இளைஞர்களையும், சிறுவர்களையும் பெரிதும் ஈர்த்திருந்தான் உதயன்.

பள்ளிக்கூடத்திடிற்கு புதிய கட்டிடம், ஊருக்கு பொதுவான திருமண மண்டபம், பேருந்து நிலையம், புதிய குடிநீர் திட்டம், இளைஞர்களுக்கு பயிற்சி மையம், புதிய சாலை மற்றும் அதிக பேருந்து வசதிகள், மருத்துவ வசதி, பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி மையங்கள், மகளிர்குழு அமைப்பதற்கான ஆலோசனை, நிதியுதவி, அவ்வூர் விவசாயிகளுக்கு நகரத்தில் உழவர் சந்தை, பண்ணை விவசாயத்திற்கு உதவி, ஊருக்குள் ஒரு விளையாட்டு மைதானம், பசுமை பூங்கா, கோவில் குளம் தூர்வாருதல் என மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை பட்டியலிட்டுக் கூறினான்.

அவன் செயல்கள் அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்த ரெங்கநாதனுக்கு உதயனின் அதிவேக தலைமைப்பண்பு நன்கு புரிந்தது. கதிரை விட அதிக ஆளுமை கொண்டவன் என்று எண்ணினார். ஆனால் அனைத்தும் தனக்கு எதிராக இருக்க, கதிரை போன்று உதயனை எளிதாக தட்டிவிட இயலவில்லை. தன் சகோதரனின் தனையன் என்ற ஈரப்பதம் இன்னும் எத்தனை நாட்களுக்கு காயாமல் உதயனைக் காக்குமோ?

தேர்தல் நாள் நெருங்கியது. மைக் செட், ரேடியோ, பேனர் கட்டி தங்கள் பெயரையும், செழுமையும் வெளிப்படுத்தினார் ரெங்கநாதன். பணம் தேவை என்னும் போதெல்லாம் ராஜா வங்கியில் இருந்து எடுத்து வந்து கொடுத்துச் செல்வான். பரமேஸ்வரி இருந்த கோபத்தில் அவனை வரவேற்பதுமில்லை உணவளித்து கவனிப்பதுமில்லை. அபிராமி முற்றிலும் பேசுவதை நிறுத்திவிட மேலும் மனம் நொந்துப் போனார்.

நண்பகல் நேரம் அழைப்பு ஒன்று வர உதயன் பேசிக் கொண்டிருந்தான். ஊரில் மொத்தம் எத்தனை வாக்குகள் அதில் தங்களுக்கு எவ்வளவு வாக்குகள் கிடைக்க சாத்தியங்கள் உள்ளது என காற்றில் கைகளால் கிறுக்கி கணக்கிட்டுக் கொண்டிருந்தான் அழகன்.

“டெஃபட்னட்லி (definitely), ஐ வில் கால் யூ லேட்டர்” என்றவாறு அழைப்பைத் துண்டித்தான் உதயன்.

“எருமைபாலா? பசும்பாலா மாப்பிள்ளை அந்த டேபன்டீ?” என முன்னே வந்து நின்றான் அழகன்.

“எது..?” என உதயன் முழிக்க, “இப்போ சொன்னையேடா டீ பண்ணுன்னு ஏதோ?” என அழகன் திறனினான்.

உதயனோ பட்டென சிரித்து விட்டான். அடக்க முடியாத சிரிப்புடனே “அடேய் அறிவு அழகா போ, போய் களவானிட்ட அனா, ஆவனா படி” என்றான்.

“ஏன் மும்பையில போடுற டீயை இந்த ஊரு டீக்கடைக்காரனுக்கு சொல்லிக் கொடுத்தா ஆகாதா? ரொம்ப தான் பண்ணுறடா நீ” என புலம்பியவாறு உள்ளே செல்ல எதிரே வந்த மணி, “டிபன், டீ தானேண்ணா, இந்தாங்க பார்சல் கட்டிட்டேன்” என நீட்டினான்.

நல்ல ஓனர், நல்ல ஒர்கர்டா என நினைத்து நினைத்து சிரித்தான் உதயன்.

தேர்தலுக்கு இரு தினங்களே இருந்தது. தங்கள் ஆதரவு கூட்டங்களோடு மாலை நேரம் வீதி வீதியாகச் சென்று வாக்குக் கேட்பதும், வீடு வீடாக வெள்ளிக்குடமும் உள்ளே ஒற்றை ரோஸ் நோட்டும் வைத்து பரிசாகக் கொடுத்துக் கொண்டிருந்தனர் ரெங்கநாதனும் சிவாவும். அதே நேரம் தோப்பில் கொண்டாட்டங்களும் கலை கட்டியிருந்தது.

அலைபேசியில் பேசியவாறு முன் முற்றத்தில் உதயன் நடந்துக் கொண்டிருக்க, “எழிலக்கா, அக்கா..” என்றவாறு வந்தாள் எதிர்வீட்டுப்பெண் விமலா. தற்போது கல்லூரியில் இரண்டாமாண்டு படித்துக்கொண்டிருக்கிறாள்.

“என்னடி..” என எழில் உள்ளிருந்து குரல் கொடுக்க, “அக்கா உங்க லாஸ்ட் இயர் C++ நோட்ஸ் கொஞ்சம் தாங்களேன்” என்றவாறு திண்ணையில் அமர்ந்தாள். பார்வை என்னவோ உதயனை தான் தழுவியது.

சிறிது நேரத்தில் எழில் வந்து நோட்ஸைத் தர வாங்கிக்கொண்டவள் கிளம்புவதாக இல்லை. மேலும் எழிலிடம் பேச்சிக் கொடுத்தவளின் பார்வை அடிக்கடி உதனின் பக்கம் செல்ல, எழில் அனைத்தையும் கவனித்துக்கொண்டு தான் இருந்தாள்.

“அக்கா பெரியவர் வெள்ளிகுடம் வீடுவீடா கொடுத்தாரே அது உண்மையிலே வெள்ளிகுடம் இல்லக்கா சில்வர்(அலுமினியம்) குடம் தான்” என்றவள் அவளாகவே குலுங்கிச் சிரித்தாள்.

“அதையும் விடமா வாங்கி வைச்சிக்கிட்டில? அப்பறம் என்ன, வீட்டுக்கு போடி” என்ற எழில் காரணமறியாது எரிச்சலானாள்.

முகத்தை சிலுப்பிக்கொண்டு எழுந்து சென்ற விமலா, செல்லும் போது உதனிடம் நோட்ஸைக் காட்டி ஏதோ சந்தேகம் கேட்டுவிட்டு செல்வதையும் எழில் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

அதே போல் மறுநாள் அதிகாலையே மீண்டும் வந்துவிட்ட விமலா மருதாணி இலை பறிக்கவென எழில் வீட்டின் பின்கட்டில் சுற்றியவாறு மாடியை

எதிர்பார்த்து பார்த்துக் கொண்டிருந்தாள். எழிலுக்கு அவள் எண்ணம் புரிந்தது மறுமுறை வாடி உன்னை கவனித்துக்கொள்கிறேன் என மனதில் கருவிக்கொண்டிருந்தாள்.

மாலைநேரம் உதயனும் பெரியமீசை மூக்கையா, அழகன், இரத்தினம், கோவிந்தசாமி மற்றும் அவனுக்கு ஆதரவான சில பெரியவர்களோடு வீடுவீடாகச் சென்று தங்கள் சின்னத்தை அடையாளப்படுத்தி, தாங்கள் செய்யவிருக்கும் நலத்திடங்களை விளக்கி வாக்குக்கேட்டு வந்தனர்.

“அடேய் குறைச்சபட்சம் ஒரு இருநூறு ரூபாய்யாவது ஒரு வீட்டுக்கு கொடுப்போம்டா, நீ கொடுக்காட்டாலும் பரவாயில்லை, நானே கொடுக்குறேன்” என்றான் அழகன்.

“எதுக்கு உன் கடைய குளோஸ் பண்ண வா?” என சிறு நகைப்புடன் கேட்க, “அதுக்காவது உன்னை ஜெயிக்க வைக்கணுமேடா” என கவலை கொண்டான் அழகன். அவன் அக்கறையில் நெகிழ்ந்த உதய் பிடிவாதமாக வேண்டாமென்று மறுத்துவிட்டான்.

உதயன் டவுன்வரை சென்றுவிட அழகன் மட்டுமே கடையில் கவலையாக அமர்ந்திருந்தான். நண்பகல் நேரம் ஆகையால் வாடிக்கையாளர்கள் யாரும் பெரியதாக வருவதில்லை.

“என்னண்ணே அரபிக்கடல்ல விட்ட கப்பல் கவுந்திடுச்சா? இல்லை வங்கக்கடல்ல விட்ட கப்பலா?” என சிரிப்புடன் கரிச்சட்டி கேட்க, “ஒரு எத்து விட்டேன்னா நீயும் போய் கடல்ல கவுந்திடுவ பார்த்துக்கோலே” என்றான் கடுப்புடன்.

“என்ன பிரச்சனைன்னு சொன்னா தானேண்ணே என் ப்ர்லியன்ட் மூளையில இருந்து ஐடியாவ எடுத்து விட முடியும்” என்க, “அடேய் ஏன்டா நீவேற படுத்துற? சும்மா பேசிக்கிட்டே இருந்தா மட்டும் ஜெயிக்க முடியுமா? நாமளும் ஏதாவது செய்ய வேண்டாமா? மாப்பிள்ளை எதுக்கும் வளைஞ்சி கொடுக்க மாட்டிங்கான்டா” எனப் புலம்பினான்.

“அட, இம்புட்டு தானா விஷயம்? பொருளா கொடுக்க தான் உதய் அண்ணா விடாது. அதுவே விருந்து வைக்கிறோம், அன்னதானம் மாதிரி கஷ்டப்படுற மக்களுக்கு ஒரு நாள் நல்ல சாப்பாடு போட்டா அண்ணேன் எதுவும் சொல்லாது” என்றான்.

அழகன் யோசனையோடு அமர, உள்ளிருந்து வந்து அமர்ந்த மணி, “அப்போ நான் ஏற்பாடு செய்யட்டுமா?” என்றான்.

“டேய் மணி, நான் சொன்னது நல்ல சாப்பாடுடா. நீயெல்லாம் ரசம் வைச்சாவே அது வெசம். அப்பறம் நாளைக்கழிச்சு ஒரு பையன் வோட்டுப் போட வர மாட்டான், ஊரே தர்மாஸ்பத்திரியில தான் கிடக்கும்” என கரிச்சட்டி உரைக்க, கோபம் கொண்ட மணி அவனை அடிக்கச் செல்ல, தடுக்க வந்த அழகனின் தலையிலே அடித்து விட்டான்.

“ஐயோ..ஓனர், அண்ணே” இருவரும் பதற, “ஏன்டா இரண்டு பேரும் பிளான் பண்ணி அடிக்கிறீங்களாடா?” என கோபத்துடன் கேட்க, அதில் சிரிப்பு வந்த போதும் அடக்கிக்கொண்டு மறுப்பாய் தலையசைத்தனர்.

“அது சரி, கிடா விருந்து போட்டா கட்டுப்படியாகாதேடா?” என அழகன் யோசிக்க, “ஒரு அண்டா புளியோதரையில அரைக்கிலோ கறியை கலந்துவிட்டா போதும் மட்டன் பிரியாணி ரெடி” என வழிகாட்டினான் மணி.

“டேய் செய்யுறதை சத்தமில்லாமல் செய்யணும்டா, சரி போய் வேலைய ஆரம்பிங்க” என்றான் அழகன்.

உதய் அவ்வளவு சொல்லியும் அழகனாவது கேட்பதாவது! மறுநாள் தன் கடையில் ஊரார் அனைவருக்கும் உதயனின் பெயர் சொல்லி பிரியாணி விருந்தே வைத்துவிட்டான். சாப்பாடு என்னும் போது உதயனாலும் மறுக்க முடியவில்லை.

காலையிலிருந்து கூட்டம் அலைமோதியது அழகனின் கடையில். கரிச்சட்டி, மணி தவிர மேலும் உதவிக்கு மூன்று பேர், சமையலுக்கு நான்கு பேரையும் அன்று வேலைக்கு வைத்தான். உணவு பரிமாறும்

போதெல்லாம் உதயனுக்கு வாக்களிக்குமாறு கோரிக்கையும் வைத்தனர் அழகனும், மணியும். அவர்கள் அட்டகாசங்கள் அனைத்தையும் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தான் உதயன்.

தேர்தல் பிரச்சாரங்கள், கொண்டாட்டங்கள் அனைத்தும் அன்றோடு முடிந்துவிட மறுநாள் தேர்தல் நடக்கவிருந்தது. ஊருக்குள் அனைவருக்கும் வாக்குச்சீட்டுகள் கொடுக்கப்பட்டு, பள்ளிக்கூடத்தை சுத்தம் செய்து அங்கு வாக்குச்சாவடியும் அமைக்கப்பட்டிருந்தது.

எழிலரசிக்கு அன்று விடுமுறை நாள் என்பதால் தானே மதிய உணவுக்கு மீன் குழம்பு சமைத்தாள். கோவிந்தசாமிக்கும், சுந்தரிக்கும் இரண்டு தூக்குவாளிகளில் எடுத்துக்கொண்டு வீட்டை பூட்டிவிட்டு நடந்தவள் செல்லும் வழியில் மெக்கானிக் செட்டில் தந்தையிடம் ஒரு தூக்குவாளியை கொடுத்தாள், உதயனும் அங்கு தான் உள்ளே படுத்திருந்தான்.

எழில் வீட்டில் மீன் குழம்பு என்றால் கதிரும், உதயனும் போட்டி போட்டு உண்பார்கள். வரும்போதெல்லாம் ஒருமுறையாது தவறாது உண்டுவிடும் உதயன், சுந்தரி தான் சமைத்ததாக எண்ணி பாராட்டிவிட்டுச் செல்வான்.

அதையே நினைத்துப் பார்த்தவாறு நடந்து வந்துகொண்டிருந்த எழில் இந்த தூக்குவாளியையும் அங்கே கொடுத்திருக்கலாமோ என யோசித்தாள். அவன் மீது தனக்கென்ன பரிவு மனம் கேள்வி கேட்க, தன்னை தானே குட்டிக்கொண்டு தங்கள் வயலுக்குச் சென்று சுந்தரியிடம் தூக்குவாளியை கொடுத்தாள்.

பின் தோப்பு வழியாக திரும்பி வந்துக் கொண்டிருந்தாள். நண்பகல் நேரம் அன்று வேலையாட்கள் யாருமில்லாமல் இருக்க மெல்லிய நிசப்தத்தையும் காற்றிலாடும் தென்னை ஓலைகள் கலைத்துக் கொண்டிருந்தது. அந்த சத்தத்திற்கு ஊடாக ஒரு விசில் சத்தமும் கேட்க அதிர்ந்து திரும்பினாள்.

சற்று தொலைவில் சிவா நின்றுக் கொண்டிருந்தான். ‘அட ஆண்டவா எங்கிட்ட இவ்வளவு வாங்கிக்கட்டியும் திருந்துறானா இவன்!’ என மனதோடு புலம்பிய எழில் முறைப்போடு அவனைப் பார்த்தாள்.

அவளை நெருங்கி வந்தவன் கிணற்றுமேட்டின் அருகே கை கட்டிக்கொண்டு நின்றான். “ஆமாம் அன்னைக்கு என்னவோ சொன்னியே? ம்ம்..நியாபகம் வந்துடிச்சி. உன் கதிர் மாமாவை தவிர வேற யாரு வண்டியிலையும் ஏற மாட்டியே நீ, அப்புறம் என்ன உதய் கூட ஜோடியா ஊர்வளம்? ஒருவேளை உங்க அப்பன் ஆத்தாவுக்கு சேவகம் செய்யுற மாதிரி உனக்கும் கதிர் இல்லாத இடத்தை உதய் தான் நிறைப்புறானோ? செஞ்சாலும் செய்வான் ஒரே வீட்டுல தானே இருக்கீங்க” என எள்ளலாக உரைத்தான்.

“ச்சீ, நிறுத்து இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசுனா மனுஷியா இருக்கமாட்டேன் பார்த்துக்கோ” என எழில் சினத்துடன் சிவந்த முகமாக, விரல் நீட்டி எச்சரித்தாள்.

“ஏன் நிறுத்தனும்? என் ஆதங்கம், நான் இப்படி தான் பேசுவேன். இத்தனை நாளா உனக்காக காத்துக்கிடந்தது நான், ஆனால் நேந்து வந்த அவன் தட்டிட்டுப்போறானா? சின்னவயசுல எங்க அம்மா பாசத்துல இருந்து இப்போ வரைக்கும் எல்லாத்துலையும் எனக்கு போட்டியாவே வாரான். சொத்துபத்து இல்லாத செல்லாக்காசு, அப்பனாத்தா இல்லாத அநாதை அவன், ஆமா தெரியாம தான் கேட்குறேன் அவனுக்கும் எனக்கும் அப்படி என்ன பெருசா வித்தியாசம் பார்த்துட்ட? எந்த விதத்துல என்னைவிட அவன் உனக்கு உசத்தியா போயிட்டான்?” என கோணல் சிரிப்போடு கேட்டான்.

கேட்ட எழிலுக்கு உடலலெல்லாம் கூசியது, அசூகையாக முகத்தை சுளித்தாள். நொடியும் நிற்க விருப்பமின்றி விலக முயன்றவளின் எண்ணம் அறிந்து விலகவிடாது முன்னே வந்து கைக்கட்டிக்கொண்டு நின்றான்.

“என் கேள்விக்கு பதில் சொல்லாம கிளம்புனா எப்படி?” என்க, எழிலின் கோபம் உச்சத்தைத்தொட்டு இருந்தது.

சற்றே எல்லை தாண்டினால் தன்னிலை மறந்து ருத்ரகாளியாவாள், இருத்தும் இழுத்துப்பிடித்துக்கொண்டு, "உன் கற்பனைக்கெல்லாம் என்னால பதில் சொல்லிக்கிட்டு இருக்க முடியாது அன்ட் என்னை பத்தி பேசுற உரிமையும் உனக்கு இல்லை" என்றாள் சூடாக.

"எது, எது கற்பனையா? என் கற்பனை தான் ஊர் வாயில அவுல் ஆனதாக்கும்? எங்கம்மா அவன் காதலை ஏத்துக்காததால தான் உனக்காக உதய் வீட்டைவிட்டு வந்தானாம், இரண்டு பேரும் விரும்புறீங்களாம் அப்பப்போ மாடியில கொஞ்சிக்கிறீங்களாம், வினோத் வீட்டுலையும் கோவிலையும் உன் பின்னாடியே சுத்துனானாம், பைக்கில ஊரே பார்க்க ஒன்னா சுத்துறீங்களாம் இது எல்லாம் ஊருக்குள்ள பேசிகிறது என் கற்பனை இல்லைம்மா.

ஒருவேளை உண்மையா இல்லைன்னா எனக்கு நல்லது தான், உண்மையா இருந்தா கதிருக்கு அடுத்து ஒரு நல்லவனை இந்த ஊர் இழக்க வேண்டியிருக்கும். அதுக்கு நீயும் ஒரு காரணமாகிடாத எழில், இனி ஊருக்குள்ள இப்படி பேசாத மாதிரி ஒழுங்கா நடந்துக்கோ! உன் விஷயத்துல அண்ணன், தம்பின்னு பாசமோ பாவமோ பார்க்கமாட்டேன்" என்றான் மிரட்டலாக. அதே நேரம் அவன் குரலில் சொன்னதை செய்வேன் என்ற உறுதியும் இருந்தது.

உரைத்தவனுக்கும் தெரியும், கேட்டவளுக்கும் தெரியும் அது உண்மை இல்லை என்று! ஆனால் அன்று பரமேஸ்வரி, சுந்தரி கோவிலில் வைத்து சண்டையிட்டதை பார்த்த சிலர் அவ்வாறு தான் ஊருக்குள் வதந்தியை கிளப்பி விட்டிருந்தனர். இப்போது தான் மெல்ல ஒன்றிரண்டு பேர் வாய்களில் வறுபட்டு செய்தி பரவ ஆரம்பித்திருந்தது. அதை சொல்லி சாடினால் உதயனை விட்டு தள்ளி நிற்பாள் என்ற எண்ணத்திலும் அவர்களை அடிக்கடி இணைத்துப் பார்த்த வேதனையிலும் குற்றம் சாட்டினான் சிவா.

கேட்டுக்கொண்டிருந்த எழிலுக்கு உள்ளுக்குள் இதயம் துகள் துகளாக நொறுங்கியது. அதையும் தாண்டி சினம் எல்லை கடந்திருந்தது, தன்னிலையிழந்து கோபத்தின் உச்சிலிருந்தாள். தலை குனிந்திருந்தவள் அப்போதே சிவா நிலையில்லாத உருளை வடிவ சிறு கல்லின் மீது நிற்பது கண்ணில் பட்டது. ஒரு நொடி தான் கல்லை பலமாக எத்தி விட்டவள் திரும்பி பாராது நடக்கத் தொடங்கினாள்.

அவளிடம் ஆதங்கத்தை கொட்டிவிடும் ஆர்வத்தில் இருந்தவன் சற்றே அஜாக்கரதையாக நின்று கொண்டிருந்தான். அவள் கல்லை எத்திவிட உருளையில் கால் வைத்தால் உருண்டு வழுக்குவது போல உருண்டு நிலை தடுமாறி வழுக்கிக்கொண்டு நொடிப்பொழுதில் அருகிலிருக்கும் கிணற்றுக்குள் விழுந்து விட்டான். அவ்வளவு தான், நீச்சல் அறிந்திருந்தால் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

இவனெல்லாம் இருப்பதற்கு சாவதே மேல் என்ற நிலையில் இருந்தவளின் கையில் மட்டும் ஈட்டி இருந்திருந்தால் அவளே குத்திக் கொன்றிப்பாள். திரும்பியும் பார்க்காமல் விறுவிறுவென வேகமாக நடந்துக் கொண்டிருந்தாள். நடக்க நடக்க சற்று கோபம் குறைய அதற்கு இணையாக நடையின் வேகமும் குறைந்தது.

தன்னை எவ்வாறு அவன் அப்படி சொல்லலாம்? பிறர் பார்வையில் அப்படி தெரியும்படி ஒரு போதும் தான் நடந்து கொண்டது இல்லையே! கதிரை தவிர வேறு யாருடனும் பிறர் பார்க்க பேசியது கூட இல்லையே! எவ்வளவு நியாயம் கற்பித்த போதும் ஆற்றாமையில் பொங்கிய மனம் ஆறவேயில்லை. இதற்கிடையில் வெந்நீர் ஒற்றைப்போல கண்ணீரும் இருவிழியிலிருந்து வழியத் தொடங்கியது.

என்னவோ கதிரின் ஆசையை நிறைவேற்றுகிறேன் என அனைத்தையும் இழந்து தான் சொல்லிய ஒரு வார்த்தைக்காக குடும்பத்தை எதிர்த்து ஊன், உயிரை வருத்திக்கொண்டிருக்கும் நல்லவனுக்கு தன்னால்

இப்படியோரு அவப்பெயர் வர வேண்டுமா? கதிர் இருந்திருந்தால் இப்படி ஒரு நிலை தனக்கு வருமா? இதற்கு தான் இல்லாமல் இருப்பதே மேல் என நொந்துபோனாள்.

இரு கண்ணிலும் கண்ணீர் வழிந்து பாதையை மறைத்த போதும் துடைத்துக்கொண்டு நடையில் வேகம் கூட்டினாள். அப்போதே சாலையோரம் இருக்கும் அரளிச்செடி கண்ணில் பட, அதிலிருந்து ஒரு கொத்து காய்களை பறித்துக்கொண்டு விறுவிறுவென வீடு வந்தாள்.

வீட்டிற்குள் வந்த வேகத்தில் நேராக பின்கட்டி கிணற்றடிக்கு ஓடி வந்தாள். கிணற்று திண்டில் அரளிக்காயை (விசத்தன்மை கொண்ட காய்) வைத்துவிட்டு கீழே கிடக்கும் மஞ்சள் உரசும் கல்லை எடுத்து நன்கு தட்டி நைத்தாள். எதை பற்றியும் சிறிதும் யோசிக்காது தட்டிய காயை விதையோடு ஒரு கை நிறைய அள்ளி வாயில் போட்டாள்.

அத்தியாயம் 14

கை கழுவிவிட்டு சாப்பாட்டு தூக்குவாளியை திறந்த கோவிந்தசாமி, “மாப்பிள்ளை நீயும் வாடா சாப்பிடலாம்” என அழைத்தார்.

“இல்லை மாமா” என மறுக்க, “என் தங்கமகள் மீன் குழம்பு வைச்சா எட்டூருக்கு மணக்கும், வந்து ஒரு வாய் சாப்பிட்டு பாருடா” என மீண்டும் அழைத்தார்.

“இல்லை மாமா, நீ சாப்பிடு எனக்கு டவுன்ல ஒரு சின்ன வேலையிருக்கு, சட்டைய மாத்திட்டு போயிட்டு வரேன்” என எழுந்த உதயன் வீட்டிற்கு வந்தான்.

தன்னறைக்கு வந்தவன் ஜன்னலோரம் நின்றபடி தன் சட்டையை கழற்ற, பார்வையில் எதார்த்தமாக கீழே கிணற்றடியில் நிற்கும் எழில் விழுந்தாள். முதலில் சாதரணமாக தான் நினைத்தான், சில நொடிகளிலே அவள் அழுதபடி அடிக்கடி கண்ணை துடைப்பதையும் எதையோ தட்டிக் கொண்டிருப்பத்தையும் கவனித்தான்.

என்னவோ மனதிற்கு நெருடலாக தோன்றியது. அவள் செயல்கள் வித்தியாசமாக தெரிய, அவள் கண்ணீர் அவனை அசைத்தது. அசாதாரண ஆற்றல் அவனைத் தள்ள ஏதோ விபரீதம் என புரிந்த நொடி சற்றும் தாமதிக்கவில்லை. மாடிப்படிகளில் கடகடவென ஓடிவந்தவன் பாதி படிகளில் இருந்து தரையில் குதித்து பின்கட்டுக்கு விரைந்து ஓடினான்.

உதயன் வர, அந்த நொடி தான் அறைத்த விதையை வாயில் அள்ளிப்போட்டாள் எழில். பதறித் தவித்தவன் விரைந்து வந்து முகவாயை ஒரு கையாளும், தொண்டையை ஒரு கையாளும் பிடித்திருந்தான்.

“என்ன காரியம் பண்ணற நீ, முதல துப்பு?” எனச் சினத்தவன் அவள் முகத்தை ஒரு பக்கமாக சாய்த்தான். உதயனை எதிர்பாராத எழில் அவன் செயலை எதிர்த்தாள். துள்ளலோடு அவன் பிடியிலிருந்து விலகப் போராடியவள் அவன் நெஞ்சில் கை வைத்து தள்ளினாள்.

ஏற்கனவே அவள் விஷத்தை விழுங்கி விடுவாளோ என்ற பயத்தில் இருந்தவனை அவள் மேலும் சோதிக்க, பிடியின் அழுத்தம் கூட்டினான். முகவாயை அழுத்தியிருந்ததால் கன்னங்கள் இரண்டும் வலியெடுத்து. அவன் அழுத்தமான பிடியைத் தாண்டி அவளால் துளியும் விழுங்க முடியவில்லை இருந்தும் உதயனை தள்ளினாள்.

நிலையாக நில்லாமல் துள்ளவே, கிணற்றுச் சுவரில் அவளை சாய்க்க முயன்றபடி, “நீ என்ன லூசாடி? துப்பித்தொலையேன்” என்றான். இதயம் உயிர் பயத்தில் அதிவேகமாய் படத்துக்கொண்டிருந்து. அதற்குள் எழில் தொண்டையில் இருந்த அவன் கையைத் தட்டிவிட்டு முன்புறமாக திரும்பியிருந்தாள்.

சட்டென அவளை விலக விடாது பின்புறமாக தன்னோடு அணைத்தவன் குனியவைத்து முகவாயை மேலும் அழுத்தி அவள் கன்னங்களை பிதுக்கினான். உதயனுக்கு ஒவ்வொரு நொடியும் என்னோவோ அவன் உயிர் துடிப்பது போன்ற உயிர்பயம்! “இப்போ நீ சாகுற

அளவுக்கு என்ன நடந்துச்சு? துப்பு எழில்” என்றவனுக்கு சினம் கூட இருகையிலும் அழுத்தம் கூடியது.

அதற்கு மேலும் அவன் பலமான பிடிகளுக்குள் போராட முடியவில்லை, வாயை பிளந்து குனியவும் வைத்து விட நாக்கை வெளியே தள்ளி விசத்தை துப்பியிருந்தாள் எழில்.

அன்று இருளில் கையில் இரத்துத்துடன் நின்ற போதும், தற்போது தற்கொலைக்கு முயன்ற போதும் அவள் செயல்களின் காரணம் தெரியாது என்ன செய்கிறாள் இந்த முட்டாள் பெண்! என எரிச்சலுற்றான். இது போல் எத்தனை முறை முயன்றிருக்கிறாளோ என்ற கேள்வியும் எழ அதிர்ந்தான்.

முகமும் முழுவதும் சிவந்து, அதில் அவன் அழுத்தியிருந்த கன்னங்கள் இரண்டும் இரத்தச் சிவப்பாகி, கண்கள் இரண்டும் முத்துத்துளிகளாக கண்ணீரை விடாது சிதறிக் கொண்டிருக்க, தொண்டைவலியோடு செருமிக் கொண்டிருந்தாள்.

உதயனின் நினைவில் எழிலரசி என்பவள் கதிரின் செல்லப்பெண், வண்ணச்சிறகை விரிந்தாடும் துருதுருப் பட்டாம்பூச்சு. அவளை இவ்வாறு நலிந்த தோற்றத்தில் பார்க்க நெஞ்சம் கனத்தது. பரிவோடு பார்த்துக் கொண்டிருந்தவனின் ஒருகை அவனையும் அறியாமல் அவள் தலைத் தடவியது.

அத்தீண்டலில் சட்டென நிமிர்ந்தவள் மீண்டும் அவனை விலக்கிவிட எண்ணி திரும்பி அவன் நெஞ்சில் கை வைத்து தள்ள முயன்றாள். முயன்றவள் தான் தள்ளாட, இன்னும் அவனின் ஒரு கை அவள் இடையை தன்னோடு அணைத்தே இருந்தது. இத்தனை நேர போராட்டத்திலும் உணராதவள் கைகளின் வழி பரவிய அதிர்வில் அவனின் அதிவேக இதயத்துடிப்பை உணர்ந்தாள்.

இவ்விதயம் தனக்காக துடிக்கிறாதா! அது வெளிப்படுத்தும் அலைவரிசையின் மொழிபெயர்ப்பு தான் என்ன? நினைத்தவாறு நிமிர்ந்து உதயனின் முகம் பார்த்தாள். அதிலும் அந்த கண்களில் கருமணி

தன்னை நோக்கியே நிலைத்திருப்பதன் காரணம் தான் என்ன? தன்னையே மறந்த நிலையில் அவனை நோக்கியவாறு இருக்க, “எழில்....” என்ற அதட்டல் குரல் கேட்டது.

அந்த குரல் தந்த அதிர்வில் உதயனும் எழிலை விடுத்து திரும்ப, அவளும் நகர்ந்து குரல் வந்த திசையில் நிமிர்ந்து பார்த்தாள். குணசுந்தரி தான் கோபமுடன் பின் வாசலில் நின்றுக் கொண்டிருந்தார். என்னதான் இருவரும் விலகி நின்ற போதும் அவர் கண்முன் இருந்த காட்சியோ, பாதி மேல் சட்டையை கழற்றி விட்ட நிலையில் நின்ற உதய்யின் அழுத்தமான அணைபிற்குள் அவன் நெஞ்சில் கைவைத்து தள்ளிபடி கண்களில் கண்ணீரோடு நிற்கும் மகள் தான்.

சுந்தரி அதிர்ந்து நின்ற தோற்றம் காயம் கொண்ட எழிலை மேலும் கவலை கொள்ளச் செய்தது. சிவா பேசலாம், ஊர் பேசலாம் பெற்றவள் அவ்வாறு நினைத்து விடுவாளோ? என பயம் பரவ, ஓடி வந்தவள் அன்னையை அணைத்துக் கொண்டு கதறினாள்.

உதயனுக்கு அப்படியும் சந்தேகம் கொள்ள வாய்ப்புள்ளது என ஒரு நொடியும் தோன்றவில்லை, உதயனின் பார்வை கிணற்றுமேட்டை பார்க்க, சுந்தரியின் கண்களும் அப்பக்கம் திரும்பியது.

தன் அணைப்பிலிருந்து மகளை விலக்கியவர், “என்னடி இது?” எனக் கேட்டவாறு அவள் கன்னத்திலும் அறைய, உதய் பதறி அருகே வந்தான்.

“பாவி மகளே இதுக்குத் தான் உன்னை பெத்து வளர்த்தேனா?” என கேட்டாவாறு எழில் முதுகில் அடித்து வெளுக்கத் தொடங்கினார். உதயன் ஓடி வந்து தடுத்து சுந்தரியின் கைகளை பிடித்துக்கொண்டு, “அக்கா அவளே பாவம் நொந்து போயிருக்கா இதுல நீயும் அவளை காயப் படுத்தலாமா?” என்றான் குரல் உயர.

அதற்குள் நிற்கவும் முடியாது தளர்ந்த எழில் பின்கட்டுத் திண்ணையில் பொத்தென்று அமர்ந்தாள்.

“நாங்க என்னடா இவளுக்கு குறை வைச்சோம்? ஒத்தப்பிள்ளைன்னு செல்லமா தானே வளர்த்தோம். சாகப்போறாளேடா பாவிமக! ஒரு நிமிஷம் எங்களைப் பத்தி நினைச்சிப் பார்த்தாளா? நாங்க வாழுறதே இவளுக்கு தானே” என நெஞ்சில் அடித்துக் கொண்டு புலம்பிய சுந்தரியும் அழத் துடங்கினார்.

“ஷ்..அக்கா, கத்தி எட்டு வீட்டை கூட்டாதா. பொம்பளப்பிள்ளை, நீ தான் என்னன்னு பொறுமையா விசாரிக்கணும்” என்றான் அதட்டலாக. பார்வை மீண்டும் எழிலின் மீது தான் படர்ந்தது. தளர்ந்து, தலை கவிழ்ந்து திண்ணையில் அமர்ந்திருந்திருக்க கண்களில் இன்னும் கண்ணீர் கோடுகள் மின்னி பிரச்சனை என்னவென்று விசாரிக்க வேண்டிய அவசியத்தைக் காட்டியது.

அவன் சொல்லியதன் அர்த்தம் உணர்ந்த சுந்தரி கண்களை துடைத்துக்கொண்டு எழுந்து மகளின் அருகே சென்று அமர்ந்தார். வீட்டிற்குள் சென்ற உதய் கையில் தண்ணீர் செம்புடன் திரும்பி வந்தான்.

சுந்தரியிடம் கொடுக்க வாங்கி எழிலுக்கு சிறிது புகட்டி, மீதி நீரைமுகத்தில் அடித்து கழுவி விட்டு தன் முந்தானையால் துடைத்தார். என்ன துடைத்தும் கண்ணீர் மட்டும் நிற்காமல் எழிலின் கண்களில் இருந்து வந்துகொண்டே இருந்தது.

என்னவென்று எழிலிடம் எவ்வளவோ விசாரிக்க எதற்கும் அசையாது அழுத்தமுடன் அமர்ந்திருந்தாள் எழில். அழுது புலம்பிய சுந்தரி கோபமுடன் மீண்டும் அவளை அட்டிக்கத் தொடங்கினார். ‘செய்வதையும் செய்து விட்டு இவ்வளவு கேட்டும் வாயை திறக்கிறாளா பார், எவ்வளவு நெஞ்சழுத்தம்’ என எரிச்சலானான் உதயன்.

“அக்கா அடிக்காத விடுக்கா, வேணா கோவிந்தமாமா வந்து விசாரிக்கட்டும், உள்ள கூட்டிட்டுப்போ” என்க, “பிடிவாதத்துக்குப் பிறந்தவ, கல்லுமாதிரி உக்காத்திருக்காளே  இப்போவாவது வாய திறக்குறாளா பாரு” என்ற சுந்தரி தன் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதார்.

மெல்ல நிமிர்ந்த எழில் தன் நெஞ்சில் கை வைத்துக்கொண்டு வேதனையோடு நலுங்கிய குரலில், "என்னால கதிர் மாமாவை மறக்க முடியலைம்மா.." என்றாள். கேட்ட சுந்தரி நெகிழ்ந்து மகளை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு, "எய்யா கதிரு இப்படி எங்களை தவிக்க விட்டுவிட்டு போயிட்டியேயா" என பெரும் குரலில் கதறினார்.

பார்த்துக்கொண்டிருந்த உதயனுக்கும் கண்கள் கலங்கியது. கதிர் இறந்த இத்தனை நாட்களாக இல்லாது இன்றென்ன திடீரென சாகும் எண்ணம்! கதிரை மறக்க முடியவில்லையாம், இப்போ யார் கதிரை மறக்கும்படி அவளிடம் சொல்லியது என்ற கேள்விகளும் எழ, அவள் பதிலை உதயனால் சிறிதும் நம்ப முடியவில்லை.

ஆனால் அவள் கண்ணீர் உண்மை என உணர்ந்திருந்தான். அவள் பிரச்சனை தான் என்னவோ? கேட்டாலும் பிடிவாதக்காரி சொல்லமாட்டாளே, முடிந்தால் ஒரு முறை தனியாக கேட்டுப்பார்ப்போம் என்ற எண்ணத்தோடு விலகிச் சென்றான்.

மாலை நேரம் கோவிந்தசாமி வீட்டிற்கு வர, வீடே இருளில் அமைதியாக இருந்தது. சுந்தரி ஹாலில் கதிரின் படத்தின் முன் அமர்ந்திருக்க, எழில் இன்னும் பின்கட்டுத் திண்ணையில் தான் அமர்ந்திருந்தாள்.

"எதுக்கு இப்படி விளக்கு கூட ஏத்தாம இரண்டுபேரும் ஆளுக்கொரு பக்கமா உக்காத்திருக்கீங்க?" எனக் கேட்டபடி அவரே சென்று விளக்கை ஏற்றினார்.

"இந்தா கேளுங்க, நாளைக்கு நம்ம எழில் ஜாதகத்தை எடுத்துட்டுப்போய் கருங்குளத்து ஜோசியரைப் பார்த்து இப்போ அவளுக்கு கல்யாண நேரம் இருக்கான்னு கேளுங்க. இருக்குன்னா அவருக்கு தெரிச்ச நல்ல இடமா பார்த்து சொல்லச் சொல்லுங்க" என சுந்தரி கட்டளையிட்டார்.

காரணம் புரியாத கோவிந்தசாமி, "இப்போ என்ன திடீர்னு? ஒரு வருஷம் போகட்டுமே சுந்தரி" என்க, "ஏன்

ஒரு வருஷத்துல உங்க மகளுக்கு வயசு குறைஞ்சிடுமாக்கும்?” என்றார்.

“அப்படி இல்லை, இப்போ என்ன அவசியம்ன்னு கேட்குறேன்? அவ சின்னப்பிள்ளைடி” என்க, “யாரு அவளா? அரளிவிதையை அரச்சித் தின்னா உசுரு போயிடுங்கிற அளவுக்கு விவரம் தெரிஞ்ச அவ சின்னப்பிள்ளையா?” என்றார்.

அதிர்ந்த கோவிந்தசாமி சுந்தரியின் அருகே வந்து நடந்ததை விசாரிக்க, எழில் தற்கொலைக்கு முயன்றது, உதயன் காப்பாற்றியது, தான் விசாரிக்கையில் கதிரை மறக்க முடியவில்லை என்றது என அனைத்தும் உரைத்தவர் விரைவில் எழிலுக்கு திருமணம் செய்யவேண்டும் என்றார் உறுதியாக.

ஆசையாய் வளர்ந்த ஒற்றை மகளின் நிலைகேட்டு உள்ளம் துடிதுடித்த கோவிந்தசாமி எழுந்து திண்ணையை நோக்கிச் சென்றார். அவர் தங்கமகள் அழுது அழுது ஓய்ந்து அங்கே சரிந்து உறங்கியிருந்தாள்.

உதயன் உதித்தெழுந்த இளம்காலை நேரம் அவ்வூரில் எத்தெருவிற்குள் திரும்பினாலும் கண்ணில் படும் வெள்ளை வேட்டிகள் அன்றைய நாள் தேர்தல்நாள் என்பதை நினைவூட்டும். என்றும் இடுப்பில் ஒரு லுங்கி, தோளில் ஒரு துண்டோடு காட்சியளிக்கும் அழகன் கூட பளீர் வெள்ளைவேட்டி சட்டை தான்.

காலையில் வெகு தாமதமாக எழுந்த எழில் முன் வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருக்க, உதயன் இறங்கி வந்தான். அவன் வருகை அறிந்தும் எழில் நிமிராது அவள் வேலையில் கவனமாக இருக்க, எழிலிடம் பேச நினைத்தவன் தயங்கிபடி தனது பைக்கை துடைத்துக் கொண்டிருந்தான்.

“எழிலக்கா சாம்பாருக்கு இரண்டு முருங்கைக்காய் பறிச்சி தாங்களேன் அம்மா கேட்டாங்க” என்றபடி வந்து நின்றாள் விமலா.

“நீயே போய் பறிச்சிகோ விமலா” என்ற எழில் அப்போதும் கோலத்தில் கவனமாய் இருக்க, “அக்கா

எனக்கு எட்டாது நீங்களே பறிச்சித்தாங்க” என விமலா சிணுங்க, எரிச்சலோடு எழுந்து உள்ளே சென்றாள் எழில்.

எழிலில் செல்லவும் விமலா உதயிடம் பேச்சிக்கொடுக்கத் தொடங்கினாள். சில நிமிடங்களில் திரும்பி வந்திருந்த எழில் முருங்கைக்காயை விமாலாவின் முகத்தின் முன் நீட்ட, அவள் வாங்கிக்கொள்ளவும் திரும்பி கோலமிடச் சென்றாள்.

அவள் திரும்புகையில் ஒரு நொடி அவள் முகத்தைப் பார்த்திருந்தான் உதய். அதில் கன்னங்கள் இரண்டும் ஊதி வீங்கி இன்னும் செந்நிறமாகவே இருந்தது. ‘ரொம்ப தான் அழுத்திட்டோம் போல அதிகமா வலிச்சிருக்குமோ?’ என அனுதாபம் கொண்டவன் பேசும் சூழல் இல்லாததால் கிளம்பிச் சென்றான்.

காலை ஏழுமணிக்கே வாக்குப்பதிவுகள் தொடங்கிவிட்டது. உதயன், அழகன், கரிச்சட்டி அவர்கள் ஆதரவாளர்களுடன் சென்று காலையிலே வாக்களித்தனர். திரும்பி வந்தவர்கள் ஒரு மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு அழகனின் கடையிலிருந்து கொண்டு வந்து போட்டிருந்த நாற்காலி, மேசையில் அமர்ந்துக் கொண்டனர். அவர்களுக்கு சிறிது தொலைவிற்கு முன்பே சிவாவும் அவன் ஆட்களோடு அமர்ந்திருந்தான்.

அவ்வழியாக வாக்களிக்கச் செல்லும் ஊர் மக்களுக்கு, டீ, காபி, குளிர்பானங்களும் கொடுத்து தங்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். மதிய வேளையில் பிரியாணி பார்சலும், மாலை வேளையில் இன்னும் வாக்களிக்காத முதியவர்களை வீடுவீடாக தேடிச் சென்று போட்டிப் போட்டு வண்டியில் அழைத்து வந்து வாக்களிக்க வைத்தனர்.

இத்தனை வருடங்களாக போட்டியாளர் இல்லாததால் ஊர் மக்களுக்கு இவ்வளவு சலுகைகள் கிடைத்ததில்லை. ஆனால் இம்முறை உதயன் போட்டியாளராகி விட, ரெங்கநாதனுக்கும் உதயனின்

ஆளுமையில் சற்றே பயம் பற்றிக்கொள்ள வாக்களர்களை சிறப்பாகக் கவனித்தார்.

ரெங்கநாதனுடன் வந்த பரமேஸ்வரி கணவனின் முன் உதயனுக்கு எதுவும் ஆதரவு வார்த்தைகள் சொல்ல இயலாது மௌனமாகச் சென்றுவிட்டார். காலையிலே ராஜாவும் தன் மனைவி பவித்ராவுடன் வந்து வாக்களித்துவிட்டு வீட்டிற்கு சென்றிருந்தான். என்ன தான் ராஜாவின் மீது கோபம் இருந்தாலும் கர்ப்பவதியான பவித்ராவை நன்கு கவனித்தார் பரமேஸ்வரி.

வாக்களித்துவிட்டு வந்த அழகனின் தாய் சோலையம்மாளை வழிமறித்த கரிச்சட்டி, “ஆத்தா சும்மாவே உனக்கு கை கதகளியாடும், கண்ணும் தெரியாது சரியாப் பார்த்து உதய் அண்ணாவுக்கு வோட்டு போட்டியா?” என்றான்.

“போட்டேன்டா, ஒன்னுக்கு பத்து வோட்டு போட்டிருக்கேன்டா” என்க, “எது..எது..? பத்து வோட்டா..! என்ன ஆத்தா சொல்லுற?” என்றான்.

“ஆமாடா, அதே பட்டனை பத்து தடவை அழுத்துனேன், சரி ஒரு கிளாஸ் டீ கொடேன்” என்க, “அந்த வோட்டு மிஷின்ல ஓட்ட விழுற வரைக்கு நீ அழுத்தினாலும் ஒரு வோட்டு தான் விழுகும். நீயெல்லாம் செல்லாவோட்டு லிஸ்ட் இதுல டீ வேறையாக்கும், இது மசாலா டீ இதை குடிச்சா போற வழியிலே சுருண்டு விழுந்திடுவ, ஒழுங்கா வீடு போய் சேரமாட்ட பார்த்துக்கோ” என்றான் மிரட்டலாக.

“நான் பார்க்காத மசாலா டீயாடா? ஒத்தபனை கள்ளை ஒரு சட்டிக் குடிச்சாலும் அசராத கட்டைலே” என்றவாறு அவனை ஒரு தள்ளு தள்ளிவிட்டுச் செல்ல அவன் தான் சுருண்டு விழுந்தான்.

வெளியூரில் வேலை செய்யும் இளைஞர்கள் எல்லாம் தேர்தலுக்காவே வந்திருக்க, அதில் உதயனின் நண்பர்கள் கூட்டமும் வாக்களித்துவிட்டு உதயனோடு மரத்தடியில் ஒன்று கூடினர். திருவிழாவிற்கு கூட சிலர் வர, சிலர் வாராமல் இருப்பார். ஆனால் ஐந்து

வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் தேர்தலுக்கு அனைவரும் வந்துவிடுவர். அவ்வூரில் பெரும்பாலும் தொண்ணூறு சதவீகிதத்திற்கும் குறையால் வாக்குகள் பதிவாகிவிடும். நெடுநாட்களுக்குப் பின் நண்பர்கள் ஒன்று கூடுகையில் அதுவரை இல்லாத உற்ச்சாகங்களும், கொண்டாட்டங்களும் கூடியது. திருவிழாவை விட தேர்தல் அன்று அவ்வூரே ஜெஜெவென இருளும் வரை இருந்தது.

கோவிந்தசாமியின் சுறுசுறுப்பான தேடலில் அந்த வார இறுதிலே மாப்பிள்ளை வீட்டினர் எழிலைப் பெண் பார்க்க வந்திருந்தனர். காலையிலிருந்து வீடே பரபரப்பாக இருக்க, சுந்தரி சொல்லும் வேலைகளை உதய்யும் கோவிந்தசாமியும் மறுக்காமல் செய்துக் கொண்டிருக்க, சமையலறை முழுவதும் சுந்தரியின் கை வண்ணத்தால் மணம் கமழ்ந்தது. அதன் பின்னே எழிலுக்கு விஷியம் தெரிய வந்தது.

தெரிந்த பின்னும் அவள் பெரிதாக ஆர்பாட்டம் எதுவும் செய்யவில்லை. உதயனுக்கு இருக்கும் நற்பெயரைக் காக்கவும், ஊர் வாயை அடைக்கவும், சிவா என்ற இம்சையிடமிருந்து தப்பவும் இது ஒன்று தான் வழியோ? என நினைத்தாள்.

மாலை நேரம் மாப்பிள்ளையின் பெற்றோர்கள் மற்றும் உறவுகள் என சிலர் வர, எழிலின் வீட்டிலும் அவர்கள் தெருவினர்கள் நிறைந்திருந்தனர். நற்குணங்களும், நல்லகுடும்பமும், கை நிறைந்த சம்பளமோடும் ஓசூரில் வேலை செய்யும் மாப்பிள்ளை ஆகையால் எழிலின் பெற்றோர்களுக்கு மனம் நிறைந்தது. எழிலின் அழகும் அமைதியும் அவர்களுக்குப் பிடித்து விட, மகனுக்கு காட்டவென அவளின் ஒரு புகைப்படத்தையும் வாங்கிச் சென்றனர்.

அத்தனை மனிதற்களுக்கு நடுவில் நின்ற எழிலுக்கு இதற்கு முன் ஊர் பார்க்க கதிரோடு  நிச்சியக்கப்பட்டு அவனோடு நின்ற நாட்களும் நினைவில் வந்து கலங்கச் செய்தது. காலங்கள் கடக்காமல் காயங்கள் ஆறாது, கடந்த காலங்கள் ஒருபோதும் திரும்பாது.

மறுநாளே விஷியம் சிவச்சந்திரனின் காதுகளுக்கு வந்துவிட, கொதித்துப் போனான். இதற்கு மேலும் அவள் மனம் மாறுவாள் என காத்திருப்பதும், பொறுமை காப்பதும் வீண் என்று நினைத்தான். நியாய தருமம் பார்க்காது பணத்திற்காக சில வேலைகளைச் செய்யும் ராஜாவின் ஆட்களை அழைத்தவன் கம்யூட்டர் கிளாஸ் சென்று வரும் எழிலரசியை கடத்தி வரும் படி கட்டளையிட்டான். அதே போல் இந்த விஷியம் தன் தமையனுக்கும் தந்தைக்கும் தெரியக்கூடாது என்றும் உரைத்தான்!

இதற்கிடையில் எழிலின் பெற்றவர்கள் மாப்பிள்ளை வீட்டினரின் பதிலுக்கு காத்திருக்க, உதயன் தேர்தல் முடிவிற்கு காத்திருந்தான்.

## அத்தியாயம் 15

காலையிலே சிவாவின் தென்னத்தோப்பில் இருக்கும் பண்ணை வீட்டை நோக்கி கையில் நான்கு உணவு பார்சலுடன் சென்று கொண்டிருந்தான் கரிச்சட்டி. அழகன் கடையை திறக்கும் போதே அவ்வழியாகச் சென்ற சிவா சொல்லிவிட்டுச் சென்றிருந்தான். சாலையில் சைக்கிளை நிறுத்திவிட்டு கையில் சாவியை ஆட்டிக்கொண்டு வந்தான் கரிச்சட்டி.

சுழற்றிய வேகத்தில் சாவி புதருக்குள் விழுந்துவிட குனிந்து அதை தேடிக்கொண்டிருக்க, சற்று தொலைவில் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்த இருவரின் உரையாடல் காதில் விழுந்தது. ஒன்பதுமணி பேருந்தில் செல்லும் எழிலை தாங்கள் இருவர் பின் தொடர்ந்து செல்வதாகவும் கம்ப்யூட்டர் கிளாஸ் செல்லும் வழியிலும் வரும் வழியிலும் யாருமில்லாத இடத்தில் கடத்துவதாகவும் நீங்கள் இருவரும் காரை எடுத்துக்கொண்டு பின்தொடருமாறும் ஒருவன் மற்றொருவனிடம் திட்டத்தை விவரித்தான்.

புதர் மறைவில் இருந்த கரிச்சட்டையை அவர்கள் கவனிக்காது போக அனைத்தையும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த கரிச்சட்டி திகைத்தான். அவர்கள் உள்ளே செல்லவும் எழுந்தவன் எதுவும்

அறியாப்பிள்ளை போலே உள்ளே சென்று உணவை கொடுத்துவிட்டு, தெரியாத வெளியூர் ஆளாக இருப்பினும் அவர்கள் முகங்களை நன்கு அடையாளம் கண்டுகொண்டு வந்தான்.

எழிலை கடத்தி வரும்படி இரவோடு இரவாக இவர்களை அழைத்து திட்டங்கள் யாவையும் உரைத்துவிட்டு விடிந்ததும் மதுரையை நோக்கிச் சென்றுவிட்டான் சிவச்சந்திரன்.

மணிவேறு ஒன்பதை நெருங்கிவிடவே பதைபதைப்போடு எழிலின் வீட்டிற்கு ஓடினான் கரிச்சட்டி. அவள் வீடு பூட்டியிருக்க பேருந்து நிறுத்தத்திற்கு ஓடிவந்தான். என்றும் தாமதமாக வரும் பேருந்து இன்றேனோ அதிசயமாய் விரைவாக வந்திருக்க சற்று முன் தான் எழில் சென்றிருந்தாள். பேருந்து நிறத்தமே வெறிச்சோடியிருக்க, அழகனின் கடைக்குத் திரும்பினான்.

மூச்சு வாங்க, வியர்க்க விறுவிறுக்க வந்தவன் கடைக்குள் அங்குமிங்கும் சுற்றியவாறு அழகனின் முன் வந்து நின்று, “அண்ணே உதயண்ணே எங்க?” என்றான்.

“எதுக்குலே என்னாச்சு?” எனக் கேட்டவனுக்கும் பரபரப்பு பற்றிக்கொள்ள, “காலையில இருந்து இன்னும் அண்ணன் வரலைடா” என்றான் மணி.

மறுநொடியே எதிரே இருக்கும் கோவிந்தசாமியின் மெக்கானிக்செட்டிற்கும் ஓடிச்சென்று தேட அங்கும் உதயனை காணாது ஏமாற்றத்தோடு திரும்பி வந்தான்.

“என்னனு கேட்டுக்கிட்டு இருக்கேன், நீ பாட்டுக்கு போறியேடா?” என அழகன் மீண்டும் கேட்க, அவனை தள்ளிவிட்டு மேசையில் இருந்த அழகனின் கைப்பேசியை எடுத்து உதயனுக்கு அழைத்தான்.

உதயனும் டவுனில் இருப்பதாகச் சொல்ல, சிவாவின் தோப்பில் தான் கேட்டவற்றை உரைத்தவன் எழிலை காக்கும் படி வேண்டினான். கேட்டுக் கொண்டிருந்த அழகனும், மணியும் திகைத்தனர். சிவா எழிலைக் கடத்துவதற்கான காரணம் புரியாது ஒருவேளை

உதயனை பழிவாங்குவதாக நினைத்து முட்டாள்தனமான திட்டம் தீட்டிவிட்டானோ என நினைத்தனர்.

கேட்ட உதயனுக்கு நாடி நரம்பெல்லாம் பதைபதைக்க ஆரம்பித்துவிட்டது. தன் வேலையை அப்படியே விட்டுவிட்டு தான் இருக்குமிடத்திலிருந்து எழிலின் இன்ஸ்டூட்டுக்கு விரைந்தான். உள்ளே சென்றவன் ஏதோ தகவல்கள் கேட்டறிந்துக்கொள்வது போலே நோட்டமிட்டு எழில் இருப்பதை உறுதி செய்துவிட்டு வெளியில் வந்துவிட்டான்.

எதிரே இருக்கும் பழக்கடைக்குள் சென்று ஒரு ஜூஸ் ஆடர் கொடுத்துவிட்டு அமர்ந்தவன் சுற்றும் முற்றும் வேடிக்கைப் பார்த்தான், யார் கடந்த வந்தனர் என தெரியவில்லை. சில மணி நேர காத்திருப்புக்கு பின் எழில் வெளியே வர, சர்ரென்று அவள் முன் பைக்கோடு வந்து நின்றான்.

“சீக்கிரம் ஏறு கிளம்பணும்..” என அவசரப்படுத்த, “எதுக்கு? நான் பஸ்லையே வந்துக்கிடுறேன், உங்க வேலை முடிஞ்சா நீங்க வீட்டுக்குப்போங்க” என்றவள் படிகளில் இருந்து இறங்க எத்தனிக்க, அவள் கைகளைப் பற்றினான்.

சிவா உண்மையை சொல்லினானோ பொய் சொல்லினானோ ஆனால் இருவர் பற்றிய பேச்சுக்கள் ஊருக்குள் இருப்பதாக அறிந்ததும் உதயனை தள்ளி வைக்கத் தான் முயன்றாள்.

“எழில் விதண்டாவாதம் செய்யவோ, வாதாடவாவோ இது நேரமில்லை! உன்னை விட்டுட்டுப் போறதாவும் நானில்லை” என்றவன் பிடியின் அழுத்தம் கூட்டினான். கைகளை விடுவித்துக்கொண்டவள் அவன் முகத்தில் உள்ள தீவிரத்தை உணர்ந்து அமைதியாக அவன் வண்டியில் ஏறினாள்.

உள்ளிருந்து சற்று தூரம் வந்தவன் மெயின் ரோட்டில் ஏற, சிவா அனுப்பிய ஆட்களின் கார் அவனை பின் தொடரத் தொடங்கியது, சில நிமிடங்களிலே உதயன் அதைக்கண்டு கொண்டான். தங்கள் ஊர் செல்லும்

பாதையிலே செல்ல குறுகலான பாதையில் செல்லும் போது வலதுபுறம் கார் வந்து மோதப் பார்க்க, அப்போதே எழில் அதை உணர்ந்தாள்.

சற்றே கவனமுடன் விலகி விலகி வந்தவன், தோப்புப் பாதையில் வளைந்து திரும்பிவிட்டான். இருசக்கர வாகனம் மட்டுமே செல்லும்படியான ஒற்றையடிப் பாதையது ஆகையால் அவர்கள் கார் பின் தொடர இயலவில்லை. கோவிந்தசாமி செட்டிலோ அழகனின் டீக்கடையிலோ எங்கும் நிற்காது நேராக வீட்டுவாசலிலே வந்து இறக்கிவிட்டான்.

இறங்கியள் வீட்டிற்குள் செல்ல எத்தனிக்க, “எழில் நில்லு..?” என்றான். அவள் திரும்பிப் பார்க்கவும், “சிவாவுக்கும் உனக்கும் எதுவும் பிரச்சனையா? உங்கிட்ட எதுவும் வம்பு பண்ணானா?” எனக் கேட்க, எழில் திகைக்க, அதையும் அவன் கண்டுகொண்டான்.

“நீங்க யாரு அதைக் கேட்க..?” என்றாள் கோபமாக, ஆனால் அதற்கும் மேல் உதயனுக்கு கோபம் வந்தது. தன் கேள்விக்கு பதில் தராததாலோ இல்லை வார்த்தைகளில் அந்நியப்படுத்தியதாலோ அவனுக்கே தெரியவில்லை.

“கேள்வி கேட்டா அதுக்கு பதில் சொல்லிப்பழகு, எதிர் கேள்வி கேட்காத? இதுவே கதிரா இருந்திருந்தா சொல்லியிருக்க மாட்டியா?” என்றான் குரலில் அழுத்தம் கூட்டி.

“நீங்க ஒன்னும் கதிர் மாமா இல்லை, அன்ட் நீங்க கதிர் மாமாவாகவும் முடியாது” என்றாள் பட்டென்று.

அந்த வார்த்தைகள் கத்தி போல் கீறினாலும், “ரைட் நான் கதிர் இல்லை, கதிராகவும் நினைக்கலை. உதயனோட தனி அடையாளமும், தனித்துவமும் என்னைக்கும் மாறாது  மாத்திக்கவும் மாட்டேன்” என்றவன் பைக்கை திரும்பிக்கொண்டு சென்றான். இதற்கு மேல் அவளிடம் வாதாடினாலும் பதில் கிடைக்காது என நன்கு அறிந்திருந்தவன்.

இதுவே கதிராக இருந்திருந்தால் பணிந்து, கெஞ்சி, பாசமாகப் பேசி அவள் பிடிவாதத்தை பிடிவாதத்துடன்

உடைத்து பதில் வாங்கியிருப்பான். உதயனுக்கும் கதிருக்குமான வித்தியாசம் நன்கு தெரிந்தது எழிலுக்கு.

உதயன் சினம் கொள்வதே அரிது, இன்று சினம் வர அதையும் எழில் பேசி ஏற்றுவிட்டிருந்தாள். கொதிக்கும் எரிமலையானவன் சிவச்சந்திரனை தேடிச்சென்றான். தோப்பிற்குச் செல்ல வேலையாட்கள் அவனை உள்ளே விடாது தடுக்க முயல, அவர்களை தள்ளிவிட்டு உள்ளே சென்று முழுவதும் தேடிப்பார்த்தான். எங்கும் சிவாவைக் காணாது ஏமாற்றம் கொண்டவன் மதுரைக்கே தேடிச் சென்றான்.

எழிலரசியை சிவா கடத்த முயன்றதன் நோக்கம் தான் என்னவோ? தன்னை குறி வைத்து தவறாக எழிலை கடத்த முயன்றானா அந்த முட்டாள்? இல்லை எழிலுக்கும் அவனுக்குமிடையில் ஏதேனும் பிரச்சனைகள் இருக்குமா? ஒருவேளை கதிரின் மீது இன்னும் தீராத வெறியை வைத்துக்கொண்டு எழிலை துன்பப்படுத்த நினைத்தானா?

எப்படி இருந்தால் என்ன? ஆனால் அவன் எவ்வாறு ஒரு பெண்ணை கடத்த நினைக்கலாம்? அவ்வளவா தரம் தாழ்ந்து சென்றுவிட்டான்? தன் வீட்டில் அனைவரும் பெண்களை மதிப்பவர்கள் தானே! பெரியம்மா என்னை வளர்த்தது போன்று தானே அவனையும் வளர்த்தார் அவனுக்கு மட்டும் எப்படி இப்படி சிறுபுத்தி வந்தது?

நேராக ராஜா வீட்டிற்குச் சென்றான், பவித்ராவும் குழந்தையும் மட்டுமே இருக்க ஏதுவும் சொல்லயியலாது பொதுவான நலம் விசாரிப்போடு திரும்பி விட்டான். பவித்ரா திருமணம் முடித்து வந்த இந்த நான்கு வருடங்களில் உதயனுமே நான்கைந்து முறைதான் பார்த்திருப்பான். அதிகம் பேசியதில்லை எனினும் அண்ணி என்ற மரியாதை கொண்டுள்ளான்.

அடுத்தாக ராஜாவின் பள்ளிக்குச் சென்றவன் கோபமுடன் சிவாவைப் பற்றி விசாரிக்க, உண்மை அறியாது அவனும் கோபம் கொள்ள அனைவரின் முன்பும் சண்டையிட்டுவிட்டு, என் கண்ணில் படுகிற

நாள் உன் உடன்பிறப்பிற்கு வாழ்நாளின் கடைசி நாளாக தான் இருக்கும் என மிரட்டிவிட்டு வெளியே வந்தான்.

உதயன் சொல்லவும் சிவாவிற்கு அழைத்தான் ராஜா. பல முறை அழைக்க, அதன் பின்னே எடுத்தான் சிவா.

“ஊருல இல்லாமா எங்கடா இருக்க?” என எடுத்ததும் ராஜா அதட்டலாகக் கேட்க, திகைத்த சிவா, “காலேஜ் ப்ரண்ட்ஸ் திடீர்னு கோவா கிளம்புனாங்க, என்னையும் கூப்பிட்டாங்க. அதான் சரின்னு நானும் கிளம்பி வந்துட்டேன் எதுக்குடா?” என்றான்.

“ஏலேய் பொய் சொல்லாதலே, நீ பாண்டியன் லார்ஜ்ல தான் இருக்கன்னு தெரியுது. விடிஞ்சதும் வீடு வந்து சேரு. ஆமா உதய் கூட என்ன பிரச்சனை பண்ண? உன் மேல கொலை வெறியில சுத்திக்கிட்டு இருக்கான். தோப்புலையும் தகராறு பண்ணி இருக்கான், இங்கையும் வந்து கத்திட்டுப்போறான்” எனக் கேட்க, “அது ஒன்னுமில்லை எங்களுக்குள்ள சின்ன சில்லறைப் பிரச்சனை நீ கண்டுக்காத விடு” என்றவன் அழைப்பை கட் செய்தான்.

தனக்கும் உதய்க்கும் பிரச்சனையே இல்லை. எழிலை கவர நினைக்க இவன் ஏன் இடையில் வருகிறான்? இத்தனைக்கும் எழில் மீது காதலும் கிடையாது! என எரிச்சல் கொண்டான். அவன் திட்டமெல்லாம் எழிலுக்கு வீட்டில் திருமணம் பேச்சுவார்த்தைகள் உறுதி செய்வதற்குள் அவளை கடத்தி கட்டாயப்படுத்தியாவது தாலிக்கட்டி மனைவியாக்கிக்கொள்ள வேண்டும் என்பது தான்.

அவன் ஆட்கள் இன்று கடத்தமுடியவில்லை என்று சொல்ல, மீண்டும் முயற்சிக்க சொல்லினான். அத்தனை எளிதாய் விட்டுவிட மாட்டான் சிவச்சந்திரன்.

உதய் நகர் முழுவதும் அவன் செல்லும் இடங்களில் எல்லாம் சென்று தேடினான். நள்ளிரவு வரையும் கூட தேடியவன் எங்கும் கிடைக்காது அதன் பின்னே

ஊருக்குக் கிளம்பினான். இரவு தாமதமாக உறங்க, காலையிலே ஒன்பது மணி போலே கண்விழித்தான்.

வாயில் டூத் ப்ரஸ்ஷோடு கீழே வர எழில் அப்போது தான் கிளம்பிக்கொண்டிருந்தாள். வாசல் தாண்டி வந்தவள் காலணிகளை அணிந்துக் கொண்டு கிளம்ப, எதிரே வந்து வழிமறித்து நின்றான் உதயன். உதயனை எவ்வளவு தள்ளி வைக்க முயன்றும் முடியாது போக இயலாமையில் தவித்தாள் எழில்.

கோபத்தோடு முறைப்பாய் பார்க்க, கண்டுகொள்ளாதவன், “இனி கம்ப்யூட்டர் கிளாஸ் போக வேண்டாம், கொஞ்ச நாளைக்கு” என்றான். சமீப காலமாக கொஞ்ச நாட்களாக முறைக்காமல் இருந்தவள் மீண்டும் முறைக்க, அவனுக்கு நன்கு பழகிவிட்டதால் கண்டுகொள்ளவில்லை.

அவளோ அவனைத் தாண்டி செல்ல எத்தனிக்க, அவள் முன் கரம் நீட்டியவன், “சொல்லிகிட்டே இருக்கேன் நீ பாட்டுக்குப் போற, என்ன காது கேட்கலையா?” என்றான் குரல் உயர.

“எதுக்கு போகக்கூடாது..?” அவள் அழுத்திக் கேட்க, “எல்லாம் உன் நல்லதுக்கு தான்..” என்றான் ஒற்றை வார்த்தையாக.

“என் மேல் உங்களுக்கு என்ன அக்கறை? அக்கறைப்பட தான் நீங்க யாரு எனக்கு?” என்றாள் சட்டென.

எரிச்சலானவன் ‘போடி அரலூசு..’ என மனதில் நினைத்தபடி வீட்டு வாசலில் சென்று நின்று உள்ளிற்கும் சுந்தரியை அழைத்தான். சுந்தரியிடம் எழிலை சிறிது நாட்களுக்கு வெளியே அனுப்ப வேண்டாம் என்க, அவர் சரியென தலையாட்டவும் தன்னறைக்குச் சென்றான்.

அழகனின் கடைக்கு வந்தவன் சிவாவைப் பற்றி விசாரிக்க அவன் இன்னும் வீட்டிற்கு வரவில்லை என கடைக்கு வந்திருந்த அவன் வீட்டு வேலையாள் ஒருவர் சொல்லிவிட்டுச் சென்றார். அன்று தேர்தல் முடிவுகள் வரயிருப்பதால் வாக்கு எண்ணும் மையத்திற்கு

சென்றான், சிவா அங்கு வருவதற்கு வாய்ப்பிருப்பதாக நினைத்தான்.

அழகனோ பட்டாசுகளும், இனிப்புகளும் வாங்கி வைத்துக்கொண்டு உதயனின் தேர்தல் முடிவிற்காக காத்திருந்தான். அவ்வவ்போது கைப்பேசியில் அழைத்து யார் முன்னிலையில் உள்ளனர் எனக் கேட்டான்.

“நடந்தது ஊராட்சி தேர்தல் இதுல முன்னிலை நிலவரம் வேற நொடிக்கு நொடி சொல்லுறாங்களாக்கும், கொஞ்சம் நேரம் பொறுமையா இருடா மாப்பிள்ளை ரிசல்ட் சொல்லிடுவாங்க” என அமைதிப்படுத்தி வைத்தான் உதய்.

அழகன் பொறுமை சிறுக சிறுக காற்றில் கரைந்துக்கொண்டிருக்க, அரசமரத்தடியில் இருந்த ரெங்கநாதனின் ஆட்கள் பட்டாசு வெடித்து தாங்கள் வெற்றி பெற்றாதாக கொண்டாட ஆரம்பிக்க, அழகின் மூக்கு, காதுகில் இருந்து புகை தான் வந்தது. அவனுக்கே சற்று ஏமாற்றமாக தான் இருந்தது.

“காசுக்கு வோட்டுப்போட்டவனுக்க எல்லாம் கஷ்டப்படும் போது தான் நம்ம அருமை தெரியும், இந்த ஊர் இனி எத்தனை வருஷமானாலும் முன்னேறப்போறதில்லைடா. நன்றி கெட்ட முட்டாள் கூட்டம். உழைப்பை நம்பாம ஓசியை நம்புனா எத்தனை நாளைக்கு வாழ்க்கையோடும்? அது என்னவோடா இந்த நல்லவனுக்க எல்லாம் அரசியல்ல இறங்கினா ஜெயிச்சதா சரித்திரமேயில்லையே ஏன்?” என கரிச்சட்டியிடம் மாலை வரை மன ஆதங்கத்தைப் புலம்பிக்கொண்டே இருந்தான்.

சற்றே சோர்ந்த தோற்றமாக உதயன் வந்து அமர, அவன் முதுகில் தட்டிக்கொடுத்த அழகன், “மாப்பிள்ளை வெற்றிகரமான தோல்வி அடைஞ்சதுக்கு வாழ்த்துகள்டா” என்றான் கலகலப்பாக.

உதய் லேசாக சிரிக்க, “நல்லவேளைடா இந்த சிவா பையன் ஊருக்குள்ள இல்லை, இருந்திருந்தா அவன் ஆட்டத்தை தாங்க முடியாதுலே” என்றான்.

அதே நேரம் சர்ரென்று கார் வந்து நிற்க, ரெங்கநாதன் இறங்கி உதயனின் முன் வந்தார். அவரும் உதயனின் தோள்களை தட்டிக் கொடுத்துவிட்டு, “வெறும் ஐந்து சதவீகித வாக்கு வித்தியாசத்துல ஜெயிச்ச இந்த வெற்றி எனக்கு ருசிக்கலைடா. பரவாவில்லை, இத்தனை வருஷம் தோல்வி பயமே இல்லாம இருந்தவனுக்கு இப்போ நீ பயம் காட்டிட்டடா” என்றார்.

“இது தான் நான் எதிர்பார்த்த என் வெற்றி” என்றான் உதய் மெல்லிய சிரிப்புடன். ரெங்கநாதன் ஏமாற்றமாய் அவனைப் பார்க்க, அவனிடம் வெற்றிக்களிப்பின் நகைப்பு. ஒரு பார்வையுடன் அவர் திரும்பிச் செல்ல, உதயன் மாறச் சிரிப்புடன் நின்றுகொண்டிருந்தான்.

“ஏன்டா ஜெயிச்ச சந்தோஷத்துல எம்மாமனுக்கு புத்தி கெட்டுப்போச்சா என்னடா? யார் ஜெயிச்சா யார் தோத்தா?” என்றான் அவர்கள் உரையாடல் புரியாது.

“அடேய் இதுவரைக்கும் அவருக்கு எதிரியே இல்லாத இடத்துல யாரும் எதிர்த்து நினைக்காத இடத்துல நான் நின்னிருக்கேன்னா அதுவும் என்னைப் பார்த்து அவர் பயத்திருக்காருன்னா அது தான் என் முதல் வெற்றி அதை தான் அவர் சொல்லிட்டுப்போறாரு” என விளக்கினான்.

அப்போதும் அழகன் விழித்துக்கொண்டிருக்க, “பதில் சொல்லுற இடத்துல இருக்கிறதை விட கேள்வி கேட்கிற இடத்துல இருக்கிறது நல்லது தானே அழகா, இது ஒன்னும் பெரிசா தோல்வியா தோனலை, ஐந்து வருடம் தானே அடுத்த தேர்தல்ல பார்த்துக்கிடலாம்” என்றான் தைரியமாக.

அந்த மனதிடம் அழகனை ஆச்சர்யப்படுத்தியது! ஆமாம் கதிராக இருந்திருந்தால் வெற்றியை எதிர்பார்த்திருப்பான் ஆனால் உதயன் வெற்றியை எதிர்பார்த்து நிற்கவில்லை, கதிர் இல்லாத இடத்தில் ஒரு எளிவனாய் அவர்களை எதிர்த்தான். அதனாலே உழைப்பிற்கான பலனாய் ஐந்து சதவீகித வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை இழந்த போதும் ஏமாற்றமோ வருத்தமோ அவனுக்கு இல்லை.

உதயன் வீட்டிற்கு வர, தெருமக்களும் மேலும் நான்கு ஐந்து பேரும் வாசல் திண்ணையிலே அமர்ந்திருந்தனர். பார்த்ததுமே தெரித்தது மாப்பிள்ளை வீட்டார்கள் தான் என, கோவிந்தசாமி மறுபுறம் திண்ணையில் அமர்ந்திருக்க அருகே சுந்தரி இருக்க, வாசலுக்கு நேராக உள்ளே தூணில் சாய்ந்தவாறு எழில் இருந்தாள்.

“ஏதா இருந்தாலும் வீட்டுக்குள்ள போய் பேசிக்கிடலாமே? உள்ள வாங்க” என சுந்தரி அழைக்க, “நாங்க ஒன்னும் சம்மந்தம் பேச வரலைம்மா” என்றார் ஒருவர்.

“நிச்சியம் செய்த அந்தப் பையன் செத்துப்போய் அதிஷ்டமில்லாதவன்னு பெயர் வாங்கின போதும் பரவாயில்லைன்னு சம்மந்தம் பேசுனோம் ஆனால் இப்போ தானே உண்மை தெரியுது, இந்தப் பையனுக்கும் உங்க பொண்ணுக்கும் பழக்கம் (காதல்) இருந்து அவன் குடும்பத்தோட உங்களுக்கு ஆகாது, பிடிக்காதுன்னு அதை மறைச்சி எங்களை ஏமாத்தப்பார்க்குறீங்களா?” என உதயனை கைநீட்டி உரைத்தார் மற்றொருவர்.

“விசாரிச்ச போதுல தெரிஞ்சது, இந்த ஊரே இவங்களைப் பத்தி தான் பேசுதுன்னு. இதுக்கும் மேல உங்களோட எங்களுக்கு சம்மந்தப் பேச்சில்லை, உங்க பொண்ணு வேண்டாம்” என நேரடியாக மற்றொருவர் உரைக்க, “போதும் நிறுத்துங்க, என் பொண்ணை பத்தி நீங்க யாரு பேச? நீங்க கேட்டாலும் உங்கள மாதிரி ஆளுங்க இருக்குற வீட்டுக்கு என் பொண்ணை கட்டிக்கொடுத்து அனுப்ப மாட்டேன். முதல எல்லாரும் வீட்டை விட்டு கிளம்புங்க, நீங்க நின்ன இடத்தை சாணியை போட்டுத் தான் கழுவணும்” என சுந்தரி உச்சக்கோபத்தில் பொரிந்தார்.

கோவிந்தசாமி அவரை அமைதிப்படுத்த முயல, வந்தவர்கள் அனைவரும் கிளம்பினர். கேட்டுக் கொண்டிருந்த உதய் பாதி புரிந்தும் மீதி புரியாமலும் திகைக்க, எழில் மௌனமாய் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

எந்த செய்தி பெற்றவர்களின் காதுகளுக்கு வரக்கூடாது என நினைத்தாலோ இன்று அது நிகழ்ந்து விட அந்த வேதனை தாங்காது மேலும் கண்ணீர் வடித்தாள். எழிலின் கண்ணீர் உதயனின் இதயத்தில் அமில வீச்சைப்போன்று எரியத் தொடங்கியது. தான் காரணமே இல்லை என்ற போதும் தன்னால் ஒரு இளம்பெண் கண்ணீர் விடுகிறாள், தன்னால் அவளுக்கு நிகழவிருந்த திருமணம் தடைபட்டு விட்டது என நினைக்க வேதனை மேலும் பெருகியது.

கோபத்துடன் வீட்டிக்குள் வந்த சுந்தரியின் பார்வையில், எழில் அழுவது விழ மேலும் கோபம் கொண்டவர் அவளை அடித்தவாறு, “இப்படி நீ அழுது அழுது கரையிறதுக்கு அரளிவிதைய தின்ன அன்னைக்கே செத்துப் போயிருக்காலாம்டி” என்றார்.

உதயனால் இந்த வார்த்தைகளை கேட்க இயலவில்லை, என்ன வேகம் வந்தது, எந்த விசை தள்ளியது எனத் தெரியவில்லை அனைவரும் பார்க்க சட்டென உள்ளே வந்தவன் சுந்தரியின் அடிக்கும் கரத்தை தடுத்துப் பிடித்துக் கொண்டு எழிலை தன்னருகே பாதுகாப்பாய் இழுத்து நிறுத்தினான்.

“இப்போ எதுக்குக்கா அவளை அடிக்கிற?” எனக் கோபமாக கேட்க, “இனி இவளை வைச்சிக்கிட்டு என்னடா செய்யட்டும் நான்? ஒத்தப்பிள்ளையா இவளை பெத்து வளத்தது எதுக்கு தூணுக்கு துணையா கடைசி வரைக்கும் வீட்டுல வைச்சுக்கவா? இனி எந்த மாப்பிள்ளைடா வருவான்?” எனக் கண்ணீருடன் கேட்டார் சுந்தரி.

“உங்களுக்கும் இவளுக்கும் சம்மதம்னா நானே எழிலை கல்யாணம் செஞ்சிக்கிடுறேன்” என வேகத்தில் உரைக்க, அனைவரும் அவனை திகைத்துப் பார்த்தனர். “நீங்களே முடிவு செய்து சொல்லுங்க” என்றவாறு நொடி நேரத்தில் வெளியேறி விட்டான்.

யார் இவ்வாறு ஊருக்குள் வதந்தி பரப்பியது முதலில் கண்டுபிடிக்கிறேன், கண்டுபிடித்தபின் அவர்களுக்கு இருக்கிறது என நினைத்தபடி தன்னறைக்குச் சென்றான்.

நானே இவனை தவிர்க்கும் நிலையில் இவனாகவே வழிய வந்து விழுகிறானே! இவன் முடிவு சிவாவிற்கு தெரிந்தால் இவன் நிலை என்னவாகும்? என நினைத்துப் பார்த்த எழில் கலங்கினாள்.

## அத்தியாயம் 16

நைந்த மனதுடன் இன்னும் திண்ணையிலிருந்த கோவிந்தசாமியிடம், "இந்தாடா அதான் அந்த புள்ளையே கேட்குதே இதுக்கு மேல என்ன? பேசாமா கட்டிக்கொடுத்துடுடா மகனே. உன் ஒத்தபிள்ளையும் உன் கண்ணு முன்னாடியே வீட்டோட இருக்கும்" என பெரியவர் ஒருவர் செல்லிச் சென்றார்.

"வந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்களே இப்படி சொல்லிட்டுப் போயிட்டாங்க, இதுக்கும் மேல இனி எத்தனை மாப்பிள்ளை பார்த்தாலும் அவனுங்களும் இது தான் சொல்லப் போறாங்க, இன்னும் ஊருக்குள்ள உன் மானம் போறதுக்குள்ள பேசாமா உதயனுக்கே கட்டிக்கொடுத்துடு மருமகனே!" என மற்றொருவர் சொல்ல, "அது எப்படி சித்தப்பு வேலை வெட்டி சொத்து பத்து இல்லாத ஒருவனுக்கு நம்ம பொண்ணை கொடுக்கிறது?" என்றாள் ஒருத்தி.

"அது உதய்யை இந்த வீட்டுல தங்க வைக்கும் போதே யோசிச்சிருக்கணும்!" என்றான் நக்கலாக ஒருத்தன்.

"ஆளாளுக்கு என்னையா பேச்சு, அவன் குடும்ப விவகாரம் அவங்க பேசி முடிவு செஞ்சிப்பாங்க. எல்லாரும் கிளம்புங்க" என பெரியவர் அனைவரையும் கிளப்பிவிட்டார்.

எழில் அவள் அறைக்குள் சென்று அடைந்துக்கொள்ள, அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த பெற்றவர்கள் மனம் நொடிந்து போகினர். தன் மகளைப் பற்றி, தன் வீட்டு விஷயத்தைப் பற்றி யார் யாரோ பேசுகின்றனரே என நினைக்க மேலும் நொந்து போகினர்.

அன்றிரவு உதயனுக்கு உறக்கமே வரவில்லை. கதிரின் முகமும் சற்று நினைவில் வந்து இம்சிக்க, எந்த எண்ணத்தில் அவ்வாறு கேட்டேன்? எழிலின் கண்ணீர் என்னை ஏன் இவ்வளவு அசைக்கிறது? எழில்

சுந்தரியிடம் அடிவாங்கிப் பார்த்தே இல்லையா என்ன? இன்றேன் இந்த வேகம்? என்ற கேள்விகளோடு குழம்பிப் போயிருந்தான். என்னவோ தெரியாது வெகு நாட்களுக்குப் பின் சிறுவனாய் மாறியது போன்று தந்தைமடிக்கு ஏங்கினான்.

யாரோ நடந்து வரும் ஓசை கேட்க மெல்ல எழுந்தமர்ந்து பார்க்க, அழகன் வந்து கொண்டிருந்தான். அப்போதே கவனித்தான் நன்கு விடிந்திருந்தது.

அருகே வந்த அழகன், “இந்தாடா மாப்பிள்ளை ஏழுமணிக்கு மணி வந்து கேட்பான் இந்த சாவியை கொடுத்திடு. நான் அரசங்குளம் வரைக்கும் ஒரு விஷேசத்துக்குப் போயிட்டு மதியம் வந்திடுறேன்” என நீட்டினான்.

நீட்டிய அழகனின் கரத்தைப் பற்றி இழுத்து அருகே அமர்த்த, “அடேய் நான் என்ன உன் பொண்டாட்டியா? இல்லை முறைப்பொண்ணா கையப்பிடிச்சிழுக்க?” என்றான் தள்ளாடியபடி.

அமர்ந்த பின்னே உதயனின் முகம் பார்க்க தலை கலைந்து கண்கள் இரண்டும் சிவந்திருந்த தோற்றம் இரவெல்லாம் துளியும் நித்திரை கொள்ளவில்லை எனக் காட்டியது. பதறிய அழகன் என்னவென்று கேட்க, அனைத்தையும் உரைத்தான் உதயன்.

நேற்று தான் வீட்டிற்குள் வரும் போது ரத்தினம் “அத்தை இந்த சுந்தரி மகளும் உதய் அண்ணனும் விரும்புறாங்க போலிருக்கு டவுனுக்கு எல்லாம் ஒன்னாவே பைக்கில போறாங்களாம். அவளுக்காக தான் இவரு வீட்டை விட்டு வந்துட்டாரு போல இருக்கு. அதான் அன்னைக்கு பரமேஸ்வரி பெரியம்மா கோவில்ல வைச்சி சுந்திரிகிட்ட சண்டை கட்டுச்சாம்” என்க, “ஆமான்டி இரத்தினம், அன்னைக்கு எதிர் வீட்டு நிச்சியத்துல அவ பின்னாடியே இந்த பையன் சுத்துனான், அடிக்கடி மாடியில இரண்டு பேரும் பேசிக்கிடுறதை நானே நம்ம வீட்டு மாடியில இருந்து பார்த்திக்கேனே!” என்றதும் அவன் காதில் விழுந்தது.

ஆனாலும் அழகன் அவர்கள் பேசுவதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

தற்போது நினைவில் வர, “ஆமாலே, ரத்தினமும் எங்க ஆத்தாளும் உதய், எழிலுன்னு ஏதோ பேசிக்கிட்டு இருந்தாங்க. அது கண்ணுக்கு பகல்லையே பசுமாடு தெரியாது இராத்திரியிலையா எருமைமாடு தெரியப்போகுதுன்னு நான் தான் கண்டுக்கிடலை. அப்போ ஊருக்குள்ள பொம்பளைங்களுக்கு இந்தப் பேச்சு தான் போல இருக்கு!” என்றான்.

உதனின் முகம் மேலும் இறுகியது, அவன் தோளில் தட்டி, “என்னடா?” என்க, ஒன்றுமில்லை என்பது போல் தலையசைத்தவன் எழுந்தான்.

கீழே இறங்கி வந்தவன் முகம் கழுவ, அழகனும் பின்னே வந்தான். முன் வாசல் தெளித்துவிட்டு எதிரே வந்த சுந்தரி கண்டுகொள்ளாமல் செல்ல, உதயனின் முகம் வாடியது.

அதே நேரம் வாயில் வேப்பங்குச்சியோடு அவர்களை தாண்டிச் சென்ற கோவிந்தசாமியை நிறுத்தியவன், “இங்க பாரு கோவிந்தமாமா, என்னால உன் பொண்ணுக்கொரு கெட்டபெயர் வர வேண்டாம். இன்னைக்கே நான் வீட்டை காலி பண்ணிக்கிடுறேன். அதுக்குன்னு என்னை யாரையோ பார்க்கிற மாதிரி பார்க்க வேண்டாம்னு சொல்லு” என குரல் கமர உரைத்தான்.

குச்சியை கீழே போட்டுவிட்டு நிமிர்ந்த கோவிந்தசாமி, “மாப்பிள்ளை இன்னுக்கு ஜோசியரைப் பார்த்து நாள் குறிச்சிட்டு வரச்சொல்லி நேத்து நையிட்டே சுந்தரி சொல்லிட்டாடா, இப்போ போய் நீ பாட்டுக்கு வீட்டை காலி செய்யுறேன்னு சொல்லுற?” என்றார்.

“இப்போ தான் மதினி முறைச்சிட்டு அமைதியா போகுது” என அழகன் கேட்க, “அது இராத்திரி எல்லாம் அழுததுல அவளுக்கு தொண்டை கட்டிக்கிடுச்சு. இன்னைக்கொரு நாள் நான் அவகிட்ட வசவு வாங்காமா தப்பிசிக்குவேன்” என்றவாறு

கோவிந்தசாமி சிரிப்புடன் செல்ல, உதய்யும் அறைக்குச் சென்றான்.

கையில் கோலமாவுடன் வாசல் நோக்கி வந்த எழிலரசி அனைத்தையும் கேட்டிவாறு நிற்க, அவளை கண்டுகொண்ட அழகன் அருகே வந்தான்.

“இங்க பாரு எழிலு! உதய் தாயில்லாத பிள்ளை, உன்னை தங்கமா பார்த்துப்பான். வீராப்புல இவனை கட்டிக்க மாட்டேன்னு  மட்டும் சொன்ன, உங்கம்மா உனக்கு எப்படியும் வேற மாப்பிள்ளை தான் பார்க்கும். எந்த குப்பனோ, சுப்பனோ? அவனுக்கு பதில் சின்ன வயசுல இருந்து உனக்கு நல்லா தெரிஞ்ச உதயனே மேல், இதுக்கும் மேல உன் இஷ்டம்மா” என்ற அழகன் திரும்பிச் சென்றான்.

எழிலின் முகம் அமைதியோடு இறுக்கமாக, மனம் நொடி நேரத்தில் வேறொரு கணக்கிட்டது.

மாப்பிள்ளை வீட்டார் வந்து சென்றதிலிருந்து எழிலைக் கடத்த திட்டமிட்ட சிவாவின் முதல் முயற்சி தோல்வி அடைந்தது. அதன் பின்னும் அவன் திட்டத்தை விடவில்லை, ஆனால் எழில் வீட்டை விட்டு வெளியில் வராததால் கடத்த இயலவில்லை. ஆனால் இன்னும் அவன் ஆட்களின் கழுகுப் பார்வை எழில் வீட்டைச் சுற்றியே இருந்தது.

இதற்கிடையில் எங்கே திருமணம் உறுதியாகிவிடுமோ என்ற பயத்திலிருந்த சிவா முதலில் அவன் ஆட்களை அனுப்பி மாப்பிள்ளை வீட்டாரைப் பற்றி விசாரித்தான். பின் எழிலுக்குக் கதிருடன் நிச்சியம் முடித்து அவன் இறந்ததால் அவள் அதிர்ஷ்டமில்லாதவள் என்றும் தற்போது உதய்யுடன் அவளுக்கு காதலென்றும் பற்ற வைத்திருந்தான்.

அவன் நினைத்தது என்னவோ திருமணம் நிற்க வேண்டும் என்று தான், ஆனால் நிகழ்ந்தது என்னவோ

உதய்யுடனான திருமண உறுதி!

அன்று உதயனுக்கு அளவில்லாத சினம், இவ்வாறு வதந்தி பரப்பியவரை கண்டுபிடித்து கொல்லவேண்டும் என உறுதியுடன் இருந்தான். இதில் சிவச்சந்திரன் மீதும் சந்தேகம் இருந்தது ஆனால் விசாரிக்கிறேன் என மேலும் இவ்விஷயத்தை பரப்பி விடக்கூடாது என்ற எண்ணத்தில் விட்டுவிட்டான். அதே போல் சிவா கையில் சிக்குகிற நாள் சிறப்பாக கவனிக்க வேண்டுமென தற்ச்சமையம் கோபத்தை தள்ளி வைத்திருந்தான்.

இரவு உதயன் வீட்டிற்கு வர, திண்ணையில் அமரந்திருந்த கோவிந்தசாமி அழைக்க, அருகே சென்று அமர்ந்தான். “மாப்பிள்ளை வர பதிமூன்றாம் தேதி நாள் குறிச்சிக் கொடுத்திருக்காங்க உனக்கு சரிப்படும் தானே?” என்க, சரியென்பது போல் தலையாட்டிவன், “வேலை வெட்டி இல்லை, தேர்தல் நின்னும் தோத்துட்டேன், இனி என்ன பண்ணப்போறேன்னு எனக்கே தெரியலை” என்றான் பெருமூச்சோடு.

“அதை பத்தி உனக்கு என்ன கவலை? உன்னையும் கதிரையும் நாங்க வேறு வேறாப் பார்க்கலை உதய்” என்றவாறு சுந்தரி வர, அவரை மௌனமாய் பார்த்தான்.

“எதுக்கும் நீ உங்க வீட்டுக்குப் போய் பெரியவங்ககிட்ட ஒரு வார்த்தை கேட்டுடு” என்றார் கோவிந்தசாமி.

“அதெல்லாம் வேண்டாம் கோவிந்தமாமா, எழில் கிட்ட கேட்டுட்டு சரின்னா ஏற்பாடு செய்யுங்க” என்றவனுக்கு மனம் முழுவதும் இருந்தது ஒரு கேள்வி தான், முழுதாக ஒரு நாள் கடந்தும் எழில் இவ்வாறு அமைதியாக இருக்குறாளே ஏன்?

அனைத்தையும் எழில் கேட்டுக்கொண்டிருந்த போதும் எதுவும் சொல்லவில்லை. உதயன் அன்றேனோ தன்னையும் அறியாமல் உரைத்துவிட்டானே தவிர அது அவன் ஆசை இல்லை. அவன் பின் நகரப் பார்க்க, அதற்குள் சுந்தரி சம்மதித்து கோவிந்தசாமி நாள் குறித்தும் வந்துவிட்டார்.

அதன் பின்னான நாட்களில் ஏதாவது சாக்கிட்டு அடிக்கடி எழிலின் முன் வந்து நின்றான் உதய். அவளுக்கு விருப்பமில்லை எனில் கோபமாக வெளிப்படுத்திவிடுவாள் என உதய் எதிர்பார்க்க, அதற்கு அவளிடம் எந்தவித பிரதிபலிப்புமில்லை.

செல்வராஜ் இருக்கும் நேரம் கணித்து அபிராமியின் வீட்டிற்குச் சென்றவன் எழிலுடனான தனது திருமணம் குறித்து முறையாக அறிவித்தான். பொதுவாக திருமணம் என்றுரைக்காது தன் விருப்பத்தால் ஏற்பாடான திருமணம் என்றான். அப்போது தான் அபிராமி மறுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என கணித்திருந்தான்.

“நினைச்சேன் அவளுக்காக நீ உருகி உருகி அனுதாபப்படும் போதே என்னைக்காது ஒரு நாள் இப்படி வந்து நிப்பேன்னு தெரியும், நான் நினைச்ச மாதிரியே இன்னைக்கு நடந்திடுச்சே” என அபிராமி புலம்ப, அவன் அருகே அமர்ந்திருந்த ப்ரதிக்ஷா எழுந்து அவன் தாடையைப் பற்றி, “யாரு மாமா? அன்னைக்கு எனக்கு கல்கண்டு கொடுத்தாங்களே அந்த அத்தையா?” என்றாள்.

“ஆமாடி அவளே தான் இதை மனசில வைச்சிக்கிட்டு தான் அன்னைக்கே உனக்கு அத்தைன்னு சொல்லிக் கொடுத்திருக்கான்” என அபிராமி உரைக்க, “ஏன்க்கா? எழிலை உனக்கு பிடிக்கலையா?” என்றான் உதய்.

அதற்குள் செல்வராஜ், "என்ன அபி இது? வீட்டு நல்ல விஷயம் சொல்ல வந்த மச்சான் கிட்ட இப்படியா பேசுறது? போ, போய்..இரண்டு பேருக்கும் சாப்பாடு எடுத்துவை" என்றார்.

அவள் உள்ளே செல்ல, உதய்யின் தோள்களில் தட்டிக் கொடுத்தவர், "உனக்கேத்த நல்ல புள்ளையா அவளே பார்த்து உனக்கு கட்டிவைக்க முடியலையேங்கிற ஆதங்கத்துல தான் அப்படி சொல்லிட்டுப்போறா மாப்பிள்ளை. நீ எதையும் மனசுல வைச்சிக்காத" என்றார். அது தான் உண்மையும், அதை உணர்ந்திருந்தவன் குறுநகையோடு தலையாட்டினான்.

பின் அக்கா கைகளால் உண்டுவிட்டு சிறுமியுடன் சிறிது நேரம் விளையாடி விட்டு தான் வந்தான்.

இதற்கிடையில் கோவிந்தசாமியும், அழகனும், சுந்தரியும் ஊரே பார்க்க பரபரப்பாக திருமண ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தனர். முருகர் கோவிலில் திருமணம் வீட்டில் விருந்து என முடிவு செய்தார்கள். வீட்டிற்கு புது வண்ணம் பூசி, புகைப்படக்காரரர், சமையல்காரரரிடம் அட்வாஸ் கொடுத்துவிட்டு, அழைப்பிதல் அச்சிடவும் கொடுத்தாகி விட்டது.

ஒருமுறை பரமேஸ்வரியை கோவிலில் பார்த்த சுந்தரி ஜாடையாக உதய் எழிலின் திருமணம் பற்றி குறிப்பிட, பரமேஸ்வரி முகத்தை நொடிந்துகொண்டு வீட்டிற்கு வந்துவிட்டார். வந்தவர் கணவர் ரெங்கநாதனிடம் குறிப்பிட்டார்.

இவ்விஷயம் ஊரில் இல்லாத சிவாவின் காதுகளையும் சென்றடைய கொதித்துப் போனான். சிவாவால் எழிலை விட்டுக்கொடுக்க இயலாது அதுவும் உதயனுக்கு என்னும் போது போட்டி எண்ணம் தான்

அதிகரித்தது. எழிலை கடத்துவதில் இத்தனை தாமதமா என தன் ஆட்களை அழைத்து திட்டியவன் வீடு புகுந்தேனும் அவளை கடத்தி வரும்படி கத்தினான்.

இன்று நன்நாளாக உள்ளது திருமணத்திற்கு திருமாங்கல்யமும், பட்டும் எடுக்க வேண்டும் அதுவும் நான் தான் செய்ய வேண்டும் அது தான் முறையும் கூட என்ற அபிராமி, எழிலை கடைக்கு அழைத்து வருமாறு உரைத்தாள்.

உதயன் சென்று சுந்தரியிடம் சொல்ல, அவர் எழிலை கிளம்பச் சொல்ல, “அவங்களுக்கு பிடிச்ச மாதிரியே ஏதாவது ஒன்னு எடுத்துட்டு வரச் சொல்லுமா” என்றாள் பட்டும்படாமலும்.

“எதுக்கு எடுத்துட்டு வந்த பிறகு நீ ஆயிரத்தெட்டு குறை சொல்லி அந்த புள்ளைய நோகடிக்கவா? கட்டிக்கப் போறது நீ தானடி? ஒழுங்கா இப்போ கிளம்பிப் போறீயா என்ன வேணும்?” என சுந்தரி அதட்டிய பின்னே எழுந்து சென்றாள்.

எழிலரசி கிளம்பி வர, அவளை அழைத்துக்கொண்டு சென்றான் உதய். தன்னோடு பைக்கில் வருவதற்கும் ஏதாவது போராட்டம் செய்வாளோ என அவன் நினைக்க, அவளோ அமைதியா வந்தாள்.

கடைவாசலிலே அபிராமி அவள் குடும்பத்தினரோடு நிற்க, பைக்கை நிறுத்திவிட்டு எழிலோடு சென்றான் உதய். அபிராமி எழிலை ஒரு பார்வை பார்த்து விட்டு, “வாடா முதலை தாலி வாங்கிட்டு அப்பறம் துணி எடுக்கப் போவோம்” என்றார்.

முதலில் திருமாங்கல்யம் வாங்கச் சென்றனர். அவர்கள் முறைப்படி அபிராமி தேர்ந்தெடுத்து அனைவரிடமும் அபிப்ராயம் கேட்டு விட்டு அதையே வாங்கினர். அபிராமி இன்னும் எழிலிடம் பேசவில்லை என்பதை உதய் கவனித்திருந்தான்.

வெளியில் வரவும் அபிராமியிடம் கிரிட்கார்டை கொடுத்துவிட்டு செல்வராஜ் அருகில் வேலை இருப்பதாகவும் சிறிது நேரத்தில் திரும்பி வந்து

அழைத்துச் செல்வதாகவும் சொல்லிச் செல்ல மற்ற மூவரும் அருகே இருக்கும் துணிக்கடைக்குள் சென்றனர். செல்வராஜூம் சென்று விட சிவாவின் ஆட்கள் இவர்களை தொடர்ந்து வருவதை உதய், எழில் இருவரும் கவனிக்கவில்லை.

“அம்மா அத்தை புடவை கலர்ல எனக்கும் பட்டுப்பாவாடை வேணும்” என ப்ரதிக்ஷா கேட்க, “பேசாம வாடி..” என அபிராமி அதட்டவும், “மாமா எடுத்துத்தரேன், நீ வாடா குட்டியம்மா” என உதய் உள்ளே தூக்கிக்கொண்டு சென்றான்.

மூகூர்த்தப்பட்டு ஒவ்வொன்றாக விற்பனைப்பெண் எடுத்து விரித்துக்காட்ட அதில் தனக்கு பிடித்ததை காட்டி, “அவளுக்கு பிடிச்சிருக்கான்னு கேளு..” என்றாள் அபி உதயனிடம்.

“எழிலில் உனக்கும் பிடிச்சதா பார்த்து எடுத்துக்கோ..” என உதய் சொல்ல, அவள் தேர்ந்தெடுப்பதை இவள் மறுக்க இவள் தேர்ந்தெடுப்பதை அவள் மறுக்க என நேரம் கடந்து கொண்டிருந்தது.

உதயனுக்கு ஒரு புறம் அபிராமியும் மறுபுறம் எழிலும் நின்றிருக்க, இருவரும் பேசிக்கொள்ளட்டும் என நினைத்தவன் சிறிது நேரத்தில் அழைப்பு வருவது போல் நகர்ந்து விட்டான்.

உதய்யும் நகர்ந்துவிட, சற்று தொலைவில் இருந்து இவர்களை கவனித்துக் கொண்டிருந்த சிவாவின் ஆட்கள் மெல்ல மெல்ல அவர்களை நெருங்கினர்.

உதயன் சில நிமிடங்கள் கழித்து திரும்பி வர, அங்கே அபிராமி மட்டுமே புடவைகளை பார்த்துக் கொண்டிருந்தாள். எழிலை எங்கே என உதயன் விசாரிக்க, “பாப்பாவை ரெஸ்ட்ரூம் தூக்கிட்டு போனாடா, ஆனால் ரொம்ப நேரமாச்சு இன்னும் காணுமே?” என்றவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அந்த பகுதியில் எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு உதய்யிடம் வந்தவள் இருவரையும் காணவில்லை என பயத்துடன் உரைக்க, உதயனுக்கும் பயம் பற்றிக்கொண்டது. இருவரும் கடை முழுவதும்

அத்தனை தளங்களிலும் சுற்றித்தேடி வந்தனர், எங்கும் காணவில்லை. உதயனின் இதயத்துடிப்பு உயிருக்காக ஏங்கி துடிப்பது போன்றே துடித்துக் கொண்டிருந்தது, அவனிருந்த பதட்டத்தில் அடுத்து என்ன செய்வது என்று கூட அவன் மூளை சிந்திக்கவில்லை. சற்று தொலைவில் இருந்த சிவாவின் ஆட்களும் அங்கில்லை.

## அத்தியாயம் 17

மேல் தளத்திலிருந்து ப்ரதிக்ஷாவுடன் பேசிக்கொண்டே எழில் கீழிறங்குகையில் ஐஸ்கீரிம் வேண்டுமென்று கேட்டாள் ப்ரதிக்ஷா. வெளியே சென்றபின் வாங்கித் தருகிறேன் என எழில் எவ்வளவு சொல்லியும் கேளாது நீங்கள் தானே எனக்கு இப்போது நியாபகப்படுத்தினீர்கள் எனக்கு இப்போதே வேண்டும் என்று அடம் பிடிக்கத் தொடங்கிவிட்டாள் ப்ரதிக்ஷா.

வாங்கித் தருவதாக உரைத்தவள் வேறு வழியின்றி அவளோடு கடையை விட்டு வெளியே வந்தாள். அவளையே கவனித்துக் கொண்டிருந்த சிவாவின் ஆட்கள் அவர்களை பின் தொடர்ந்தனர். ப்ரதிக்ஷாவின் கையை பிடித்துக்கொண்டு துணிக்கடை வீதியை கடந்து மெயின்க்கு வந்திருந்தாள்.

நான்கு பேரில் ஒருவன் மற்றொருவனுக்கு சைகை செய்ய, இருவர் கார் எடுத்து வரச் சென்றனர். இருவர் அவளை பின்தொடர்ந்தனர். ஐஸ்கீரிம் வாங்கிக்கொடுக்க சின்னவள் அப்போதே உண்ணத் தொடங்கிவிட அவளோடு பேசியவாறே எழில் திரும்பி நடந்து வந்துக் கொண்டிருந்தான்.

அவளுக்கு பின்னே ஒருவன் வந்து கொண்டிருக்க, அவள் பாதையில் குறுக்கே வந்து நின்ற மற்றொருவன், “மேடம் இங்கிருந்து மாசி வீதிக்கு எப்படிப் போகணும்?” என்றான்.

அவனின் கரகரப்பான குரலும் தோற்றமும் எழிலுக்கு அச்சத்தை தர, சற்றே இரண்டடி பின் நகர்ந்தாள், அவனோ பின்னே வருபவனுக்கு சைகைக் காட்டினான். இவர்கள் நடைபாதையில்

நின்றுகொண்டிருக்க, அதே நேரம் மற்ற இருவர் காரை எடுத்துக்கொண்டு இவர்கள் அருகே வந்திருந்தனர்.

கார் அவள் அருகே வந்து நின்றுவிட, பின்னிருந்து வந்தவன் எழிலை உள்ளே தள்ளிவிடும் எண்ணத்தில் மேலும் அவளை நெருங்கி வந்திருந்தான். அதே நேரம், “ப்ரதிம்மா, எழில் இங்க எதுக்கு நிக்கிறீங்க?” என கேட்டவாறு செல்வராஜ் அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்த டீக்கடையில் இருந்து வெளியே வந்தார்.

அவருடன் மற்றொருவரும் வரவதைப்பார்த்த சிவாவின் ஆட்களில் எழிலின் பின் இருந்தவன் சட்டென அருகே இருந்த காருக்குள் ஏறி விட, நொடியில் கார் கிளம்பி இருந்தது. எழில் தன் முன் நின்றவனை பார்க்க, “யார் நீங்க என்ன வேணும்?” என்றார் செல்வராஜ் ஒரு அதட்டலுடன்.

“இல்ல மாசி வீதி..?” அவன் திணற, செல்வராஜூக்கு அருகே இருந்தவர், “நீ நிக்கிறதே மாசி வீதி தான்” என்றார் கம்பீரக்குரலில். அவன் தலையாட்டிக் கொண்டு வேக வேகமாக அவர்களை கடந்து சென்றுவிட்டான்.

எழில் அவரைப் பார்க்க, “இது என் ப்ரண்ட் முகுந்தன், இங்க தான் எஸ்.ஐயா இருக்கான்” என அறிமுகப்படுத்தினார் செல்வராஜ். எழில் ஒரு புன்னகையோடு வணக்கம் தெரிவித்தாள்.

“ஆமா நீங்க மட்டும் இருக்கீங்க எங்க அக்காளும் தம்பியையும் காணும்?” எனக் கேட்க, எழில் நடத்தவைகளை உரைத்தாள்.

அதே நேரம் செல்வராஜின் கைப்பேசி அழைக்க, அட்டென் செய்ததும் மறுமுனையில், “என்னங்க நம்ம குழந்தையும் எழிலையும் காணுங்க?” என அபிராமி அழுதார்.

“காணாமயெல்லாம் போகலை, கடைக்கு வெளிய தான் இருக்கோம் வாரோம்” எனக் கட் செய்தவர் நண்பரிடம் விடைப்பெற்று, இருவரையும் அழைத்துக்கொண்டு மீண்டும் கடைக்குள் சென்றார்.

இந்த இருபது நிமிடங்களில் குழந்தையை தொலைத்த அன்னை அபிராமியின் தவிப்பிற்கு நிகரான தவிப்பை உணர்ந்திருந்தான் உதய். ஏற்கனவே ஒருமுறை எழிலை கடத்த நடந்த முயற்சிகளை நன்கு அறிந்தவன் ஆகையால் அவன் தவிப்பின் உச்சியில் இருக்க, அந்த நொடிகள் உயிர் போராட்டமாக இருந்தது உதய்க்கு.

தன்னை நோக்கி வருபவர்களைக் கண்டவன், அதில் எழிலை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருமுறை பார்வையால் தீண்டி அவள் நலனறிந்தான். மறுநொடி அவன் தவிப்பு அத்தனையும் சினமாக உருமாறியிருந்தது.

அபிராமியிடம் செல்வராஜ் அனைத்தையும் உரைக்க, தன் முன் நின்றிருந்த எழிலை நோக்கியவன், “கொஞ்சம் கூட பொறுப்பில்லையா உனக்கு? ஆள் வளர்ந்த அளவுக்கு அறிவு வளர்ந்திருந்தா தானே? இப்படியாடி எங்க இரண்டுபேர் கிட்டையும் சொல்லாம பிள்ளையக் கூட்டிட்டு வெளிய போவ? அப்படியே எதுவும் வேணும்னா எங்கிட்ட சொல்ல வேண்டியதானே?” என அத்தனை பேரும் பார்க்க கோபமாக குரல் உயரத் திட்டினான் உதய்.

கடையில் இருந்த மற்றவர்கள் அனைவரும் அந்த சத்தத்தில் ஒரு நொடி அவர்களைத் திரும்பிப் பார்க்க, எழிலுக்கு பதில் பேச வார்த்தை வராது வாய்யடைத்துக்கொண்டு கண்கள் கலங்கியது.

“அடேய் நீயும் உன் அக்காவும் ஓவர் ரியாக்ட் ஆகிட்டு அந்த பிள்ளைய ஏன்டா திட்டுற?” என செல்வராஜ் அதட்ட, “இந்த. குட்டிக்கழுதை செஞ்ச வேலைக்கு அவளை ஏன்டா கத்துற?” என அபிராமியும் துணையாய் வர, உதய் அமைதியானான்.

“நீ வா எழில்” என அபிராமி அவள் கரம் பற்றி அழைத்துச் சென்றுவிட, இவ்வளவு நேரம் ஒருவருக்கொருவர் பேசாமல் முகம் திருப்பிக்கொண்ட இருவர் நொடி நேரத்தில் ராசியாகி விட்டனரே என வியந்தான்.

இத்தனை கலவரத்துக்குப் பின்னும், “மாமா ஐஸ்க்கீரிம் காலியாகிடுச்சி இனி ஒன்னு வாங்கிக்கொடு” என்றாள் ப்ரதிக்ஷா.

அவன் பரிதாபமாகப் பார்க்க, “அம்மா உனக்கு பட்டுப்பாவாடை எடுக்கக் கூப்பிடுறா போ” என மகளை அனுப்பிய செல்வராஜ் அருகே வந்தார்.

“என்னடா மாப்பிள்ளை இப்படி பொசுக்குன்னு கோபப்பட்டுட்ட? நீ வேற குடும்பஸ்தன் ஆகப்போற, பார்த்துடா அவளுக திருப்பி கோபப்பட்டாங்க சோத்துல விஷத்தை வைச்சிடுவாங்க” என அவன் முதுகில் தட்ட, “ஏன் மாமா? நானே எரிமலை எப்போ வெடிக்குமோன்னு பயத்துல இருக்கேன் நீங்க வேற பயத்தைக் கூட்டிக்கிட்டு இருக்கீங்க” என்றான் சிறு சிரிப்புடன்.

பட்டு தேர்ந்தெடுத்து வாங்கி, அவர்களை அனுப்பிவிட்டு, வீடு வரும் வழியிலும் உதயனின் முகம் பார்க்காது விரைப்புடனே இருந்தாள் எழிலரசி. அழைத்து  வரும் போது கூட நன்றாக இருந்தவளை தற்போது தன் வாயால் கோபப்படுத்தி விட்டதாக நினைத்தான். ஏற்கனவே கரடுமுரடான மிகவும் மோசமான சாலை தான் அவர்கள் ஊர் செல்லும் சாலை இதில் உதயனும் வேகமுடன் வண்டியோட்ட எழிலரசிக்கு பயம் பற்றிக்கொண்டது.

“கொஞ்சம் மெதுவா தான் போங்களேன்” என பயத்தில் அவள் கத்த, “அவ்வளவு பயமா இருந்தா என்னை பிடிச்சிக்கோ” என்றான் பதிலுக்கு.

சொல்லிய பின்பே என்ன நினைப்பாளோ எனத் தோன்றியது, ஏனெனில் அவன் எந்த உள் நோக்கத்திலும் சொல்லவில்லை ஆகையால், “இங்க பாரு, நான் ஒன்னும் ஆசையில சொல்லலை, புரியுதா?” என்க, அவளுக்கு இருந்த கோபம் மேலும் அதிகமாகியது.

வீட்டில் இறங்கியதும் ஒரு முறைப்புடன் “ஆசையில்லாம இந்த கல்யாணம் நடக்க வேண்டாம்”

என்றவள் பையை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

எழிலிடம் யாரும் திருமணத்திற்கு சம்மதமா எனக் கேட்கவில்லை, உதய் சுற்றி வந்தானே தவிர அவனும் கேட்கவில்லை. திருமண ஏற்பாடுகள் நடைபெறுவது அறிந்தும் அவள் தடுக்கவில்லை. அழகனின் அறிவுரைகள் ஏற்கனவே எழிலின் மனதில் ஓடியவை தான், ஆகையாலே எளிதாக உதயனுடனான திருமணத்தை ஏற்றுக் கொண்டாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்திருந்தது சிவாவை தான், எப்படியேனும் விஷயம் சிவாவின் காதுகளுக்கு சென்றிருக்கும், கண்டிப்பாக ஏதாவது செய்வான் உதயனிடம் மாட்டுவான் என்றே காத்திருந்தாள்.

உதயன் ‘இப்போ என்ன தான் சொல்லிட்டுப் போறா? அவளுக்கு கல்யாணம் வேண்டாம்னா? ஒருவேளை அவளுக்கு விருப்பமில்லாம அக்காவும் கோவிந்தமாமாவும் மிரட்டி சம்மதிக்க வைச்சிட்டாங்களா? தெளிவா சொல்லிட்டு போனா தான் என்னாவாம்? இவ எப்போ தான் தெளிவா பேசுவா? மூணு நாள் தானே இருக்கு, இப்ப போய் கல்யாணத்தை எப்படி நிப்பாட்டா? ஊருக்குள்ள என்ன மாதிரியானா பேச்சு வரும்?” என யோசிக்க, தலை வலிக்க ஆரம்பித்தது.

குழப்பத்தில் இருந்தவனை மேலும் குழப்பியது போன்றிருந்தது அவன் நிலை. உதய் குழப்பத்தில் இருந்து தெளிவதற்குள் திருமண நாளே வந்துவிட அவன் இன்னும் தெளியவில்லை.

மேற்கு வானில் நிலவும் கிழக்கு வானில் சூரியனும் சேர்ந்திருக்கும் பிரம்ப முகூர்த்தத்தில் நேரம் குறித்திருந்தனர். அழகனுக்கு அளவில்லா ஆனந்தம், கதிரின் இழப்பின் பின் உதயன் போலே எழிலின் மீது பெரிதும் அனுதாபம் கொண்டிருந்தான். தற்போது உதயனோடு திருமணம் என்றதும் தன் குடும்பத்தோடு கொண்டாட்டத்தில் இறங்கி விட்டான்.

அவதூறு பேசிய வாய்கள் அத்தனையும் ஆச்சரியத்தில் திறக்கும் படி ஊரையே அழைத்து சிறப்பாக திருமண ஏற்பாடுகள் செய்திருந்தனர் சுந்தரியும், கோவிந்தசாமியும். கதிரின் இழப்பிற்கு பின் வாழ்வே நிறமிழந்தது போன்று வெறுமையில் இருந்தவர்கள், மகளை மணக்கோலத்தில் காணவும் மனம் நிறைந்தனர்.

தான் அனுப்பிய ஆட்களால் எழிலை கடத்த இயலாது போக, சிவா இரவோடு இரவாக ஊருக்குக் கிளம்பினான். அடித்தாலும் சரி அடிபட்டாலும் சரி உதனோடு நேருக்கு நேராய் நின்று மோதிட முடிவு செய்தான். தன் அன்னையை கிளம்பிவிட்டு, சண்டையிழுத்து திருமணத்தை நிறுத்திவிடும் முடிவில் இருந்தான்.

நகரை விட்டு சற்று தூரம் வரை வந்திருக்க, ராஜாவிடமிருந்து அழைப்பு வந்தது. பழனி வரை ஒரு நிலம் பார்க்கச்சென்று திரும்பி வந்து கொண்டிருந்தவனின் கார் விபத்திற்குள்ளானதாக செய்தி வர பதறி அடித்துக்கொண்டு பழனி நோக்கி திரும்பி விட்டான்.

தகதகக்கும் பொன்னை உருக்கி பட்டாய் நெய்து செம்மேனியில் சுற்றி அக்கினி சுவாலைகளின் மஞ்சள் ஒளியின் முன் வைத்தது போன்று ஜொலித்துக் கொண்டிருந்தாள் எழிலரசி. கார்குழலில் சூடியிருந்த கட்டு மல்லிகையும், கழுத்தில் கிடந்த பொன்னகையும் ரோஜா மாலையும் செழுமையான கண்ணாடி கன்னங்களில் பிரதிபலிக்க அதன் வாசம் அருகில் அமர்ந்திருந்தவனை திரும்பிப் பார்க்க வைத்தது.

ஒருமுறை தான் திரும்பிப் பார்த்தான், அவள் அழகில் தன்னை மறந்து, அவளை மறந்து பேரழகில் மயங்கியிருந்தான். பெருவெளியில் கரையும் சிறு ஒளியை போல் கரைந்துக் கொண்டிருந்தவனை அபிராமியின் குரல் மீட்டது. அப்போதே ஐயர் நீட்டிய திருமாங்கல்யத்தை கண்டு கைகளில் வாங்கினான்.

எழிலின் பெற்றோர்களும், அபிராமியின் குடும்பமும், உதயனின் நட்புக்களும், நல்லுள்ளங்களும், ஊராரும்,

உறவுகளும் ஆசிர்வதிக்க முருகன் சந்நிதியில் சரியாக சூரியன் உதிக்கும் நேரம் உதயனின் பொன்கரத்தினால் எழிலின் வெண்சங்குக் கழுத்தில் திருமாங்கல்யம் அணிவித்தான். அந்த நொடி முதல் தன் உயிரில் பாதியாகி, தன் உடமையாகிய எழிலை காப்பது முதல் கடமை என்ற எண்ணம் தோன்றியது.

ஊரே கூடி வந்ததில் இத்தனை நாள் தனக்கு யாருமில்லையே என்ற அவன் ஏக்கமெல்லாம் கற்பனையாய் தோன்றியது. தனக்கும் சொல்லிக்கொள்ள உறவுகள் இருக்கின்றன என நினைக்க மகிழ்ச்சியில் மனம் நிறைந்து போனான்.

மணமக்கள் கடவுளை வணங்கிய பின் எழில் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அத்தனை நாள் கதிரோடு பகையாக இருந்ததால் சுந்தரியோடு பழக்கமில்லாத அபிராமி உதயனால் உறவானாள். ‘அவர்கள் வீட்டுக்கு வர மாட்டேன், சாப்பிட மாட்டேன், கோவிலிருந்து கிளம்பி விடுவேன் என்றெல்லாம் பிரச்சனை செய்யக்கூடாது, உதயனுக்கு வரவிருக்கும் புதிய உறவை மனதார வாழ்த்தி ஏற்றுக்கொள்ள வேண்டும்’ என வீட்டில் வைத்து அறிவுறுத்திய பின் அழைத்து வந்திருந்தார் செல்வராஜ்.

எழில் வீட்டில் பெரியவர்கள் அனைவரும் ஆசீர்வதித்து விபூதி பூசி, புகைப்படங்கள் எடுத்துக்கொள்ள, செல்வராஜ் மாப்பிள்ளைக்கு தங்கச் சங்கலி அணிவிக்க, அவர்களை அமர வைத்து பால், பழம் கொடுத்தாள் அபிராமி.

அதே நேரம் வெளியில் பந்தலின் கீழ் பந்தி நடந்துக் கொண்டிருக்க, அழகன், கரிச்சட்டி, மணி அனைவரும் பார்த்து பார்த்து பரிமாற, வினோத் மொய்பணத்தை வசூலித்து கணக்கு எழுதிக் கொண்டிருந்தான். அழகனின் மகள் கலைவாணியும் ப்ரதிக்ஷாவும் ஒரே நாளில் நட்பாகி ஓடி ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

அந்த ஒருநாள் கொண்டாட்டம் உதயனுக்கு பெரும் மனம் நிறைவைக் கொடுத்திருந்தது. புது உற்சாகம் ஒட்டிக்கொண்டது. அது மட்டுமின்றி எழில் வேறு அதிக

அலங்காரத்தில் அன்று அதிசமாய் அழகாய் தெரிந்திட, தன்னருகில் இருப்பவளை அடிக்கடி வியந்து பார்த்தான். ஆனால் அவளோ ஒரு முறை கூட நிமிர்ந்து பார்க்கவில்லை.

மணமக்களும் அப்போது தான் உணவுண்ண அமர்ந்தனர். ப்ரதிக்ஷாவும் அவர்களோடு தான் உண்பேன் என ஆசையாக அருகில் அமர்ந்துவிட்டு அவர்கள் இலையிலிருந்து அப்பளம், லட்டு என எக்கி எடுத்து உண்ண, எழில் அவளாகவே எடுத்து ஊட்டிவிட்டாள்.

“குட்டியம்மா புது அத்தைய உனக்கு பிடிச்சிருக்கா?” எனக் கேட்டான். அவன் கேள்வியில் எழில் சட்டென திரும்பி அவன் முகம் பார்க்க, உதயன் முகம் திருப்பிக் கொண்டான்.

“பிடிச்சிருக்கு மாமா, அன்னைக்கு கல்கண்டு கொடுத்தாங்க, அப்பறம் ஐஸ்க்கீரிம், பட்டுபாவடை எல்லாம் வாங்கிக் கொடுத்தாங்க, லட்டு கொடுத்தாங்க, இது..இந்த மருதாணி கூட அத்தை போட்டு விட்டது தான்” என தன் பிஞ்சு உள்ளக்கையை நீட்டினாள்.

“அதுக்காக மட்டும் தான் பிடிக்குமா குட்டிம்மா? அத்தை அழகா இல்லையா?” எனக் கேட்க, ஒருமுறை எட்டிபார்த்து, “என் அளவுக்கு இல்லையே மாமா!” என்றவள் அப்பளத்தை நொறுக்கினாள். இதுக்கு நீ கேட்காமலே இருந்திருக்காலம் என்ற எண்ணத்தில் திரும்ப, எழிலோ வழக்கம் போலே முறைத்தாள்.

பெரிய விபத்தோ? அண்ணனின் நிலை என்னவோ? என பதறி அடித்துக்கொண்டு சென்ற சிவா ராஜாவை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு அனுமதித்து விட்டு, ஒரு போலீஸ் கேஸும் கொடுத்தான். ராஜாவுக்கு கைகளில் எலும்பு முறிந்து விட, கட்டுக்கட்டி சிகிச்சை முடித்த பின் வீட்டிற்கு அழைத்து வந்தான். இதிலே நண்பகலாகி விட மனதில் ராஜாவை வாட்டி வறுத்தெடுத்தான்.

ஊர் இளைஞர்களின் வாட்ஸ்சப் க்ரூபில் எழில், உதயனின் திருமணப் புகைப்படம் ஷேர்ராகியிருக்க, பார்த்த சிவாவிற்கு இரத்தநாளங்கள் எல்லாம் அடைத்து இதயமே வெடித்து விடும் போல் வலித்தது. அருட்பெரும் பொக்கிஷத்தை இழந்ததை போன்று வலியோடு ஏக்கமாய் எழிலின் புகைபடத்தை பார்த்தவனின் பார்வை அருகே இருக்கும் உதயனின் மேல் பாய்ந்தது.

உதயனின் இதழிலிருந்த குறுநகையும், மலர்ந்த முகத்தில் பரவிருந்த மகிழ்ச்சியையும் பார்த்தவனால் சிறிதும் ஏற்றுகொள்ள இயலவில்லை. எழிலை எண்ணி வருடங்களாக தவம் போல் காத்திருந்து அவளை நோக்கி ஒவ்வொரு அடியாக நெருங்கி, ஒவ்வொரு தடையாக நீக்கி கைக்கெட்டும் தூரத்தில் நெருங்க, இடையில் வந்து பறித்துக்கொண்டானே! தனக்கான அனைத்தையும் பறித்துக்கொண்ட உதயனின் மீது கொலை வெறியானவன் ஊருக்கு கிளம்பினான்.

மாலை உறவுகள் கிளம்பும் நேரம் உதயனை தனியாக அழைத்த செல்வராஜ் அவன் கையில் ஒரு பத்திரமும், சாவியையும் கொடுத்தார்.

“என்ன மாமா இது?” என்க, “நான் கொடுக்கிறது இல்லைடா மாப்பிள்ளை, அபி வீட்டுக்கு வரக்கூடாதுன்னு சொல்லிட்டாலாம், நேத்து அத்தை மில்லுக்கு வந்து இதை கொடுத்தாங்க. பார்க்கவே மனசுக்கு கஷ்டமா இருந்ததுடா. உன் கல்யாணத்துக்கு வர முடியலைன்னு கவலைபட்டங்க. நீயும் எழிலும் சந்தோஷமா வாழணும்னு வாழ்த்தி அவங்க ஆசீர்வாதமா தான் இதை கொடுத்தாங்கடா” எனக் கொடுத்தார். கண்கள் கலங்க, வாங்கிக்கொண்டான்.

செல்வராஜ் தன் குடும்பத்துடன் கிளம்ப, மற்ற உறவுகளும் கிளம்பினர். இரவு உணவையும் பிற விருந்தையும் முடித்து அழகனின் ஆட்கள் அனைத்தையும் ஒதுங்கு வைத்துவிட்டு கிளம்பியிருந்தனர். துளசியும், விமாலாவும் எழிலை அலங்கரித்து விட்டுச் சென்றனர். அவளறைக்குள் வந்த சுந்தரி பால் செம்பை வைத்துவிட்டுச் சென்றார்.

கால்களை கட்டிக்கொண்டு முகத்தை புதைத்தபடி கட்டிலில் சாய்ந்தவாறு அமர்ந்தாள் எழில். கோவிந்தசாமி அலுப்போடு திண்ணையிலே படுத்துவிட, சுந்தரி பின்னறையில் படுத்து விட்டார்.

ஊரடங்கிய நேரம் எழில் வீடு மட்டும் இன்னும் அவிழ்கப்படாத சீரியல் விளக்குகளின் மின்னிக்கொண்டிருந்தது. வீட்டிற்குள் முழுவதும் இருளாகி விட உதயனை உள்ளே தள்ளிவிட்டு கடைசியாக கிளம்பியிருந்தான் வினோத்.

ஹாலில் கதிரின் புகைப்படத்தின் முன் சிறு விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருக்க அந்த சிறு வெளிச்சம் அவன் கவனத்தை கவர்ந்தது.

அன்று எழில் இதே விளக்கை அவன் மீது எரிந்து போது இந்த வீட்டை விட்டுச் சென்றவன் தற்போது உரிமையோடு உள்ளே வந்திருந்தான். கதிரின் புகைப்படத்தை நோக்கியவன் அப்படியே தூணில் சாய்ந்தபடி கைகளை கட்டிக்கொண்டு நின்றான். அந்தப்படம் புன்னகைப்பது போன்றும் இவனிடம் ஆயிரம் கதை பேசுவது போன்றும் இருந்தது.

நேரங்கள் கடந்தும் தன்னையே மறந்த நிலையில் அவனிருக்க, எழிலின் அறையில் இருந்து ஏதோ சத்தம் கேட்க, சட்டென உறக்கத்தில் இருந்து விழிப்பவன் போல் பதறி விழித்தவன், வேக எட்டுகளோடு பதற்றமாக அவள் அறை நோக்கிச் சென்றான்.

## அத்தியாயம் 18

மெல்லிய இரவு விளக்கின் ஒளி மட்டும் அறைக்குள் நிறைந்திருக்க, உள்ளே விரைந்து வந்தான் உதய். அவன் காலடி சத்தத்தில் கீழே குனிந்திருந்தவள் சட்டென நிமிர்ந்து திரும்பினாள்.

“என்னாச்சு எழில்..?” என பதறி அவளருகே வர, “செம்பு கை தவறி விழுந்துடுச்சி வேற ஒன்னுமில்லைங்க” என்றவளின் குரலே கரகரக்க, அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அவள் முகத்தை ஆராய்ந்தான். அழுததிற்கான தடங்கள் அப்படியே இருந்தது, இன்னும் கலங்கிய கண்களில் நீர் கோர்த்திருந்தது.

அருகே வந்து ஒற்றை விரல் கொண்டு அவள் இடது கன்னத்தின் கண்ணீரைத் துடைத்தபடி, “நான் இதைத் தான் கேட்டேன், என்னாச்சு எழில்?” என்றான் மீண்டும். மெல்ல அவன் கைகளை விலக்கிவிட்டவள் பதிலேதும் சொல்லாது அமைதியாக நின்றாள்.

தன் தாலி கட்டிய முதல் நாளே தான் மனைவி அழுகிறாள் என்பதை அவனால் ஏற்க முடியவில்லை. அதை விடவும் இத்தனை நாளும் தன் கேள்வியை அலட்சியப்படுத்தியவள் இன்றும் அலட்சியப்படுத்த அவனால் தாங்க இயலவில்லை.

கோபத்தை கட்டுப்படுத்த கைகளை கட்டிக்கொண்டவன், “என்னன்னு சொல்லு, இன்னுமா என் மேல் நம்பிக்கை வரலை? அப்படி நம்பிக்கை இல்லைன்னா எதுக்கு என்னை கல்யாணம் செஞ்சிக்கிட்ட? ஒருவேளை இந்த கல்யாணத்துலையே உனக்கு விரும்பமில்லையா?” என்றான்.

“ரொம்ப சீக்கிரம் கேட்டுடீங்களே?” என்றவள் அவனுக்கு முகம் காட்டாமல் திரும்பி நின்றாள்.

“அன்னைக்கு நீ அழுததை பார்த்துட்டு சும்மா இருக்க முடியலை, அதனால தான் அப்படி கேட்டேன், அதே நேரம் எடுத்த முடிவில் பின் வாங்குற பழக்கமும் எனக்கில்லை. இந்த கல்யாணத்தில் நான் ஒன்னும் உன்னை கட்டாயப்படுத்தலையே?” என்றான்.

“இதை தவிர எனக்கு வேற வாய்ப்புகளும் கொடுக்கப்படலையே..?” என்றாள் அவள். அது உண்மை தான் என்பதை அவன் மனமும் ஏற்க, “நடந்ததை பேச வேண்டாம். என் கூட வாழணும்னோ, கதிரை மறக்கணும்னோ நான் உன்னை கட்டாயப்படுத்த போறதில்லை” என்றான்.

அப்பறம் ஏன் இந்த திருமணம்? கேள்வி தோன்றிய போதும் தற்போதைய அவன் தேவை அவள் நிம்மதி தான். அவளிடம் பதிலோ, சத்தங்களோ இல்லாது போக, அவள் முன் சென்று நின்றான். தலை குனிந்திருந்தவளின் முகத்தை இரு கைகளிலும் தாங்கி

நிமிர்த்திப் பார்க்க, கண்களின் இருந்து முத்து முத்தாய் கண்ணீர்த் துளிகள் வழிந்து கொண்டிருந்தது.

உதயனுக்கு மனம் தாங்கவே இல்லை, “என்ன கண்ணம்மா? அழாதடி எழிலு” என்றவனின் குரலே கலங்கி வர, சட்டென அவன் நெஞ்சில் சாய்ந்தவள் ஏங்கி ஏங்கி விம்பி அழுதாள். ஒருவேளை கதிரின் நினைவாக இருக்குமோ என நினைத்தான்.

தன் நெஞ்சில் சாய்ந்து சட்டை நனைய அவள் விசும்ப, காரணமறியாது உதயனும் கலங்கினான். இருந்தும் அழும் அவளை எவ்வாறு கொஞ்சி சமாதானப்படுத்த என்று தெரியாது முழித்தவன் மெல்ல கைகளை உயரத்தி தலையை தடவிக் கொடுத்தான். நேரங்கள் கடந்தும் அவள் அழுகையும் குறைவில்லை, அவனிடமிருந்து அணுவும் அசையவில்லை.

அவனுக்குத் தான் கால்கள் வலிக்க, “எழில்..எழிலு..” என்றபடி அவளை உலுக்கினான். சட்டென நிமிர்ந்தவள் அவன் கைகளை தட்டிவிட்டு விலகி நின்று, “ஆசையில்லாம தானே கட்டிக்கிட்டீங்க? அப்பறம் என்ன இதெல்லாம்?” என்றாள் மூக்கை உறிஞ்சி தேம்பியவாறு. என்னவோ அவன் தான் அணைத்தது போன்று குற்றம் சாட்டினாள்.

‘ஐயோ அண்டவா இந்த பொம்பளைங்களை புரிஞ்சிக்கவே முடியலையே, இதுக்கு புதுசா ஒரு டிக்ஸனரி சீக்கிரம் கொடுப்பா’ என மனதில் வேண்டியபடி, “எதுக்கு அழுதேன்னு இப்போ சொல்லப்போறீயா இல்லையா?” என்றான் அதட்டலாக.

“அது..அது என்னால தான் நீங்க உங்க வீட்டைவிட்டு வந்தீங்க, என்னால தான் உங்க குடும்பத்தை எதிர்த்தீங்க, என்னால தான் உங்க சொத்து எல்லாத்தையும் இழந்தீங்க, என்னால தான் தேர்தல்ல தோத்தீங்க, என்னால தான் உங்களுக்கு கெட்டபெயர், என்னால தான் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க” என்றாள் அழுகை குறைந்த விசும்பலுடன்.

உதயனுக்குச் சிரிப்பு பொங்கியது, அழும் அவள் முன் சிரித்தாள் கோபம் கொள்வாள் என நினைத்து அடக்கினான். அவன் என்னென்னவோ நினைக்க, கடைசியில் அவனுக்காக அழுதாளாம்!

“லூசா நீ..? இதுக்கா அழுத..!” என்க, ஆமென்பது போல் தலையாட்டியவள், “இதுவே உங்க அக்கா பார்த்திருந்தா என்னை விட ரொம்ப படிச்ச, அழகான பொண்ணை பார்த்திருக்கும், இதுவே உங்க பெரியம்மா கல்யாணம் செஞ்சி வைச்சிருந்தா இதை விட சிறப்பா செஞ்சி வைச்சிருக்கும், இதுவே உங்க வீட்டுல இருந்திருந்தா நீங்க இன்னும் நல்லா இருந்திருப்பிங்க” என்றாள்.

தன்னை எண்ணியும் கவலை கொள்ள, தனக்காகக் கண்ணீர் விட ஒரு உறவு இருக்கிறது என நினைக்கையில் உதயனுக்கு சுகமாக இருந்தது. மனம் லேசானது போன்றிருக்க அவளை ஒருமுறை ஆரத்தழுவிக் கொள்ளும் ஆசையில் கைகள் பரபரத்தது.

கைகளைக் கஷ்டப்பட்டு அடக்கியவன், “இதுவே இதுவேன்னு இல்லாத ஒன்னை கற்பனை செஞ்சிக்கிட்டு கண்ணை கசக்காமல் போய் படு” என்றான் அதட்டலாக.

அவள் முறைப்போடு சென்று படுத்துவிட, உதயனுக்கு பெரும் கூவலோடு குத்துப்பாட்டிற்கு ஆடவேண்டும் போன்றிருந்தது. அந்தளவிற்குச் சந்தோஷத்தில் மனம் நிறைந்திருந்தான். காலையிலிருந்தே உற்சாகமாக இருந்தவனுக்கு தற்போது இந்த நாள் மேலும் இனிமையானது போன்றிருந்தது. அந்த சந்தோஷத்தில் வெகுநேரம் உறக்கம் வராமல் புரண்டவன் நேற்றைய நாளின் உறக்கமின்மையும் இன்றைய அசதியும் அழுத்தியதில் உறங்கிவிட்டான்.

காலையில் வெகு தாமதமாக எழுந்து வந்தான். அவன் அறையிலிருந்து வெளியே வரும் போதே குளித்து முடித்து, அளவான அலங்காரத்துடன் பளிச்சென்று

கழுத்தில் மஞ்சள் கயிறும் நெற்றியில் செந்நிற குங்குமமும் மின்ன வந்து காஃபி கொடுத்தாள் எழில்.

“காளியம்மன் கோவில்ல இன்னைக்கு பொங்கல் வைத்து சாமி கூம்பிடணுமாம் அம்மா சொன்னாங்க, சீக்கிரம் தயாராகி வாங்க” என்றாள் சிரித்த முகமாக.

எழிலா தன்னிடம் சிரித்துப் பேசுகிறாள்! தான் காண்பதும் கனவு தானா? என அதிர்ந்து நிற்க, “மாப்பிள்ளை மசமசன்னு நிற்காமல் சீக்கிரம் கிளம்புடா” என்றார் கோவிந்தசாமி.

காஃபியை பருகியவாறு மேலே தன்னறைக்குச் செல்ல, “என்னண்ணே புதுமாப்பிள்ளைக்கு இப்போ தான் விடிச்சிருக்கா?” என்றபடி வினோத் வர, உடன் அழகனும் வந்தான்.

உதயனும் முகம் மலர, இதழ் விரியச் சிரிக்க, “பாருடா, என் மாப்பிள்ளைக்கு வெட்கத்தை!” என அழகன் கேலி செய்ய, அவன் முதுகில் தட்டினான்.

“இந்தாங்கண்ணே மொய் நோட்டு, வரவு செலவு கணக்கை முடிச்சு மொய்ப் பணத்தை உங்க அக்கௌன்ட்ல போட்டுட்டேன்” என நோட்டை நீட்டினான் வினோத்.

வாங்கிப்பார்த்த உதயனுக்குத் தலை சுற்றுவது போன்றிருந்தது. “என்னங்கடா இது, தப்பா பேங்க்ல ப்ரின்ட் பண்ணிட்டாங்களா? லட்சத்துல வருது?” என்றான் வியப்புடன்.

“அடேய் சரி தான்டா, இதெல்லாம் உனக்கெங்க தெரியப்போகுது? உங்க அப்பா அங்காளி பங்காளி, பழக்கம் வைச்சவன், தொழிலாளி, சொந்தக்காரன், உள்ளூர், வெளியூருன்னு இத்தனை வருஷமா செஞ்சி வைச்ச மொய் தான் மொத்தமா உனக்கு இப்போ திருப்பி வந்திருக்கு. அடேய் மொய் பணங்குறது விசேஷம் வைக்கிறவன் கடனாளியாகிடக் கூடாதுன்னு பெரியவுங்க வைச்ச வழக்கம்டா. சுருக்கமா சொல்லும்னா வட்டியில்லாத கடன்! மவனே இவங்க எல்லார் வீட்டுலையும் விசேஷம் வரும் போது நீ போய்

திருப்பிச் செய்யணும், அப்போ தான் உறவு விடாம தொடரும்” என்றான் அழகன்.

உதயன் தலையாட்ட இருவரும் விடைபெற்றுக் கிளம்பினர். தனது உடைகளை எடுத்துக்கொண்டு கீழே சென்றவன் கிளம்பி வர, எழில் காலை உணவு பரிமாறினாள்.

ஒருவழியாக அனைவரும் கிளம்பி காளியம்மன் கோவிலுக்குச் சென்றனர். அங்கே அழகனின் குடும்பமும், வினோத், துளசியும் வந்திருந்தனர். உச்சிவேளை பூஜைக்குள் பொங்கல் வைத்து விட வேண்டும் அதுவும் புதுமணத் தம்பதிகள் இருவரும் தான் செய்ய வேண்டும் என மற்றவர்கள் கோவில் மரத்தடியில் சென்று அமர்ந்து விட்டனர்.

உதயன் விறகுச்சுள்ளிகளை ஒடித்து, தண்ணீர் எடுத்துக்கொடுக்க, எழில் புதுப்பானையில் மஞ்சள் நூலோடு வெற்றிலையைச் சுற்றி, சந்தானம் குங்குமம் பூசி அடுப்பில் வைத்து, தேங்காய் உடைத்து, சூடமேற்றி வேண்டிவிட்டு அடுப்பைப் பற்ற வைத்தாள். பால் பொங்குவதற்குள் உதயன் பச்சரியை அளந்து கொடுத்து, வெல்லத்தை தட்டிக்கொடுத்தான். உண்மையில் அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை ஒவ்வொன்றையும் எழிலிடம் கேட்டு தடுமாற்றத்தோடு அவள் முறைப்பையும் வாங்கிக்கொண்டு தான் செய்தான்.

அடுப்புப் புகையில் எழில் கண்ணைக் கசக்கும் போதெல்லாம் அவனாக உதவுதாக முன் வைத்து மேலும் புகையை அதிகப்படுத்தி அவளிடம் வாங்கிக் கட்டிக்கொண்டான். ஒரு வழியாக இருவரும் உச்சிவேளைக்குள் பொங்கல் வைத்து இறக்கி வர, பெரியவர்கள் படையல் தயார் செய்து விட்டிருக்க, மீண்டும் எழில் அமர்ந்து அவள் கைகளால் எலுமிச்சை மாலையும் கட்டி முடித்தாள்.

அம்மனுக்கு மாலை சாற்றி, படையலிட்டு அனைவருமாக வணங்கி, பின் பிரசாதம் உண்டு வீடு வந்தனர். உதயனுக்குக் கடவுளே வந்து ஆசி வழங்கி விட்டது போல் நிறைவாய் இருந்தது. இருளாய் இருந்த

வாழ்வில் வெளிச்சம் பரவுவது போல் சிறு நம்பிக்கை ஒளி தோன்றியது.

சுந்தரி, கோவிந்தசாமியை வெகு ஆண்டுகளாகத் தெரியும் என்ற போதும், தற்போது உறவு என்ற கூடுதல் பாசத்தோடு அந்த வீட்டில் உரிமையோடு ஒட்டினாள். திருமணம் முடித்த பின்னும் எழில் அவள் வீட்டில் இருக்க, அவளுக்குப் பெரிதாக வேறுபாடுகள் எதுவுமின்றி சகஜமாக இருந்தாள்.

எழிலைக் கடத்தும் நோக்கத்தில் மட்டுமே மறைந்திருந்த சிவா தற்போது அவளுக்கு திருமணம் முடித்துவிட்டது என்பதாலும், உதய் தேர்தலில் தோற்றதை அறிந்ததால் ஊருக்குள் இனி தங்கள் ராஜ்ஜியம் தான் என்பதாலும் உதய் மீது கோபத்தில் இருந்தவன் ஊருக்குக் கிளம்பினான். வாசல் வரை வர, ரெங்கநாதனும், பரமேஸ்வரியும் ஊரிலிருந்து ராஜாவை பார்க்க வந்தனர்.

சிவாவைப் பார்த்தவர், "டேய் நீ கோவா போயிருக்கேன்னு தானலே சொன்ன?" எனக் கேட்க, "ஆமாம்மா போயிட்டு நேத்து நைட்டு தான் வந்தான்" என ராஜா பதிலளித்தான். 'நேத்து நான் காப்பாத்துனதுக்கு இன்னைக்கு நீ என்னை காப்பாத்திட்ட!' என்பது போல் பார்த்தான் சிவா.

பவித்ரா பெரியவர்களை உபசரிக்க, அவர்களும் ராஜாவின் நலன் விசாரித்துவிட்டு போத்தியோடு கொஞ்சி விளையாடினர். ரெங்கநாதன் ஊரில் நடந்த நிகழ்வுகள் உதயனின் திருமணம் குறித்து உரைக்க, கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிவாவின் முகம் மேலும் இறுகியது. இரவு உணவுக்குப் பின் ரெங்கநாதன் கிளம்ப, சிவாவும் உடன் கிளம்பினான்.

அவனைத் தடுத்தவர் "நீ எங்கலே வார? ராஜாவுக்கு கை சரியாகிற வரைக்கும் அவனுக்கு வண்டியோட்டிட்டு வீட்டையும் ஸ்கூல்லையும் கூட இங்கிருந்து பார்த்துக்கோ" என்றார்.

"அப்பா அதெல்லாம் முடியாது எனக்கு ஊருல வேலை கிடக்கு" என மறக்க, "என்னது தோப்புல குப்புறப்

படுத்து தூங்குறது தானே! அதுக்கு இங்கேயே தூங்கு, உங்கம்மாவும் விதவிதமா சமைச்சிப்போடுவா” என்ற அதட்டலோடு கிளம்பி விட்டார்.

பவித்ராவிற்கு எட்டாவது மாதம் ஆரம்பமாகி விட்டது, கை ஒடிந்த கணவனையும் பள்ளி செல்லும் மகளையும் கவனித்துக்கொள்ளக் கஷ்டப்படுவாள் என நினைத்து அவர்களுக்கு உதவியாய் தங்கும் முடிவோடு தான் வந்திருந்தார் பரமேஸ்வரி. தற்போது சிவாவையும் அங்கே பார்க்க அவனையும் இருக்க வைத்துவிட்டு சென்றார் ரெங்கநாதன்.

சிவாவிற்கு எழில், உதயனின் மீதான கோபம் மேலும் மேலும் கூடியதே தவிர, ஆறப்போட்டாலும் குறையும் என்று தோன்றவில்லை, பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான்.

கோவில் பிரசாதத்தையும் கல்யாண வீட்டுப்பலகாரத்தையும் அவர்கள் தெருவில் வீடுவீடாக சென்று அனைவருக்கும் கொடுத்து வந்தார் சுந்தரி. அதற்குள் எழில் இரவு உணவினை சமைத்து முடித்து அனைவருக்கும் பரிமாறினாள்.

இரண்டு மூன்றுமுறை அவள் முகம் பார்த்த உதயன், “அக்கா, ஒரு விஷயம் சொல்லுறேன் கோவிச்சிக்காத, நாங்க தனிக்குடித்தனம் போறோம்” என்றான்.

எழில் அதிர்ந்து பார்க்க, “ஏன்லே, இதுவே நல்ல வசதியான வீடு தானே, நாங்க இரண்டு பேர் தானே இருக்கோம்” எனக் கேட்டார் கோவிந்தசாமி. உதயன் தற்பொழுது வேலையில்லாமல் இருக்க, தனியாகச் சென்றால் என்ன செய்வார்கள் என்ற எண்ணம்.

“டவுனுக்கு கூட்டிட்டு போறீயா?” எனக் கேட்க, இல்லையெனத் தலையாட்டினான்.

புதிதாகத் திருமணமானவர்கள் சிறிது நாட்களாவது தனியாக இருக்கட்டும் என நினைத்த சுந்தரி, “சரிப்பா உங்க விருப்பம் மாமாவை ஊருக்குள்ள வீடு பார்க்கச் சொல்லுறேன்” என்றார்.

“இல்லைக்கா அவசியமில்லை, நான் என் வீட்டுக்குத் தான் கூட்டிட்டு போறேன்” என்க, எழில் அதிர்ந்து, அவள் விருப்பமின்மையைக் காட்ட முறைத்தும் பார்த்தாள். அதை கண்ட போதும் தன் முடிவில் பிடிவாதமாக இருந்தவன் எழுந்து சென்றான்.

காலையில் எழிலையும் அழைத்துக் கொண்டு ஊருக்கு வெளியே தெற்கு நோக்கிச் சென்றான். தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னவன் எங்கே அழைத்துச் செல்கிறான் எனக் குழம்பினாள். அவனோ ஒரு மாந்தோப்பிற்குள் அழைத்துச் சென்றான். அங்கே ஒரு பண்ணை வீடிருக்க தன்னிடம் உள்ள சாவியால் திறந்தவன் உள்ளே அழைத்துச் சென்றான்.

பார்க்கவே பழைமையான வீடு பராமரிப்பின்றி தூசு படிந்து கிடந்தது. தோப்பும் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் தான் இருந்தது. எழில் உள்ளே சுற்றி பார்த்துக்கொண்டிருக்க இரண்டு வேலையாட்கள் வர அவர்களிடம் சுத்தம் செய்து புது வர்ணம் பூசவும் மற்ற வேலைகள் என்னென்ன என்றும் உரைத்தான்.

அவர்கள் வேலையை ஆரம்பிக்க எழில் வெளியே வந்தாள். அவன் அருகே வந்தவள் “ஏங்க இது உங்க வீடுங்களா?” என்றாள்.

ஆமென்பது போல் தலையாட்டியவன், “இனி நம்ம வீடு, உனக்கு பிடிச்சிருக்கா?” என்றான். அவளும் தலையாட்டியவாறு நடக்க, இருவரும் தோப்பை சுற்றி வந்தனர். விளைச்சல் இல்லாமல் மரங்கள் அனைத்தும் வாடி, பட்ட மரமாய் இருந்தது. தேர்தலிலும் தோற்றாகி விட்டது வேறு இங்கு என்ன தொழில் என யோசித்தவனுக்கு ராஜா சொன்ன விவசாயம் தான் நினைவில் வந்தது.

அவ்வழியாகச் சாலையில் சென்று கொண்டிருந்த ரெங்கநாதன் இத்தனை நாள் பூட்டியிருந்த வீட்டில் ஆட்கள் இருப்பதைப் பார்த்து விட்டு இறங்கி வந்தார். எழிலோடு பேசியவாறு வந்த உதய், ரெங்கநாதன் கோபமாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

உதயன் முன் வர, “யாரைக் கேட்டு இந்த தோப்புக்குள்ள வந்த? வீட்டை எதுக்குடா திறந்த?” என்றார்.

“யாரை கேட்கணும்?” அவனும் கேள்வி கேட்க, “அன்னைக்கு ஊர் முன்னாடி பெரிய வள்ளலாட்டம் எதுவும் வேண்டாம்னு எழுதிக்கொடுத்துட்டு இப்போ எதுக்குடா உள்ள வந்திருக்க?” என்றார்.

“ஆமா அன்னைக்கு என் பரம்பரை சொத்துதானே எழுதிக் கொடுத்தேன். ஆனால் இது எங்கப்பா என் சம்பளத்தில் எனக்காக வங்கி வைத்த தோப்பு” என்றவன் பத்திரத்தை எடுத்து நீட்ட, வாங்கி படித்தவர் அதிர்ந்தார்.

பொதுவாகத் தொழிலில் கொடுக்கல் வாங்கல் எல்லாம் கிருஷ்ணமூர்த்தி இருந்தவரை அவர் தான் பார்த்துக் கொண்டிருந்தார். ஆகையால் ஐந்து வருடத்திற்கு முன் அவர் இந்த தோப்பை வாங்கியது மட்டுமே தெரியும், உதயனின் பணத்தில் உதயனின் பெயரில் வாங்கியது எதுவும் ரெங்கநாதனுக்கு தெரியாது.

“ஏன் பெரியப்பா தேர்தல்ல தோற்றா ஊரை விட்டு போயிடுவேன்னு எதிர்பார்த்தீங்களா? இல்லை வந்து வம்பு பண்ணா இதையும் விட்டுக் கொடுத்திடுவேன்னு எதிர்பார்த்தீங்களா? வேணா அன்னைக்கு மாதிரி ஊரைக் கூட்டி நியாயம் கேட்போமா?” என்றான் சிறு சிரிப்புடன்.

அவன் இடத்திற்கு இவர் பஞ்சாயத்துக் கூட்டினால் இவருக்கு தானே அவமானம், அது மட்டுமின்றி தற்போது ஊர்த் தலைவர் வேறு அந்த மரியாதையும் காத்துக்கொள்ள வேண்டும்!

அவமானத்தில் அவர் முகமே மாறியது. முறைப்போடு அவனையும் அருகில் நிற்கும் எழிலையும் நோக்கியவர் திரும்ப, “தலைவரே கொஞ்சம் நில்லுங்க” என உதயன் தடுத்தான்.

அவர் ஒரு நொடி நிற்க, “அப்படியே ஊருக்குள்ள இருக்குற ஆக்கிரமிப்புகளையும் அகற்றினா நல்லது..” என்றான்.

அவரோ காதில் கேட்டாலும் நிற்காது சென்றுவிட்டார். ‘அகற்றவில்லை எனில் அதையும் நானே செய்வான்’ என அவன் சொல்லாமல் விட்டாலும் அவர் புரிந்துகொண்டார்.

கோபமுடன் வீட்டிற்கு வந்தவர் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தார். தன் வீட்டிலிருந்த தோப்புப் பத்திரமும், சாவியும் எவ்வாறு அவனிடம் சென்றது? தான் பார்க்க தன் கண்முன் வளர்ந்த சிறுவன் தன்னையே எதிர்கிறானா? தேர்தலில் தோற்ற பின்னும் இந்த தைரியம் அவனுக்கு எப்படி வந்தது? என நினைக்க, அவர் கைப்பேசி அழைத்தது. சிவாவிடமிருந்து அழைப்புகள் வந்திருக்க அட்டன் செய்தவர் நடந்தவற்றை உரைத்தார்.

உதயனின் மீதான கோபத்தை ஆறப்போட்டாலும் ஏதாவது ஒரு செயல் சிவாவின் கோபத்தை அதிகப்படுத்திக் கொண்டே இருந்தது. தான் ஊருக்குக் கிளம்பி வரட்டுமா என்க, ரெங்கநாதன் வேண்டாமென்று மறுத்து விட்டார். அடுத்து என்ன செய்வதென்று யோசித்தவருக்கு ஒரு யோசனை தோன்றியது!

அதில் சில நிமிடங்கள் கடந்திருக்கும் மீண்டும் அழைத்த சிவா அந்தத் தோப்பில் சில மாதங்களாக தங்கள் வண்டி ஒன்று நிற்கிறது அதை வீட்டிற்கு எடுத்து வரும்படி பதற்றமுடன் உரைத்தான். ஆனால் அவன் பதற்றத்தை உணராதவர் தன் யோசனையில் இருந்ததால் அவன் வார்த்தைகளைப் பெரிதும் கவனிக்காது விட்டுவிட்டார்.

## அத்தியாயம் 19

முதலில் வீட்டைச் சுத்தப்படுத்திவிட்டு ஒரு நன்னாளில் எழிலின் பெற்றோர், அழகனின் குடும்பம், கரிச்சட்டி, மணியை மட்டும் அழைத்துப் பால்காய்ச்சி விட்டு பண்ணை வீட்டிற்கு மாறினர். ஒருபெரிய தானிய களஞ்சிய அறை, ஒற்றை படுக்கையறை, ஒரு சமையலறை, நடுவில் சிறு கூடம் என்றிருந்த வீடு இருவருக்கும் போதுமானதாக இருந்தது. தனிக்குடித்தனம் செல்கிறார்கள் என்றதும் சுந்தரி

மகளுக்குச் செய்வதாகச் சொல்லி வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்தும் புதிதாக வாங்கி வைத்தார்.

மாலையிலே அனைவரும் கிளம்பியிருக்க, அன்று முழுவதும் வேலையிருந்ததால் சற்று அசதியிலிருந்த எழில் இரவு உணவிற்குத் தோசை மட்டும் ஊற்றி விட்டு அவனை உண்ண அழைத்தாள். அமைதியாக எழில் பரிமாறியதைத் தட்டை பார்த்து உண்டு முடித்து விட்டுச்  சென்று விட்டான்.

திருமணமாகி இந்த பதிமூன்று நாட்களில் விரல்விட்டு எண்ணிவிடும் வகையில் நாளொன்றிற்கு இரண்டு மூன்று வார்த்தைகள் தான் எழிலிடம் பேசியிருப்பான். அதுமட்டுமின்றி வேலை செய்வோர்களைக் கவனிக்க வேண்டிய வேலைப்பளுவும் இருந்தது. இன்னும் அவளிடம் பேசுவதற்கு அவன் தயங்கியிருக்க இருவருக்குள்ளும் சகஜமான பேச்சு வார்த்தைகள் வரவில்லை. அவன் பேசினால் பதிலளிப்பாள் தான், அவள் தவிர்க்கவில்லை ஆனால் அவன் தயங்கினான்.

தோப்பில் பட்ட மரங்களை எல்லாம் ஆள்விட்டு வெட்டிக் கொண்டிருந்தான். விறகுகளை நல்ல விலைக்கு விற்றுவிட்டு தோப்பில் உரமிட்டுப் பதப்படுத்திவிட்டு, புதிய மரக்கன்றுகளுக்கு ஆடர் கொடுக்க வேண்டும். வேலையாட்கள் வேலை செய்கையில் வேடிக்கை மட்டும் பார்க்காது அவனும் இறங்கி வேலை செய்யத் தொடங்கினான். உடல் உழைப்பு அவனுக்குப் பழக்கமில்லாதது தற்போது அதையும் பழகினான்.

எழிலிக்கும் வீட்டுவேலைகள் போக அங்கு வேலை செய்பவர்களின் பிள்ளைகளுக்கு சிறிது நேரம் பாடம் சொல்லிக்கொடுக்க நேரம் சரியாக இருந்தது.

இரவு அவன் உணவுண்டு விட்டுச் சென்றபின் தானும் உண்டு அனைத்தையும் ஒதுங்கு வைத்துவிட்டு எழில் பால் கிளாஸ்ஸோடு அறைக்குள் வர, மடிக்கணினியோடு கட்டிலில் அமர்ந்திருந்தான் உதய். இன்று அவனுக்கும் சரியான வேலை தானே? அசதியிலிருக்க இன்னும் படுக்காமல் என்ன செய்கிறான்? என்ற எண்ணத்தில் அருகில் வந்தவள்

கிளாஸை நீட்ட, “டேபிள்ல வைச்சிடு எழில் எடுத்துகிடுறேன்” என்றவன் நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

மேசையில் வைக்கையில் அவன் எதையோ டைப் செய்வதைக் கவனித்தவள் சற்று உற்றுப் பார்த்தாள். ஊருக்குள் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டிய மனுவை டைப் செய்துகொண்டிருக்க, கவனித்தவள், “நீங்க இன்னும் இந்த புகாரைக் கொடுக்கலையா?” என்றாள்.

அவன் அதைச் சற்றும் கவனிக்காது போக, உதட்டைச் சுளித்தவள் மறுபுறம் சென்று படுத்துவிட்டாள். தன் வேலைகளை முடித்து மடிக்கணினியை அணைத்து வைத்துவிட்டு பாலை அருந்தினான். பின் விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் அவளைப் பார்த்தவனுக்கு அப்போதே அவள் கேட்டது நினைவில் வந்தது.

சட்டென கையூன்றி தலை நிமிர்த்தியவன் வேகமுடன் அவளையும் தன் பக்கம் திரும்பி, “என்ன கேட்ட?” என்றான்.

“இன்னும் அந்த புகாரை கொடுக்கலையான்னு கேட்டேன்?” என்க, “ஆமா அது எப்படி உனக்குத் தெரியும்?” என விசாரித்தான்.

முகத்தைச் சுருக்கி ஒற்றை கண்ணை மூடி நாக்கை கடித்தாள். தானே உளறியதை நினைக்கையில் நெற்றியில் அறைந்து கொள்ளாலாம் போல் இருந்தது.

“எனக்குத் தூக்கம் வருது” என அவன் கேள்வியைத் தவிர்த்துவிட்டு திரும்ப, மீண்டும் வேகமுடன் அவளை தன்புறம் திருப்பியவன், “உண்மைய சொல்லுடி களவானி, நீ தான் ஏதோ செய்திருக்க?” என்றான் கன்னத்தைக் கிள்ளியபடி!

அழுத்திக் கிள்ளியதில் கன்னம் வலிக்க, உதய்யின் கைகளைத் தட்டிவிட்டவள் முகத்தைச் சுருக்கினாள். அந்த மஞ்சள் விடிவிளக்கின் மெல்லிய ஒளியில் சிவந்த கன்னம் வண்ணக்கோலமாய் மின்ன தான் விசாரணையை ஒரு நொடி மறந்து போனான்.

“அது கதிர் மாமா ஆக்கிரமிப்பு பத்தின டீட்டைல்ஸ் மட்டும் தான் கலெக்ட் பண்ணி வைச்சிருந்தாங்க, நான் தான் அது எல்லாத்தையும் புகாரா ரெடி பண்ணி உங்க பார்வையில படுறமாதிரி உங்க ரூம்ல வைச்சேன்” என மெல்லிய சிணுங்கள் குரலில் அவன் முகம் பார்த்து உரைத்தாள்.

“அதுக்கு தான் கிளீன் பண்ணுறேன்னு என் ரூம்குள்ள வந்திருக்க?” என அதட்டலாகக் கேட்க, சிரிப்போடு சமாளித்தவள், “கதிர் மாமா தேர்தல்ல நிக்கிறதா முடிவு மட்டும் தான் செஞ்சிருந்தாரு யார்க்கிட்டையும் சொல்லலை, நான் தான் வேட்புமனு எல்லாம் உங்க பார்வையில படுறமாதிரி வைச்சேன், அதை நீங்க நிரப்பி கொடுத்திட்டீங்களான்னு செக் பண்ண தான் இரண்டாவது தடவை நீங்க இல்லாத போது வந்தேன். மற்றபடி உங்க ரூம்ல எதுவும் திருட வரலை” என்றாள்.

உண்மையை உளறி மாட்டிக்கொண்டோமே என எழிலுக்கு இதயம் பயத்தில் படபடத்துக் கொண்டிருந்தது. கோபம் கொள்வானோ, திட்டுவானோ எனப் பயந்தாள்.

அதிர்ந்த உதய் பற்களைக் கடித்தான். “செய்யுறதையும் செஞ்சிட்டு போட்டோவை எடுக்க வந்தேன்னு பொய் வேற..?” எனக் கேட்டவாறு அவள் கன்னத்தை மீண்டும் கிள்ள வந்தான். அதற்குள் சுதாரித்தவள் அவன் தோளில் குத்தி தள்ளிவிட்டாள். அது வரை வலது கைய மெத்தையில் ஊன்றி தலை தாங்கி அவள் புறமாகத் திரும்பிப் படுத்திருந்தவன் அவள் தள்ளியதும் நிலை தடுமாறி அவள் மேலே விழுந்தான்.

எழிலுக்கு இதயத்துடிப்பே ஒருநொடி நின்றுவிட்டது கண்களை இறுக்கி மூடிக்கொண்டு மூச்சை உள்ளிழுத்து நிறுத்திக்கொண்டாள். உதயனின் இதயம் வழக்கத்திற்கு மாறாகத் துடிக்க, அதிவேகமாக மூச்சுவிட்டான். கழுத்தில் அவன் முகம் புதைந்திருக்க, கல்யாண மஞ்சளின் வாசமும், கூந்தலிருந்த மல்லிகையின் வாசமும் அவனை மொத்தமாக மயங்கியது. தெளியாத மயக்கத்தில் தன்னை தொலைக்க விரும்பினான்.

அவள் முகம் பார்த்து பார்வையைத் திருப்ப, எழிலுக்கு முகமெல்லாம் முத்து முத்தாய் வியர்த்திருந்தது, அன்று அவனறையில் இருந்த போதும் இவ்வாறு தானே இருந்தாள் என்ற நினைவோடு துடைத்துவிட கைகளை உயர்த்தினான். அப்போதே அவள் மூச்சை பிடித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தவன் சட்டென்று விலகிக்கொண்டான்.

எழில் உச்சத்தலை வரை போர்வையை இழுத்து மூடிக்கொண்டு மறுபுறம் திரும்பி விட்டாள். உதயனும் சங்கடத்தோடு தவிப்பாய் உணர்ந்தான். அவள் தள்ளிவிட்டதால் விழுந்தான் எனினும் தன்னைப் பற்றி என்ன நினைப்பாளோ எனத் தவித்தான்.

மறுநாள் காலையில் காஃபி கொடுக்கையில் எழில் வலது கை பெருவிரலிலிருந்த மச்சம் உதயனின் கண்ணில் பட்டது. வருடிப் பார்க்கும் ஆசை வந்த போதும் அமைதியாக கிளாஸை மட்டும் வாங்கிக்கொண்டான்.

அன்று வெள்ளிக்கிழமை ஆகையால் எழில் தலைக்குக் குளித்து ஈரத்தலையில் டவலை சுற்றியிருக்க, காதோரம் வெளிப்பட்ட முடியிலிருந்து நீர்த் துளிகளில் சொட்டி முதுகிலும் கழுத்திலும் முத்து முத்தாய் படிந்திருக்க, பார்ப்பதற்கு கவிதையாய் இருந்தது. முதல் முறையாக எழில் என்ன உணவு பரிமாறினாள் என்பதைக் கவனிக்காது அவளைக் கவனித்து உண்டு எழுந்து வந்திருந்தான் உதய்.

வேலையாட்கள் வந்துவிட எழுந்து தோப்பிற்குள் சென்றவன் வேலையின் போதும் இரண்டு மூன்று முறை தண்ணீர் அருந்துகிறேன் என வீட்டிற்கு வந்துவிட்டான். என்றுமில்லாத திருநாளாய் எழிலரசி அவன் கண்ணிற்கு அழகாய் தோன்ற, அதை விட அந்த அழகை ரசிக்கும் எண்ணம் தோன்றியது எதனால் என்றே தெரியவில்லை.

மாலை வேலை முடியவும் குளித்து வந்தவன் ஹாலில் அமர்ந்து விட்டான். எழில் பூஜையறை, வீடு சுத்தம் செய்கிறேன் என அங்குமிங்கும் நடமாட, உதயனின் பார்வை அவளை தொடர்ந்தது. தூக்கிச்சொருகிய

புடவையில் வடிவழகாய் அங்குமிங்கும் நடமாடுகையில், வேலைகளுக்கு இடையில் நெற்றி வியர்வையைப் புறங்கையால் துடைக்கையில், லேசாகப் புடவை நழுவிய இடுப்பு மடிப்பு கண்ணில் படுகையில் எல்லாம் ஒவ்வொன்றையும் கவிதையாய் வடிக்கத் தோன்றியது, என்ன செய்ய அவனுக்குத் தான் கவிதை எழுதத் தெரியாதே!

பொதுவாக மாலைநேரம் அழகனின் கடைப்பக்கம், ஊருக்குள் சென்றுவிடுபவன் அன்று நிதானமாக அமர்ந்திருப்பதைக் கவனித்தவள் தன் வேலைகளை முடித்துவிட்டு அருகே வந்தாள்.

“ஏங்க என்ன செய்யறீங்க?” எனக் கேட்க, ‘ஒருவேளை நான் பார்த்ததை கண்டுகொண்டாளோ!’ என அதிர்ந்தவன் முழித்தான்.

அவன் பார்வையில் குழம்பியவள், “என்ன செய்றீங்கன்னு தானே கேட்டேன்? அதுக்கு எதுக்கு இந்த திருட்டு முழி?” என்றாள் அதட்டலாக.

தன் கையிலிருந்த பேப்பரை தூக்கிக்காட்டியவன், “பேப்பர் படிச்சிக்கிட்டு இருக்கிறேன்” என்றான்.

“அப்போ வெட்டியா தானே இருங்கீங்க! கொஞ்சம் வெயிட் பண்ணுங்க, நான் ரெடியாகி வந்துடுறேன். கோவிலுக்கு போயிட்டு வரலாம்” என அதிகாரமாய் அவள் உரைக்கச் சிறு சிரிப்போடு தலையாட்டினான் உதய்.

அறை வாசல் வரை சென்றிருந்தவளை, “எழில் ஒரு நிமிஷம் நில்லு” என நிறுத்த, திரும்பிப் பார்த்தாள்.

தன் சட்டையைக் குனிந்து பார்த்துக்கொண்டவன், “நீலக்கலர் புடவை கட்டிக்கிட்டு வா” என்க, கேட்டவள் சிறு சிரிப்புடன் உள்ளே சென்றாள்.

இருவரும் ஒன்றாக முருகர் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட்டுவிட்டு, சுந்தரியின் வீட்டிற்குச் சென்றனர். புதுமண ஜோடிகள் என்பதால் ஊருக்குள் அனைவரின் கண்ணும் அவர்கள் மேல் தான் இருக்கும். பார்க்கும்

பெரியவர்கள் எல்லாம் அவர்களாகவே பேச்சுக்கொடுத்து ஆசிர்வதிப்பார்கள்.

பார்த்து இரு தினங்கள் தான் இருக்கும் என்னவோ வருடங்கள் ஆனது போல் சுந்தரியும், எழிலரசியும் நலம் விசாரித்துக்கொண்டு ஊர்க் கதைகள் பேசியபடி சமையலறைக்குள் சென்று விட்டனர். கோவிந்தசாமியும் வீட்டில் இல்லாது போக, திண்ணையில் அமர்ந்துவிட்டான் உதயன்.

எதிர்வீட்டிலிருந்து வந்த விமலா அவனிடம் பேச்சுக்கொடுத்தபடி உயர்கல்வி உதவித்தொகை பெறுவது குறித்து ஆலோசனை கேட்டுக்கொண்டிருந்தாள். இரவு சமையல் முடித்து சாப்பிட அழைக்க வந்த எழில் இருவரும் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்தாள்.

“ஏங்கச் சாப்பிட வாங்க?” என அவன் முகம் பார்த்து அழைக்க, அவனுக்கு அவள் பார்வை முறைப்பாகத் தெரிந்தது.

உதயன் எழுந்து செல்ல, சில நிமிடங்களில் கோவிந்தசாமியும் வந்துவிட, அனைவருமாக இரவு உணவினை உண்டனர். பின் இருவரும் வீட்டிற்குக் கிளம்பி வர, எழில் எதுவும் அவனிடம் பேசவில்லை.

வீட்டிற்குள் வந்தவள் பூஜையறைக்குள் சென்று பிரசாதத்தை வைத்துவிட்டு படுக்கையைச் சரிப்படுத்தி ஒருபுறம் அமைதியாகப் படுத்துவிட்டாள். வந்ததிலிருந்து பேசவேண்டுமென அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தவன் உடைமாற்றி விட்டு படுத்தான்.

“எழில்..எழில் உறங்கிட்டியா?” என்க, அவளிடம் சத்தங்களே இல்லை. மெல்ல அருகில் நெருங்கிப் படுத்தான், அப்போதும் அவளிடம் அசைவுகளே இல்லாமல் இருக்க மேலும் நெருங்கினான்.

எழில் உறங்கவேயில்லை, கோபத்திலிருந்தவள் தன் முதுகின் பின் அவன் மூச்சுக்காற்றை உணர்ந்து சட்டெனத் திரும்பிப் படுத்தாள். அதிர்ந்த உதய்

ஒருநொடி பதறி சற்று விலகிப்படுக்க, முறைப்புடன், “என்ன..?” என்றாள்.

“இல்லை உங்கிட்ட ஒன்னு கேட்கணும்” என அவன் மென்குரலில் கேட்க, பார்வை மாற, புரியாத பார்வையோடு மீண்டும் என்னவென்றாள்.

“அபிராமியக்கா கால் பண்ணாங்க, நம்மளை விருந்துக்கு கூப்பிட்டாங்க” என்க, “என்னைக்கு போகணும்..?” என்றாள்.

“சண்டே, அன்னைக்குத் தான் மாமாவும் பாப்பாவும் வீட்டில் இருப்பாங்க” என்க, சரியென்பது தலையாட்டியவள் சில நொடி அவன் முகத்தையே பார்த்திருந்தாள்.

தன்னை ரசிக்கிறாளோ என தோன்றவும், அவள் பார்வை உதயனுக்கு புது வெட்கத்தைத் தந்தது, முகம் மலர்ந்தவன் மெல்லிய சிரிப்போடு ஒற்றை புருவம் உயர்த்தி என்னவென்றான்.

“என்னை விட உங்க குட்டியம்மா தான் அழகாயிருக்காளா?” மெல்லிய சிணுங்கல் குரலில் கேட்க, உதயன் வாய்விட்டுச் சிரித்தான். என்ன தான் சிரித்த போதும் உள்ளுக்குள் ‘இவ்வளவு நேரம் அவ என்னை சைட் அடிக்கவேயில்லையா?’ என ஏக்கமாக நினைத்தான்.

பிறைநெற்றியும், தன் பதிலுக்கான எதிர்பார்ப்போடு பார்க்கும் கருவிழியும், குட்டி முக்கோண மூக்கும், மொழுமொழுக்கன்னமும், சிவந்த வடிவான தேனூரும் சிறு இதழும் என நொடி நேரமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அதுவரை ரசித்துக் கொண்டிருந்தவனுக்கு அதை ருசிக்கும் ஆசையும் தோன்றியது.

அவனையும் அறியாது பெருமூச்சோடு, “பேரழகு..!” என்க, அவள் இதழிலிருந்த மோனாலிசா புன்னகை மேலும் விரிந்தது.

“இதை நாளானைக்கு ப்ரிதிக்ஷாகிட்டையும் சொல்லணும்” மாறா சிரிப்புடன் கட்டளையிட்டவள்

விழிகளை மூடினாள்.

உதயனுக்கு மூச்சு முட்டுவது போன்றிருந்தது. அவளருகில் படுக்கவே முடியவில்லை எழுந்து அறைக்குள் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். 'அழுக்கு மூஞ்சியா, மூக்கொழுகியா சின்ன வயசுல இருந்து கதிரோட இவளை பார்த்திருக்கேனே, வினோத் கல்யாணத்துல கூட அவ்வளவு அலங்காரத்தோட நின்றாலே அப்போ எல்லாம் இந்த அழகு என் கண்ணுக்குத் தெரியலையே! ஒருவேளை இப்போ ஓவர் மேக்கப்போ?' என நினைத்தவாறு  நடந்தவன் கண்ணாடி முன் பார்க்க, ஒரு கண்மை டப்பா, பவுடர் டப்பா, ஸ்டீகர் பொட்டு அவ்வளவு தான் இருந்தது.

'மேக்கப்பும் இல்லை, அப்படின்னா என்னாச்சு எனக்கு? இந்த அழகு ரசிச்சிக்கிட்டு இருந்த என்னை ஏன் தடுமாற வைக்குது? அழகு தானா? இல்லை அழகைத் தான்டி அவகிட்ட வேற எதுவும் ஈர்ப்பா? ஆனால் அவ என்னை இப்படி பார்க்கலையே? ஒருவேளை பார்க்கிற மாதிரி இல்லையோ நான்? ச்சே! அது இல்லை, அன்னைக்குத் தான் சொன்னாலே அவளால கதிரை மறக்க முடியலைன்னு, சோ இனி அவளை தொந்தரவு செய்யக்கூடாது. இவளை தனிக்குடித்தனம் கூட்டிட்டு வந்ததே தப்பாப் போச்சு, கடைசியில நான் தான் தவிக்க வேண்டியதா இருக்கு' எனக் குழம்பியவன் இறுதியில் ஒரு முடிவு கிடைக்கவும் உறங்கினான்.

காலையில் வெகுநேரமாகிய பின்னும் உதயன் எழாமல் இருக்க, தொட்டு உலுக்கி எழுப்பினாள் எழில். அந்த அதிர்வில் உதய் விழிக்க, "ஏங்க இங்க வந்து எப்போ படுத்தீங்க?" என்றாள்.  அப்போதே ஹாலில் படுத்திருப்பதை கவனித்தவன், "உள்ள காத்து பத்தலை, நைட்டே வந்து படுத்துட்டேன்" என்று அவள் முகம் பார்ப்பதைத் தவிர்த்து விலகிச் சென்றான்.

பல்துலக்கியபடி வெளிமுற்றத்தில் நடந்து கொண்டிருந்தவனுக்கு திடீரென அந்த இடமே வெறிச்சோடித் தெரிய, "எழில்..!" என உரக்க அழைத்தான்.

சமையலறையில் இருந்தவள் பதறி வர, “இங்க ஒரு டாட்டா ஏசி வண்டி நின்னுக்கிட்டு இருந்திச்சே யார் எடுத்தா? பார்த்தியா?” என்றான். அப்போதே அவளும் அதை கவனித்தாள். அவர்கள் வந்த நாட்களிலிருந்து அங்கு தான் நின்று கொண்டிருந்தது, பழுதாகி பயன்பாட்டிற்கு அற்றதோ என எண்ணினர்.

அவள் மறுப்பாய் தலையசைக்க, “சரி விடு, வேற யாரு எடுக்கப்போறா பெரியப்பா தான் எடுத்திருப்பாரா இருக்கும்” என்றவன் அவள் முகம் பாராது விலகிச் சென்றான்.

அன்றைய நாள் முழுவதும் அவளைத் தவிர்க்க, நேற்றிருந்த உற்சாகம் இன்றில்லாமல் அவன் வேலைகள் தேங்கின. வெட்டிய விறகுகளை ஏற்றியிருக்க நேற்றோடு தோப்பு வேலைகள் முடிந்திருந்தது. வாட்டாச்சியாளர் அலுவலகம் சென்று ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரிய புகார் மனுவை கொடுத்திவிட்டு மாலை அழகனின் கடையில் வந்தமர்ந்தான்.

“இங்க பாருங்கண்ணே அதிசயத்தை! புதுமாப்பிள்ளை இங்க வந்து உக்கார்ந்திருக்காரு” என அழகனை அழைத்தான் கரிச்சட்டி.

“பக்கத்து அரிசிக்கடையில இரண்டு டீ கேட்டாங்க, கொண்டு போய் கொடு போ” என விரட்டியபடி அருகே வந்தான் அழகன்.

உதயனின் தாடையைப் பிடித்து முகத்தை நிமிர்த்தியவன் இருபுறமும் திருப்பிப் பார்த்தபடி, “என்னடா மாப்பிள்ளை, ஒருவாரம் கழிச்சி இங்க வந்து உக்கார்ந்திருக்க?” என்றான்.

“ச்சு..,வீட்டுலையே நாலு சுவத்தை பார்த்துகிட்டே எவ்வளவு நேரம் தான் இருக்கிறது?” எனச் சலித்துக்கொண்டான் உதயன்.

“சுவத்தைப் பார்க்க முடியலைனா எழிலைப் பாரு” என்க, “நான் மட்டும் பார்த்து..? அவ என்ன திரும்பிக் கூடப் பார்க்க மாட்டிக்கா, பார்த்தாலும் சேர், டேபுள்ன்னு பொருளைப் பார்க்கிற மாதிரி தான்

பார்குறா!” என பதின்வயது பையன் போலே குறைப்பட்டான்.

அழகனோ பொங்கிய சிரிப்பை அடக்க முடியாது குலுங்கி குலுங்கி சிரிக்க, “எதுக்குடா சிரிக்கிற?” என்றான் முறைத்தபடி.

”இப்படி விவரம் தெரியாத பச்சப்புள்ளையாவே இருக்கியே மாப்பிள்ளை! அவளும் எவ்வளவு நேரம் தான் நாலு சுவத்தையே பார்க்கிறது? கண்டிப்பா உன்னைப் பார்த்திருப்பா, உனக்குத் தான் கண்டுபிடிக்கத் தெரியலை. அப்படி பார்க்காட்டலும் பார்க்க வைடா. கவிதை எழுதியோ, பாட்டுப்பாடியோ, சமைச்சிப்போட்டோ, குட்டிக்கரணம் போட்டோ ஏதாவது செஞ்சி அவ கவனத்தை கொஞ்சமாவது ஈர்க்கணும்டா” என்றான்.

“இவ்வளவு சொல்லுறையே இதுல நான் எதைடா செய்ய? ஆமா நீ எப்படி ரத்தனத்தை இம்ப்ரெஸ் பண்ண?” என்றான் அறியாப்பிள்ளையாக.

நொந்து போன அழகன் தன் தலையில் தானே தட்டிக்கொண்டு, “அது கல்யாண முடிச்ச புதுசுல எங்க வீட்டுல இராத்திரிக்கு சோளமாவு உப்புமா, ரவை உப்புமான்னு விதவிதமா உப்புமாவா எங்காத்தா போட, ரத்தினத்துக்கு அது சுத்தமா பிடிக்காது. அதையும் சொல்ல முடியாம முழிப்பா. நான் தினமும் பிரியாணி, பரோட்டா, நெய்தோசைன்னு விதவிதாம கடையில இருந்தே செஞ்சிக்கொண்டு போய் கொடுப்பேன்” என்றவனுக்கு அந்நாளின் நினைவில் முகமே இளகியது.

உதயன் அப்போதும் முழித்துக்கொண்டிருக்கப் பொறுக்கமுடியாமல் அவன் தலையில் குட்டிய அழகன், “உன்ன ஒன்னும் சமைக்கச் சொல்லலை, நீ சமைச்சி அந்த புள்ளைக்கு ஏதாவது ஆகுறதுக்கா? பேசாமா வேற ஏதாவது ட்ரை பண்ணு” என அழகன் விரட்டிவிட உற்சாகமாக வீடு நோக்கிச் சென்றான் உதயன்.

## அத்தியாயம் 20

உற்சாகமாக வீட்டிற்குள் வந்தவன் மெல்ல உள்ளே வந்து எட்டிப்பார்த்தான். எழில் சமையலறைக்குள் இருக்க, சத்தமின்றி அவளருகில் வந்து நின்றவன் ஒரு ரசனையான பார்வையால் தேகம் தீண்டினான்.

மெல்லிய குரலில், “உன் சமையலறையில் நான் உப்பா? சர்க்கரையா?” எனப் பாட ஆரம்பிக்க, “மிளகாப்பொடி” என்றாள் பட்டென.

உதயன் அதிர்ந்து விழிக்க, “அந்த மிளாகாப்பொடி டப்பாவை எடுங்க” என்றாள் மீண்டும்.

‘அப்பாடா நம்மள இல்லை’ என நிம்மதி பெருமூச்சு விட்டுக்கொண்டவன் எடுத்துக்கொடுத்தபடி, “ஒரு பொய்யாவது சொல் கண்ணே..” என ஆரம்பிக்கச் சத்தமாகச் சிரித்தபடி அவன் புறம் திரும்பியவள், “ஏங்க இப்போ வடிவேல் மாட்லேஷன்ல பாடி காமெடி பண்ணிக்கிட்டு இருக்கீங்க?” என்றாள்.

காமெடியா என அதிர்ந்த உதய், ‘பெர்பாமன்ஸ் பண்ண விடுடி’ என மனதில் புலம்பினான். அவன் முகம் பார்த்த எழில் சிரிப்புடனே, “பாத்ரூம்ல தான் பாடுவீங்க, இப்போ கிட்சனிலும் பாட ஆரம்பிச்சாச? சரி என்ன வேணும் காஃபியா?” என்க, தலையாட்டிவிட்டு வெளியே வந்தான்.

‘சூப்பர்சிங்கர் ரேஞ்சுக்கு உருகி உருகி பாடுனா, பாத்ரூம் சிங்கர்ன்னு பால்பு கொடுக்குறா! இதுக்கு தான் ஹிந்தியில பாடச்சொல்லி அப்போவே என் ஏழாம் அறிவு சொல்லுச்சி, கேட்டேனே’ எனப் புலம்ப, ‘நீ ஹிந்தியில பாடின அவளுக்கு எப்படிடா புரியும்?’ என்றது மனசாட்சி.

எப்படியும் பாட விடமாட்டாள் எனப் புரிந்துகொண்டவன் தன்னறைக்குச் சென்றான். அடுத்து என்ன செய்வதென யோசித்தபடி அறைக்குள்ளே நடந்தான். மேசையிலிருந்த டைரி கண்ணில் பட, எடுத்தவன் கவிதை ஒன்றை எழுதி அதை மடித்து எடுத்துக்கொண்டு ஹாலில் வந்து அமர்ந்தான்.

சில நிமிடங்கள் கையில் காஃபியோடு வந்தவள், அவனிடம் நீட்ட அமைதியாக வாங்கிக்கொண்டவன், “அதென்ன உன் கால் அடியில ஏதோ பேப்பர் மாதிரி கிடக்கு?” என கை நீட்டினான்.

சட்டெனக் குனிந்து பார்த்தவள் கீழே கிடந்த பேப்பரை எடுக்க, உதயன் காஃபியோடு எழுந்து அறைக்குள் சென்றுவிட்டான். கதவருகே மறைந்து நின்று அவள் வாசிக்கிறாளா எனப் பார்க்க, பேப்பரை பிரித்துப் படித்துக்கொண்டிருந்த எழிலின் முகம் மலர, மெல்லியதாய் சிரித்தாள்.

“லேசர் விழியோ அதன் மின்சாரப் பார்வையோ!

பைதகோரஸ் மூக்கோ அதில் கதிர்வீசும் மூக்குத்தியோ!

பாஸ்பரஸ் கன்னமோ அதில் கந்தக கோபமோ!

மேக்னட் இதழோ அதன் நேனோ மீட்டர் சிரிப்போ!

அறிவியலும் அதிசகிக்கும் அழகியடி நீ!

அதில் எதுவோ எதுவோ என்னை ஈர்க்குதடி!”

மடித்து வைத்தவள் மீண்டும் நினைத்து நினைத்துச் சிரித்தாள். சமையலின் போதும் சிரித்துக்கொண்டே செய்தாள். மணி நேரங்கள் கடந்தும் அவளிடம் பெரிதான பிரதிபலிப்பு எதுவும் இல்லாது போக மீண்டும் ஹாலில் வந்தமர்ந்து கவனித்தான்.

இரவு உணவின் போது, “அப்போ ஏதோ பேப்பர் கையில எடுத்தியே என்ன அது?” என உதய் கேட்க, சென்று அந்த கடிதத்தை எடுத்து வந்து அவன் முன் கோபமுடன் விரித்து வைத்தாள். உதயனுக்குப் பக்கென்று இருந்தது, கடிதத்தை உற்றுப் பார்க்க ஆங்காகங்கு சிவப்பு மையால் வட்டமிட்டிருந்தது.

நிமிர்ந்து அவள் முகம் பார்க்க, “இன்னைக்கு சாயந்தரம் வசந்த் பையன் வந்து செம்பருத்தி பூ படம் வரைஞ்சி தரச்சொல்லி ப்ரக்ட்டிகல் நோட் கொடுத்தான். அதுல இருந்து விழுந்திருக்கும் போல,

ரொம்ப நாளா அவனுக்கு வள்ளியக்கா மகள் ரோகிணி மேல விருப்பங்க. ஆனா பாருங்க கழுதைக்கு ஒரு லெட்டர் கூட ஒழுங்கா எழுதத் தெரியலை, எத்தனை ஸ்பெல்லிங் மிஸ்டேக்ஸ். பதினாறு வயசுலையே லவ் லெட்டரா நாளைக்கு வரட்டும் அவனுக்கு இருக்கு" என புலம்ப உதயன் ஞே என முழித்துக் கொண்டிருந்தான்.

"ஆனால் ஒன்னு உறுதி இந்த பையன் இன்ஜீனியரா வருவான், இருங்க தோசை எடுத்துட்டு வரேன்" எனச் சமையலறைக்குள் சென்றாள்.

அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் இடது கையால் தன் நெற்றியில் தானே அறைந்து கொண்டான். 'ஐயோ சொதப்பிடையேடா, இதுக்கு இங்கிலீஷ்ல எழுதியிருந்த அவளால் தப்புக் கண்டுபிடிக்க முடியாம போயிருக்கும்' என லெட்டரை ஒருமுறை பார்த்தவன், 'கரெக்ஷன் வேற பண்ணி வைச்சிருக்கா இனி போய் இந்த லெட்டரை நான் தான் உனக்காக எழுதுனேன்னு சொல்லவும் முடியாதே! இப்படி ஒரே பால்ல அவுட்டாக்குனா நானும் என்ன தான் செய்றது' என முகத்தில் அறைந்து புலம்பிக் கொண்டிருந்தான்.

சமையலறை வாசலிருந்து பார்த்துக்கொண்டிருந்த எழிலுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. சத்தமாகச் சிரிக்க முடியாததால் மௌனமாகக் குலுங்கி குலுங்கி சிரித்தாள். வாசிக்கும் போதே அவளுக்குப் புரிந்தது இன்ஜீனியரிங் ஸ்டுடன்ட்டானா உதயனின் கிறுக்கல் தான் இவைகள் என. எப்படியிருந்தாலும் அவளைப் பொறுத்தவரை இந்த கடிதம் பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டிய பொக்கிஷம்.

என் அழகைத் தான் புகழ்ந்தான், எதற்காக? என்மீது கொண்ட நேசத்தை வெளிப்படுத்தவா? என் மீது அவனுக்கு நேசமா? என நினைக்கையில் நெஞ்செங்கும் இதமான குளுமை பரவுவது போன்றிருந்தது.

மறுநாள் அபிராமியின் வீட்டு விருத்திற்குச் சென்றிருந்தனர். அனைவரும் உள்ளே செல்ல வழக்கம் போலே அவன் தோள்களில் தொற்றிக்கொண்ட

ப்ரதிக்ஷா எதிர்பார்ப்போடு சாக்லேட் கேட்க, தன்னை விட எழில் அழகு என அவளிடம் சொன்னால் மேலும் இரு சாக்லேட் தருவதாக ரகசியமாக டீல் பேசிக்கொண்டான்.

செல்வராஜும் உதயனும் ஹாலில் பேசிக்கொண்டிருக்க, அபிராமி சமையலறையில் வேலையில் இருக்க, எழிலும் ப்ரதிக்ஷாவும் அவள் அறையில் விளையாடிக் கொண்டிருந்தார். எழில் கழுத்தைக் கட்டிக்கொண்டு கன்னத்தில் முத்தமிட்டு ஒரு சாக்லேட்காக உதய் சொல்லிக்கொடுத்தபடியே எழிலை அழகென்றாள் ப்ரதிக்ஷா. அதுவும் உதய் தான் சொல்ல சொல்லிவிட எழிலுக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. ஏதோ விளையாட்டாகக் கேட்டதையும் மறுக்காமல் சிரத்தை எடுத்துச் செய்திருக்கிறானே!

“அப்பறம் மாப்பிள்ளை, தோப்பு வேலையெல்லாம் எந்தளவுல இருக்கு? வேற எதுவும் பிஸ்னஸ் பண்ற ஐடியா இருக்கா? ஒரு மில்லு வருது வாங்கிடலாமா?” எனக் கேட்டார் செல்வராஜ்.

“இல்லை மாமா, இப்போதைக்கு வேண்டாம். குழிதோண்டி தொழுவுரம், ஆவாரை எல்லாம் போட்டுப் பதப்படுத்தி வைச்சிட்டோம், கண்ணுக்கும் ஆடர் கொடுத்து இருக்கேன். மா, எலும்பிச்சை, தென்னை கொஞ்சம் தேக்கு இப்போதைக்கு இது தான் வைக்கப் போறேன். இதை பராமரிச்சி விளைச்சல் எடுக்க ஐந்து, ஆறு வருஷமாகிடும். இதுக்கும் மேல வாழை, கொய்யா எல்லாம் அப்பறம் பார்த்துக்கலாம். அது மட்டுமில்லை மாமா ஒரு இன்ஜீனியரிங் காலேஜ்ல கெஸ்ட் லேக்ட்சரா இன்வைட் பண்ணியிருக்காங்க, மன்த்லி நல்ல சேலரி ஆஃபர் பண்றாங்க. வீக்லி த்ரீ டேஸ் மட்டும் போற மாதிரியிருக்கும் சோ ஜாயின் பண்ணிடலாம்னு இருக்கேன். இப்போதைக்கு இது போதும் மாமா” என்றான் உதயன்.

“ரொம்ப நல்லது மாப்பிள்ளை, இந்த காலத்துல விவசாயத்தை மட்டுமே பிரதானமா நம்பிக்கிட்டு இருக்க முடியாதுலே” என அவன் முதுகில் தட்டிக்கொடுத்தார் செல்வராஜ். உள்ளே

அறையிலிருந்த அபிராமியும், எழிலும் கேட்டுக்கொண்டே தானிருந்தனர்.

பின் அபிராமி விருந்து வைக்க அனைவரும் உண்டனர். மாலை வரை அவர்கள் வீட்டில் நேரம் கழிய, கிளம்பும் நேரம் தாம்பூலத்தில் இருவருக்கும் பட்டும், பழமும், பாக்கு வெற்றிலையோடு வைத்துக் கொடுக்க, உதயனும் எழிலும் இருவரிடமும் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டு தாம்பூலம் வாங்கிக்கொண்டனர்.

விடைபெற்றுக் கிளம்பியவர்கள் வரும் வழியில் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு இரவு வந்து சேர்ந்தனர்.

காலையில் அழகனின் கடைப்பக்கம் செல்ல, கடை அன்று விடுமுறை. கடையின் முன் பகுதியில் இருந்த கொட்டகைகள் அனைத்தையும் பிரித்துக்கொண்டிருக்க, ஒரு கொத்தனாரும் மற்றொரு ஆளும் பக்கத்து காலியான இடத்தில் அளந்துக் கொண்டிருந்தார். அழகன் நின்று அவர்கள் வேலையை பார்ப்பதை கவனித்துக் கொண்டிருக்க, அருகே வந்த உதயன், “மச்சான் என்னாச்சி?” என்றான்.

“வாடா நல்லவனே நான் கேட்க வேண்டியது நீ கேட்கிற?” என்றான் முறைப்புடன். “அடேய் என்ன நடந்துச்சின்னு கேட்டா இது என்ன லுக்?” என புரியாது உதயன் கேட்டான்.

“இரண்டு வாரம் முன்னாடியே ஊருக்குள்ள ஆக்கிரப்புகளை அகற்றச் சொல்லி கவெர்மென்ட்ல இருந்து நோட்டிஸ் விட்டதா ஊர் தலைவரு அன்னைக்கே சொன்னாரு. அவரே ஸ்கூல் கிரவுண்ட், குடோன்னு ஒதுக்கும் போது நானெல்லாம் எம்மாத்திரம்?” என்றான்.

நம்பயியலாது அதிர்ச்சியவன் “அதுக்கு, கடைய காலி செய்றியா?” என்றான்.

“டேய் கொஞ்சமாவது நல்ல வார்த்தை சொல்லேன்டா, முன்னாடி உள்ள கொட்டகை பதினஞ்சி அடி தான்டா நடைபாதை, அதுக்கு பின்னே கடை என் இடம் தான். அதான் கொட்டகைய பிரிஞ்சி பக்கத்து இடத்துல

நாலடி சுவத்தைக் கட்டி கொட்டகைய போட்டு, மேற்கால இருக்குற வாசலை தெக்கால போடப்போறேன்” என விவரித்தான் அழகன்.

“இரண்டு நாள் வேலை தானே செஞ்சிடு, இனி போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாம இருக்கும்” என உதயன் உரைக்க மேலும் முறைத்தான் அழகன்.

“என்னடா மாச்சான்?” என சிரிப்புடன் கேட்க, “நீ சொன்ன மாதிரியே செஞ்சிட்டில, தேர்தல்ல ஜெயிக்காட்டியும் நீ ஆக்கிரப்புகளெல்லாம் அகற்றிட்டில, சிரிக்காத ஏதோ செஞ்சிருக்கடா நீ!” என்றான் அழகன்.

“நாலு பேருக்கு நல்லது நடக்குன்னா எது செஞ்சாலும் தப்பில்லைடா” என மேலும் சிரிப்புடன் டயலாக் விட்டவன் கிளம்ப கடுப்பானான் அழகன்.

“சரி சரி, வேலையப்பாரு. வீடு வரைக்கும் போயிட்டு வரேன்” எனக் கிளப்பினான்.

பைக்கில் சென்று கொண்டிருந்த உதயன் ஊர் தான்டி செல்கையில் குளக்கரை ஓர அரசமரத்து நிழலில் ரெங்கநாதன் நின்றுருக்க, வேலையாட்கள் குளத்தில் இருந்த கருவேல மரங்களை வெட்டி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். பெரியப்பாவை பார்த்தபடி மௌனமாக கடந்து சென்றான். ஏதோ தன்னால் இயன்ற நல்லதை ஊருக்கு செய்ததால் மனம் நிறைந்திருந்தது.

ஊரில் நடப்பவைகளை அறிந்த சிவா தந்தைக்கு அழைத்து கத்த, இரண்டாம் முறையாக வந்திருந்த புகார் ஆகையால் அதில் நடவடிக்கை எடுக்கவில்லை எனில் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடக்க வேண்டுமென அது குறித்து தங்கள் வழக்கறிஞரிடம் உதயன் விவரம் கேட்டதாகவும், அதை அவர் தெரிவித்தாகவும் உரைத்தார். அது மட்டுமின்றி இம்முறை வட்டாச்சியர் மாறிவிட்டதால் புதிதாக வந்தவர் அவன் புகாரை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும் படி ஆணையிட்டதையும் உரைத்தார்.

ஊருக்குள் அதுவரை போட்டியில்லாமல் இருந்தவர் தற்போது போட்டியிருக்க தற்போது மக்களிடம் ஒரு நற்பெயர் தேவையாக உள்ளதால் தன் செயல்களில் தலையிட வேண்டாமென்று கடித்து வைத்தார். தன் தந்தையே ஆட்டிப்படைக்கிறானா உதயன் என அவன் மேலிருந்த கோபத்தை மேலும் மேலும் அதிகப்டுத்திக்கொண்டான்.

ஆடர் கொடுத்திருந்த மரக்கன்றுகள் அனைத்தும் வந்திறங்க மீண்டும் ஆட்களை வைத்து தோப்பு வேலையை ஆரம்பித்தான் உதயன். மரங்கள் நட்டு முடிய ஒரு வாரங்களுக்கும் மேலானது. அதே நேரம் குளத்திலும் ஊருக்குள்ளும் ஆங்காங்கிருந்த ஆக்கிரப்புகள் முழுதும் அகற்றப்பட்டு சுத்தப்படுத்திருந்தனர். அழகனும் கடையை விரிவுபடுத்தி திறந்ததிருந்தான்.

உதயன் எழிலை நெருங்கவில்லையே தவிர அவள் மேல் படிந்த பார்வையை திருப்ப முடியவில்லை. தற்போது இருவரும் வெகு இயல்பாக பேசிக்கொண்டனர். முன் ஒரு வார்த்தை பேசுவதற்கே தயங்கி பயந்துக் கொண்டிருந்தவன் தற்போது எழில் அமைதியாக இருக்கும் சமயங்களில் கூட அவனாக உரையாடலை உருவாக்கி பேச்சை வளர்த்தான். அத்தனைக்கும் இடையில் வழக்கம் போலே அவளை, அவள் செயலை, அவள் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். தன்னை அவள் பார்க்கிறாளா? என்றும் ஆராய ஆரம்பித்திருந்தான்.

டவுனுக்கு சென்றிருந்தவன் வேலையை முடித்து பைக்கில் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருக்க தோப்பிலிருந்து எதிரே வந்து கொண்டிருந்தார் வேலுமாணிக்கம்.

அவரை பார்த்தும் வண்டியை சாலையோரம் நிறுத்தியவன், “என்ன வேலுமாமா நல்லாயிருக்கீங்களா?” என நலம் விசாரிக்க, அவரும் நலம் விசாரித்தார்.

“சிவா எங்க மாமா? இன்னும் ஊருக்குள்ள வராம இருக்கான்?” என்க, அவரோ அவன் கேட்பதன்

காரணமறியாது ராஜாவுக்கு அடிபட்டது அவனுக்கு உதவியா சிவா இருப்பது அனைத்தையும் உரைத்தார்.

அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தவன், “ஆமா மாமா தோப்பு வீட்டுல ரொம்ப நாளா ஒரு குட்டியானை வண்டி நின்னிக்கிட்டு இருந்தது, நான் அங்க வரவும் திடீர்னு ஒருநாள் வண்டியை காணும், எதுக்கு வண்டி அங்கிருந்துச்சி? யார் எடுத்துட்டுப் போனா?” என்றான்.

“அதுவா தம்பி, நம்ம ட்ரைவர் காளி தான் வண்டி ரிப்பேர்ன்னு அங்க நிறுத்தினான். மாமியார் வீட்டுக்குப் போனவனை இன்னும் காணும், எடுத்து மெக்கானிக் செட்டுல விட ஆளில்லாம ஐயாவும் தேர்தல் நேரம் பிஸியா இருக்க மறந்துட்டாரு போல, நீங்க அந்த வீட்டுக்குப் போகவும் உங்களுக்கு விட்டுக்கொடுத்திட கூடாதுன்னு ஆள்விட்டு எடுத்துப்பார். பெரிய மனுஷனும் சில நேரம் சில்லறைத்தனமா தான் நடந்துகிடுறாங்க” என்றார் மனம் தாங்காமல்.

“நானே இப்போ தான் தோப்பு வைக்கிறேன், அது உருவாக ஐந்தாறு வருஷமாவது ஆகும். வண்டி தேவையே இல்லையே மாமா, அப்பறம் எனக்கு எதுக்கு?” என்றவன் விடைபெற்றுக்கொண்டு கிளம்பி வந்தான்.

அன்று காலையிருந்து வீட்டையே இரண்டாக்கிபடி பரபரப்பாக கிளம்பிக் கொண்டிருந்தான் உதயன். கல்லூரி விரிவுரையாளராக வேலையில் சேர்ந்திருக்க, முதல் நாள் வேலைக்கு கிளம்புகிறான். தயாராக தாமதமாகும் ஒவ்வொரு நொடியும் தன் தேவைகளுக்கு எழிலை அழைக்க, எழில் நாமம் தான் மூச்சிக்கு இணையாக ஒவ்வொரு நொடியும் அவன் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது.

எழில் அவன் சட்டையை அயன் செய்துகொண்டிருக்க, குளியலறையிலிருந்து இடையில் கட்டிய டவலோடு ஈரத்தலையை துடைத்தபடி வெளியே வந்தான். அவன் வெற்றுடலை பார்க்காது அவனிடம் சட்டையை நீட்டியவள் பரபரப்போடு சமையலறை நோக்கிச் சென்றாள்.

அறைவாசல் வரை சென்றவள் படிகளில் கால் தட்டிவிட, “அம்மா..!” என்ற அலறலோடு தரையில் அமர, உதய் பதறி வந்து அவள் கால்களை பிடித்தான்.

காயமேதும் இல்லாத போதும் சிவந்திருந்த அவள் கால்களை அழுத்தித் தேய்த்தவன், “மெல்ல நடக்க வேண்டியதானே? என்ன அவசரம் உனக்கு?” என கடிந்தான்.

ஆனால் எழிலுக்கு தான் அவன் வார்த்தைகள் காதுகளுக்குள் ஏறவில்லை, தான் உள்ளங்கால்களை பற்றியிருந்த ஈரக்கைகளின் வழி சில்லென்ற குளுமை பரவ, அவனிடமிருந்து வந்த இனிய நறுமணம் அவளை மயங்கியது. அதை விட நேற்று வரை அவன் வைத்திருந்த குறுந்தாடி காணமல் போய் பளீச்சென்ற கன்னமும், அளவாக ட்ரீம் செய்திருந்த கருகரு மீசையும் அவன் முகத்திற்கு மேலும் வசீகரத்தைக் கூட்டியது. புதிதாகப் பார்ப்பது போன்று பார்த்தவள் தன்னையும் மறந்து அவன் கன்னம் வருடினாள்.

அவள் ஸ்பரிசம் உணர்ந்தவன், “ரொம்ப வலிக்குதா? ஹாஸ்பிட்டல் போவோமா?” என்றபடி நிமிர்ந்து அவள் முகம் நோக்க, விரிந்த கண்களுள் மின்னிய துளி மையலை அடையாளம் கண்டவன் லேசாகச் சிரித்தான். அதே நேரம் சமையலறையிலிருந்து கேட்ட குக்கர் சத்தத்தில் தெளிந்தவள் கைகளை எடுத்துவிட்டு எழுந்து ஓடினாள்.

கிளம்பி வந்தவன் காலை உணவிற்கு விரித்த வாழையிலையின் முன் தரையில் அமர்ந்தான். உணவு பரிமாறியபடி, “ஏங்க உங்களுக்கு விஷயம் தெரியுமா? ஊருக்குள்ள குளமெல்லாம் கிளீன் பண்ணுறாங்க, ஆக்கிரம்ப்பு எல்லாம் அகற்றிட்டாங்க. அது மட்டுமில்ல கோவில் குளத்தை கூட சுத்தம்பண்ணி தூர்வாருறாங்களாம். நேத்து அம்மா வந்திருந்த போது சொன்னாங்க” என்றாள்.

தெரியும் என்பது போல் தலையாட்டிவன் உண்டு முடித்து கைகழுவி எழுந்துவர, அவன் பின்னே சுற்றிக்கொண்டிருந்தவள், “இது தாங்க, கதிர் மாமா செய்ய நினைச்சாரு. அவர் நினைச்சதை நீங்க

செஞ்சிட்டீங்க, ரொம்ப சந்தோஷமா இருக்கு” என்று முகம் மலர்ந்தாள்.

அவள் ஒற்றை வார்த்தையில் அவனுக்கும் சந்தோஷம் பற்றிக்கொண்டது, அன்று செய்ய முடியுமா என்று கேட்டவள் இன்று செய்துவிட்டீர்களே என பாராட்டவும் பெரிதாய் சாதித்ததை போன்ற திருப்தியில் தேகம் குளிர்ந்தது. புது இரத்தம் பாய்ந்தது போல் புது உற்சாகம் வந்து ஒட்டிக்கொண்டது.

தன்னை நெருங்கி நின்றிருந்தவளின் இடைவளைத்து தன்னோடு இழுத்து இறுக்கி அணைத்தவன், “என்ன சொன்ன?” என்றான். அதுவரை அறிந்திராத இதமான அழுத்தம் தரும் அணைப்பு கூச்சமூட்ட, கன்னங்களில் அனல் கதிர்கள் பரவுவது போன்றிருக்க நாணுமுடன் அவன் கைகளை விலக்கிவிட முயன்றாள்.

“எதிர்பார்க்கவே இல்லை, நான் கேட்டதை செஞ்சிட்டீங்க சந்தோஷம், விடுங்க” என மெல்லிய சிணுங்கலோடு கைகளை விலக்க முயன்றாள். என்ன முயன்றும் அவன் இறுக்கிய விரல்களை விலக்க முடியவில்லை.

தன் விழிபார்க்க தவிர்ப்பவளின் சிவந்த செம்முகம் தாபம் கூட்ட, “அதான் நீ சொன்னதை செஞ்சிட்டு வந்திருக்கேனே ஒரு சின்ன பரிசு எதுவுமில்லையா?” என அவள் இதழ்களில் பார்வை பதித்தபடி கேட்டான்.

முகம் மலர, பொன்சிரிப்போடு அவன் நெஞ்சில் கைவைத்து, “பரிசு தானே உங்களுக்கு பிடிச்ச பாதாம் ஹல்வா செஞ்சிவைக்கிறேன், இப்போ டைமாச்சி கிளம்புங்க” என சமையலறையிலிருந்து தள்ளி விட்டாள். பாதாம் ஹல்வாவா! தலையில் அடித்துக் கொள்ளாலாம் போலிருக்க பெருமூச்சோடு கிளம்பினான்.

உதயன் மனம் நிறைந்திருந்தது, திருமணத்தின் போது கூட எழிலோடு இத்தனை நெருக்கம் உருவாகுமென நினைக்கவில்லை. என்னவோ செய்கிறாள் எழில், அவள் எண்ணியதை எல்லாம் தன்னை செய்ய வைக்கிறாள்! இருந்தும் அவளை பிடித்திருந்தது.

மெல்லிய காதல் பாடலும், மல்லிகை மணமும் ரசிக்கத் தொடங்கி இருந்தான்.

ராஜாவிற்கு அன்று கை கட்டுகள் அவிழ்க்கப்பட மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அழைத்து வந்து விட்ட சிவா வாசலோடு கிளம்பிவிட்டான். ராஜாவிடமும் ரெங்கநாதனிடமும் சொல்லிக்கொள்ளாமல் கோபமுடன் ஊருக்கு தான் கிளம்பி வந்தான்.

காலையில் சொல்லியபடியே பாதாம் ஹல்வா செய்து முடித்து, பொன்மாலை நேரம் குளித்து, கருமை வண்ண புடவையில் மெல்லிய அலங்காரத்தோடு வாசலில் சில நிமிடங்கள் நடந்து கொண்டிருந்தாள் எழிலரசி. அப்போதே முல்லை கோடியில் மலரவிருந்த மலர்கள் கண்ணில் பட பறிக்கத் தொடங்கினாள்.

ஊருக்குள் செல்லும் சாலையில் வந்து கொண்டிருந்த சிவா மாந்தோப்பு வீட்டை நெருங்கும் போது உதய்யும் எழிலும் அங்கு குடியிருப்பது நினைவிற்கு வந்தது. ஊருக்கு சற்று தள்ளி இருக்கும் தோப்பு ஆகையால் ஆள் நடமாட்டமில்லாத பகுதி, அதுவும் மாலை நேரம் யாரும் வரப்போவதில்லை.

தோப்பு வீட்டை நெருங்கிய சிவா சாலையில் மறைவான இடத்தில் பைக்கை நிறுத்திவிட்டு வீட்டை நோக்கி நடந்துச் சென்றான். நெருங்கும் போதே முன்புறமாக திரும்பி நின்று பூ பறித்துக்கொண்டிருந்த எழில் பார்வையில் விழ, மேலும் வேகமுடன் நெருங்கினான் சிவச்சந்திரன்.

## அத்தியாயம் 21

செவ்வண்ண கதிர்கள் வீசும் பொன்மாலை நேரம், முல்லை மலர்கள் மலர்ந்து வாசம் கமழ்ந்து கொண்டிருந்தது. மலர் பறித்துக்கொண்டிருந்த

எழிலரசி தன் பின்னே மிக மெல்லிய காலடியோசை கேட்க, உதயன் தான் வந்துவிட்டதாக நினைத்தாள்.

“எப்படி இருக்க எழிலரசி?” என்ற குரலின் அடையாளம் உணர்ந்தவள் அதிர்ந்து திரும்பினாள். சிவந்த முகத்தோடு கைக்கட்டியபடி சிவா நின்றுகொண்டிருக்க, பார்த்தவளுக்கு மெல்லிய பயம் எழ, நொடி நேரத்தில் முகமெல்லாம் வியர்க்கத் தொடங்கியது.

கழுத்தில் புது மஞ்சள் தாலியும், நெற்றியில் செந்நிறக்குங்குமமும் மிளிர, உதயனின் மனைவியாய் நிற்கும் எழிலை சிவாவால் சிறிதும் ரசிக்க முடியவில்லை. பருவ வயதிலிருந்து அவள் வளர்ச்சியை சிறுக சிறுக ரசித்தவனுக்கு அவளின் புதுத்தோற்றம் பிடிக்கவில்லை. ஏற்க இயலாத நெஞ்சம் எரிமலையாய் குமுறிக்கொண்டிருந்தது. எழிலையிழந்த கவலை மலையளவு இருக்க அதுவும் கோபமாகத் தான் வெளிவந்தது.

“இங்க எதுக்கு வந்த? முதல்ல வெளிய போ” என எழில் வாசல் நோக்கி கை நீட்ட, அவனோ சிறு சிரிப்புடன் அவளை நெருங்கினான். எழில் பதட்டத்தோடு இரண்டடி பின் நகர, “என்ன கேட்ட? எதுக்கு வந்தேன்னா?” என்றவன் அருகிலிருந்த செடியிலிருந்த மலரைப் பறித்து தரையில் எறிந்தான்.

அவள் முகம் பார்த்து மெல்லிய சிரிப்போடு, “பயப்படாத மாற்றான் தோட்டத்து மல்லிகையைப் பறிக்கிற அளவுக்கு நான் தரம் கெட்டவனில்லை, அது போல எனக்கு உரிமையானதையும் விட்டுக்கொடுத்திட மாட்டேன்” என்றான்.

அவன் செயலில் எழிலுக்கு சினமேறியது. பயத்தையும் மறைத்துக்கொண்டவள் ‘எங்கிட்ட இவ்வளவு வாங்கியும் திருந்துறானா பார்’ என நினைத்து கோபமுடன் முறைத்தாள்.

“யார் நீங்க! என் புருஷனுக்கு உரிமையான சொத்தையே பறிச்சிக்கிட்ட கேவலமான ஆளுங்க தானே!” என்றாள் எழில்.

“உன் புருஷனா? ஹேரா உதய்யா! அவனா தான் எழுதிக்கொடுத்துத் தேர்தலையும் தோத்து நிக்கிறான். ஆமா உன் புருஷனா இந்த பாசம் எப்போதுல இருந்து உனக்கு வந்துச்சு? அப்போ ஊருக்குள்ள பேசிக்கிட்டதெல்லாம் உண்மை அப்படி தானே! அவனை காதலிச்சது மட்டுமில்லாம ப்ரைன் வாஷ் பண்ணி எங்களுக்கு எதிராவும் செயல்படத்தூண்டி விட்டுருக்க? ச்சீ..கல்யாணத்துக்கு முன்னையே அவனோட காதல், அன்னைக்கு தோப்புல நான் சொன்னதெல்லாம் உண்மை தான் இல்லை? என்ன பொண்ணு நீயெல்லாம்?” என்றான் ஆத்திரமாக.

அன்று தோப்பில் விட்டதையே மீண்டும் ஆரம்பிக்கிறானே என எரிச்சலுற்றவள், “ஆமா அது உண்மை தான். கல்யாணத்துக்கு முன்னே அவரை விரும்புனேன், விரும்பி தான் கல்யாணம் செஞ்சிக்கிட்டேன். உன்னால என்ன செய்ய முடிஞ்சது? இல்லை இப்போ தான் உன்னால என்ன செஞ்சிட முடியும்? இப்போவும் அவரை தான் விரும்புறேன் உன்னால என்ன செய்ய முடியும்? சொல்லு, என்ன செய்ய முடியும்?” என கை நீட்டிக் கேட்டபடி சண்டைக்கு நின்றாள்.

“செய்றேன், ரணமா எரியிற என் வலியை உனக்கு உணர்த்துறேன். இனி ஒவ்வொரு நொடியும் உன் கழுத்தில் இருக்கிருற தாலி நிலைக்குமான்னு நினைச்சி நினைச்சி நீ துடிப்ப ஏற்கனவே கதிரை இழந்து இழப்போட வலியுணர்ந்த உனக்குத் திரும்பும் அந்த உயிர்வலியை நினைவுப்படுத்துறேன்” எனக் கைநீட்டி அவனும் எச்சரித்தான்.

எழிலுக்குச் சினம் எல்லை தாண்டிக்கொண்டிருந்தது. அதே சினத்துடன், “உன்னால என்ன செய்ய முடியுமோ செஞ்சிப்பாரு, முயற்சி செய், நீ மூக்கொடையுறதை பார்க்க நானும் காத்துக்கிடக்கேன்” என்றாள்.

“ச்சே! உன்னைப் போய் உசுரா காதலிச்சேனே, என்னை ஏமாத்திட்டில்ல? ஆமா என்னை மட்டும் தானா, இல்லை கதிரையும் ஏமாத்திட்டியா? கதிர் இருக்கும் போதே அவனை ஏமாத்தி உத்யனோட

காதலா?” என்றவன் அற்பமாய் அவளைப் பார்க்க, எழிலுக்கு உடல் கூசியது, நெஞ்சே வெடித்துவிட்டது. கண்கள் கலங்க வார்த்தை வாராது வாய்யடைத்து கண்ணீரோடு நின்றாள்.

நான் என்ன ஏமாற்றினேனாம் இவனை ஆரம்பத்திலிருந்து எனக்குப் பிடிக்காது, கதிர் மீது தாய்மாமன் என்ற பாசமும் மரியாதையும் மட்டுமே உண்டு. இவ்விருவரும் அவர்களாக என் மீது காதலை வளர்த்துக்கொண்டால் நான் எவ்வாறு பெறுப்பாவேன்? எனக்கென்று ஒரு மனது விருப்பு, வெறுப்புகள் இருக்காதா? என்னை பேச இவனுக்கு என்ன உரிமை? முட்டாளே! என ஆற்றாமலையில் விம்பினாள்.

எழிலின் கண்ணீர் தன் நெஞ்சில் எரியும் தணலை மெல்லக் குளிர்விப்பது போன்றிருக்க சிரித்துக்கொண்டவன், “இப்போ அழு! எனக்கு இது பத்தாது, இன்னும் நீ அழ வேண்டியது நிறைய இருக்கு” என்றவன் திரும்ப, சட்டென ஒரு விசை தாக்கி நிலையில்லாது தள்ளாடி எழிலின் காலருகில் விழுந்தான்.

விழுந்தவன் தலை உயர்த்திப் பார்க்க, கைகளை உதறியபடி உதய் நின்றிருந்தான். தலைக்கு மேல் குருவி சுற்றுவது போல் கிர்ரென்ற ஓசையோடு தலையே சுற்ற விழிகளை இறுக்கி மூடி மீண்டும் திறந்தான்.

முழுக்கைச் சட்டையை மடக்கிவிட்டபடி, “என்னடா சொன்ன? தைரியமிருந்தா திருப்பிச் சொல்லு” என்ற உதய் கொத்தாக சிவாவின் சட்டையைப் பற்றித் தூக்கினான். உதயனை சற்றும் எதிர்பாராத சிவா அத்தனை நாட்களாகச் சேமித்து வைத்திருந்த கோபத்தை வெளியிட ஓங்கி குத்தினான்.

அதிர்ந்த உதய் மீண்டும் அடிக்க வரும் சிவாவின் கைகளைப் பற்றிக்கொண்டு முறுக்கியபடி அவன் முகத்தில் குத்தினான். பார்த்துக் கொண்டிருந்த எழிலுக்குத் தடுக்க வேண்டுமென்று தோன்றவில்லை. எதிர்பார்த்திருந்ததே இது தான் என்பது போல்

கண்ணீரை துடைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்தாள்.

“ஏன்டா நான் உனக்கு என்ன செய்தேன்? வளரும் போதே நீ என்னைப் போட்டியா நினைக்கிறேன்னு தானே சொந்த ஊர், பெத்த தகப்பன், நண்பன், சொத்து பத்தை விட்டு எங்கியோ போய், நல்ல சாப்பாட்டுக்கும் வழியில்லாம மாச சம்பளத்துக்கு வேலை பார்த்தேன். சொத்தை எல்லாம் எழுதிக் கொடுத்தும் என்னை கை நீட்டி அடிச்சியே! அன்னைக்கே உன் கைய ஒடைக்கணுன்னு இருந்தேன். ஆனால் நான் தேர்தல்ல நிக்கிற நேரம் ஊர் முன்ன நல்லபிள்ளைங்கிற பெயரை காப்பாத்திக்க தான் உன்னை சும்மா விட்டேன். இவ்வளவு விட்டுக்கொடுத்தும் நீ திருந்தலையேடா” என்ற உதய் ஆத்திரத்தோடு சிவாவை மாறி மாறி குத்தினான்.

அவனை விட அதிக தேகபலம் கொண்டிருந்த சிவாவும் திருப்பி அடிக்க, அதைத் தடுத்தபடி உதயனும் அடித்தான் இருவருக்குமே மற்றவரின் மீது தீராக்கோபம் வெறியாய் இருக்க அதை வெளிப்படுத்தினர். இவருக்குமே வளரும் வயதில் நீச்சல், சிலம்பம், தற்காப்புக் கலைகள் அனைத்தும் கற்றுத்தந்தது உதயனின் தந்தை தான்!

“ஒரு பொண்ணு பிடிக்கலைன்னு சொல்லிட்டா விலகிப் போயிடணும்டா அது தான் நல்ல ஆம்பளைக்கு அழகு, அதை விட்டுட்டு அவளை கடத்த நினைப்பியா? எங்கிருந்து வந்ததுடா உனக்கு இந்த சில்லறை புத்தி? இது மட்டும் பெரியப்பாவுக்கு தெரிஞ்சா உன் நிலைமை என்னாகும்? அதை விட இப்போ எழில் என் மனைவி, அவளுக்கான மரியாதை என்னன்னு தெரியும் தானே? அவகிட்ட இப்படிப் பேச எவ்வளவு தைரியம் உனக்கு?” என்ற உதய் மேலும் மேலும் சிவாவை அடித்து நொறுக்கினான்.

நிலையில்லாது தடுமாறி கீழே விழுந்த போதும், அவனும் ஒரு சில அடிகள் அடித்த போதும் விடாது ஆத்திரம் குறையும் வரையும் அடித்தான் உதய். அதில் உதயனின் கையில் சிறு காயத்தோடு இரத்தம் கசிய

அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த எழில் கண்கள் சொருக மயங்கி தரையில் சரிந்தாள்.

அந்த சத்தத்தில் திரும்பிய உதய் ஆத்திரம் தீராத போதும், “இத்தனை வாங்கின பிறகாவது திருந்தித் தொலை!” எனச் சிவாவை விடுத்து எழிலை வந்து தூக்கினான். அவளிடம் அசைவுகள் இல்லாது போக, மயக்கமாக உள்ளதை உணர்ந்து வீட்டிற்குள் தூக்கிச் சென்றான். முற்றிலும் வலுவிழந்து, பாதி வலியோடு கிடந்த சிவாவிற்கும் உதயனின் மீதான கோபம் குறையவில்லை.

எழிலை மெத்தையில் கிடத்தியவன், முகத்தில் தண்ணீர் தெளித்து கன்னத்தைத் தட்டி எழுப்பினான். இது போன்று அன்று ஒருநாள் மயங்கியதும், இருளில் கையில் காயத்தோடு நின்றிருந்ததும் அதற்கு சில நொடி முன் சிவா கடந்து சென்றதும் நினைவில் வந்தது. அதுமட்டுமின்றி எழிலை சிவா கடந்த முயன்றதும் அறிந்தவன் ஆகையால் சிவாவை வெட்டி வீழ்த்தி விடும் அளவிற்கு ஆத்திரம் பொங்கியது.

இருந்த கோபத்தில் அப்போதும் விழிக்காதவளின் கன்னத்தில் அழுத்தமுடன் தட்டினான். அந்த அதிர்வில் முகத்தைச் சுருக்கியபடி அவள் விழிக்க, சற்று கைபிடித்து தூக்கியவன் தன் தோளில் சாய்த்துக்கொண்டு தண்ணீரைப் புகட்டினான்.

சிறிது குடித்தவள், “லேசா தட்டி எழுப்பத்தெரியாது இப்படியா அடிக்கிறது?” என எரிச்சலில் கன்னத்தைத் தேய்த்தபடி வலியோடு கத்தினாள்.

“பின்ன வருடிக்கொடுத்துகிட்டே உக்கார்ந்திருப்பாங்களா? இவ்வளவு பிரச்சனை செய்து இருக்கான், இது பத்தி ஒரு வார்த்தை கூட எங்கிட்ட சொல்லலை, அதையும் விட உன்னை காப்பாற்றி வீட்டுல விட்ட அன்னைக்கு நானே கேட்டேனே ஏன்டி சொல்லலை?” என அவளை நிமிர்த்தி அழுத்திப் பிடித்தபடி கத்தினான்.

“அதுவரைக்கும் இவன் எனக்கு பிரச்சனையாகவே தெரியலைங்க. எங்கிட்ட வம்பு பண்ணும் போது நல்ல

பதிலடி வாங்கிட்டு தான் போயிருக்கான்” என்றவள் பிடியின் அழுத்தம் தாங்காது அவன் கைகளை விடுவிக்க முயன்றாள்.

“நீ எப்பவுமே என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுறதில்லை இதுல உன் பிரச்சனைகளை எங்க சொல்லப்போற? இதுவே கதிரா இருந்திருந்தா சொல்லிருப்ப தானே?” என்றான். அன்று திருவிழா கூட்டத்தில் அருணை கதிரிடம் கைகாட்டியவள் அது போன்று சிவாவைப் பற்றி தன்னிடம் கூறவில்லையே என்ற ஆற்றாமையிலிருந்தான்.

“நான் கதிர் மாமாகிட்டையே சொல்லையே, இந்த சிவா ஒரு அரைலூசு எந்த நேரம் என்ன செய்வான்னு என்னால கணிக்க முடியலை. கதிர் மாமா இருந்த போதே எங்கிட்ட வம்பு பண்ணான் தான், ஆனால் ஏற்கனவே கதிர் மாமாவுக்கும் அவனுக்கும் பிரச்சனை இருக்கேன்னு சொல்லலை. அதே காரணம் தான், உங்களுக்குப் பிரச்சனை வேண்டாம்னு தான் சொல்லலை” என்றவள் அவன் அழுத்தமான பிடியை விடுவித்து மயக்க நிலையில் பிடியில்லாது அவன் தோள் சாய்ந்தாள்.

“இப்போவாது சொல்லித் தொலையேன்” என்க, சிவாவுடனான நிகழ்வுகள் அனைத்தையும் உரைத்தாள். உதயனின் கோபம் குறையும் என எதிர்பார்க்க அவனுக்கோ மேலும் கோபம் கூடியது.

“அதுக்காக அரளி விதையை தின்பியா? இதுல அக்கா விசாரிச்சா கதிரை மறக்க முடியலைன்னு பொய் வேற?” எனச் சினந்தான்.

“பின்ன என்ன செய்யட்டும் உங்க முன்னையே உங்களையும் என்னையும் தப்பா சொன்னான்னு சொல்ல முடியுமா? நீங்க வேற தேர்தல்ல நிற்கிற நேரம் ஊருக்குள்ள உங்களுக்கு கெட்ட பெயர் வரக்கூடாதுன்னு நினைச்சேன். அவங்கிட்ட சண்டைபோட்டு குழம்பிப்போய் வலியோட என்னால தான் உங்களுக்கு பிரச்சனையோன்னு நினைச்சி ஒரு நிமிஷம் தடுமாறி தப்பான முடிவெடுத்துட்டேன், சாரி”

என்றாள். மெல்லிய குரலில் உரைத்தவள் அவன் நெஞ்சில் சாய்ந்து கலங்கினாள்.

அவள் ஈரம் நெஞ்சில் ஒட்டிய நொடி உதயனின் உடலே சிலிர்த்தது. சினம் சென்ற இடம் தெரியவில்லை, தனக்கான கண்ணீர் எவ்வளவு மகத்துவமானது! அவன் உணர்வுகளுக்கு வார்த்தையில் வடிவமில்லை. கதிர் இழப்பைக் கூட ஏற்று நின்றவள் தனக்கொரு அவப்பெயர் என்றதும் உயிர்விடத் துணிந்தாளாம்! என்ன மாதிரியான உறவிது? எனப் பிரமித்தவன் கரம் கோர்த்து அவளை இதயத்துக்குள்ளே புதைத்துக்கொள்வது போல் நெஞ்சோடு மேலும் இறுக்கி அணைத்தான்.

தந்தையை இழந்ததிலிருந்து தனிமை உணர்வும் தனக்கே தனக்கான அன்பைத்தரும் உறவுக்கான ஏக்கமும் நிறைந்திருக்க இந்த நொடி தீர்ந்தது போன்று நிறைவாய் இருந்தது.

சட்டையைத் தாண்டி தன்னுள் படரும் ஈரம் அதிகரிப்பதை உணர்ந்தவன் அவள் கரைவது தாங்காது அவள் முகம் நிமிர்த்தி கண்ணீரைத் துடைத்துவிட்டான். உதட்டோர இரத்தத்துளிகளும் கன்றிச் சிவந்த கண்ணனும் அப்போது தான் கவனித்த எழில் ஊதிவிடுவது போல் இதழ் குவித்துக்கொண்டு அவன் முகத்தை நெருங்கினாள். அவள் செயலின் அர்த்தம் அறியாதவன்,  அழகை அருகில் கண்ட மயக்கத்தில் பொறுமையின்றி எழிலின் இதழோடு தன்னிதழை பதித்து அழுத்தினான். கேட்க இருந்த கேள்விகளையெல்லாம் மறந்திருந்தான்.

நீண்ட முத்தம், காலங்களைக் கடத்தி நீண்டு செல்வது போன்று நீண்டது. காலச்சூழலில் வீழ்ந்து பிரபஞ்சத்தின் ஆரம்பப்புள்ளியைத் தொடுவது போல் நீண்டு சென்ற முதல் முத்தம் இருவரையும் மயக்கத்தில் ஆழ்த்தி தன்னை மறந்து அமிழச்செய்தது. ஏற்கனவே களைத்திருந்தவள் அவன் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாது துவண்டு மூச்சுக்குத் திண்டாடிப் பற்றியிருந்த அவன் தோள்களை அழுத்தினாள்.

அதை உணர்ந்த உதயன் விடுவிக்க, சட்டென அவனிடமிருந்து விலகி எழுந்துச் சென்றாள். உதயனுக்கு ஒருமாதிரி ஏமாற்றமாக இருந்தது 'கொஞ்சம் கூட பொறுமையோ நிதானமோ இல்லைடா உனக்கு! ஆரம்பமே இப்படியா..' என நெற்றியில் அறைந்து உள்ளுக்குள் புலம்பிக்கொண்டிருந்தான்.

சென்ற வேகத்தில் மருந்துடன் திரும்பி வந்தவள் அவனருகே அமர்ந்து கை காயத்திற்கும், கன்னத்திலும் அவளே மருந்திட்டாள். பின் செய்து வைத்திருந்த பாதாம் ஹல்வாவையும் எடுத்து வந்து ஊட்டிவிட்டாள். அப்படி ஒன்றும் ஸ்பூன் பிடித்து உண்ண முடியாத அளவிற்குப் பெரிய காயமில்லை இருந்தும் தாய்ப்பாசம் அறியாதவனைத் தாயாய் கவனிக்க சேயாய் மாறத்துடித்தது உள்ளம்!

அதன் பின் இரண்டு நாட்களுக்கு எழில் பார்த்து பார்த்து கவனித்தாள். பைக்கில் வேலைக்குச் சென்ற வந்த போதும் வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் சாப்பாடு ஊட்டிவிடுவதிலிருந்து  சட்டை பட்டன் போட்டுவிடுவது வரை அவளே செய்ய அதை ரசித்து அனுபவித்தவன் தடுக்காது விட்டுவிட்டான். விவரம் அறிந்து அவனை யாரும் இப்படியெல்லாம் சீராட்டியதில்லை பரமேஸ்வரி கூட உருண்டை பிடித்து கையில் கொடுப்பாரே தவிர ஊட்டிவிட்டதில்லை. தன்னைவிட சிறுபெண்ணின் கையணைப்பிற்குள் அன்பான கவனிப்பிற்குள் கட்டுண்டவன் உலகையே மறந்தான். அவன் வாழும் வீடும் அவளும் தான் அவன் சொர்க்கமானது!

உதய்க்கு விடுமுறை நாள் என்பதால் காலையிலே தோப்பு வேலைகளைக் கவனித்தான். காலை உணவிற்கு வந்தவனை அன்று கிருத்திகை முருகர் கோவிலுக்குச் செல்ல வேண்டுமென்று கிளப்பிக்கொண்டு கோவிலுக்கு வந்திருந்தாள் எழிலரசி. மனம் நிறைந்திருக்க வேண்டுதல் என எதுவுமில்லாத போதும் அவளுக்காக உடன் வந்திருந்தான்.

கோவிலுக்குச் சென்றவர்கள் மனமுருக வேண்டிவிட்டு மண்டபத்திற்கு அருகில் வந்துகொண்டிருக்க எதிரே வந்தனர் சிவாவும் பரமேஸ்வரியும்.

இவர்களைக் கண்டதும் நின்று நலம் விசாரிக்க, பதில் கொடுத்தவன், “ஏன் பெரியம்மா தோப்பு பத்திரமும் வீட்டுச் சாவியும் கொடுத்துவிட்டீங்களே அது பெரியப்பாவுக்கு தெரியாதா?” என்றான்.

அதிர்ந்த சிவா அத்தனைக்கும் நீதான் காரணமா என்பது போல் அன்னையைப் பார்த்து முறைக்க அவர் கண்டுகொள்ளவேயில்லை.

“அவர் கிடக்காருடா, அந்த இடத்தை வாங்கும் போதே உனக்கு பின்னால பயன்படுமேன்னு உன் பெயரில வாங்கச்சொன்னதே நான் தான். கல்யாணத்துக்கு பிறகும் ஊருக்குள்ள வீட்டில்லாம நிலமில்லாம நீ எப்படி குடும்பமா இருக்க முடியும், அதான் கொடுத்துவிட்டேன். அது உன்னோடது தான் தயங்காம வைச்சிக்கோ உதய்” என்றார். கேட்டுக்கொண்டிருந்த சிவா பற்களைக் கடித்துக்கொண்டு விரைப்பாய் நிற்க, உதய் அவனைப் பார்த்தான்.

வலது கையில் கட்டோடும், முகத்தில் சில காயங்களோடும் இருப்பதை அப்போது தான் உதய் கவனிக்க, அதை கண்ட பரமேஸ்வரி, “ஏழு கழுதை வயசாகுது இன்னும் ஒழுங்கா வண்டியோட்ட தெரியாம ஓடைக்குள்ள விழுந்து எந்திரிச்சி வந்திருக்கான், இவனைக்கு போய் கல்யாணம் பண்ண நினைச்சேனே! இப்போ தான் பெரியவனுக்கு சரியாச்சு அடுத்து இவன் விழுந்து என்னை ஓடி வரவைச்சிட்டான்! என்னவோ நம்ம குடும்பத்துக்கு தான் நேரம் சரியில்லை போல, ஜோசியரை பார்க்கணும்” என புலம்பினர்.

உதயனோ அப்பாவியான முகத்தோடு அவருக்கு ஆறுதல் சொல்ல, இவனிடமா இதைச் சொல்லவேண்டும் என்ற ஆற்றாமையிலிருந்த சிவாவிற்கு அருகில் இருக்கும் கல் தூணில் முட்டிக்கொள்ளலாம் போல் இருந்தது.

உதயன் தான் அடித்தான் என்ற உண்மையைச் சொல்ல இயலாது அவன் ஒரு கதையைச் சொல்லியிருக்க கேட்டுக்கொண்டிருந்த எழிலுக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை. அடக்க முடியாது சத்தமாகச் சிரித்து விடுவோமோ என நினைத்தவள் கீழ் உதட்டைக் கடித்து அடக்கி வைத்திருந்தாள். அவர்கள் செல்லவும் சிரித்தவள் வீடு வரும் வரையிலும் மெல்லிய சிரிப்புடன் தான் வந்தாள்.

அன்றைய நாள் முழுவதும் தோப்பில் வேலைகள் அழுத்த, இரவு உணவிற்குப் பின் தான் ஓய்வாக அமர்ந்திருந்தான் உதய். அன்றைய ஒருமுத்தம் அவர்கள் உரையாடலை நிறுத்திவிட, எழிலிடம் கேட்பதற்கு இன்னும் நிறையக் கேள்விகள் இருந்தன. அதைப் பற்றியே யோசித்து கொண்டிருந்தவன் டேபுள் துடைத்துக்கொண்டிருந்த எழிலின் முன் சென்று நின்றான்.

“அது..எழில் அன்னைக்கு சிவாக்கிட்ட என்னை விரும்புறதா சொன்னீயே அது உண்மையா?” என்றான் மெல்லிய குரலில். அவன் கேள்வியை எதிர்பாராது படபடத்தவள் அவன் முகம் பாராது மெல்லத் தலையாட்டினாள்.

“சரி சிவாவை உனக்கு ஏன் பிடிக்கலை?” என்க, இந்த கேள்வி பிடிக்கவில்லை என்பது போல் முகத்தைச் சுளித்தவள், “எப்படி பிடிக்கும் கொஞ்சமாவது என்னைப் பத்தி யோசிச்சிருக்கணும், எப்பவும் அவன் ஆசை, விருப்பம், அவனுக்கு வேணும்னு ஒரு பக்கமாவே யோசிச்சா கடைசியில இப்படி தான் ஏமார்த்து நிற்கணும். அதை விட அவன் பார்வையே பிடிக்காது, எப்பவும் என் அழகை மட்டுமே பார்ப்பான்” என்றாள்.

“உண்மைய சொல்லணும்னா உன் மேல எப்பவும் எனக்கொரு அனுதாபம் உண்டு அந்த அனுதாபத்துல தான் கல்யாணமும் செஞ்சிக்கிட்டேன். இப்போ கொஞ்சனால உன்னால டிஸ்டப்பாகுறேன். தெளிவா சொல்லணும்னா சிவா உன்னை எப்படிப் பார்த்தானோ அது மாதிரி தான் இப்போ உன்னை

பார்க்குறேன். எங்க இரண்டு பேர் பார்வைக்கும் வித்தியாசம் கிடையாது..” என அவன் உரைக்கும் போதே கையிலிருந்த பாத்திரத்தை நழுவ விட்டாள் எழில்.

அவன் முகம் நோக்கி நிமிர்ந்தவளின் விழிகள் இரண்டும் கண்ணீரில் நிறைந்திருக்க, மாறாக முகம் கோபத்தில் செஞ்சூரியனாய் சிவந்திருந்தது. “அதான் அன்னைக்கே சொன்னீங்களே ஆசையில்லாம தான் இந்த கல்யாணம் நடக்குதுன்னு, போதும் ரொம்ப சந்தேஷம்! இனி என் முகத்துலையே முழிக்காதீங்க” என்றவள் அறைக்குள் சென்று படாரென கதவடைத்துக் கொண்டாள்.

‘அப்படி தான் நான் நினைச்சி இருந்தேன் ஆனால் சிவாவை அடிக்கும் போது தான் உன் மீதான என் நேசத்தை உணர்ந்தேன்’ என சொல்லாமல் விட்ட மீதி வார்த்தைகள் அவன் மனதிற்குள் தேங்க, பரிதாபமாக நின்றிருந்தான்.

## அத்தியாயம் 22

எழிலரசி சென்று கதவை மூடியதும் பின்னே சென்று தட்டிப்பார்த்தவன் உட்புறமாக பூட்டியிருப்பது அறிந்து கூடத்தில் வந்தமர்ந்தான். எவ்வளவு கத்தினாலும் திறக்கமாட்டாள் பிடிவாதக்காரி என நன்கு அறிந்தவன், ‘இந்த வாயால் தான் எனக்கு வம்பே’ என நொந்து கொண்டான்.

சட்டென ஒரு யோசனை தோன்ற எழுந்து முன் வாசல் சென்றவன் கரண்ட் ப்யூஸை கழற்றிவிட்டு எதுவும் அறியாதவன் போலே மீண்டும் வந்து கூடத்தில் அமர்ந்து கொண்டான். அவன் எதிர்பார்த்தது போலே இரண்டே நிமிடத்தில் இருளில் தனிமைக்குப் பயந்து கதவை திறந்து கொண்டு வெளியே வந்தாள் எழில்.

கூடத்தில் சிறிது நிலவின் வெளிச்சமிருக்க, வந்து தூண் ஓரம் நின்றுகொண்டாள். ‘இவ்வளவு தான் உன் தைரியமா’ என நினைத்தவனுக்கு சிரிப்பு பொங்கி வந்தது சிரித்தால் முறைப்பாள் என நினைத்து அடக்கிக்கொண்டவன், “என்னாச்சு எழில்?” என்றான்.

அவனிடம் பேசமாட்டேன் என்பது போல் இறுக்கமாய் வாயை மூடிக்கொண்டவள் அவனை நெருங்கி சட்டைப் பையிலிருந்து அலைபேசியை எடுத்தாள். அதன் முகப்பு விளக்கை ஆன் செய்து கொண்டு அடுப்பறைக்குள் சென்றவள் கையில் மெழுகுவர்த்தியோடு திரும்பி வந்தாள். அவனைக் கண்டுகொள்ளாது மீண்டும் அறைக்குள் செல்ல, அவள் கதவை அடைப்பதற்கு முன் கட்டிலில் விழுந்தான் உதய்.

அப்போதும் எழில் கண்டுகொள்ளாது ஒருபுறமாகப் படுக்க, “முதல்ல நான் சொல்லுறத முழுசா கேள் எழில்” என உதய் ஆரம்பித்தான். அவ்வளவு தான் சினம் கொண்டு சீறியவள் காளி அவதாரமாக எழுந்து அவன் சட்டையைப் பிடித்தாள்.

“என்ன சொன்னே? நீயும் சிவாவும் ஒன்னா? என் மேல காதலில்லாம அப்படி மட்டும் தான் பார்த்தியா? ஆமா நான் கோபப்பட்ட உனக்கென்ன? என் கோபம் உன்னை ஏன் இந்தளவுக்கு பாதிச்சது? அதுக்காக எதுக்கு உன் வீட்டை விட்டு வந்து, ஒரு பொண்ணு நான் சொன்ன ஒரு வார்த்தைக்காக உன் குடும்பத்தையே எதிர்த்தே? சொல்லு இதுக்கெல்லாம் பெயர் என்னன்னு எனக்கு இப்போவே சொல்லு! என்னைக் கடத்தப் போறான்னதும் துடிச்சே, நான் காணும்னதும் தவிச்சே இதெல்லாம் எதனால சொல்லு?

என் கண்ணீரைப் பார்த்துத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்ட, நான் அழுதா உனக்கென்ன? என் கண்ணீர் உன்னை என்ன செஞ்சது சொல்லு, எனக்கு இப்போவே பதில் தெரிஞ்சாகணும் சொல்லு! கதிர் மாமா கூட நான் அடிவாங்கி அழும் போது மிட்டாய் வாங்கிக்கொடுத்து சமாதானம் செய்யும், ஆனால் நீ எங்கம்மாவை அடிக்கவே விடாமத் தடுத்தியே எதனால சொல்லு? இதெல்லாம் சிவா செய்யலை பின்ன எப்படி நீயும் சிவாவும் ஒன்னாவிங்க அதையும் சொல்லு? இதெல்லாம் காதல் இல்லைன்னா இதுக்குப் பெயர் என்ன சொல்லு?” என உதயனின் சட்டையைப்பிடித்து பதில் சொல்லும்படி உலுக்கியவள் அவன் கன்னத்தில் அறைந்தாள்.

சுகமாகத் தாங்கியவன் மனதில் உள்ளதெல்லாம் அவள் பேசட்டுமே என மௌனமாய் இருக்க, “என்ன இதெல்லாம் அனுதாபம் தான்னு சொல்லப் போறீயா? அப்பறம் எப்படி என் மேல ஆசை வந்துச்சி? கொஞ்ச நாளா உங்கிட்ட உள்ள தடுமாற்றத்தை நான் கவனிக்காம இல்லை, உங்கிட்ட வந்து விழாதா குறையா பேசுற விமலாக்கிட்ட கூட தள்ளி நிற்கிற உன் கண்ணியத்தை கவனிச்சிருக்கேனே, ஆனால் எங்கிட்ட காட்டுற நெருக்கம் எதனால? சிவாவை ஏன் அடிச்சா? சிவாவைப் பத்தி உங்கிட்ட சொல்லலைன்னு ஏன் கோபப்பட்ட? இந்த உரிமை எதனால சொல்லு?” என அவன் சட்டையைப் பிடித்து உலுக்கியபடி கண்ணீரோடு கேட்டாள்.

உதய் அவள் கைகளைப் பிரிக்க வாடிய பூங்கொடியாய் அவன் நெஞ்சிலே சாய்ந்தவள் மெல்ல விசும்பியபடியே “உண்மையிலே இதெல்லாம் என்மேல உள்ள அனுதாபத்துல கூட நீங்க செஞ்சிருக்கலாம், ஆனால் எனக்கு அப்படித் தெரியலை. தேர்தல்ல நிக்க வேண்டாம்னு நான் சொன்னபோது கதிர் மாமா கூட கேட்கலை, ஆனால் நீங்க கேட்டீங்க, யாருமே எனக்குத் தராத முக்கியத்துவத்தை என் வார்த்தைக்கு நீங்க தரும் போது சிவாவை விட உயர்வா கதிர் மாமாவை விட நெருக்கமா தான் தெரிஞ்சிங்க! அன்னைக்கு உங்க சொத்தெல்லாம் இழந்து சிவா கையாள அடிவாங்கி இரத்தத்தோட நின்ன போது என்னையே அடிச்ச மாதிரி நெஞ்செல்லாம் வலிச்சது. இதனால தான் உங்களுடனான கல்யாணத்தை முழுமனசா என்னால ஏற்க முடிந்தது. ஒருபோதும் சிவாவை உங்களோட ஒப்பிட்டு சொல்லாதீங்க, முத்தம் கொடுத்துக்கிறதும் கட்டிபிடிச்சிக்கிறதும் தான் காதலா? ஆனால் எனக்கு நீங்க செஞ்சதெல்லாம் காதலா தெரிஞ்சதே! இல்லைன்னு சொல்லி என் மனசை நோகடிச்சிடாதீங்க ப்ளீஸ்” என்றாள்.

உதயன் அந்த நொடி சிறகில்லாமல் விண்ணில் பறந்துகொண்டிருந்தான். நேசத்தை சொல்ல வந்த நொடி அவள் நேசத்தை அறிந்ததில் அளவில்லா ஆனந்தம்! எழிலின் கோபத்தை மட்டுமே

பார்த்திருந்தவன் முதல் முறை அவள் அன்பைக்கண்டு தன்னை மறந்திருந்தான். தன்னோடு இறுக்கி அணைக்க அவள் இதழ்கள் அவன் நெஞ்சில் உரச, அவன் இதழ் அவள் உச்சியில் பதிந்தது.

அதில் சற்று மயக்கம் கொண்டவள் மேலும் அவன் மேல் அழுத்தமாய் சாய அவன் கட்டிலில் விழுந்திருந்தான். உதயின் கைகள் அவள் இடை வளைக்க, அவன் மேல் கிடந்தவள் கன்னத்தில் கிள்ளியபடி, “அதான் என் மேல காதலில்லை, ஆசையில்லைன்னு சொல்லிட்டீங்களே அப்பறம் என்ன இதெல்லாம்?” என்றாள் அதட்டலாக.

அன்றொருமுறை தன்னை தவறாக நினைக்காதிருக்க அவள் மேல் ஆசையில்லை என்றுரைத்ததை எத்தனைமுறை சொல்லிக்காட்டிவிட்டாள் பாதகி! என நினைத்துச் சிரித்தான்.

அதே சிரிப்புடன் நிமிர்ந்து அவள் கண்களைப் பார்த்தவன் மையலுடன் கழுத்து வளைவில் முகம் புதைக்க, அவள் கைகள் அவனை அணைத்தது. முதல்முறை பெண்மை தரும் மெல்லிய சுகங்களை உணர்ந்தவன் அவள் காட்டிய புது உலகில் தன்னை மறந்து மூழ்கினான். நொடியும் விலகவில்லை, தீரா மயக்கத்தில், தெவிட்டா கூடலில் மீண்டும் மீண்டும் அவள் வசம் விழுந்தான். புதுவித சுகத்தில் அமிழ்ந்து தன்னை தொலைத்து அவளை உள்ளிழுத்து காலங்களைத் தொலைத்தான்.

இருள்விலகி பனி உருகி நீராய் படர்ந்து கிடக்கும் காலை நேரம் அவன் கையணைப்பில் கைதியாய் கிடந்த இரவின் இனிமையான நொடிகளை நினைத்துப்பார்த்து முகம் சிவந்தபடி காலை உணவிற்குத் தோசை ஊற்றிக்கொண்டிருந்தாள் எழிலரசி. வெகு தாமதமாய் அப்போது தான் எழுந்த உதய், அவளைத் தேடி அவள் அருகில் வந்து நின்றான்.

சந்தன நிறப்புடவையில் செதுக்கிய சிற்பமாய், ஈரக்குழலிருந்து கழுத்தோரம் தொட்டும் நீர்த் துளிகளோடு நெற்றியில் மின்னும் குங்குமமும், மலர்ந்திருந்த முகமும், உதட்டிலிருந்த

வெட்கப்புன்னகையும் பேரழகியாய் அவளைக் காட்ட ரசித்துப்பார்த்தான். தக்காளியாய் சிவந்திருந்த கன்னங்கள் ருசிக்கத்தூண்ட இமைக்க மறந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

“என்னதிது? காலையிலே குளிக்காம அடுப்படிக்குள்ள வந்து நின்னுக்கிட்டு” அதட்டலாகக் கேட்க எண்ணிய போதும் அவள் குரல் குழைந்து தான் வந்தது.

அதைக் கண்டுகொள்ளாதவன், “என் மேல கோபமில்லையே?” என்றான் அழுத்தமான பார்வையை அவள் மேல் பதித்தபடி.

“கோபம் தான், இன்னும் குறையாத கோபமிருக்கு” என்றவளின் குரலில் அந்த கோபமில்லாது போக, அவள் பின் நின்றிருந்தவன் சட்டென அவளை தன்னோடு இழுத்து அணைத்தான். அவள் கன்னங்கள் மேலும் செம்மையுற, தன் கைகளால் மெல்ல வருடியபடி, “ஏய் படபடப் பட்டாசு என்னைக் கொஞ்சம் பேச விடுடி” எனக் கொஞ்சினான்.

“ஐயோ விடுங்க தோசை தீஞ்சிடும்” என்க, எட்டி அடுப்பை அணைத்தவன் அவளைத் தன்னை நோக்கித் திருப்பினான். நெருக்கத்தில் அழகு முகம் பார்த்தவன் மீண்டும் மையலுடன் அவளிதழ் நோக்கிக் குனிந்தான்.

அவன் நெஞ்சில் கைவைத்துத் தள்ளியவள், “இது தான் நீங்க பேசுற இலட்சணமா?” என்க, அவள் தாடையைப் பிடித்து நெற்றியோடு நெற்றி முட்டிக்கொஞ்சியவன், “என் ஸ்டைல் இப்படி தான்!” என்றான்.

“நான் செஞ்சதெல்லாம் கதிருக்காகத் தான் செஞ்சேன், உன் மேல ஒரு பரிதாபப்பார்வை தான் இருந்தது அப்படி தான் நானே நினைச்சிக்கிட்டு இருந்தேன். எங்க பெரியம்மா என்னை வளர்த்ததால அந்த நன்றிக்கு அவங்க பிள்ளைங்க கேட்குறதை விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்து விட்டுக்கொடுத்துத் தான் பழக்கம். ஆனால் என்னால சிவாவுக்கு விட்டுக்கொடுக்க முடியலை, விட்டுக்கொடுக்கணும்கிற நினைப்பு துளிகூட இல்லை. அதைவிடச் சிவாவுக்கு உன் மேல ஆசை

இருக்குங்கிறது தெரியவும் எனக்குக் கோபம் தான் வந்துச்சு, அவனை அடிக்கும் போது தான் உன்மேலான என் உரிமையும் காதலையும் உணர்ந்தேன். எனக்கே எனக்குன்னு கடவுள் கொடுத்த ஒரு உறவு நீ தான்! எனக்கு எப்பவும் நீ வேணும், என்னால உன்னை எதுக்காகவும், யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாதுடி" என்றபடி விடாது இறுக்கி அணைக்க, சுகமாக அவன் நெஞ்சில் சாய்ந்துகொண்டாள்.

மெல்ல அவள் கழுத்தோரம் கன்னத்தில் முத்தமிட, அதில் தன்னிலை பெற்று விலகியவள், "எலேக்ட்ரீசியனை கூட்டிட்டு வந்து என்னன்னு பாருங்க. இன்னும் நம்ம வீட்டுல கரண்ட் இல்லை, உங்களுக்கு காலேஜ் போக டைமாகுது, சட்னி வேற அரைக்கணும்" எனப் புலம்பினாள்.

அப்போதே நினைவு வந்தவனாக விறுவிறுவென வெளியே சென்று ப்யூஸை மாட்டிவிட்டு திரும்ப, அவன் பின்னே வந்த எழில் முறைத்தபடி நின்றாள்.

"கேடி, எல்லாம் உங்க வேலை தானா?" என்க, உதயன் சமாளிப்பாய் சிரித்தான். "அப்போ நீங்களே சட்னி ரெடி பண்ணிருங்க" என உள்ளே சென்றுவிட, திருதிருவென முழித்தவன் பரிதாபமாய் நின்றான்.

வார நாட்களில் மூன்று நாள் கல்லூரி செல்லவும் மூன்று நாள் தோப்பைக் கவனிக்கவும் உதயனுக்கு நேரம் சரியாக இருக்க, ஞாயிறு எழிலை அழைத்துக்கொண்டு வெளியே வந்திருந்தான். தோப்பு வேலைகளில் உடன் உதவி செய்தாலும் பெரும்பாலும் வீட்டில் தனியாக தானே இருக்கிறாள் என நினைத்து சினிமாவிற்கு அழைத்து வந்திருந்தான்.

கதிர் இருந்தவரை அவனும் அழைத்துச் செல்ல மாட்டான், தோழிகளோடும் செல்ல விடமாட்டான். உதய் கேளாமலே அழைத்து வந்ததில் எழிலுக்கு அளவில்லா மகிழ்ச்சி! அவள் உற்சாகம் அவனுக்குள்ளும் சந்தோஷத்தைத் தர, படம் பார்த்து முடிய நகைக் கடைக்கு அழைத்து வந்தான்.

இரு தினங்களுக்கு முன் சுந்தரி தாலிச்செயின் வாங்குவது பற்றி கேட்டுக்கொண்டிருந்தார். பொதுவாக அது மாப்பிள்ளை வீட்டில் தான் செய்வார்கள் பெற்றவர்கள் செய்தால் அது உதய்க்கு மரியாதை குறைவாகத் தெரியும் என எழில் மறுத்துவிட, அப்போ உதயனிடமாவது அது பற்றிக் கேள் என்றார் சுந்தரி.

வேலை முடித்து வந்த உதயனின் காதுகளில் நன்கு விழுந்தது. எழில் கேட்பாள் என எதிர்பார்த்திருக்க, அவள் கேட்கவேயில்லை. அவள் உரிமையோடு கேளாதது தான் உதய்க்கு குறையாகத் தோன்றியது.

கடை ஊழியர்களிடம் தாலிச்செயின் எடுத்துக் காட்டும் படி கேட்டவன் எழிலை பார்க்கச் சொன்னான். அவனை முறைத்த எழில் மெல்லிய குரலில், “இப்போ எதுக்கு இந்த ஆடம்பரச் செலவு? அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்” என்றாள்.

“ஆடம்பரச் செலவு இல்லை, அத்தியாவசிய செலவு தான் பணத்தைப் பத்தி பேசாம உனக்கு பிடிச்சதைப் பார்” என்க, “ஏன் கல்யாணத்துக்கு வந்த மொய்ப்பணம் மொத்தமும் இதுல காலி பண்ணப்போறீங்களா? அப்பறம் தோப்புக்கு எதைச் செலவு பண்ணுவீங்களாம்?” என்றாள்.

“அதுக்கு மொய்ப்பணம் இருக்கு, இத்தனை வருஷ என் சம்பளத்தைச் சேர்த்து வைச்சிருந்த சேவிங்ஸ் தான் இது, அமைதியா பார்” என்றவன் அவனே திரும்பி பார்க்கத் தொடங்கினான். அவனாகவே ஒன்றைத் தேர்வு செய்து காட்ட, எழிலுக்கும் அது பிடித்துவிடவே அதையே பில் போடச் சென்றான்.

அவன் திரும்பி வரும் போதே எழில் கம்மல் சிலவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள். உதய் அருகே வர, “இதும் உங்க சேவிங்க்ஸ்ல கிடைக்குமா?” என ஒரு ஜோடி ஜிமிக்கி கம்மலை தன் காதருகே வைத்துக்கொண்டு தலையாட்டிவாறு கேட்டாள்.

முதல்முறையாக அவளாகக் கேட்டதில் உதயனுக்கு அத்தனை சந்தோஷம். அதை விட அவள் தலையாட்டிக்

கேட்ட அழகில் அவன் தலை தானாக ஆடியது. அதையும் சேர்த்தே வாங்கிக்கொண்டு வெளியே வந்தனர்.

“நகை வாங்கப் போறேம்ன்னு சொல்லியிருந்தா அம்மாவையும் கூப்பிட்டு வந்திருப்பேனே?” என எழில் குறைபட, “சப்ரைஸ்ஸ இருக்கட்டும்னு சொல்லலை, நானே வாங்கிக்கிட்டு வந்திருப்பேன், நீ டிசைன் பிடிக்கலைன்னு வம்பு பண்ணுவையோன்னு தான் உன்னைய கூட்டிட்டு வந்தேன்” என்க, அவனைப் பார்த்து முறைத்தாள்.

“உண்மைய தானே சொன்னேன் எதுக்குடி இந்த முறைப்பு?” என்க, அதற்கும் முறைத்தவள், “வீட்டுக்கு வாங்க வைச்சிகிடுறேன்” என உதட்டைச் சுளித்தாள்.

“ரொம்ப சந்தோஷம்!” என்றவன் ஒற்றை கண்ணைச் சிமிட்ட, எழில் பொங்கிய சிரிப்பை முகத்தைத் திருப்பி மறைத்துக்கொண்டாள்.

கடை வீதிகளைத் தாண்டி வந்தவர்கள் சாலையோர கடையில் எழிலுக்கு இளநீர் வாங்கிக்கொடுத்துவிட்டு அவனுக்கும் ஒன்று வாங்கினான். அப்போதே எதிரே சாலையைக் கடந்து வந்த முதியவர் ஒருவர் அவன் அருகே வந்தார்.

வந்தவர் உதயனிடம் நலம் விசாரிக்க, பதில் சொல்லிய போதும் அவனுக்கு அவர் யாரென நினைவிலில்லை. உதயனின் முகம் பார்த்து அவரே புரிந்து கொண்டு, “என்னைத் தெரியலையா மாப்பிள்ளை, பவித்ரா அப்பா” என்க, அப்போதே ராஜாவின் மாமனார் என்பது நினைவில் வந்தது.

“சாரி அங்கிள், அண்ணன் கல்யாணத்துல பார்த்தது அதுக்கு அப்பறம் அதிகம் பார்த்ததில்லையா அதான் சட்டென அடையாளம் தெரியலை, நீங்க என்ன இங்க?” என விசாரித்தான்.

“உனக்கு விஷயம் தெரியாதா! பேரன் பிறந்திருக்கான். இந்த ஹாஸ்பிட்டல தான் பவித்ரா இருக்கா” எனச் சாலைக்கு மறுபுறம் இருந்த மருத்துவமனையைக் கைக்காட்டினார்.

பேசி முடித்தவர் அருகே இருக்கும் உணவகம் நோக்கிச் சென்றுவிட, தன்னையே பார்த்துக்கொண்டிருந்த எழிலிடம் விளக்கம் கொடுத்தான்.

“அப்போ வாங்க நாமா போய் பார்த்து நலம் விசாரிச்சிட்டு வந்திடலாம்” என எழில் அழைக்க, தனக்கே இல்லாத ஒட்டுதல் தன் குடும்பத்தோடு எழிலுக்கா என ஆச்சரியமாகப் பார்த்தான்.

“அதெல்லாம் வேண்டாம் ராஜா இருப்பான், எதுக்கு தேவையில்லாத பிரச்சனை?” என்க, “பிரச்சனை எல்லாம் பண்ணமாட்டாங்க, இவ்வளவு தூரம் வந்துட்டு பார்க்காம போனா மரியாதை இல்லைங்க. அது மட்டுமில்லாம உங்க வீட்டுக்கு வந்திருக்க புதுவாரிசு நீங்க பார்க்க வேண்டாமா? வாங்க!” என அவள் தான் அருகே இருக்கும் கடையில் பழங்கள் வாங்கிக்கொண்டு அவனையும் இழுத்துக்கொண்டு சென்றாள்.

மருத்துவமனையில் விசாரித்து பவித்ரா இருக்கும் அறைநோக்கிச் சென்றனர். அங்கே அவளோடு அவள் அன்னையும் மூத்த மகளும் மட்டுமே இருந்தனர். இவர்களை கண்ட பெரியவர் வரவேற்க, எழில் பவித்ராவிடம் நலம் விசாரித்துவிட்டு பெரியவரின் கையிலிருந்து குழந்தையை வாங்கினாள்.

அன்னையின் மொபைலில் கேம் விளையாட்டு கொண்டிருந்த கிருஷ்மிதாவின் அருகே இருக்கையில் அமர்ந்த உதய் அவளிடம் ஒரு சாக்லேட்டை எடுத்து நீட்ட, சிறு சிரிப்போடு வாங்கிக்கொண்டவள், “தேங்க்ஸ் அங்கிள்” என்றாள்.

“அங்கிள் இல்லை சித்தப்பா” எனக் குறுநகையோடு அவள் தலை வருடிக்கொடுக்க, சரியென தலையாட்டினாள். அபிராமியின் மகள் அளவு இவளோடு அதிகம் பழகியதில்லை, இரண்டு மூன்று முறை பார்த்திருக்கிறான் அவ்வளவே!

குழந்தையோடு அவன் அருகே வந்த எழில் அவனிடம் கொடுக்க, “என்ன இது இவ்வளவு குட்டியா இருக்கு?”

பட்டெனக் கேட்க, அந்த அறையிலிருந்த பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரும் சிரித்தனர்.

அவன் இரண்டு உள்ளங்கைகள் சேர்ந்து பிடிக்கும் அளவிற்கு வெள்ளை துணியில் துயில் கொள்ளும் பஞ்சுப்பொதிகை போன்றே அழகாக இருந்தது.

“பின்ன நேத்து பிறந்த குழந்தை என்ன உங்க அளவுக்கா இருக்கும்?” என முறைப்புடன் எழில் கேட்டாள். பிறந்த குழந்தைகளை அவன் எங்கே பார்த்திருக்கிறான் இப்போ தான் முதல் முறையாகப் பார்க்கிறான்!

மீண்டும் எழில் நீட்ட, “எனக்குத் தூக்கத் தெரியாது நீயே வைச்சிரு” என மறுத்தவன் அவளருகே குனிந்து குழந்தையைப் பார்த்தான். அதன் கொள்ளை அழகு அவனையும் கொள்ளையிட, மெல்ல ஒற்றை விரலால் அதன் பட்டுக்கன்னத்தில் வருடினான். அதில் விழித்துக் கொண்ட குழந்தை அவன் ஒற்றை விரலை தன் மொத்த உள்ளங்கைக்குள் பிடிக்க, அந்த ஸ்பரிசத்தில் உதயின் உடல் சிலிர்த்தது. சட்டெனக் குழந்தை அழவும் பயந்து உதய் நகர, எழில் சிரிப்புடன் குழந்தையைக் கொஞ்சியவாறு பவித்ராவை நோக்கிச் சென்றாள்.

உதய் அறைக்கு வெளியே வந்து அமர, இரண்டு சாப்பாட்டுப் பைகளோடு ராஜா வந்தான். உதயனை வரவேற்காது அறைக்குள் சென்றுவிட உதயனும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. நேரம் போக அங்கு நடந்து கொண்டிருக்க பக்கத்து அறையிலிருந்து வெளியேறிச் சென்றவனை கவனித்தான்.

தங்கள் ஊர்க்காரர் போன்றே இருக்க, “காளியண்ணா..” என அழைத்தான். அவனோ நிற்காது வேகவேகமாக செல்ல உதயனும் பின்னாலே சென்றான். தான் அழைத்தது நன்றாக கேட்டிற்கும் இருந்தும் தவிர்த்துச் செல்கிறாரே என்ற குழப்பத்துடனே வாசல் வரை பின்னே செல்ல, அதன் பின் அவனை காணவில்லை.

சுற்றும் முற்றும் தேடியபடி உதய் குழப்பத்தோடு நிற்க, எழிலிடமிருந்து அழைப்பு வந்தது. அதைக்

கண்டுகொள்ளாது விட்டவன் அவளை அழைத்துக்கொண்டு வீடு வந்தான். சுந்தரியின் வீட்டிற்கு வந்தவர்கள் அவரிடம் நகையைக் காட்டிவிட்டு இரவு உணவை அங்கே முடித்துவிட்டு வீடு வந்தனர்.

பேரனையும் பவித்ராவையும் நலம் விசாரித்துவிட்டு வந்தனர் ரெங்கநாதனும் பரமேஸ்வரியும். பிரசவத்தில் சற்றே சிரமப்பட்டதை அறிந்ததும் பரமேஸ்வரிக்கு மனதே சரியில்லை. மருத்துவமனையிலிருந்தது வீடு திரும்பும் வரை உடன் இருந்து கவனித்துக்கொண்டவர் பின் அவள் அன்னையின் கவனிப்பில் விட்டுவிட்டு வந்தார். வந்ததும் முதல் வேலையாக தங்கள் குடும்ப ஜோதிடரைச் சென்று பார்த்தார்.

விலகிச் செல்லும் பிள்ளைகள், பிள்ளைகளுக்கு அடுத்தடுத்து நடக்கும் விபத்துகள், கஷ்டங்கள் என அனைத்திற்கும் பெரியவர்கள் செய்த பாவங்களே காரணம் எனச் சொல்லியவர் பரிகாரங்களும் சொல்லி அனுப்பினார். ஆனால் வீட்டிற்கு வந்ததும் கணவரே முழுக்காரணம் என ஆரம்பமான பரமேஸ்வரியின் புலம்பல் நிற்கவேயில்லை. கேட்ட ரெங்கநாதனும் சற்று நடுக்கிப்போனார், பிள்ளைகள் நலனின்றி பிற செல்வங்கள் பெரிதாய் தெரியவில்லை.

## அத்தியாயம் 23

தோப்பில் நட்டியிருந்த மரக்கன்றுகளுக்குக் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான் உதயன். மதிய உணவு நேரம் சமையல் முடித்தும் அவன் வராததால் அவனை அழைக்க வந்தாள் எழில். தொலைவிலிருந்து அவனை அழைத்தவாறே வர அவன் கவனிக்கவேயில்லை, அருகில் வந்தவள், “ஏங்க உங்களை தான் சாப்பிட கூப்பிடுறேன் காதே கேட்கலையா?” என்றவாறு தட்டி அழைத்த பின்னே திரும்பினான்.

“ம்ம், என்னம்மா?” என்றான் மீண்டும் கவனமில்லாமல், “எத்தனை தடவைங்க சாப்பிட வாங்கன்னு

கூப்பிடுறது, கிச்சன் ஜன்னல்ல இருந்து கூப்பிட்டேன், பின் வாசல்ல இருந்து கூப்பிட்டேன், கத்திக்கிட்டே இவ்வளவு தூரமும் வந்திருக்கேன்” என்றவள் நொந்து போய் நெற்றியில் அறைந்துகொண்டாள்.

அதற்குள் வாய்க்கால் தண்ணீரில் கைகால் கழுவியவன் வேப்பமரத்தடி நிழலில் இருந்த கயிற்றுக்கட்டியில் அமர்ந்து எழிலை நோக்கி கை நீட்டி அழைத்தான். முறைப்புடன் அவள் அருகே வர, “ஏன்டி எப்பப்பாரு என் மேல கோபப்பட்டு இந்த முட்டைக்கண்ணையும் உருட்டி உருட்டி முறைச்சிகிட்டே இருக்க?” என்றபடி அவள் கைகளைப் பிடித்திழுத்து தன் மடியில் அமர்த்தினான்.

நெளிந்தவள் விலக முயற்சிக்க, “நம்ம தோப்பு தானே இந்த நேரம் யாரு வரப்போறா?” என்றவன் அவள் இடையை நெருக்கி அணைத்து கழுத்து வளைவில் முகம் புதைக்க, நிமிர்த்தியவள் அவன் ஈர முகத்தை தன் சேலை முந்தானையால் துடைத்தாள்.

கண்மூடி ரசித்தவாறே அவள் ஆடையில் அவள் வாசத்தை இழுத்து சுவாசிக்க, அவன் நெஞ்சில் சாய்ந்தவள், “நான் எப்போங்க உங்க மேல கோபப்பட்டு இருக்கேன்?” என்றாள் கொஞ்சலாக.

“அடி பாதகி, கோபப்பட்டதென்ன காமாட்சி விளக்கை எரிஞ்சி என்னைக் கொல்லவே பார்த்தவளே நீ” என்றான்.

“அன்னைக்கு ஒருநாள் தாங்க உங்க மேல கோபம் இருந்துச்சு அதுவும் உங்க மேல இல்லை உங்க வீட்டாளுங்க மேல இருந்த கோபம் தான், அப்பறம் எப்போ நீங்க வீட்டை விட்டு வந்தீங்களோ அப்போவே போகிடுச்சு, அதுக்கு அப்பறம் கோபமெல்லாம் இல்லை சும்மா நடிப்பு தாங்க” என்றாள்.

“நடிப்பா..! உன்னை..” என்றபடி இடுப்பில் கிள்ளியவன், “ஆமா கதிர் இறந்ததுக்கு எங்க வீட்டாளுங்க தான் காரணன்னு சொன்னீயே குறிப்பா யார்? சிவாவா? பெரியப்பாவா? ஏன்னா ஆக்கிரமிப்பு அகற்ற, தேர்தல்ல நிற்கன்னு பெரியப்பா கூடவும், உங்கூட

நிச்சியம் முடிச்சு சிவா கூடவும் பிரச்சனையில இருந்திருக்கான். இருந்தும் இது பத்தி எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லலை, சரி யாருன்னு நீயாவது சொல்லு?” என்றான்.

எழில் மௌனமாய் இருக்க, கன்னத்தில் கிள்ளியவன், “இன்னுமா என்மேல நம்பிக்கை வரலை? எப்பவுமே நான் கேள்வி கேட்டா பதில் சொல்லுறதே இல்லை நீ” எனக் குறைபட்டான்.

“பதில் சொல்லாம இருக்கேன்னா அதுக்கு அர்த்தம் நீங்களே கண்டுபிடிக்கணுங்கிற தான்” என்க, “அதை தான் யோசிச்சிக்கிட்டு இருந்தேன். இங்க இருந்த டாட்டா ஏசி வண்டியை எடுத்துட்டு போனாங்கல அந்த வண்டியை ஓட்டிக்கிட்டு இருந்த டிரைவர் காளியண்ணா நான் ஊருக்குள்ள வந்ததிலிருந்து அதாவது கதிர் இறந்ததிலிருந்து அவர் ஊருக்குள்ள இல்லை. எங்க பெரியப்பாவுக்கு ரொம்ப விஸ்வாசி, போன வாரம் அண்ணியைப் பார்த்த ஹாஸ்பிட்டல்ல அவரையும் பார்த்தேன், நான் கூப்பிட்டும் கண்டுக்காம போனாரு, கேட்டும் கேளாத மாதிரி என்னைத் தவிர்த்து ஓடி இருக்காரு. இத்தனை நாளா இங்கிருந்த வண்டிய நாமா குடி வரவும் எடுத்துட்டு போயிருக்காங்க, அதுவும் அந்த வண்டி பயன்பாட்டுக்கு இல்லாம இருக்கு. அந்த காளி கையில மாட்டுனா தான் உண்மை தெரியும், எல்லாத்தையும் வைச்சு ஒரு கணக்கு போட்டா அது பெரியப்பாவா? சிவாவான்னு என்னால கணிக்க முடியலை, நீயும் சொல்ல மாட்டிக்க, நான் என்ன தான்டி செய்யட்டும்?” என மூச்சு வாங்கினான்.

கேட்டுக்கொண்டிருந்த எழில் உடல் இறுக, கைகள் மேலும் இறுக்கமாய் அவன் கழுத்தை வளைத்துக்கொண்டது.

அன்று எழில் தங்கள் வயலில் வேலை செய்யும் கதிருக்கு உணவு எடுத்து வந்து கொண்டிருந்தாள். ரெங்கநாதனின் தென்னந்தோப்பைத் தாண்டி அவர்கள் வயல், அதற்கு அடுத்து தான் கதிரின் வயல். தங்கள் வயலுக்கு அவர்கள் தோப்பு வழியாகச் சென்று கொண்டிருந்த எழில், ரெங்கநாதனின் மிரட்டல் குரல்

கேட்டு அப்படியே ஒரு மரத்தின் பின் சற்று மறைவாக நின்றுகொண்டாள். யாரை மிரட்டுகிறார் என எட்டிப்பார்க்க, அவர் கைகளுக்குள் பிடிபட்டிருந்த கதிரைக்கண்டு அதிர்ந்தாள்.

“ஏன்டா நீயெல்லாம் என்ன தைரியத்துல என்னை எதிர்த்து தேர்தல்ல நிற்க நினைச்சே? இங்க நான் தான் எப்பவும் தலைவர் என்னைத் தாண்டி எதுவும் நடக்காது. அப்பனாத்தா இல்லாத கால் வயித்துக் கஞ்சிக்கும் அல்லல்படுற உனக்கெல்லாம் என்னடா தகுதி இருக்கு என்னை எதிர்க்க? இந்த இலட்சணத்துல ஆக்கிரமிப்புகளை வேற அளந்துக்கிட்டு இருக்கீயா? ஏற்கனவே எங்கிட்ட வாங்கினவன் தானே? இருந்தும் பயம் வரலை!

பதவியாசை அரசியல் ஆசை இருக்குன்னா சொல்லு, எங்க கட்சியில தொண்டனா சேர்த்து எங்கூடவே குறையில்லாம வைச்சிக்கிடுறேன். நீயும் பிரியாணியோடும் எடுபுடிங்கிற பெயரோடையும் காலத்துக்கும் சுகமா இருந்துட்டு போகலாம். இந்த ஊருல ஒரு பையனும் என்னை எதிர்த்தது கிடையாது, எதிர்க்க நினைச்சவனும் இருக்க முடியாது, புரியும்னு நினைக்கிறேன். அதையும் மீறி என்னை எதிர்க்க உங்கிட்ட பணமா? பலமா என்ன இருக்கு?” என்றார் ஏளனமாய்.

அவர் கைகளுக்குள்ளிருந்த சட்டையை உருவிக்கொண்ட கதிர், கசங்கிய சட்டையை நீவி விட்டபடியே, “இந்த ஊர் மக்களுக்கு நல்லது செய்யணுங்கிற மனசு இருக்கு” என நெஞ்சில் கை வைத்தான். அவன் பதிலிலே பின்வாங்க மாட்டான் என்பது புரிய முகத்தில் அறைந்தது போன்றிருந்தது.

“நல்லது செய்றதுக்கு நீ உயிரோட இருக்கியான்னு பாருலே” எனக் கொலை வெறியோடு உதறிச் செல்ல, “இருக்குற நொடி வரைக்கும் செய்வேன்” என்றான் அசராமல்.

கேட்டுக்கொண்டிருந்த எழில் வெடிக்கும் எரிமலையானாள். பொதுவாகவே கதிரை குறைவாகப் பேசினால் தாங்க மாட்டாள், அவரோ தங்கள்

ஏழ்மையை கீழாப்பேசி மிரட்டிச் செல்ல கொதித்துப்போனாள். ஏழைகள் என்றால் அடிமைகள் அல்லவே! தன்மானத்திற்கு விலை நிர்ணகிக்க அவர் யார்? பதவியும் பணமும் இருக்கும் ஆணவத்தில் தானே இவ்வளவு பேசுகிறார்! கதிர் ஒன்றும் அவருக்குக் குறைந்தவனில்லையே என அன்றைய நாள் முழுக்க வெம்பிக்கொண்டிருந்தாள்.

அதை உதயனிடம் உரைத்தவள், “இது நடந்த அன்னைக்கு காலையில சிவாவும் கதிரை உன் கழுத்துல தாலி கட்ட விட மாட்டேன்னு மிரட்டுனான். அன்னைக்கு இராத்திரி முழுக்க எனக்குத் தூக்கமே இல்லைங்க, என்ன தான் உங்க பெரியப்பா மேல கோபமிருந்தாலும் அவர் மிரட்டல்ல ரொம்ப பயந்துட்டேன். ஏற்கனவே கதிர் மாமாவை அடிச்சவங்க தானே எதுவும் செய்வாங்கன்னு தோனுச்சு. காலையிலே கதிர் மாமாக்கிட்ட அரசியல் எல்லாம் வேண்டான்னு சொன்னேன், அவர் என் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கலை, நான் சொன்னதை கேட்கலை. அன்னைக்கு நைட் டவுனுக்குப் போயிட்டு வரும் போது தான் விபத்து நடந்தது. விடியவும் தான் ஊருக்குள்ள விஷயம் தெரிஞ்சி எங்களுக்கும் தெரிய வந்துச்சு. ஆனால் அது விபத்துன்னு என் மனசு ஏத்துக்கிடலை” என்றவள் கண்ணீரோட அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

தன் குடும்பமா இப்படி என்ற அதிர்ச்சியில் உதயன் உறைந்தே போனான். நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவள், “விஷேத்துக்கு அடுத்தநாள் நீங்க வீட்டுக்கு வரும் போது உங்களை பார்த்ததும் உண்மையிலே அவங்க மேலிருந்த கோபம் தான் உங்க மேல திரும்பிடுச்சு, என்னையே மறக்குற அளவுக்கு! விளக்கை தூக்கி எரிஞ்சது கூட என்னையே அறியாம தான் செஞ்சிட்டேன். சாரிங்க! ஆனால் என் அத்தனை அடிகளையும் தாங்கிக்கிட்டு அடுத்த நாள் நீங்க வந்து நின்ன போது எனக்கு பிரமிப்பாயிருந்துச்சு, என் கோபம் ஏதோ ஒரு விதத்துல உங்களை பாதிக்குதுன்னு புரிஞ்சது. அப்பவும் கோபப்பட்டு கதிர் மாமா

இறந்ததுக்கு உங்க குடும்பம் தான் காரணம்னு கத்துனேன்.

அன்னைக்கு நைட்டே நீங்க வீட்டை விட்டு வந்தது எனக்கு ஆச்சரியமா இருந்துச்சு, திரும்பவும் கோபப்பட்டு கதிர் மாமா ஆசைய நிறைவேற்ற முடியுமான்னு கேட்டதும் நீங்க அதைச் செய்ய ஆரம்பிச்சிங்க. ஒவ்வொரு முறை நான் கோபம் காட்டும் போதும் நீங்க அதை எந்த உரிமையில தாங்கிக்கிட்டீங்கன்னு தெரியலை, ஆனால் என் மனசுல அழுத்தமா பதிய ஆரம்பிச்சிங்க. அதே கோபத்தைக் காட்டியே உங்களைத் தள்ளி வைக்க நினைச்சாலும் மெல்ல மெல்ல நீங்க என் மனசை நெருங்குனதை தவிர்க்க முடியலை. கோபப்பட்டேனே தவிர உங்களை வெறுக்கவில்லை. அந்த கோபமும் போலியானது தான்!

கதிர் மாமா மனசுல என்ன இருந்ததோ எனக்குத் தெரியாது. என் மனசுல அப்படி எதுவுமில்லை. தாய்மாமாங்குற பாசமும் உரிமையும் தான் இருந்தது. ஒருவேளை கல்யாணம் முடிஞ்சி வாழ்ந்திருந்தா எனக்குத் தோன்றியிருக்குமோ என்னவோ தெரியலை! ஆனால் உங்களை முழுமனசோட தான் ஏத்துக்கிட்டேன். உங்களோட தோன்றுன உணர்வு முன் எப்பவும் தோன்றாத புது உணர்வு, வேற யாரோடும் இது மாதிரி தோன்றாதுங்குறதும் உறுதி” என்றவள் மேலும் நிமிர்ந்து அவன் நெற்றில் இதழ் பதித்தாள்.

உதயனுக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளக்கால் வரை உடலெல்லாம் சிலிர்த்தது. மேலும் கீழிறங்கி முகம் முழுவதும் கண்ணீரோடு முத்தமிட்டவள், “என்னை மன்னிச்சிடுங்க ப்ளீஸ். நான் செஞ்சது சரியா தப்பான்னு எனக்குத் தெரியாது, உங்க பெரியப்பா பேசுனது எனக்குள்ள வன்மமா இருந்துச்சு. யாரோ ஒரு எளியவன்னு தானே கொசு அடிக்கிற மாதிரி அடிச்சாங்க இதுவே அவங்க கையே அவங்க கண்ணை குத்துனா விரலையா வெட்ட முடியும்! என்ன செய்றீங்கன்னு பார்ப்போம்னு இருந்தேன். ஆனாலும் இதுல எதுவுமே அறியாத உங்க வாழ்க்கையே பாழாக்கிட்டேன் மன்னிச்சுக்கோங்க, இந்த

குற்றவுணர்ச்சி உங்களை பார்க்கும் போதெல்லாம் இருந்துச்சு.

இந்த நேரத்துல நீங்க எங்கிட்ட கேள்வி கேட்க, மேலும் உங்க குடும்பத்துக்கு எதிரா உங்களைத் தூண்டிவிட வேண்டான்னு தான் நான் பதில் சொல்லுறதில்லை, அதனால தான் சிவாவைப் பத்தியும் சொல்லலை. என்ன இருந்தாலும் உங்க குடும்பத்துக்கு எதிரா உங்களை செயல்பட வைச்ச என் கோபம் தப்பு தான், சாரிங்க! என்னை மன்னிச்சா சந்தோஷம் இல்லை பதிலுக்குக் கோபப்பட்டாலும் தாங்கிக்கிடுறேன் ஆனால் வெறுத்திட மட்டும் செஞ்சிடாதீங்க ப்ளீஸ்" என்றவள் அவன் கழுத்தை இறுக்கக் கட்டிக்கொண்டு கண்ணீர் மழையே பொழிந்தாள்.

அவளை நிமிர்த்தியவன், "இந்த உண்மைய நீ சொல்லியிருந்தாலும் நான் செஞ்சிருப்பேன், நல்லாட்சி செய்தும் இல்லை நல்லவனுக்காவது வழிவிடணும். அந்த நல்லவன் யாரா இருந்தாலும்" என்றான்.

சட்டென எழில் கண்ணீர் நின்றுவிட அப்போதும் வியப்போடு அவனைப் பார்த்தவள், "அப்போ என் மேல கோபமில்லையே?" என்றாள்.

பற்களைக் கடித்தவன் முன் நெற்றியில் வலிக்கும்படி முட்டி, "செய்றதையும் செஞ்சிட்டு, முத்தம் கொடுத்து மன்னிப்பு, இதுல கண்ணீர் வேற? உன் கோபம் என்னை செயல்பட வைக்கும்னா உன் கண்ணீர் என்னைச் செயலிழக்க வைக்கும்! இதை தெரிஞ்சிக்கிட்டே மன்னிப்பு கேட்குற இலட்சணத்தை பாரு" என்க, அவன் உண்மையைக் கண்டுகொண்டதால் ஒற்றை கண்ணை மூடி நாக்கை கடித்துக்கொண்டு சிரித்தாள்.

"இன்னைக்கு இருக்குடி உனக்கு.." என்று குழைந்தவன் மடியில் இருப்பவளை கைகளில் ஏந்தியவாறு வீடு நோக்கி நடந்தான். மனம் நிறைந்துத் தழும்ப சந்தோஷ மிகுதியில் இருந்தவள் அவளாகவே எக்கி அவன் அழுத்தமான இதழை தன் தேனுரும் இதழால் மெல்லியதாகத் தீண்ட இன்பமாய் வளைத்துக் கொடுத்தான் உதய்.

காலை நேரம் வாயில் வேப்பங்குச்சியை வைத்து மென்றவாறே பின்கட்டு தொழுவத்திற்கு வந்தான் சிவச்சந்திரன். வேலையாட்கள் பால் கறந்து அளந்து கொண்டிருக்க, லிட்டர் கணக்கை எண்ணியவன் அவர்கள் எடுத்துச் செல்லவும் கிணற்றடியில் வாய் கொப்பளித்து முகம் கழுவினான். அப்போதே அங்கிருந்த வண்டியைக் கவனித்தவன் முகம் துடைத்தபடியே முன் வாசலுக்கு வந்தான். தினசரியைப் புரட்டியபடி அமர கணக்காளர் வேலுமாணிக்கம் வந்தார்.

“சின்னத்தம்பி ஐயா இல்லைங்களா?” என்க, “உள்ள தான் இருக்காரு மாமா, உக்காருங்க காபி சாப்பிடுங்க” என்றான்.

“இருக்கட்டும் தம்பி” என்க, “வேலுமாமா அந்த குட்டியானை வண்டியை இன்னும் மெக்கானிக் செட்ல விடலையா? தோப்பு வேலைக்கு வண்டியில்லாம எப்படிச் சமாளிக்கிறது?” என்றான்.

“எங்க தம்பி இன்னும் அந்த களவானிப்பயன் காளி வேலைக்கே வரலையே, அவன் வந்து வண்டியை மெக்கானிக் செட்ல விட்டுச் சரி பண்ணி எப்போ எடுக்க?” என்றார் புலம்பலாக.

“இன்னுமா அவன் வேலைக்கு வரலை?” எனச் சிவா கோபமுடன் கேட்க, “பொண்டாட்டி பிரசவத்துக்கு போறேன்னு மாமியார் வீட்டுக்குப் போனவன் மூன்று மாசமாச்சு ஆளைக்காணும்” என்றார்.

“மூன்று மாசமா மாமியார் வீட்டுல என்ன விருந்து கொண்டாடுறானா? யாரை ஏமாத்தப் பார்க்கிறான், இருக்கு அவனுக்கு! சம்பளத்துல கழிச்சிக்க சொல்லி ஐம்பதாயிரம் முன்பணமா வாங்கியிருந்தான் மாமா, பணத்தை வாங்கிட்டு ஒருமாசம் லீவுன்னு போனவன் இன்னும் திரும்பி வரலை பாருங்க” என்றான் ஆற்றாமையில்.

“அடேய் விடுடா ஐம்பதாயிரம் தானே, நம்மகிட்ட விஸ்வாசமா வேலை பார்த்தவன்டா அவன்” என வந்தார் ரெங்கநாதன்.

‘பேசுவது தன் தந்தை தானா! அத்தனை எளிதாக விட மாட்டாரே, அதென்ன காளியின் மீது மட்டும் புதுப்பாசம்’ என நம்ப இயலாது பார்த்த சிவா, “நீங்க சொல்லுவீங்க, ராஜாகிட்ட யாரு கணக்கு வழக்கு சொல்லுறது?” என முணுமுணுத்தான்.

வேலுமாணிக்கத்திடம் திரும்பியவன், “சரி மாமா, நான் பார்த்துகிறேன், மெக்கானிக் செட்டுக்குப் போன் பண்ணி ஆள்விட்டு வண்டியை எடுத்துக்கச் சொல்லுறேன்” என்று எழுந்து சென்றான்.

சிவா காலை தோப்பிற்குச் செல்லும் முன் காளியின் வீட்டுப்பக்கம் சென்று பார்க்க, வீடு பூட்டி தான் இருந்தது. பக்கத்தில் விசாரிக்க, மூன்று மாதங்களாக அவன் குடும்பமே ஊரிலில்லை என்றனர். தான் ஏமாற்றப்பட்டதாக நினைத்த சிவாவிற்குச் சினம் சீறி எழுந்தது. தோப்பிற்கு வந்தவன் தனது ஆட்களுக்கு அழைத்து வரச்சொன்னான்.

அடுத்த அரைமணி நேரத்தில் ஆட்கள் தோப்பிற்குள் வர, குவிந்து கிடந்த தேங்காய்களை ஒரு பத்து வேலையாள் மட்டும் உரித்துக்கொண்டிருந்தனர். வந்த ஆட்களை தோப்பு வீட்டிற்குள் அழைத்து வந்த சிவா, “அடேய் நம்ம டிரைவர் காளி நியாபகமிருக்குல?” என்க, மூவரின் தலையும் ஆடியது.

“எங்கிருந்தாலும் அவனைக் கட்டித்தூக்கிட்டு வாங்கடா, ஐப்பதாயிரம் வாங்கிட்டு குடும்பத்தோட எஸ்கேப்பாகி மூன்று மாசமா என்னையே ஏமாத்தியிருக்கான்” என்றான் கொதிப்புடன்.

வேலையாட்களிடம் வேலை வாங்குவதிலும், கொடுத்த பணத்தை வசூலிப்பதிலும் சற்றே கராரானவன் தான் சிவச்சந்திரன். சில சமயம் இவர்கள் மூலம் மிரட்டிக் கூட வசூலிப்பதுண்டு.

“எங்க அண்ணி இருக்குற ஹாஸ்பிட்டல்ல போன வாரம் அவனைப் பார்த்தேன், அவன் பொண்டாட்டியும் அங்க அட்மிட் ஆகியிருக்கலாம் எதுக்கும் அந்த பக்கம் போய் பாருங்க, சுத்தி இருக்குற ஒயின்ஸ்ஷாப் இல்லை அவன் மாமியார் வீட்டுக்கே போய் கூட தூக்கிட்டு

வாங்கடா” என்க, “சரிங்க ஐயா, டென்ஷனாகாதீங்க நாங்க சத்தமேயில்லாம தூக்கிட்டு வரோம்” என்றனர்.

“யாரு நீங்க! போன தடவை எழிலை தூக்க முடியாம ஏமாந்து வந்த ஏமாளி தானேடா நீங்க, இந்த தடவை மட்டும் வெறுங்கையோட வந்தீங்க நானே உங்களை உப்புக்கண்டம் போட்டு ஊற வைச்சிடுவேன்” என்றான் மிரட்டலாக.

சிவாவின் கோபத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் ஆகையால், “கவலை வேண்டாமையா, இரண்டே நாள்ல கண்டிப்பா தூக்கிட்டு வரோம்” என உறுதியளித்துச் சென்றனர். ஆனால் தன் விதியை அறியாத சிவா தனக்குத் தானே குழி பறித்துக்கொண்டான்.

மாலை நேரம் அழகனின் கடையில் வந்தமர்ந்தான் உதயன். அங்கிருந்து பேருந்து நிறுத்தத்தைப் பார்க்க, அவ்விடம் சுத்தம் செய்யப்பட்டு அங்கிருந்த மரத்தடி திண்டுகள் இடிக்கப்பட்டிருந்தது.

“அடேய் வாடா புதுமாப்பிள்ளை, ஆள் அடையாளமே தெரியலையே! அன்னைக்கு அறிவுரை கேட்டுட்டுப் போனவன் தான் எவ்வளவு நாள் கழிச்சி திரும்பி வந்திருக்க? ஏன்டா எங்களை எல்லாம் மறந்துட்டீயா?” என அருகே வந்தான் அழகன்.

“என்னலே கிண்டலா?” என உதயன் முறைக்க, “நிசமாத்தான் அண்ணே ஆளே மாறிட்டீங்க!” என்றான் மணி.

“என்னடா, அப்படி என்ன மாறிட்டோமாம்?” என்க, “ஆமா எங்கடையிலே சாப்பிட்ட வரைக்கும் காஞ்ச கருவாடாட்டம் இருந்தே, இப்போ பாரு ஒரு சுத்து வெய்ட் போட்டு பெங்களூர் தக்காளியாட்டம் தகதகன்னு ஜொலிக்கிறியேடா!” என உதயனின் முகத்தைப் பிடித்து இருபுறமும் திருப்பியவாறு உரைத்தான் அழகன்.

அவன் கைகளை மெல்லிய சிரிப்போடு உதயன் தட்டிவிட, “என்ன அண்ணே வெட்கமா?” என மணி கேட்க, “பின்ன இருக்காதா? எல்லாம் எழிலோட

கவனிப்பு தான், அதான் நம்மளையே மறந்துட்டான் பையன்” என்றான் அழகன்.

“டேய் அப்படியெல்லாம் இல்லடா, காலேஜ்லையும் தோப்புலையும் வேலை அதிகம்” என்க, “பின்ன இருக்காதா! நீ தான் குடும்பஸ்தனாகிட்டையே” என்றான் அழகன்.

“போடா ஒரு டீயைப் போடு” என உதய் மெல்லிய சிரிப்போடு அழகனை விரட்டிவிட்டு, மணியிடம், “எங்க கரிச்சட்டியைக் காணோம் மணி?” என்றான்.

“அவனுக்குக் காலையில இருந்தே காய்ச்சல்ன்னு அண்ணே தான் ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வான்னு அனுப்பி வைச்சுச்சு” என மணி உரைக்க, “அடுத்து அந்த பயலுக்கு ஒரு நல்ல பொண்ணை பார்த்து சீக்கிரம் கல்யாணத்தை முடிச்சு வைக்கணும்” எனப் புலம்பினான் அழகன்.

“ஏன்டா? அடுத்த ஆடு அவனா? கடைய கவனிக்காம தரகர் வேலை நல்லா செய்யுறடா!” என்றான் உதயன்.

அவன் முன் வந்து டீ கிளாஸை நீட்டியவன், “நீ ஏன் சொல்லமாட்ட? தேடாம திரியாம உனக்கு எழிலரசி கிடைச்சிட்டால அதான் நீ பேசுற. அவனவன் பொண்ணு கிடைக்காம எம்புட்டு லோல்பட்டுக்கிட்டு கிடக்கான். உங்க பெரியம்மா கூட சிவாவுக்கு இன்னும் பொண்ணு கிடைக்காம எங்கெல்லாம் சுத்துது தெரியுமா?” எனப் புலம்ப, உதய் டீயை ஊதி குடித்துக்கொண்டிருந்தான்.

“ஏண்ணே அவனுக்கு அப்பறம் எனக்கு தானே?” என மணி கேட்க, அவனை முறைத்த அழகன், “சைடு கேப்ல உனக்குத் துண்டு போடுற? உனக்கு என்ன கேடு, அவனுக்குத் தான் அப்பனாத்தா இல்லை வளர்த்த கிழவியும் முடியாம கிடக்கு, உனக்கு தான் எல்லாரும் இருக்காங்களே அது மட்டுமா உன் தங்கச்சிக்கு முடிக்காம உனக்கென்ன அவசரம்? போய் வேலைய பாருடா” என அவன் தலையில் தட்டினான் அழகன்.

உதயன் சிரிப்போடு அவர்களைப் பார்த்திருக்க அழகன் மூச்சு வாங்கியப்படி அமர்ந்தான். “யாருலே

அங்கன சுத்தப்படுத்துனது அரசமரத்தை எதுவும் வெட்டப்போறாங்களா?” என்றான் உதயன்.

“வெட்டுனாலும் வெட்டுவாங்க, புதுசா அந்த இடத்துல பஸ்டாண்டு கட்டப்போறாங்களாம், அது மட்டுமில்லை குடிதண்ணீர் பைப்லைன்னும் போட்டு ஐந்து வீட்டுக்கு ஒரு பைப்பையும் மாட்டிவிடப் போறாங்களாம்” என்றான் அழகன்.

“நல்லது தான், அப்படியே ஊருக்குள்ள யூசஸ் இல்லாத போர்வெல் எல்லாம் மூடிட்டு பைப்லைன் போட்டா ரொம்ப நல்லது. பத்து பதினஞ்சி வருஷம் முன்னாடி போட்ட போர்வெல் எல்லாம் தண்ணீர் மட்டம் குறைஞ்சி கீழ போனதுல பயன்பாடில்லாம அப்படி அப்படியே கிடக்கு, என் கிணறை தூர்வாரும் போது தோப்புல சும்மா கிடந்த இரண்டு போர்வெல்ல மூடிட்டேன். ஊருக்குள்ள கிடக்குறதெல்லாம் நானா மூட முடியும்?” எனப் புலம்பினான் உதயன்.

“சரி தான், வி.ஏ.ஓவுக்கு காலையிலே நம்ம கடையில தான் சாப்பாடு. நாளைக்கே சொல்லிடுறேன் மாப்பிள்ளை” என்றான் அழகன். ஏதோ ஊருக்கு நல்லது நடந்தால் சரி என நினைத்த உதயன் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

## அத்தியாயம் 24

மருத்துவமனையிலிருந்து திரும்பிய கரிச்சட்டி சைக்கிளில் வந்துகொண்டிருந்தான். எதிரே சுமோ ஒன்று வர, சாலையோரம் சைக்கிளை இறக்க, அதுவும் அந்த பக்கமாக நகர, அதில் மோதி கீழே விழுந்தான். உள்ளிருந்தவர்கள் கோபமாக இறங்கி வர, கரிச்சட்டியும் தட்டுத்தடுமாறி எழுந்தான்.

“ஏன்டா தடியா? கண்ணென்ன பின்னாடியா இருக்கு? நான் தான் இந்தப்பக்கம் விலகுறேனே நீ அந்த பக்கமா போக வேண்டிய தானேடா” எனக் கரிச்சட்டி கத்த, “விலகுற பரதேசி அந்த பக்கம் விலகணும்னு தெரியாதா?” என அவன் கேட்டான்.

“ஏய் யாரை பரதேசின்னு சொல்லுற? அசலூருக்காரன் உள்ள வந்துட்டு உள்ளூர்க்காரனை பேச என்ன தைரியம் இருக்கணும்?” எனக் கரிச்சட்டி சத்தமிட, மேலும் இருவர் காரிலிருந்து இறங்கி அருகே வந்தனர்.

அவர்களைப் பார்த்ததுமே எழிலரசியைக் கடத்த முயன்றவர்கள் தான் என நன்கு அடையாளம் கண்டுகொண்டான். இருவர் இவனை அடிக்க வர, “பல்லி மாதிரி இருக்கான் ஒரு அடிக்குத் தாங்க மாட்டேன் விட்டுங்கடா” என ஒருவன் உரைக்க, அதற்குள் கரிச்சட்டி மரியாதை இல்லாமல் பேசி சத்தமிட்டு அவர்களின் கோபத்தை ஏற்றினான்.

அவர்கள் நெருங்க, பாதை மறிக்கப்பட்டதால் கரிச்சட்டியின் பின் வந்த காரென்று சாலையில் நின்றது. காரிலிருந்து எட்டிப்பார்த்த ரெங்கநாதன் இவர்களைக் கண்டுகொண்டு இறங்கி வந்தார்.

“என்னடா நம்ம பையலோட பிரச்சனை பண்ணிக்கிட்டு?” என அவர்களைப் பார்த்துக்கேட்க, “வந்து இடிச்சதுமில்லாம மரியாதை இல்லாம பேசுறான் ஐயா” என எகிறினார்கள்.

ரெங்கநாதன் பேசுவதற்குள், “ஆமாம் மரியாதை கொடுக்க இவனுங்க ஜில்லா கலெக்டராக்கும், பிரியாணிக்கு வாலாட்டுற நாய்களுக்கு இது போதாது” என்றான் கரிச்சட்டி.

மூவரும் கோரஸாக குரல் கொடுக்க, அதற்குள் ரெங்கநாதன், “கருப்பா என்னலே இது? இவனுங்க ராஜாகிட்ட வேலை பார்க்குற ஆளுங்க” என்றார் அதட்டலாக.

“தெரியுமே கடத்தல் வேலை தானே?” என்றான் முகத்தைச் சுளித்துக்கொண்டு, ஆனால் அதில் ரெங்நாதன் குழம்பினார். ராஜா பணம் வசூலிக்க முடியாத இடங்களில் இவர்களை வைத்து மிரட்டி வசூலிப்பான் சில நேரங்களில் சிவாவும் செய்வான் ஆனால் கடத்தல் செய்வதில்லையே என எண்ணினார்.

“என்னடா உளறுற?” என மீண்டும் அவர் அதட்டலாகக் கேட்க, கரிச்சட்டி அவர்கள் முன்னே, அன்று எழிலைக்

கடத்துவதாக அவர்கள் பேசியதையும் தான் கேட்டதையும் உரைத்தான். அதிர்ந்த ரெங்கநாதன் அவன் சைக்கிளைத் தூக்கிக்கொடுத்து அனுப்பிவிட்டு கோபமுடன் அவர்களிடம் விசாரித்தார்.

முழுதாக நனைத்த பின் முக்காடிட்டு என்ன பயன்? உண்மை தான் என ஏற்றவர்கள் அது ராஜாவுக்குத் தெரியாது அனைத்தும் சிவாவின் திட்டம் யாரிடமும் சொல்லக்கூடாது என்பது அவன் கட்டளை என்றனர். அவர்களை அனுப்பியவர் வீட்டிற்கு போன் செய்து மனைவியிடம் சிவாவைப் பற்றி விசாரிக்க, அவன் தென்னந்தோப்பில் இருப்பதை அறிந்து கொண்டு கோபமுடன் அங்குச் சென்றார்.

வேலையாட்கள் பெரும்பாலும் வேலை முடிந்து சென்றிருக்க, இரண்டு மூன்றுபேர் கிணற்றடியில் முகம் கைகால்கள் கழுவிக் கிளம்பிக்கொண்டிருந்தனர். ரெங்கநாதன் விறுவிறுவென உள்ளே வந்தார்.

“ஏன்ப்பா என் கால் எதுக்கு அட்டென் பண்ணவேயில்லை?” எனச் சிவா கேட்டுக்கொண்டிருக்க, அவனை நோக்கி கோபமாக வந்தவர் கீழே கிடக்கும் தென்னை மட்டையை எடுத்து அடிக்கத் தொடங்கினார்.

“ஏன்டா நீயெல்லாம் மனுஷனாடா? எனக்கு இப்படியொரு மகன் இருக்குறதுக்கு இல்லாமலே இருக்கலாம், நீ என்ன செஞ்சாலும் கண்டுக்காம செல்லமா விட்டது தப்பாபோச்சு, நம்ம குலசாமியே கன்னிதெய்வமடா அப்படியிருக்க நீ எப்படிடா இவ்வளவு பெரிய காரியம் செஞ்ச?” என அடித்து வெளுத்தார்.

“என்னன்னு சொல்லிட்டு அடிப்பா?” என்றபடி அவன் தடுக்க முயற்சிக்க, “உதயன் பொண்டாட்டியை எதுக்குடா கடத்த நினைச்சே? இப்படி தான் வளர்த்தோமா உன்னை?” எனக் கேட்டவர் மேலும் அடித்து நொறுக்கினார்.

“அவன் பொண்டாட்டியை இல்லை, எழிலரசியைத் தான். அதுவும் தப்பான நோக்கத்துல இல்லை, அவளை விரும்புனேன் கல்யாணம் பண்ணிக்கதான் கடத்த நினைச்சேன்” என அவன் நியாயம் உரைத்த போதும் ஏற்காமல் அவர் அடிக்க, அதற்குள் அங்கிருந்த ஆட்கள் வந்து ரெங்கநாதனை பிடித்துத் தடுத்தனர்.

அவர்கள் குடும்பத்தைப் பொறுத்தவரை பெண்களை மகாலட்சுமியாக மதிப்பவர்கள், குலதெய்வமாக வணங்குபவர்கள். அபிராமியெல்லாம் முழு சுதந்திரத்தோடும் பண்போடும் வளர்க்கப்பட்டவள். ஆகையால் ரெங்கநாதனை பொறுத்தவரை ஒரு பெண்ணை கடத்த நினைத்தது கொலைக்குற்றத்தை விட பெரிய பாவம்!

அனைவரும் சென்றுவிட, முகம் கைகால்களில் சிராய்ப்புடன் மண்தரையில் அமர்ந்தான் சிவச்சந்திரன். மனமானது வேதனையில் விம்பிக்கொண்டிருந்தது. எப்போதும் தங்களைப் பெருமையாய் நினைக்கும் பெற்றவர் இன்று அற்பமாய் நினைத்து வேலையாட்கள் முன் அடித்தது அவமானமாய் தோன்றியது. அவனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை, கண்கள் இரண்டும் கலங்கி கண்ணீர் வந்தது.

தவறு செய்துவிட்டோமோ என மனம் வருந்த, எழிலை உண்மையாய் நேசித்து திருமணம் செய்ய முயன்றதைத் தவிர என்ன தவறு செய்துவிட்டாய் என்றது அறிவு! இரவான போதும் வீட்டிற்குச் செல்லாமல் அங்கிருந்த கட்டிலில் காயத்தோடு படுத்திருந்தான். வெட்டவெளியும் இரவு வானமும் தனிமை நிலவும் அவனைக் கண்டு அனுதாபப்படுவது போன்றிருந்தது.

ரெங்கநாதனுக்குப் பின் நான் தான் அவர் அரசியல் வாரிசு என்ற எண்ணம் சிவாவிற்கு உண்டு. ஆகையால் வேலையாட்கள், ஊர் மக்கள் முன்பு பெரிய மனிதன் தோரணையில் அதட்டல், மிரட்டலோடு தான் சுற்றிவருவான். எழிலிடம் பிரச்சனை செய்யும் போதும்

தனிமையில் பிரச்சனை செய்தானே தவிர, பிறர் பார்க்க தன் கௌரவத்துக்குக் குறைவாக ஒரு போதும் நடந்து கொண்டதில்லை.

ஆனால் அன்று எழில் பார்க்க உதயன் அடித்தது, இன்று வேலையாட்கள் பார்க்கத் தந்தை அடித்தது இரண்டுமே சிவாவிற்குப் பெரிய அவமானமாகத் தெரிந்தது. இனி அனைவரும் தன்னை கேவலமாகப் பார்ப்பார்களே தன் மரியாதையைத் தொலைந்துவிட்டதே என வருந்தினான். அன்று எழிலிடம் என்னவோ சாவல் விட்டுவிட்டானே தவிர அவனால் உதயனை ஒன்றும் செய்ய இயலாது, ரெங்கநாதனும் விட மாட்டார். உதயனை வீழ்த்துவதென்றால் அன்றே எழிலைக் கடத்த முயன்றதிற்குப் பதில் உதயனை வீழ்த்தியிருப்பானே!

உதயனை எதுவும் செய்யமுடியாது போக, அவனும் எழிலும் தம்பதிகளாகக் கோவில், சினிமா எனச் சென்று வருவதையும் விசேஷ வீடுகளில் முன் நிற்பதையும் காணச் சகிக்காது வேதனை கொண்டான். விடியும் வரை அதையே நினைத்து வருந்தியவன் விடிந்ததும் அரை இருளில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் யார் முகத்தையும் பார்க்காமல் மதுரைக்குக் கிளம்பினான். ஊரைத் தாண்டி தோப்பு வழியாகச் சென்று கொண்டிருந்தவன் பண்ணைவீட்டு வாசலில் எழிலில் கோலமிடுவதைத் தொலைவில் சாலையில் நின்று ஒரு நொடி பார்த்துவிட்டு கனத்த மனதுடன் கிளம்பினான்.

இரண்டு நாட்களாக மகனைக் காணாது பரமேஸ்வரி புலம்பிக்கொண்டிருக்க, ரெங்கநாதனுக்கு தேட வேண்டுமெனத் தோன்றாது கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார். ராஜாவின் வீட்டில் பவித்ராவின் பெற்றவர்கள் இருக்க, அங்குச் செல்லவே மனமின்றி அவன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றான் சிவச்சந்திரன்.

ராஜாவோ அவன் கல்லூரி தொடங்குவதற்கான ஆணைகள் கிடைத்துவிட்டதாகவும், அங்கு சென்று கட்டிட வேலைகளை ஆரம்பிக்க வேண்டும், இங்கு பள்ளியிலும் வேலைகள், வீட்டில் மகனுக்கு

பெயர்சூட்டு விழாவை விமர்சையாக செய்ய வேண்டுமென்று பவித்ரா ஆசை கொண்டதால் அந்த வேலைகள் என பெரும் வேலைப்பளுவில் இருப்பதாகப் புலம்பினான்.

சிவா தான் பழனி சென்று கட்டிட வேலைகளைக் கவனித்துக்கொள்வதாகவும் அன்னையிடம் தெரிவித்துவிடும்படியும் உரைக்க, ராஜா இன்னும் நேரமிருக்கிறது அடுத்தவராம் சென்றால் போதும் என்று சொல்லியதைக் காதில் வாங்காது அப்போதே பழனிக்கு கிளம்பிவிட்டான். ஆறேழு மாதங்கள் வேலை முடியும் வரை அங்கிருந்து கவனித்துக்கொள்ள வேண்டும்.

முன் மாலை நேரம் உதயன் தலை வாரிக்கொண்டிருக்க, அறைக்குள் வந்த எழில், “என்னங்க, பவியக்கா கால் பண்ணாங்க வர வெள்ளிக்கிழமை பையனுக்குப் பெயர் வைக்கப்போறாங்களாம் நம்மள இன்வைட் பண்ணாங்க” என்றாள்.

அன்று மருத்துவமனையில் சந்தித்து வந்த பின் பவித்ராவிற்கும் எழிலரசிக்கும் இடையில் நல்ல நட்பு உருவாகியிருந்தது. அபிராமியை விட அதிகமாக பவித்ராவுடன் நெருங்கியிருந்தாள் எழில்.

“சரிம்மா. இன்னைக்கு ஏதோ ஊர்க் கூட்டமாம் திருவிழா பத்தி பேசப்போறாங்களாம் அழகன் வரச்சொன்னான். நான் ஊருக்குள்ள போயிட்டு வரேன்” எனக் கிளம்ப, அவன் பின்னே வந்தவள், “அம்மாவை பார்க்கணும், நானும் வரேன். என்னை வீட்டுல விட்டுங்க” என்றாள்.

சரியென அவளையும் உடன் அழைத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுக் கிளம்பினான். திருவிழா, ஊரின் மற்ற முக்கிய முடிவுகளும் ஊர்க் கூட்டம் கூட்டி அனைவரிடமும் கருத்துக்கேட்ட பின் தான் முடிவுகள் எடுக்கப்படும். கோவில் மண்டபத்தில் நடக்கும் கூட்டத்தில் வீட்டிற்கு ஒருவராவது கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும்.

சிவாவின் ஆட்கள் அவன் சொல்லியனுப்பிய இடங்களிலெல்லாம் காளியைத் தேடினர். இறுதியில் அரை போதையில் ஒரு உணவகத்தில் உணவு உண்டுகொண்டிருந்தவனைக் கண்டதும் அப்படியே தூக்கி வந்தனர். சிவாவின் தோப்பிற்கு அழைத்துச் சென்றவர்கள் அங்கு அவன் இல்லை என்பதை அறிந்து ரெங்கநாதனிடம் அழைத்துச் சென்றனர். பணம் விஷயமாகத் தானே விசாரிக்க வேண்டும் சிவா இல்லையெனில் ரெங்கநாதன் விசாரித்துக் கொள்ளட்டும் என நினைத்தனர்.

ஊர்க் கூட்டத்திலிருந்த ரெங்கநாதன் கோவில் மண்டபத்தில் இருக்க, அவர் வரும்வரை கோவில் மரத்தடியில் காரில் அமர்ந்தவாறு காத்துக்கொண்டிருந்தனர் அனைவரும். எழிலோடு வந்த உதய் பைக்கை அதே மரத்தடியில் நிறுத்தினான்.

“எழில் ஒரு ஐந்து நிமிடம் இங்கே நில், நான் கூட்டத்துக்கு போயிட்டு வந்திடுறேன்” என்க, “இல்லைங்க! பக்கம் தானே எங்கம்மா வீடு, நடந்தே போயிடுவேன்” என அவள் மறுத்தாள்.

“நிழலில் நில்லேன், ஐந்து நிமிடத்துல வந்து கூட்டிட்டு போறேன்டி” என்றான் அவள் நடந்து செல்வதில் விருப்பமில்லாமையால். அவளும் பொது இடம் என்பதால் அதற்கு மேல் வாதாடாது ஒரு முறைப்புடன் சரியெனத் தலையாட்டினாள்.

அருகே நின்றுகொண்டிருக்கும் காரை கடந்து சென்றவன் எதிர்ச்சியாகப் பார்க்கையில் காரில் அமர்ந்திருந்த காளியை கண்டான், அன்று சந்தேகம் வந்த நாளிலிருந்து டவுனுக்கு சொல்லும் போதெல்லாம் காளி தேடிய உதயன் இன்று தேடாமலே கண்முன் கண்டான்.

கதிரின் இறப்பு பற்றிய தகவலாவது இவனுக்குத் தெரிந்திருக்கும் என்று தோன்ற, சட்டென கார் கதவைத் திறந்தவன் அவன் சட்டையைப் பற்றி வெளியே இழுத்தான். இழுத்த வேகத்திற்கு அவன் மேலே வந்து விழ, அருவருப்போடு அவனை விலக்கி,

“அன்னைக்கு எதுக்கு என்னை பார்த்துட்டு பார்க்காத மாதிரி போன? சொல்லுடா” என உலுக்கினான்.

உதயனைப் பார்த்ததும்  உடலெல்லாம் நடுங்க, சற்றே தெளிந்து  நிமிர்ந்தவன் அவன் கைகளில் இருந்து சட்டையை உருவிக்கொண்டு ஓட முயற்சிக்க, அதற்குள் சிவாவின் ஆட்கள் அவனை வளைத்துப் பிடித்தனர். அவன் செயலில் சினம் கொண்ட உதயன் அவனைப் பிடித்திழுத்து அடிக்கத் தொடங்கினான்.

அதைக் கண்ட எழில் ஓடி வர, சிவாவின் ஆட்கள் உதயனை விலக்க முயற்சிக்க, இந்த கலவரத்தின் சத்தத்தில் சற்றே தொலைவிலிருந்த ஊர்மக்கள் கூட்டம் மொத்தமும் இவர்களை நோக்கி வரத் தொடங்கியது.

கதிரின் கொலைக்கு தன் வீட்டாள்களும், தன் வீட்டு வேலையாளான காளிக்கும் சம்மந்தம் இருக்கலாம் அல்லது அது பற்றிய தகவலாவது இவன் அறிந்திருக்கலாம் என்பதே உதயனின் எண்ணமாக இருக்க, “கதிரை என்னடா செஞ்ச? சொல்லுடா” என்றபடி அவனை அடிக்கத் தொடங்கினான்.

சண்டையில் உதயன் மீது கை வைத்துவிடுவார்களோ என்ற பயத்தால் தடுக்க நினைத்து இடையில் வந்த எழில் அவன் கைகளைப்பற்ற, இருந்து கோபத்தில் யார் பற்றினார்கள் என்பதைக் கவனிக்காது தட்டிவிட்டவன் காளியிடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அதில் அவள் தடுமாறி விழப்பார்க்க, அருகிலிருந்த கோவிந்தசாமி சட்டென மகளைத் தாங்கிப்பிடித்தார். ரெங்கநாதன், அழகன், பெரியமீசை முன்னே நிற்க, மொத்த ஊரும் அவர்களைச் சுற்றி நிற்க, அதற்குள் விஷயம் அறிந்து சுந்தரியும் வீட்டிலிருந்து ஓடி வந்தார்.

ரெங்கநாதன் அவர் ஆட்களிடம் உதயனின் கைகளிலிருந்து காளியை இழுக்கும் படி உரைக்கவும் அவர்கள் இருவரையும் பிரிக்க, கோவிந்தசாமி கூட்டத்திலிருந்து எழிலை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்ல முயற்சித்தார். உள்ளே வந்த சுந்தரி, மகளைப் பற்றிக்கொண்டு உதயனை

விலக்கிவிடும்படி கோவிந்தசாமியை முன்னே தள்ளினார்.

கோவிந்தசாமி உதயனைப் பற்றி இழுக்க, கோவிந்தசாமியை அப்போது தான் கண்ட காளி, “அடேய் கோவிந்தா தப்பு செய்யும் போது கூட்டாளியா கூட இருந்துட்டு இப்போ உன் மாப்பிள்ளை அடிக்கும் போது வேடிக்கை பார்க்குறீயா? துரோகி” என்ற காளி கத்த, உதயன் முதல் அனைவரும் அதிர்ந்தனர்.

“போதையில என்ன உளறுற?” என உதயன் கேட்கும் போதே, “நீ எதுக்குடா அவனை அடிக்கிற?” என உதயனிடம் கேட்ட ரெங்கநாதன் தனது ஆட்களிடம் கண்ஜாடை காட்டி காளியை அருகே இழுத்து, “என்ன தப்புடா செஞ்சிங்க?” என்றார் அதட்டலாக.

“ஐயா என்னை மன்னிச்சிடுங்க, கதிர் இறந்ததுக்கு நாங்க தான் காரணம்” எனக் காளி ரெங்கநாதன் முன் குனிந்தபடி உரைக்க, கேட்டுக்கொண்டிருந்த அனைவருமே அதிர்ந்தனர். உதயன் உறைந்து போய் நிற்க, எழிலுக்குச் சுற்றும் பூமியோடு தானும் சுற்றுவது போன்றிருந்தது. அனைவரை விடவும் அதிகம் அதிர்ச்சியடைந்திருந்தது குணசுந்தரி தான்.

கருமையான இருள் நிறைந்த இரவு நேரம். கூர்மையான கற்கள் பெயர்ந்து கிடக்கும் தரமற்ற, கவனிப்பற்ற பரிதாபமான சாலை.
எட்டுமணிக்கெல்லாம் கிராமத்தில் வீட்டின் கதவுகள் அனைத்தும் அடைபட்டு விடும், அதிகாலை சூரியன் எழும் முன்னே எழுந்து வேலை செய்யத் தொடங்கிவிடும் மக்கள் அசதியில் இரவு எட்டு, ஒன்பது மணிக்கெல்லாம் படுத்து விடுவர். அதன் பின் ஊருக்குள் ஆட்கள் நடமாட்டமானது முற்றிலுமில்லை.

இரவு பதினோரு மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில் ஊர் திரும்பினான் கதிர். காலையில் தேர்தலில் நிற்க வேண்டாம் என எழில் வேண்ட, முடியாது என முகத்தில் அடித்தது போன்று மறுத்து விட்டதில் எழில் வாடினாளோ இல்லையோ கதிர் கவலை கொண்டான்.

அவனிடம் எழில் கோபம் கொள்வதே இல்லை, எப்போதும் ஒரு மரியாதையோடு நடந்து கொள்பவளுக்கு தன் செயல் கண்டிப்பாகக் காயத்தைக் கொடுத்திருக்கும் ஆனால் காட்டிக்கொள்ள மாட்டாள் என அறிந்திருந்தவன் அவளைச் சமாதானம் செய்வதற்காக அவளுக்கு பிடித்தமான ஸ்வீட் வாங்கி வந்திருந்தான்.

அதே நேரம் சந்தையில் இறக்க வேண்டிய தேங்காய் லோடை இறக்கி விட்டு, உணவகத்தில் இரவு உணவை முடித்தட்டுவிட்டு டாட்டா ஏசி லோடு வண்டியில் ஊருக்குக் கிளம்பினான் காளி.

தனது மெக்கானிக் சொட்டிற்குத் தேவையான சில பொருட்களை வாங்க வந்திருந்த கோவிந்தசாமி வாங்கிவிட்டு வர, ஊருக்கு செல்லும் கடைசி பேருந்தை தவற விட்டிருந்தார்.

பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த கோவிந்தசாமியைக் கண்டு கொண்ட காளி வண்டியை நிறுத்தி ஊருக்குத் தான் செல்கிறேன் ஆகையால் உடன் வருமாறு அழைத்துக்கொண்டான்.

சற்று தூரம் சென்றதுமே தன் மூக்கால் மோப்பம் பிடித்த காளி, கோவிந்தசாமி வைத்துள்ள பாட்டில்களைக் கண்டுகொண்டான். மெல்லப் பேசி பாட்டிலைக் கேட்க, அவரோ ஊரில் சென்று குடித்துக்கொள்ளாம் என மறுக்க, காளி பிடிவாதமாகக் கேட்கவில்லை. இருவரும் பங்கிட்டுக் குடித்துவிட்டு போதையில் கிளம்பினர்.

கதிர் ஊர் எல்லையை நெருங்கி வந்து கொண்டிருக்க, திடீரென அவன் வண்டி பழுதாகி நின்றது. சாலையோரம் நிறுத்தியவன் இறங்கி என்னவென ஆராய்ந்து கொண்டிருந்தான். சற்றே குறுகலான சிறிய சாலை, அதன் இருபுறங்களிலும் மழைநீர் ஆற்றில் சென்று கலக்க இருக்கும் பெரிய ஓடைகள். அந்த நேரத்தில் நீரோட்டம் இல்லை ஆகையால் அதுவும் பராமரிப்பின்றி, கற்களும் முட்செடிகளும் புதராக மண்டிக்கிடந்தது.

கதிர் வண்டியை ஆராய்ந்து கொண்டிருக்க, மஞ்சள் ஒளியோடு நிலையில்லாது தடுமாறியபடி வந்த அதே டாட்டா ஏசி வண்டியொன்று நொடி நேரத்தில் கதிரின் மீது மோதிவிட்டு நில்லாமல் சென்றுவிட்டது. வண்டியை ஓட்டி வந்த காளி வேகமாக வந்து நிறுத்தியது தற்போது உதயன் இருக்கும் மாந்தோப்பு பண்ணை வீட்டில் தான்.

“அடேய் எவனையோ வண்டிக்காரனை அடிச்சிட்டு நீ பாட்டுக்கு வந்திட்டடா? வா திரும்பிப் போய் பார்த்துட்டு வருவோம்” என கோவிந்தசாமி அரைப் போதையில் அழைக்க, “இங்கிருந்து நீ வீட்டுக்கு போ அண்ணே, எல்லாத்தையும் நான் பார்த்துகிறேன்” எனக் காளி முழு போதையில் உளறினான்.

அப்போதும் கோவிந்தசாமி செல்லாமல் அவனைத் தெளிய வைக்க முயற்சிக்க, அவனோ தான் சென்று பார்த்துக்கொள்வதாகவும் அவரை செல்லும்படியும் கட்டாயப்படுத்தி வீட்டிற்கு அனுப்பி விட்டு வண்டியிலே படுத்துவிட்டான்.

இருட்டில் யார் மீதோ மோதியது தான் தெரியுமே தவிர, அவன் யாரென்றோ அவன் நிலையென்ன என்றோ இருவருக்கும் தெரியாது. விடிவதற்கு சற்று முன்பே விழித்துவிட்ட காளி வண்டியில் இரத்தத்தைப் பார்க்கவும் அதிர்ந்தான். அதை விடவும், போலீஸ் கேஸ் எனப் பயம் பற்றிக்கொண்டது.

வேகவேகமாக வண்டியைத் துடைத்துவிட்டு, விடியும் முன்னே வேலுமாணிக்கத்தின் வீட்டிற்குச் சென்று சாவியைக் கொடுத்துவிட்டு அவசரமாக தன் மனைவி அழைத்ததாகவும் மாமியார் வீட்டிற்குச் செல்வதாகவும் கூறியவன் ஊரைவிட்டே ஓடிவிட்டான். விடிந்த பின்னே கதிருக்கு விபத்து என ஊருக்குள் செய்தி பர, அனைவரும் அவன் நிலையை நினைத்து வருந்தினர்.

விஷயம் அறிந்ததும் கோவிந்தசாமிக்கு இதயமே வெடித்துவிட்டது போன்று வழித்தது. தான் வளர்த்த கதிரின் இறப்பிற்கு தானே காரணமாகியதை நினைத்து பெரிதும் வருந்தினார். ஏற்கனவே அழுது

கரைந்து கொண்டிருக்கும் மனைவி மகளிடம் சென்று உண்மையை உரைக்கவும் முடியாது வெம்பினார்.

ஊர் மக்கள் அனைவருக்கும் உதவும் கதிருக்கா இந்நிலை என நினைத்த அனைவரும் கலங்கினர். மொத்த ஊரும் அவனுக்காகக் கலங்கி கண்ணீர் விட்டனர் அன்று. ஆனால் இன்றும் அனைவரின் நினைவிலும் நீங்காது நிலைத்து நின்றான்.

பொறுப்பற்ற குடிமக்கள் இருவரின் அலட்சியமும், அரசாங்கத்தின் தரமற்ற சாலையும் வாழவேண்டிய ஒரு நல்லவனின் உயிரைப் பறித்தது!

## அத்தியாயம் 25

ரெங்கநாதன் கேட்டதும் பம்மியபடி அனைத்தையும் உளறிவிட, “களவானி பயலே, செய்கிறதைச் செஞ்சிட்டு ஊரை விட்டு ஓடி ஒளியிறையாக்கும்” எனக் காளியின் கன்னத்தில் அறைந்தவர் உதயனின் பக்கம் திரும்பினார்.

உதயன் குடும்பத்தை விடவும் அதிகம் பாசம் கொண்டது கதிர் மீது தான். தந்தை இழப்பை விட அதிகம் பாதித்ததும் கதிரின் இழப்பு தான். என்ன தான் எழில் அவன் குடும்பத்திற்கு எதிராகச் செயல்படத் தூண்டினாலும் அவன் எதிர்த்ததுக்கு முக்கிய காரணம் கதிரின் மீதான பாசம் தான். எத்தனை நட்புகள் இருந்தாலும் கதிருடனான நட்பு உதயனுக்கு உயிர்மூச்சு போன்றது. கதிரின் இழப்பிற்குக் காரணம் சிவாவோ, ரெங்கநாதனோ என நினைத்திருக்க கோவிந்தசாமி தான் என அறிய வந்ததும் அவனால் ஏற்கமுடியவில்லை. தன் வீட்டாள்களை எதிர்த்தவன் கோவிந்தசாமி என்னும் போது மட்டும் எவ்வாறு எளிதாக விடுவான்.

காளி தான் கதிரின் இறப்பிற்குக் காரணமாக இருப்பான் என நினைத்து அடித்த உதய் உண்மை என்னவென்று அறிந்ததும் தாங்கமுடியாது தவித்து நின்றான். என்ன செய்யப்போகிறாய் என்ற ரெங்கநாதனின் பார்வையை உணர, “விடியவும் போய் கம்பிளைன்ட் கொடுக்கப்போறேன்” என உறுதியான

குரலில் உரைத்தவன் தன்னை பற்றியிருந்த கோவிந்தசாமியின் கைகளை விலக்கி விட்டான்.

“சரி. டேய் இவனை நம்ம பண்ணைவீட்டுக்கு கூட்டிவிட்டுப் போய், பார்த்துக்கோங்கடா” எனக் காளியைக் குறித்து தன் ஆட்களிடம் உரைத்த ரெங்கநாதன் அனைவரும் அனுப்பிவிட்டு அவரும் நகர்ந்தார்.

உதய் தன் அருகே நின்று கொண்டிருந்த கோவிந்தசாமியை அற்பமாய் பார்த்தான். வேறு யாராக இருந்திருந்தாலும் அடித்து நொறுக்கியிருப்பான் ஆனால் அவர் வயதின் மீதிருந்த சிறு  மரியாதை அவனைத் தடுக்க விலகினான். எழில் சிலையாய் நிலையாக நின்றிருந்த போதும் அவள் கண்களில் வழிந்த கண்ணீர் அச்சிலைக்கு உயிர் உண்டு என உரைத்தது.

அவளை நெருங்கிய உதய் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு, “ஏதா இருந்தாலும் வீட்டுல போய் பேசிக்கலாம் வாங்க” என அருகில் இருக்கும் சுந்தரியையும் அழைத்துவிட்டு, எழிலின் கரம் பற்றியபடி நகர்ந்தான்.

விரைந்து குணசுந்தரியின் முன் வந்து நின்ற கோவிந்தசாமி, “என்னை மன்னிச்சிடு சுந்தரி, நீ குடிய விட்டுன்னு சொல்லும் போதும், எங்கிட்ட சண்டை போடும் போதும் புரியலை, ஆனால் நம்ம பிள்ளைய இழக்கவும் தான் புரியுது எவ்வளவு பெரிய தப்பு செஞ்சிருக்கேன்னு, அதை விடவும் இவ்வளவு நாளும் இதை வெளிய சொல்ல முடியாம மனசுக்குள்ள வைச்சு குற்றவுணர்வுல செத்துக்கிட்டு இருந்தேன். எனக்கு அன்னைக்கு அது கதிர் தான்னு தெரியாது, விடியவும் தான் தெரிஞ்சது. முதலையே தெரிஞ்சிருந்தா எப்படியாவது அவனை காப்பாத்திருப்பேன். அதுக்காக செஞ்ச தப்பை நியாயப்படுத்திக்க விரும்பலை, வருந்தி மன்னிப்புக்கேட்குறேன் மன்னிச்சுட்டேன்னு ஒருவார்த்தை சொல்லேன்” என வேண்டினார்.

ஆனால் அவர் கெஞ்சல் எதுவும் கல்லாய் மாறிய சுந்தரியின் மனதைக் கரைக்காது போக, அக்கினிப்

பிளம்பாய் வெடித்தார். “நீ செஞ்ச தப்புக்கு மன்னிப்பாய்யா வேணும்? தப்பு செஞ்சா மன்னிக்கலாம் பாவம் பண்ணிட்டு வந்தா எப்படி மன்னிக்க முடியும்! கடவுள் தான் தண்டனை கொடுக்க முடியும். ஆனாலும் உனக்குக் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லையயா? அப்பனாத்தா இல்லாம அவன் தவிச்சி நின்ன போது சொத்து இருக்கு, வீடு இருக்குன்னு கைக்குழந்தையோட என்னை கூட்டிட்டு வந்தீரு, நீ குடும்பத்துக்கு என்னைக்காவது சம்பாதிச்சி கொடுத்திருக்கைய்யா?

விவரம் தெரிஞ்சதுல இருந்து அவன் தான் குடும்பத்தை பார்த்துக்கிட்டான், எழிலையும் படிக்க வைச்சான். உன் சம்பாத்தியத்துல குடிச்சது போக அவன்கிட்டையும் காசு வாங்கிக் குடிச்ச ஆளுதானையா நீ? உங்கிட்ட சண்டை போட்ட போதெல்லாம் உனக்கு தானையா சப்போர்ட் செய்வான், அவனைப் போய் கொல்ல எப்படியா மனசு வந்தது கொலையார மனுஷா? அன்னைக்கு அவனுக்குப் பதில் நீ செத்திருந்தா கூட தாலி அறுத்துட்டு தலைமொழுகிட்டு பிள்ளைக சந்தோஷமா வாழுறதை பார்த்து நானும் சந்தோஷமா இருந்திருப்பேன். ஆனால் இப்போ எனக்கும் தீராத குற்றவுணர்ச்சியை கொடுத்துட்டீயே? ச்சே!” எனக் கத்தியவர் விறுவிறுவென வீடு நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அதிர்ந்து பார்த்துக்கொண்டிருந்த எழிலும் உதயனும் கோவிந்தசாமியை ஒரு பார்வை பார்த்துவிட்டு சுந்தரியின் பின்னேச் சென்றனர். ஒரு கணவனாகக் கேட்கக்கூடாத வார்த்தைகளை மனைவியின் வாயிலிருந்து கேட்ட பின் உயிர் வாழ்வதும் வீண் என்ற வேதனையோடு தனித்து நின்று கொண்டிருந்தார் கோவிந்தசாமி.

லேசான இருள் சூழ்ந்திருந்த நேரம் தற்போது முற்றிலும் வெளிச்சம் விலகி இருளாய் இருந்தது. மூவருமே மனம் கனக்க வீடு வந்தனர். அனைவரும் கதிரின் நினைவில் அமிழ்ந்திருக்கும் நிலையில் யாருக்கு யார் ஆறுதல் செல்வது? சுந்தரி திண்ணையிலே அமர்ந்துவிட, எழில்

ஹாலில் அமர, மாடிக்குச் சென்ற உதயன் சட்டையை மாற்றிவிட்டு அவன் படுக்கையில் படுத்தான்.

இந்த உண்மைகள் தெரியாமலே இருந்திருந்தால் இந்த நாள் இவ்வளவு கடிமாக இருந்திருக்காது. சுந்தரியும் உதயனும் கதிரை எண்ணியிருக்க, எழில் மட்டும் தந்தையும் கதிரையும் நினைத்து இரு மனதாக தவித்துக்கொண்டிருந்தாள். இப்போ நினைத்துப் பார்த்தால் தந்தையின் நடத்தையில் இருந்த மாறுதல்கள் புரிந்தது. கதிர் இறந்த பின் கோவிந்தசாமி குடிப்பதை முற்றிலும் விட்டிருந்தார். தினமும் காலையிலும் மாலையிலும் கதிரின் புகைப்படத்தின் முன் சில நிமிடங்கள் நிற்பார். தன் தந்தையின் மீது தவறு இருக்க அதை அறியாது உதயனின் மீதும் அவன் மொத்த குடும்பத்தின் மீதும் கோபம் கொண்டு அவனையும் படுத்திவிட்டோமே என்ற குற்றவுணர்வும் தோன்றி மனம் பாரமானது.

தங்கமகள் எனச் சீராட்டிய தந்தையும், தன் தேவைகளை நிறைவேற்றி வளர்த்த கதிருமென என இருபக்கமாய் மனம் ஊசலாடியது. தந்தையின் தவறை ஏற்கமுடியவில்லை. அவரை மன்னிக்க முடியவில்லை தான் அதற்காக முற்றிலும் தவிர்த்திட அவளால் இயலாது. நீண்ட நாட்களுக்குப் பின் தன் கண்ணீரின் ருசியறிந்தாள் எழில். சுந்தரியோ அதையும் விட இறுகிப்போய் இருந்தார்.

நேரம் சென்றதே தெரியவில்லை, சில மணி நேரங்களில் அவர்கள் வீட்டிற்கு ஓடி வந்தான் வினோத். வாசலிலிருந்த சுந்தரியும் எழிலும் திரும்பியும் பாராமலிருக்க, உதயனிடம் ஓடினான்.

“உதய் அண்ணே, கோவிந்தமாமா நெஞ்சுவலியில துடிக்கிறாரு. வாங்க அண்ணே” என அவனைத் தட்டி அழைத்தான்.

பதறி எழுந்த உதய், “எங்கடா?” என்க, “நம்ம அரசமரத்தடி மணல்ல தான் படுத்திருக்காரு, அழகண்ணே போய் பார்க்கும் போது நெஞ்சுவலியின்னு சொன்னாராம்” என்றான்.

சமீபகாலமாக உயிரின் அருமையும், உறவுகளின் தேவையும் நன்கு உணர்ந்திருந்தான். அவர் தவறை ஏற்கமுடியாத போதும் அவர் மீது அக்கறை இருந்தது உதயனுக்கு. பயத்தோடு ஒரு பதற்றமும் பற்றிக்கொள்ள, “நீ போய், எங்க பெரியப்பாக்கிட்ட சொல்லி கார் எடுத்துட்டு வா, நான் போய் என்னன்னு பார்க்குறேன்” என்றவன் வினோத்தோடு விரைந்து வெளியேறினான்.

அப்போதும் சுந்தரியும் எழிலும் கண்டுகொள்ளாமல் இருக்க, இந்த இரவில் அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று உதயனும் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டான். வினோத் பெரிய வீடு நோக்கிச் செல்ல, உதயன் பேருந்து நிறுத்த அரசமரத்தடிக்கு விரைந்து வந்தான். பேருந்து நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு கொட்டப்பட்டிருந்த மணலில் கோவிந்தசாமி படுத்திருக்க அவர் அருகில் கரிச்சட்டியும், மணியும் இருந்தனர்.

உதயனைப் பார்த்தும், “இராத்திற்கு இரண்டு இட்லி சாப்பிடச் சொல்லாம்ன்னு பார்க்க வந்தேன், அவர் என்னடான்னா நெஞ்சுவலியில துடிச்சிக்கிட்டு இருக்கார். நான் வாரத்துக்கு முன்னாடி எவ்வளவு நேரம் துடிச்சிகிட்டு இருந்தாரோ? பாவம்டா மனுஷன்” என்றான் அழகன்.

உதயன் பதில் பேசாது கோவிந்தசாமியை ஒரு நொடி பார்த்தான். கதிரும் இதுபோல் தானே யாரும் கவனிக்காமல் ஆதரவற்ற நிலையில் துடித்திருந்திருப்பான் எனத் தோன்றியது. நல்லவனோ கெட்டவனோ மனிதனோ மிருகமோ ஒரு உயிர் துடிக்கப் பார்த்துக்கொண்டிருப்பது மனிதத் தன்மையற்ற செயல் தானே!

பாசத்தைத் தாண்டியும் அவர் மீது மனிதநேயம் தோன்ற, விரைந்து சென்று தூக்கினான். அழகனும் உதவிக்கு வர, அதற்குள் வினோத்தும் கார் எடுத்து வந்துவிட தூக்கிக்கொண்டு மூவருமாக மருத்துவமனைக்கு விரைந்தனர்.

மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்து விட்டு இரவெல்லாம் அங்கு தான் இருந்தனர். காலையில் அழகனும் வினோத்தும் ஊர் திரும்பிவிட, உதய் உடன் இருந்து கவனித்துக்கொண்டான். காலையில் வெகு நேரத்திற்கு பின்னே உதயனைக் காணாது எழில் தவித்திருக்க, ரெங்கநாதன் வீட்டில் காரை விட்டு வந்த வினோத் எழிலிடம் தகவல் சொல்லிவிட்டு சென்றான்.

தவறு செய்த போதும் பெற்றவரின் மீது ஈரமண் போலே சிறு பாசம் ஒட்டிக்கொண்டிருக்க, எழில் கலங்கினாள். ஏற்கனவே ஒரு இழப்பைக் கண்ட வீட்டில் மற்றொரு இழப்பைத் தாங்கும் சக்தி இல்லை. எழிலுக்கு மனம் அடித்துக்கொண்டிருந்தது, உதயனின் எண்ணிற்கு அழைத்தால் அழைப்புகள் ஏற்கப்படவில்லை. வினோத்திடம் கேட்டால் மாலை தான் செல்லும் போது உடன் அழைத்துச் செல்வதாக அறுதல் கூறினான்.

அவளோ தந்தையின் நிலையறியாது தவித்து நின்றாள். வினோத் உரைத்ததையும், எழிலும் தவிப்பையும் கண்டுகொண்ட போதும் சுந்தரி சிறிதும் பதறவில்லை. ஆழ்ந்த மௌனத்தில் இறுகிய தோற்றமாக இருந்தார்.

மாலை வினோத் கிளம்பும் நேரம் எழிலும் தயாராக, வரவேண்டாமென உதயன் மறுத்ததாக உரைத்தவன் எழிலை விட்டுவிட்டுச் சென்றான். அவன் சென்ற ஒருமணி நேரத்தில் உதயன் வீட்டிற்கு வந்துவிட்டான்.

உதயனின் முகத்தில் பசிவுணர்வு அப்படியே தெரிந்தது. மிகவும் சோர்ந்து போய் வந்திருந்த போதும் எழில் தந்தையின் நலனை விசாரிக்க, பதிலளித்தான். கோவிந்தசாமிக்கு நெஞ்சுவலி மட்டுமல்லாது ஒரு கைகால்கள் செயலிழந்ததாகவும் மிகவும் பகீனமாக இருப்பதாகவும் தெரிவிக்க, கேட்ட எழில் அதிர்ந்தாள்.

சுந்தரியின் காதுகளில் கேட்டதோ என்னவோ, கண்டுகொள்ளாதவர் உதயனுக்கு உணவெடுத்து வந்தார். எழில் கலங்கிக்கொண்டிருக்க அவளை சமாதானப்படுத்தவும் இயலாது உண்டுவிட்டு அசதியில் உதயன் படுத்துவிட்டான்.

அழுது அழுது அசதியடைந்தவள் அவன் நெஞ்சில் சாய்ந்தபடி தன்னை மறந்து உறங்கிவிட, விடியலில் கண்விழித்தான் உதயன். அழுது சிவந்து ஊதிய கன்னமும், மூடிய சிப்பி இமைகளும் மனைவியின் வாடிய தோற்றத்தை எடுத்துக்காட்டுவதாகத் தோன்றியது, அப்போதும் அவனுக்கு அவளழகு! நெற்றி முடிகளை ஒதுக்கி அவள் உறக்கம் கலையாத படி மெல்லியதாய் இதழ் ஒற்றியவன் மீண்டும் அணைப்பிற்குள் அவள் வாசம் நுகர்ந்தபடி கண்ணயர்ந்தான்.

குடும்ப கஷ்டங்கள், கவலைகள், கடமைகள் எதுவுமறியாது வாழ்ந்தவனுக்கு முதல்முறை இவற்றை அனுபவிக்கையில் கடினமாகத் தான் இருந்தது. ஆனாலும் எழில் அள்ளித் தரும் அன்பும் அவள் அருகாமையும் புது உற்சாகம் தர, அவள் கோபம் அவனைச் செயல்பட வைத்தது. அவளே அவனின் இயக்க சக்தியாக இருக்க, அவளே அறியாது அவனை ஆண்டுகொண்டிருந்தாள், அதை அவன் அறிந்து கொண்டான்!

காலையில் உதயன் கண்விழிக்கும் முன் எழுந்த எழிலரசி அவனோடு மருத்துவமனைக்குச் சென்று தந்தையைப் பார்க்க வேண்டுமெனக் கிளம்பிக்கொண்டிருந்தாள். எழில் உணவு வகைகளைப் பையில் எடுத்து வைத்துக்கொண்டிருக்க, குளித்து முடித்துக் கிளம்பி வந்திருந்தான் உதயன்.

அவள் முன் வந்து நின்றவன், “எழில் இதுல கையெழுத்து போடு” என ஒரு காகிதத்தை நீட்டினான்.

“என்னங்க இது?” என்க, “காளி, கோவிந்தமாமா மேல கம்பிளைண்ட் கொடுக்கப்போறேன், அதுக்கு தான்” என்றான்.

“அதான் அப்பாவுக்கு முடியலையே! இப்போ எதுக்குங்க இது?” என அவள் கேட்க, “அதுக்காக கதிர் சாவுக்கு காரணமானவங்களை சும்மா விடச் சொல்லுறீயா?” என்றான் கோபமாக.

“அதுக்கு தான் சாமி தண்டிச்சிடுச்சே, இன்னும் என்னங்க வேணும்? முடியாதவரை எப்படிங்க மேலும் கஷ்டப்படுத்த முடியும்? இதுவே கதிர் மாமாவே உசுரோட இருந்திருந்தாலும் அவங்க தெரியாம ஆக்சிடன்ட் பண்ணதுக்கு மன்னிச்சுவிடுமே தவிர இப்படியெல்லாம் பண்ணாதுங்க” என்றாள் கோபமாக.

ஆனால் உதயனால் அவள் வாதங்களை ஏற்கமுடியவில்லை, அவனுக்கு மேலும் கோபம் அதிகரித்தது. வெகுநாட்களுக்குப் பின் அதுவும் திருமணத்திற்குப் பின் முதல்முறையாக இருவருக்குள்ளும் வாங்கு வாதம் வந்திருந்தது.

“இங்க பாரு, நான் கதிர் இல்லை உதய்! உங்கப்பான்னா மன்னிக்கணுமாம் எங்க பெரியப்பான்னா தண்டிக்கணுமாம் இதென்ன நியாயம்?” எனச் சினமுடன் அவள் தோள்களைப்பற்றிபடி கேட்டான்.

உங்கப்பா, எங்க பெரியப்பா என்றது என்னவோ வார்த்தைகளிலே அவளைத் தள்ளி வைப்பது போன்றிருக்க, நெஞ்சில் அடித்தது போன்று வலித்தது. அவன் வார்த்தைகளில் காட்டிய சிறு ஒதுக்கமும் அவளுக்குப் பெரிதாய் தெரிய, மற்ற பிரச்சனைகளை விட இது தான் தற்போது அவளுக்குப் பெரிய வலியாய் தோன்றியது.

நொடியில் அவளையும் மீறி ஆற்றாமையில் கண்கள் இரண்டும் கலங்கிவிட, ‘வீக்னெஸ் தெரிஞ்சே அடிப்பாளே’ என்றெண்ணியபடி தன் கைகளை விலக்கினான்.

“எழில்..இது உனக்கே நியாயமா தெரியுதா?” என தணிந்த குரலில் கேட்டபடி அவளை நெருங்க, விழியோர கண்ணீரைத் துடைத்தபடி தன் வேலைகளை கவனிப்பதாகத் திரும்பினாள்.

கோபத்தின் பிடியில் கூட அழுத்திப்பிடிக்காதவன், அவளைச் சிறிதும் காயப்படுத்தாதவன் அதில் அவன் பாசம் தெரியும் என்றாலும் அவன் வார்த்தைகளில் அந்நியப்படுத்தியதைப் பெண் மனத்தால் தாங்க இயலவில்லை.

கதிரின் புகைப்படத்தைத் துடைத்தபடி அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த குணசுந்தரி இடையில் வந்து உதயனின் கையிலிருந்த காகிதத்தை வாங்கி கையெழுத்திட்டுக் கொடுக்க, எழிலால் தடுக்க முடியாது போனது.

சுந்தரிக்குக் கதிரின் இழப்பிற்குப் பின் எழிலின் எதிர்காலம் குறித்து பெரும் கவலை இருந்தது. எங்க திருமணத்தையே மறுத்து விடுவாளோ என்ற பயம்! அதுவும் அரளிவிதையை உட்கொள்ள முயன்ற பிறகு அதிகமாகியது. கட்டாயப்படுத்தியாவது அவளுக்குத் திருமணம் செய்து வைக்கும் எண்ணத்தில் இருக்க, உதயனுடனான திருமணத்தை அவள் மறுக்காததும், திருமணத்திற்குப் பின் இருவரும் இன்பாய் இருப்பதையும் கண்டதத்தில் பெரும் மகிழ்ச்சி! அதில் விரிசல் போலே இருவரும் சண்டையிட்டுக் கொள்வதை சுந்தரியால் தாங்க முடியவில்லை.

ஒரு இயலாமையில் சாப்பாட்டுப் பையை எடுத்துக்கொண்டு வெளியேறி எழில் பேருந்து நிறுத்தம் நோக்கி நடக்க, இடையில் வந்த உதயன் அவளையும் ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான்.

தன் உடன் பிறந்த தம்பி அதுவும் அன்னை இல்லாதவனை மகன் போன்று சீராட்டி வளர்த்தவர் குணசுந்தரி. அவனின் இழப்பிற்குக் கணவன் தான் காரணம் என்பது இத்தனை நாள் அவரோடு வாழ்ந்த வாழ்கையை அருவருப்பாய் தோன்றச் செய்தது. என்னவோ கோவிந்தசாமியை மன்னிக்க முடியாது போனதுக்குக் காரணம் கதிரின் எதிர்பாராத இழப்பு கொடுத்த அதிகப்படியான வலியாகக் கூட இருக்கலாம். காலங்கள் மாறாது காயங்கள் ஆறாது!

## அத்தியயாம் **26**

மூன்று மாதங்களுக்குப் பிறகு

தளிர் பச்சையும் நிறத்தில் பட்டும், நீல நேரத்தில் பாடரும் கொண்ட புடவையில், கழுத்து, கைகளில் பச்சைக்கல் பதித்த நகைகளும் அணிந்து, தோளில்

படர்ந்து தொங்கிய மல்லிகை சரத்தோடு கொலுசொலி இசைக்க எழில் மிகு ஓவியமாய் தங்கள் அறை நோக்கி நடந்து வந்தாள் எழிலரசி.

அறைக்குள் உதயன் அப்போது தான் இடுப்பில் வேட்டியைச் சுற்றியபடி கட்டிக்கொண்டிருந்தான். அதைக் கண்டவள் அறைவாசல் கதவுகளில் சாய்ந்தபடி உற்சாகமுடன் நின்றாள். புடவை முந்தானையை கைகளில் சுற்றியபடி மெல்லிய குரலில், “நீ கட்டும் வேட்டி மடிப்புல நான் மயங்கி போனேனே! உன் கட்டழகு மீசையிலே கிறங்கி போனேனே!” எனப் பாட அந்த குரலில் உதயன் நிமிர்ந்து பார்க்க, சட்டென அவனை நோக்கி ஒற்றை கண்ணை சிமிட்டினாள்.

இதழோடு முகமும் மலரச் சிரித்தவன், “எனக்கு வேட்டிகட்டத் தெரியாதுன்னு கேலி செய்கிறையாடி ரெளடி ரங்கம்மா?” என்றான்.

“ச்சே..ச்சே நான் வேணா கட்டிவிடட்டுமான்னு ஒரு உதவி..” என இழுத்தவளின் குரலில் கேலிக்குக் குறைவில்லை.

“அதெல்லாம் எலெக்ஷன் டைம்லைலே யூ டியூப் பார்த்து கத்துகிட்டேனாக்கும்” என்றபடி கட்டிமுடித்திருந்தவன் அவளை நெருங்கினான்.

அவளும் அசராது நிலையாக நிற்க, ஒருகையை சுவற்றில் ஊன்றியபடி அவளை நெருங்கி நின்றவன் அவள் முகம் நோக்கினான். கோலமுகமும், மை விழியும் மயக்கமூட்ட அதைத் தாண்டியும் சற்று முன் தன்னைப் பார்த்து கேலியாய் சிரித்த சிவந்த ரோஜா இதழ்கள் ஈர்க்க, மறு கையால் அவள் உதட்டைப் பற்றி இழுத்தான்.

ஒற்றை விரலால் பட்டு இதழை வருடி உதட்டு ரேகைகளை எண்ணிக்கொண்டு நிமிடங்களாக அவன் நிலையாக நிற்க, “இன்னுமென்ன ஆராய்ச்சி?” என்றாள் கிசுகிசுப்பாக.

அவள் மேலே படர்ந்தபடி அணைத்தவன் கன்னத்தோடு கன்னம் உரசி, தோள் சாய்ந்து காதோரம் அவளையும்

விட மெல்லிய குரலில், “இன்னும் முடிவில்லாத ஆராய்ச்சி தான், கொஞ்சம் உதவி செய்யலாமே!” என்றான்.

வெட்கச் சிரிப்போடு அவனை விலக்கிவிட, அதே நேரம் வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டதால் அவனும் விலகிவிட அவள் முன்னேச் சென்றாள்.

அபியும் அவள் மகளும் வர, “வாங்க மதினி, வாடி குட்டியம்மா, எங்க அண்ணனைக் காணும்?” எழில் முன்னே வந்து வரவேற்க, “நாளைக்கு தானே தேரோட்டம், இன்னைக்கு நைட் வந்துடுவாங்க” என்றாள் அபிராமி.

அதற்குள் உதயனும் வந்து வரவேற்க அனைவரும் உள்ளே சென்றனர். வழக்கம் போலே அவன் தோள்களில் தொத்திக்கொண்ட ப்ரதிக்ஷா, “மாமா பஞ்சுமிட்டாய், மஞ்சள் கலர் பாலும் வேணும்” என்றாள் வரும் வழியில் திருவிழா கடைகளில் பார்த்ததால்.

“கோவிலுக்குப் போகும் போது வாங்கலாம்” எனச் சமாதானம் சொல்லியபடி அவனும் உள்ளே சென்றான்.

மாலை நேரம் பூப்பல்லக்கு சாமி ஊர்வலத்தோடு தொடங்கும் திருவிழா, மறுநாள் காலை பால்குடம் எடுத்தல், வேண்டுதலை நிறைவேற்றுதல், தேரோட்டம், மஞ்சள் நீராட்டம், விருந்தோடு நிறைவடையும். முருகர் கோவிலும் மண்டபமும் புது வண்ணத்துடன், வண்ண விளக்குகளில் மின்ன, திருவிழாக் கடைகளாலும் மக்கள் கூட்டத்தாலும் நிறைந்திருந்தது.

மாலை செல்வராஜூம் வந்து விட அனைவருமாக கிளம்பி கோவிலுக்கு வந்தனர். வரும் வழியிலே ப்ரதிக்ஷா கேட்கும் அனைத்தையும் வாங்கிக்கொடுத்து விளையாடியபடி வந்தான் உதயன். யாருமறியாமல் எழிலின் பார்வை ரசனையாக அவர்களைத் தொடர்ந்தது.

வானவெடிகளை வேடிக்கை காட்டச் சிறுமியோடும் செல்வராஜூடும் சென்றுவிட, அதற்குள் அபிராமியும் எழிலரசியும் உறவினர்கள் மற்றும் துளசி,

ரத்தினத்தைக் கண்டதால் வெகுநாட்களுக்குப் பின் நலம் விசாரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

சரியாக சாமி சுற்றி வந்து நிற்கும் நேரம் ரெங்கநாதனும் பரமேஸ்வரியும் உடன் ராஜாவின் குடும்பத்தோடு வந்தனர். அவர்கள் ஒருபுறம் சாமி கும்பிட, உதயனும் அவன் குடும்பத்தோடு மறுபுறம் சாமி கும்பிட்டான்.

சாமி கும்பிட்டுக் கூட்டம் சற்று நகர, பந்தலில் நின்றுகொண்டிருந்த உதயனிடம் வந்தார் ரெங்கநாதன். முதலில் அவரை கண்ட ப்ரதிக்ஷா, "தாத்தா.." என்றபடி தாவிச்செல்ல தூக்கிக்கொண்டார்.

அனைவரும் அவரையும் அவர் பின் நிற்கும் குடும்பத்தவரையும் பார்த்து நிற்க, அழகன், கரிச்சட்டி கூட எதுவும் பிரச்சனை செய்வாரோ என உதயனை நெருங்கி வந்து நின்றனர்.

"உங்கிட்ட கொஞ்சம் பேசணும் உதய்" என்க, சுற்றியிருக்கும் அனைவரையும் ஒருமுறை பார்த்தவன், "சொல்லுங்க.." என்றான்.

"நம்ம பரம்பரை சொத்தெல்லாம் இன்னைக்கு வந்ததில்லை, முப்பாட்டனுங்க அவங்களுக்கும் பெரியவங்க கஷ்டப்பட்டு சம்மாதிச்சது. தேர்தல்ல நிற்கிறேன்னு எங்க நீ ஊதாரித்தனமா செலவு செஞ்சிடுவியோன்னு பயம் இருந்துச்சி. வீட்டை விட்டு வெளியேறி நீ தனியா இருந்த நேரம் யாரும் உன்னை ஏமாத்தி பிடிங்கிடுவாங்களோ இல்லை உன்னை எதுவும் செஞ்சிடுவாங்களோன்னு ஒரு பயம்!

அது மட்டுமில்லை இப்போ உள்ள பிள்ளைகளுக்கு பணத்தோட அருமை தெரிய மாட்டிக்கு எங்க நீயும் வீணாக்கிடுவியோங்கிற பயத்துல தான் நான் உங்கிட்ட இருந்து வாங்கி வைத்து பாதுகாத்தேன். இப்போ வேலைக்கு போய்கிட்டு விவசாயமும் பார்த்துக்கிற உன் பொறுப்பை பார்க்கும் போது இதையும் நீ நல்லபடியா கவனிச்சுப்பேங்குற நம்பிக்கை வந்துடிச்சி. மறுக்காம வாங்கிக்கோடா"

என ராஜாவின் கைகளிலிருந்த பத்திரத்தை வாங்கி உதயனிடம் நீட்டினார்.

எவ்வளவு அழைத்தும் சிவா திருவிழாவிற்கு வராது மறுத்துவிட, வந்திருக்கும் மகளும் உதயனின் வீட்டில் தங்கி உள்ளதை அவரால் தாங்க முடியவில்லை. அபிராமியின் முன் கொடுத்தால் அவள் கோபமும் குறையும் என எதிர்பார்த்திருந்தார்.

இவர் சொல்வதும் உண்மை தானா! என ஒருநொடி ரெங்கநாதனை ஆராய்வது போல் பார்த்த உதய் அருகில் நிற்கும் ராஜாவின் இறுகிய முகத்தையும் பார்த்தான். பெரியப்பாவின் முடிவில் ராஜாவிற்கு விருப்பமில்லை என்பது புரிந்தது.

“கொடுத்தது உங்ககிட்டையே இருக்கட்டும், எனக்கு வேண்டாம் பெரியப்பா” என்றான் உதய். அப்போதும் அவர் கட்டாயப்படுத்த வாங்கிக்கொண்டு நகர்ந்தவன் பரமேஸ்வரியின் கைகளில் அதை வைத்து, “பாசத்தை பணத்தால மதிப்பிடுறேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க பெரியம்மா. இதை நீங்க வைச்சிக்கோங்க, எனக்கு உழைக்கிற தெம்பும் மனசுல தைரியமும் இருக்கு இது எனக்குத் தேவையில்லை. உங்களுக்கும் இது தேவையில்லைன்னா தேவைப்படுறவுங்களுக்கு கொடுத்திடுங்க” என்றவனின் பார்வை ராஜாவின் புறம் திரும்பியது.

ராஜாவுடன் விரோதம் வளர்த்துக்கொள்ள உதயன் விருப்பவில்லை என்பதை உணர்ந்தவர் மறுக்காமல் வாங்கிக்கொண்டு அனைவரையும் வீட்டிற்கு அழைத்தார். உதயனும் அபிராமியும் அமைதியாக நிற்க, நீங்கள் செல்லுங்கள் நான் அழைத்து வருகிறேன் என செல்வராஜ் அனுப்பி வைத்தார்.

ஏற்கனவே தாத்தாவோடு பேத்தி சென்றுவிட, உதயனுக்குச் சொத்துகள் தரவில்லை என்று தானே கோபம்கொண்டாய் தற்போது அவனே தான் மறுத்துள்ளான் இன்னும் ஏன் கோபம் என்ற செல்வராஜ் உதயனிடம் விடைபெற்று அபிராமியை அவள்

வீட்டிற்கு அழைத்துச் சென்றார். பின்னாளில் உதயனுக்குப் பிள்ளைகள் வருகையில் அவனும் பெரியவர்களோடு உறவாடிக்கொள்வான் என எதிர்பார்த்தார்.

அவர்கள் சென்றதும் எழிலை அழைத்துக்கொண்டு சுந்தரி வீட்டிற்குச் சென்றான் உதயன். எழில் சுந்தரியைப் பார்க்கச் செல்ல, அறைக்குள் சென்ற உதயன் படுக்கையிலிருந்த கோவிந்தசாமியை எழுப்பி சக்கரநாற்காலியில் அமர்த்தி ஹாலுக்கு அழைத்து வந்தான். பெற்றவர்களுக்கு கோவில் பிரசாதத்தைக் கொடுத்தாள் எழிலரசி.

மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்த பின்னும் சுந்தரி கண்டுகொள்ளாமல் இருக்க, எழில் தன்னோடு தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று பார்த்துக்கொள்வதாக உரைத்தாள். ஏற்கனவே வேலைக்குச் செல்லும் உதயனையும் தோப்பு வேலைகளையும் மகள் கவனிக்கிறாளே என அவள் முடிவை மறுத்த சுந்தரி அவரே கவனித்துக்கொண்டார்.

கடமைக்குக் கவனித்தாரே தவிர அவர் தவறுகளை மன்னிக்கவில்லை, அவரோடு பேசுவதுமில்லை. எழிலும் உதயனும் வரவில்லை எனில் அந்த வீட்டில் ஒரு நிரந்தர அமைதி நிறைத்திருக்கும்!

அந்த வழக்கு இன்னும் நீதிமன்ற விசாரணையில் இருக்க, கோவிந்தசாமி குற்றவுணர்ச்சியில் சிதைந்துக் கொண்டிருந்தார். கதிர் இருந்த வரை மகிழ்வாய் இருந்த குடும்பத்தின் இந்நிலைக்கு தன் பொறுப்பற்ற குடிப்பழக்கமே காரணம் என நொந்து போனார். அதிலும் சுந்தரியிடம் கிடைக்காத மன்னிப்பு பெரும் பாரமாய் இருந்தது. இனி நொந்து கொண்டு என்ன பயன்? குற்றவுணர்ச்சியைத் தவிர வலிமையான கொள்ளும் ஆயுதம் எது?

அடுத்தநாள் புத்தாடைகளில் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு ஊர்மக்கள் உறவுகளோடு ஒற்றுமையாய் ஒன்று கூட, கொண்டாட்டத்தோடு வடம் பிடித்து தேரிழுத்து வீதிகள் முழுவதும் சுற்றி வந்து முருகனை வணங்கினர்.

சிறியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கொண்டாட்டமான மஞ்சள் நீராட்டமும், மதிய விருந்தும் நிறைவடைய மாலை விளையாட்டுத் திடலில் விளையாட்டுப் போட்டிகள் நடந்து கொண்டிருந்தன.

மாலை நேரம் செல்வராஜூம் உதயனும் தோப்பைச் சுற்றிப் பார்வையிட்டபடி அதன் பராமரிப்புகள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தனர். அபிராமியும் மகளும் திண்ணையில் அமர்ந்திருக்க, அனைவருக்கும் காஃபி எடுத்து வந்தாள் எழில்.

அதே நேரம் கார் வந்து நிற்க, பவித்ரா அவள் குழந்தைகளோடு வந்தாள். எழில் சென்று சிறுவனை கைகளில் வாங்கிக் கொஞ்ச, உதயன் அவர்களை வரவேற்றான்.

உதயனிடம் ஒருபெட்டியை நீட்டிய பவித்ரா, “நேத்து சொத்தெல்லாம் வேண்டாம் சொல்லிட்டீங்க, வீட்டுக்கும் வரலை அதான் அத்தை கோபமா இதை உங்ககிட்ட கொடுத்துட்டு வரச்சொன்னாங்க உதய்” என்றாள்.

“இதுல என்ன இருக்கு அண்ணி?” என்க, “உங்கம்மா நகைங்கயெல்லாம் இதுல இருக்காம், இது பரம்பரைச் சொத்தில்லை எல்லாம் உங்க அம்மாவுக்கு அவங்க அம்மா வீட்டுல போட்டது தானாம், உறவே வேண்டாம்னு சொல்லவும் இது மட்டும் எதுக்கு வீட்டுல இருக்கணும்னு கோபப்பட்டு கொடுத்துவிட்டாங்க, வாங்கிக்கோங்க” என்றாள்.

அதிர்ந்த சிரிப்புடன், “கொடுத்துவிட்டாங்கன்னு சொல்லுங்க கோபப்பட்டாங்கன்னு சொல்லாதீங்க! ராஜா, சிவாக்கிட்ட கூட கோபப்படுவாங்க ஆனால் என் மேல பெரியம்மா எப்பவும் கோபப்பட மாட்டாங்க அண்ணி” என்றான்.

உண்மையைக் கண்டுகொண்டதால் பவித்ராவும் சிரிப்புடன் பெட்டியை நீட்ட, உதயன் ஒரு நொடி மௌனமாய் நோக்கினான்.

“அவன் கிடக்கான், எழில் நீ வந்து வாங்கிக்கோம்மா” என அபிராமி சொல்ல, எழில் அவன் முகத்தைப் பார்க்க, அவன் தலையசைக்கவும் வாங்கிக்கொண்டாள்.

இருள் சூழும் வரை அனைவரும் பேசிக்கொண்டிருக்க, ப்ரதிக்ஷாவும் க்ருஷ்மிதாவும் விளையாடினர். பின் பவித்ரா கிளம்ப, அப்போது தான் அவள் கைகளில் எழில் குழந்தையைக் கொடுக்க, அபிராமியும் அவர்களோடு குடும்பமாய் கிளம்பினாள்.

“என்ன மாமா அதுக்குள்ள கிளம்புறீங்க?” என உதயன் தடுக்க, “அடேய் இவங்களை பெரிய வீட்டுல விட்டுட்டு நான் மட்டும் தான்டா கிளம்புறேன், உங்க அக்கா தான் இப்போ அத்தை கூட ராசியாகிட்டாளே, இன்னும் ஒருவாரம் அவளும் பாப்பாவும் இங்க தான். நானும் கூட்டிட்டு போற அன்னைக்கு வரேன்டா” என்றார் கேலியாக.

செல்வராஜை முறைத்த அபிராமி, “இன்னைக்கு கலைநிகழ்ச்சி பார்க்கணும், வெள்ளிக்கிழமை சிவாவுக்கு பொண்ணு பார்க்கப் போகணுமாம் அம்மா தான் என்னையும் அண்ணியையும் இருக்கச் சொல்லியிருக்காங்க உதய்” என விளக்கம் கொடுத்தாள். உதயன் சிரிப்போடு விடைகொடுக்க, அனைவரும் கிளம்பினர்.

எழிலுக்கு எப்போதும் சிறு குற்றவுணர்வு உண்டு. தன் தவறான கோபத்தால் தான் உதயன் அவன் குடும்பத்தை விட்டு விலகிவிட்டதாக எண்ணினாள். ரெங்கநாதன் மீது கோபமிருக்க விலகிக்கொண்டவள் அவன் வீட்டு பெண்களிடம் பிணைப்போடு தான் இருந்தாள். பரமேஸ்வரியை விசேஷ வீடுகளிலும் கோவிலிலும் பார்க்கையில் பேசிக்கொள்வதும், பவித்ரா, அபிராமியுடன் அவ்வப்போது அலைபேசியில் பேசிக்கொள்வதும் உண்டு.

இரவு உணவிற்குப் பின் அலைபேசியில் கவனம் பதித்தபடி சில நிமிடங்கள் இருக்க, எழில் இன்னும் படுக்கைக்கு வரவில்லை. அலைபேசியைத் தூர வைத்தவன் பார்வையை சுழற்றியபடி எழிலைத்

தேடினான். கண்ணாடி முன் நின்றிருந்தவள் நகைகளை பார்த்துக்கொண்டிருக்க, எழுந்து வந்த உதயன் அவள் பார்த்துக்கொண்டிருந்த வைரமாலையை வாங்கி அவள் கழுத்தில் அணிவித்து விட்டு அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

கண்ணாடி முன் திரும்பி எழில் தன்னை அழுகு பார்க்க, பின்னிருந்து அணைத்தவன் கன்னம் உரசியபடி கண்ணாடியில் அவள் பிம்பம் நோக்கி, "எங்கம்மாவோட ஆசீர்வாதம்" என அவள் தடையை பிடித்துக் கொஞ்சினான். எழிலுக்கு உடலே சிலிர்த்தது அவன் தோள்களில் மேலும் அழுத்தமுடன் சாய, உதயனின் கைகள் அணைப்பின் இறுக்கத்தை அதிக்கப்டுத்தியது.

"அழகா இருக்கேன்னா?" எழில் கேட்க, "என்னைவிட கொஞ்சம் கம்மி தான்" என்றான் கண்ணாடியில் அவள் முகம் பார்த்துக் கண்சிமிட்டியபடி.

உதட்டைச் சுளித்த எழில் மெல்லிய குரலில் "என்னைவிடக் கொஞ்சம் கலரு, அதுக்காக எல்லாம் உங்களை அழகுன்னு ஏத்துக்க முடியாது" என்க, "அழகா இல்லாம தான் காலையில இருந்து சைட் அடிச்சியாக்கும்!" என்றவன் கன்னத்தில் கிள்ளினான்.

"எப்போ? சும்மா சொல்லக்கூடாது நீங்க பார்த்திங்களாக்கும்?" என எழில் அவன் கைகளைத் தட்டிவிட, "ஆமா, நான் வேட்டிக்கட்டும் போது, தூங்கிக்கிட்டு இருக்கும் போது, இன்னைக்கு திருவிழால, சாயங்காலம் மாமாவோட நடந்து வரும் போதெல்லாம் நீ தான் வைச்ச கண்ணு வாங்காம பார்த்தியே!" என்றான் அவள் புருவங்களை மெல்லியதாய் வருடியபடி.

"அதெல்லாமில்லை! அது..அது சும்மா பார்த்தது, நீங்களும் ப்ரதிக்ஷாவும் எப்படி விளையாடினீங்களோ அப்படி தான் கதிர் மாமாவும் நானும்! அவரில்லாம நடக்குற முதல் திருவிழா" என்றவளின் குரலே சிறிது கலங்கியிருந்தது. உதயனுக்கு நண்பன் இல்லாத கொண்டாட்டம் நிறைவாய் இல்லை.

எவ்வளவு வளர்ந்தாலும் திருவிழாவில் சிறுபிள்ளையாய் மாறிவிடும் எழில், இன்று திருவிழா கடைகளில் எதுவும் தன்னிடம் கேட்கவுமில்லை அவளாகவும் வாங்கவில்லை என்பதை கவனித்திருந்தான். விலகிச் சென்றவன் மேசையிலிருந்து திருவிழா கடையில் வாங்கி வந்திருந்த கண்ணாடி வளையல்களை எடுத்து வந்து அவள் கரம் பற்றி அணிவித்தான்.

நொடியில் வாடியிருந்த அவள் முகம் மென்மலராய் மலர, முல்லைப் பல்வரிசை தெரியச் சிரித்தாள். தங்க வளையல்களை விடத் தான் அணிந்துவிட்ட கண்ணாடி வளையல்களில் அவளுக்கு எவ்வளவு இஷ்டம் என்பதை நன்கு அறிந்தவன்!

அவளாக அவனை இழுத்து அணைத்துக்கொண்டு, “ஒன்னு கேட்பேன் கோபப்படாம உண்மையா பதில் சொல்லணும்” என எழில் கேட்க, “நான் என்னைக்கு கோபப்பட்டு இருக்கேனாம்? நீ தான் எப்பவும் முறைச்சிகிட்டு சுத்தற!” என்றான் சிறு சிரிப்புடன்.

மீண்டும் முறைத்த எழில் முழங்கையால் அவன் வயற்றில் குத்த விலகி மெத்தையில் அமர்ந்தவன், அவளையும் இழுத்து மடியில் அமர்த்தி தன்னோடு அணைத்துக்கொண்டான்.

அவள் பட்டுக்கன்னத்தில் இதழால் உரசியபடி “ஒன்னு என்ன எவ்வளவு வேணாலும் கேளு” என்றான் கிசுகிசுப்பாக. அதை உணராதவள், “எதுக்கு திரும்பவும் சொத்தெல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டீங்க?” என்றாள்.

“ஏன் உனக்கு வேணுமா?” அவன் மெல்லிய குரலில் கேட்க, அவன் தோள்களிலிருந்து நிமிர்ந்து முகம் பார்த்தவள் நெற்றில் தட்டியபடி, “வேண்டாம்னு சொன்னத்துக்கு காரணம் வேணும்” என்றாள்.

“ம்ம், நான் அவங்களுக்கு எதிரா இவ்வளவு செஞ்ச போதும் எங்க பெரியப்பா என்னை எதுவும் செய்யலை. எனக்கு நல்லா தெரியும் இதுவே கதிரா இருந்து அவர் மிரட்டலையும் மீறி தேர்தல்ல நின்றிருந்தா கண்டிப்பா

சும்மா விட்டிருக்க மாட்டாரு. எனக்கு நல்ல பெரியப்பாவா இருந்தாலும் ஊருக்கு நல்லவரா இல்லை. அதைவிடவும் கதிரை எதிரியா நினைச்சிருக்காரு, அவனை குறைவா பேசி மிரட்டி இருக்காரு. அதை என்னால ஏத்துக்க முடியலை.

ஊர்மக்கள் அத்தனை பேர் முன்னாலையும் சொத்தை திரும்பிக்கொடுக்க காரணம் தன்னை நல்லவரா காட்டி ஒரு மரியாதை வாங்கிக்கவும், எங்கிட்ட ஒரு நெருக்கத்தை உருவாக்கிக்கவும் தான். என்னவோ அவருக்கு அதைக் கொடுக்க எனக்கு மனசு வரலை. அதுமட்டுமில்லாம பெரியம்மா ராஜா முகங்களைப் பார்த்த பிறகு என்னால அதை வாங்கிக்கவும் முடியலை" என்றான்.

உதயன், எழிலரசி இருவர் மனதிலும் கதிர் என்றும் மறக்க இயலாத நிலையான இன்பக் கனவாக நிறைந்திருந்தான்.

மௌனமுடம் அவன் பதிலை ஏற்றவள் எக்கி அவன் கன்னத்தில் இதழ் பதிக்க, அவள் நெகிழ்ந்திருந்த தருணங்களை தங்களுக்கான இனிய நொடிகளாக மாற்றத் தொடங்கி இறுக்கி அணைத்தபடி இன்பமாய் இதழில் இதழ் பதித்தான். எழில் அவனன்பில் விழ, குடும்பம் என்னும் கூண்டுக்குள் சுகமாக அடைபட்டவனுக்கு தங்களின் எதிர்காலம் இன்பமாய் தோன்றியது!

*நன்றி*